
கல்கி
KALKI
26.7.1959
30 காசு



சிறு குழந்தையும் அறிந்த உண்மை...

ரின்ஸோ வெளுப்பது அதிவெண்மை

விவேகமுள்ள தாய்மார்கள் சலவைக்கு உபயோகிப்பது ரின்ஸோ. வெள்ளைத் துணிகளே அதிவெண்மையாகவும் வர்ணத் துணிகளே அதிகப் பிரகாசமாகவும் வெளுக்கும் சோப் பவுடர் அதுதான். சக்தி வாய்ந்த ரின்ஸோவின் நுரை, மறைந்துள்ள அழுக்குகளேயும் அறவே அகற்றிவிடுகிறது. ரின்ஸோ சலவை யென்றால் உங்களுக்கு வேலையும் இலகுவாவதோடு நேரமும் மிச்சம். குடும்பத்தின் சகல துணிகளுக்கும் ரின்ஸோ உபயோகியுங்கள்.



உங்கள் வேலையை இலகுவாக்குவதற்கென்றே

தயாரிக்கப்பட்ட அற்புத சோப் பவுடர்


R. 18-50 TM


ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

கல்கி


பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.





இன்னும் சில விநாடிகளில் நாம் புதன் கிரகத்தை அடைவோம்—இப்பகுதி கிரகத்தின் மிகக்குளிர்ச்சியானதும் மிக உஷ்ணமான பாகங்களுக்கும் நடுவில் உள்ளது. இந்த இடத்தில் நாம் இறங்குவோம். இந்த இடம் சூரிய மண்டலத்திலிருந்து 3,60,00,000 மைல்களுக்கு அப்பால்தான் இருக்கிறது. சூரியமண்டலம் அருகாமையில் இருப்பதால் தளத்தின் வெளி சீதோஷ்ண நிலை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் தளத்தில் உஷ்ணம் உங்களுடைய சௌகரியத்திற்கு 65°Fல் வைக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் இந்த பிரயாணத்தை அனுபவித்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். உங்களுக்கு இந்த உலகில் கிடைக்கும் எல்லாவித சௌகரியங்களையும் அடைவதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறோம்-வில்ஸ் நேவிகட் சிகரெட்டுகள் உள்பட"



"வில்ஸ் எப்பொழுதும்
உயர்ந்தவை

([illegible] தி இம்பீரியல் டொபாக்கோ கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்டால் வெளியிடப்பட்டது)



மலர் 18
இதழ் 52

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

விகாரி ௵
ஆடி ௴ 10 ௳

ஐ. நா. சபையில் சீனா

திபேத் விஷயத்தில் சீனா நடந்துகொண்ட முறை இந்தியாவின் கௌரவத்தை உலக அரங்கில் மிகக் குறைத்து விட்டது.

"சீனப் பிரதமர் சூ என் லாயும், நேருஜியும் பஞ்சசீலக் கொள்கையில் கையெழுத்திட்டார்களே, இப்பொழுது என்னவாயிற்று பார்த்தீர்களா? பஞ்சசீலத்தைச் சீனா பஞ்சாகப் பறக்க அடித்து விட்டதே!" என்றெல்லாம் உலக மக்களின் ஏளனத்துக்கு இந்தியா உள்ளாகியது, சீனாவின் காரணமாக.

"கம்யூனிஸ்டுகள் அயோக்கியர்கள், நம்பிக்கைத் துரோகம் செய்பவர்கள்; தலாய் லாமா விரட்டப்பட்ட முறையிலிருந்து, நேருஜி இந்த உண்மையை உணர்ந்து கொண்டிருப்பார்" என்றெல்லாம் பேசி வருகிறார்கள்.

எனினும் நேருஜி அறத்தின் அடிப்படையிலே வகுத்துக் கொண்ட தமது அந்நிய நாட்டுக் கொள்கையை விடப் போவதில்லை என்பதை உறுதியாகச் சொல்லி விட்டார்.

சமீபத்தில் கூடவிருக்கும் ஐ. நா. சபைக் கூட்டத்தில், கம்யூனிஸ்ட் சீனாவுக்கு இடம் அளியுங்கள் என்று இந்தியா வாதாடப் போவதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகி யிருக்கிறது.

இந்தச் செய்தியைக் கேட்டு மேற்கத்திய நாடுகள் 'சீனா இவ்வளவு துரோகத்துடன் நடந்து கொண்டும், இந்தியா இப்படிப் பேசுகிறதே!' என்று வியக்கின்றன.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

என்கிற தர்மம் ஒருபுறம் இருக்க சீனாவுக்கு நற்புத்தி கூற வேண்டுமானால் அந்த நாட்டையும் அதன் பெரிய ஜன சமூகத்தையும், அதையாளும் வல்லரசையும் உலக சபையில் அனுமதித்து அவர்களுடன் வாதாடினால்தானே முடியும்? சீனாவைப் பகிஷ்கரிப்பதில் ஒருபயனுமில்லை. உலக சபையில் இடங்கொடுக்க வில்லையே என்று பயந்து போய்த் தன் நடவடிக்கையை அந்த வல்லரசு மாற்றிக் கொள்ளாது மற்றவர்களுடன் சமானமாக அந்த நாட்டுக்கும் இடம் தந்து நீதி, சமாதானம் முதலிய விஷயங்களில் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும். இந்த முறையைத்தான் நேருஜி வற்புறுத்துகிறார்.

* * * *

பாரத நாட்டு வெளிநாட்டுக் கொள்கை விஷயத்தில் பண்பறிந்து நடந்து கொள்ளும் நேருஜி உள்நாட்டு விஷயத்தில் ஏன் அதைப் பரிபூரணமாகக் கடைப்பிடிக்க முடியாமல் இருக்கிறார் என்பது தெரியவில்லை.

மக்களில் ஒரு சாராரிடம் அவநம்பிக்கையும் அருவருப்பும் ஏன் வைத்து வருகிறார்? பாரத நாட்டுச் செல்வத்தை வளர்க்கக் கூடிய தகுதியுள்ளவர்களை, மற்ற மக்கள் துவேஷம் கொள்ளும்படி பேசுகிறார். நாட்டில் செல்வத்தை வளர்க்க வேண்டுமானால், வர்த்தகர்களையும் பெரிய விவசாயிகளையும் ஜன்ம விரோதிகளாகக் கருதாமல் கூட்டாளிகளாகக் கருத வேண்டும். வெளிநாட்டு ஆட்சியாளர்களின் குறைகளை அதிகப்படுத்திச் சொல்லாமல் வெகு ஜாக்கிரதையாக நடந்து கொள்கிற நம்முடைய பிரதமர் உள்நாட்டு விஷயத்திலும் அந்தச் சாமர்த்தியத்தைக் காட்ட வேண்டும். ஏன் அம்மாதிரி செய்யத் தெரியவில்லை என்பது நமது குறை.

கவி பாரதியாரின் எச்சரிக்கை

"தர்ம முறை அமுல் நடத்த முடியுமா?" என்று சிலர் கேட்கிறார்கள் அல்லவா, அதற்குச் சென்ற வாரம் சுதந்திரக் கட்சியைப் பற்றி ராஜாஜி கோகலே மண்டபத்தில் பேசிய போது, தகுந்த பதில் அளித்தார்.

பாரத தேசம் தர்ம தேசம். இன்றும் இந்நாட்டில் தர்மம் அழிந்து போகவில்லை. உயிருடன் இருக்கிறது. அது மட்டுமல்ல, இன்றும் தர்மம்தான் கோடிக் கணக்கான மக்களைக் காப்பாற்றி வருகிறது, சட்டங்கள் அல்ல என்பதை உள்ளத்தில் பதியும்படி எடுத்துரைத்தார்.

கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையுள்ள சத்திரங்களும் கோயில்களும் தர்மப் பள்ளிக்கூடங்களும் தர்மம் இன்றும் நிலைத்து நிற்கிறது என்பதற்குச் சான்றுகள். இவற்றையெல்லாம் பணக்காரர்கள் யாதொரு நிர்ப்பந்தமுமின்றி அமைத்திருப்பதைப் பார்க்கிறோம்.

அது போகட்டும். தேசத்திலுள்ள உணவுப் பற்றாக்குறையை நினைத்தால், தினம் ஆயிரக்கணக்கான பேர்கள் மடிந்து சாகவேண்டியதுதான். ஆனாலும் பட்டினியால் இறந்தார்கள் என்றெல்லாம் செய்திகள் வருவதில்லை. ஏதேனும் வெள்ளம் தீ முதலிய விபத்து ஏற்பட்ட போதெல்லாம் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அவ்விடம் வந்து சேருவதற்கு முன் பொது மக்களே உயிர்ச்சேதமின்றிக் காப்பாற்றி வருகிறார்கள். நம் நாட்டு மக்கள் உள்ளத்தில் தர்மம் இன்னும் பசுமையாக இருக்கிறது. பசியோடு ஒருவனைக் கண்டால், தன் உணவில் குறைத்துக் கொண்டாவது அவனுக்குக் கொடுக்கிறார்கள். இந்த அறம்தான் தேசத்தைப் பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றி வருகிறது. சர்க்கார் சாதிக்க முடியாத காரியத்தைத் தர்மம் சாதிக்கிறது. அதனால் இந்நாட்டில் தர்மத்தின் அடிப்படையில் ஒரு காரியம் நடக்குமா என்று கேட்பது போன்ற அறிவீனம் வேறு கிடையாது.

இப்படிப்பட்ட தர்ம தேசத்தில் பலாத்கார முறையில் சோஷலிஸ கொள்கைகளைப் புகுத்துவது தவறு என்று ராஜாஜி மட்டும் சொல்லவில்லை. நாற்பதாண்டுகளுக்கு முன்பே நமது கவி பாரதியார் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அதை அப்படியே கீழே தருகிறோம்:

"லெனின் வழி சரியான வழியில்லை. முக்கியமாக நாம் இந்தியாவில் இருக்கிறோமாதலால் இந்தியாவின் ஸாத்யாஸாத்யங்களைக் கருதியே நாம் யோசனை செய்ய வேண்டும். முதலாவது இந்தியாவிலுள்ள லக்ஷவான்களும் முதலாளிகளும் ஐரோப்பிய லக்ஷவான்களைப் போல் ஏழைகளின் விஷயத்தில் அத்தனை அவமதிப்பும் குரூர சித்தமும் பூண்டோரல்லர். இவர்களுடைய உடைமைகளைப் பிடுங்க வேண்டுமென்றால் நியாயமாகாது. அதற்கு நம் தேசத்திலுள்ள ஏழைகள் அதிகமாக விரும்பவும் மாட்டார்கள். எனவே, கொள்ளைகளும், கொலைகளும் சண்டைகளும் பலாத்காரங்களுமில்லாமல் ஏழைகளுடைய பசி தீர்ப்பதற்குரிய வழியைத்தான் நாம் தேடிக் கண்டுபிடித்து அனுஷ்டிக்க முயல வேண்டும். செல்வர்களுடைய உடைமைகளைப் பலாத்காரமாகப் பறித்துக் கொள்ள முயலுதல் இந்நாட்டிலே, நான் மேற்கூறியபடி, பொருந்தவும் செய்யாது; ஸாத்யமும் இல்லை."


மகாகவி பாரதியார் தொடக்கத்தில் 'லெனின் வழி' என்று குறிப்பிட்டிருப்பது ருஷ்ய சோஷலிஸ முறையை. அந்த முறையை அனுசரித்துத்தான் நாகபுரி நிலத் தீர்மானம் அமைந்துள்ளது. அதைக் கண்டிக்கிறாற் போலவே நாற்பது ஆண்டுகளுக்கு முன் பாரதியார் எழுதியிருக்கிறார். அதுவும், ராஜாஜி சொல்வது போல் தர்மத்தின் அடிப்படையில்தான் பாரதியார் கண்டிக்கிறார்.

கேரளக் குழப்பம்

கேரளக் கிளர்ச்சியாளர்கள் கிளர்ச்சியை நிறுத்தினாலன்றி, கேரள சர்க்கார் தங்கள் பதவியை விட்டு விலக மாட்டார்கள். கிளர்ச்சி நின்று சிறிது காலம் தேசத்தில் சமாதானம் நிலவினால்தான் மறு தேர்தல் நல்ல முறையில் நடத்த முடியும். ஆகவே, திரு. நம்பூதிரி பாடு அமைக்கும் வட்டமேஜை மகாநாட்டுக்கு இணங்கி ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு அடுத்த தேர்தலுக்கு வழி வகுப்பதுதான் நடைமுறைக்கு ஏற்ற காரியம். அதை விட்டுவிட்டு, நாளுக்கு நாள், கிளர்ச்சியைத் தீவிரப்படுத்திக் கொண்டு போனால், அக் கிளர்ச்சி — நேருஜிக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்துவதாகவே யாகும்.

கேரளத்தில் தற்போது கிளர்ச்சி செய்யும் கட்சிகள் ஜவாஹர்லால் நேருஜி, கம்யூனிஸ்ட் சர்க்காரை டிஸ்மிஸ் செய்து ஜனாதிபதி ஆட்சி கொண்டு வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இந்த நடவடிக்கை, மற்ற ராஜ்யங்களில் எத்தகைய உணர்ச்சிகளைக் கிளறும், என்னென்ன புதுப் பிரச்னைகளைக் கிளப்பிவிடும் என்றெல்லாம் நேருஜி யோசிக்கக் கடமைப்பட்டிருக்கிறார். அதனால்தான்

கட்சிகளும் மக்களும்



நேருஜி உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறார்.

இப்போது கேரள சர்க்காருக்கு விரோதமாக நிற்கும் மற்ற கட்சிகள், தேர்தல் காலத்தில் ஒன்றுபட்டு நின்றிருந்தால் இந்தத் தர்மசங்கடம் ஏற்பட்டிராது. காரியம் கெட்டபின் ஒற்றுமை முயற்சி நடைபெறுகிறது. செய்த காரியத்தின் பயனை அனுபவித்துத்தான் தீரவேண்டும். இந்தக் கட்டம் முடிந்த பின்னராவது ஒற்றுமையுடன் வேலை செய்யும் பாடத்தைக் கேரள கட்சிகள் பெறவேண்டும்.

கேரள அரசாட்சியின் காரிய திட்டங்களுக்கும், காங்கிரஸ் கட்சியின் காரிய திட்டங்களுக்கும் என்ன வேற்றுமை என்பதை ஆராய்ந்து உணரவும் வேண்டும். கம்யூனிஸ்ட்டுகள், திட்ட கமிஷன் வெளியிட்டுள்ள திட்டங்களைத் தான் நிறைவேற்றுகிறோம் என்று சொல்வதில் ஏதாகிலும் உண்மையுண்டா என்று பார்க்கவேண்டும்.

திட்டங்களைப் பற்றிப் பிரச்னையில்லை. நிர்வாகத்தில் கட்சிப் பாரபட்சம் நடக்கிறது. கம்யூனிஸ்ட்டுகள் அதிகமாகச் செல்வாக்குப் பெற்று விடுகிறார்கள் என்பதே ஆட்சேபணையானால், கம்யூனிஸ்ட் ஆட்சியை நீக்கி நாம் அமைக்கப்போகும் ஆட்சியானது அவ்விதமான குற்றங்களுக்கு இடம் தராமல் இருப்பதற்கு உறுதி தரும் ஏற்பாடுகள் என்னவென்று மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

சர்க்கார் விளம்பரம்

வேண்டியவர்களுக்கு உதவி செய்யவும் வேண்டாதவர்களுக்குத் தங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கவும் அரசாங்கத்தினிடம் உள்ள பல சாதனங்களில் சர்க்கார் விளம்பரங்கள் ஒன்று. சமீப ஆண்டுகளில் சர்க்கார் விளம்பரங்களின் அளவும் எண்ணிக்கையும் அமோகமாகப் பெருகி விட்டன. மக்களின் திட்டம் என்று கூறப்படும் திட்ட அம்சங்களை மக்களுக்கு எடுத்துரைக்கவே விரிவான விளம்பரம் தேவைப்படுகிறது. மத்திய சர்க்கார் செய்யும் விளம்பரங்களைத் தவிர, ராஜ்ய அரசாங்கங்கள் தனித்தனியே வேறு விளம்பரம் செய்கிறார்கள். சர்க்கார் தொழில்களும் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகின்றன. அவைகளுக்கும் விளம்பரம் தேவைப்படுகிறது.

இவ்விளம்பரங்கள் எல்லாம் நாட்டில் பரவிக் கிடக்கும் விளம்பர ஏஜண்டுகள், விளம்பரக் கம்பெனிகள் மூலம் பத்திரிகைகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. அப்படிச் செய்வதில் சர்க்காருக்கு ஒன்றும் நஷ்டமாகி விடுவதில்லை. மாறாக, விளம்பரக் கம்பெனிகள் பத்திரிகைகளுடன் கொண்டுள்ள தொடர்பு காரணமாகப் பலவித நன்மைகள் உள்ளன.

இப்போது சர்க்காருக்கு இந்த முறை பிடிக்கவில்லை. சர்க்கார் விளம்பரங்களெல்லாம் மத்திய சர்க்கார், ராஜ்ய சர்க்கார், சர்க்கார் நிர்வாகத்திலடங்கிய தொழில் ஸ்தாபனங்கள் செய்யும் விளம்பரங்கள் உள்பட விளம்பர டைரக்டர் என்னும் சர்க்கார் உயர் அதிகாரி கையில் ஒப்படைக்கப்பட்டு அவர் மூலம் நேரடியாகப் பத்திரிகைகளுக்கும் மற்றவர்களுக்கும் விநியோகிக்கப்படப் போகிறது. அதாவது சர்க்கார் விளம்பர விநியோகம் சர்க்காரின் ஏகபோக உரிமையாகியுள்ளது. ஏன் இந்த மாறுதல்?

விளம்பர ஏஜண்டுகளுக்கும் விளம்பரக் கம்பெனிகளுக்கும் பத்திரிகைகள் கொடுக்கும் 'கமிஷன்' தொகையைத் தங்களுக்கே கொடுத்து விடும்படி கோருகிறார்களாம்! விளம்பரக் கட்டண விகிதத்திலும் பேரம் பேசிக் குறைக்கவும் முயற்சி செய்யப்படுகிறதாம்! ஆனால் தங்களுக்கு அநுபவமில்லாத ஒரு துறையில் நுழைந்து, தனிக் கம்பெனிகள் எவ்வளவு சிறப்பாக சேவை செய்து வந்தனவோ, அதைவிட மிக மிகக் குறைந்த அளவில் பயன் கிடைக்கும் வகையில் நடந்து கொள்வார்கள். பணம் பயன் கிட்டாத வகையில் செலவழிக்கவே இந்த முயற்சி. சர்க்கார் எடுத்துக் கொள்ளும் காரியம் எல்லாம் குட்டிச்சுவராவதுபோல் விளம்பர விஷயமும் கெட்டுப்போகத்தான் வழி.

இதைத் தவிர, வேறு சில தீங்குகளும் உண்டு. தனிப்பட்டவர்களும் தனிப்பட்ட ஸ்தாபனங்களும் விளம்பரத் தொழில் மூலம் ஜீவித்திருப்பவர்கள். அவர்கள் வாயில் மண்ணைப் போட்டு அலைக்கழிப்பானேன்.

இதனால் இத் தொழிலில் ஈடுபட்டவர்கள் பாதிக்கப்படுவார்களே என்றாவது ஒரு அரசாங்கம் தனியாருடன் தொழில் முறையில் போட்டியிடுவது தகாது என்றாவது நமது சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க விழையும் சர்க்காருக்குத் தோன்றவே இல்லை. பேராசை ஒன்று மட்டுமே காண்கிறது. தனியார் துறையில் நடத்தப்பட்டு வந்த ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளைத் தங்கள் கைக்கு மாற்றிக் கொண்டனர். அதை அடுத்து உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டு, பலருக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்கி விட்டனர். இப்போது விளம்பரத் துறையிலும் புகுந்திருக்கின்றனர். சர்க்கார் பிசாசு தனி மனிதனுடைய அலுவல்களில் இவ்வாறு புகுந்து குழப்புவதைத் தொழில் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் எவரும் கண்டிக்க வேண்டும். தனி மனிதனின் பேராசையால் அதிக ஆபத்து விளையாது. ஆனால் அரசாங்கமே பேராசை பிடித்துப் போனால் அந் நாட்டு மக்களுக்கு விமோசனமே இல்லை.

இன்றையப் பிரச்னை...

கூட்டு விவசாயம்

அது நமக்குத் தேவையா? நல்லதா?

பதினொரு வருஷகாலம் தொடர்ந்து காந்தி அடிகளின் வாரிசுகளால் நடத்தப்பட்ட ராஜ்யத்தில், வருஷா வருஷம் கோடானுகோடி ரூபாயை வாரி வீசிச் செலவழித்தும் மக்களின் கஷ்டத்திற்கு ஏன் விமோசனம் காணவில்லை? நாகபுரியில் இணிக்கப்பட்ட பலாத்கார ஒத்துழைப்பு ஆயுதம், காந்தி அடிகளின் பலாத்காரமற்ற ஒத்துழை யாமையால் நாம் அடைந்த சுதந்திரத்தை அழித்து விடாதா?

— எம். ஏ. ஸ்ரீனிவாசன்

பல சொந்தக்காரர்கள், பல மேற்பார்வையாளர்கள் உள்ள விஷயம் ஏதாவது உருப்படுமா? இந்தக் கூட்டு விவசாயத்தை நான் பலர் சொந்தம் கொண்டாடும் விவசாயமாகவும், பலபேர் மேற்பார்வை செய்யும் விவசாயமாகவும்தான் கருது கிறேன். ஒருவன் சமையலறையில் ஒன்பதுபேர் புகுந்து சமைக்க முன்வந்தால் அந்தச் சாப்பாடு குட்டிச்சுவர்தான். ஒரு வீட்டுச் சாப்பாட்டைக் கெடுப்பதே இது. தனிப்பட்ட நிலச்சுவான்தார்கள் திறமையாகவும் சிரத்தையோடும் வேலை செய்து வந்த இடத்தில் பல சொந்தக்காரர்களையும், பல நிர்வாகஸ்தர்களையும் புகுத்தி, தனி மனிதனின் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கெடுத்துத் தேசத்தின் உணவு உற்பத்திக்கே கேடு விளைவிப்பது அதைவிட எவ்வளவு பெரிய குற்றம்! இப்பொழுது நிலச் சொந்தக்காரர்களாக இருப்பவர்களிடமிருந்து — சிறிய நிலச்சுவான்தார்களாயினும் சரி, பெரிய நிலச்சுவான்தார்களாயினும் சரி — நிலத்தைப் பறித்து ஒரு வறட்டுக் கொள்கைக்காகப் பலர் கைகளில் ஒப்படைத்தால் காகிதப் பணம் பெருகுவதில்தான் முடியும். மக்களிடம் உணவுப் பொருளுக்குப் பதில் நாசிக் அச்சகத்தில் அச்சடித்த காகிதப் பணமோ அல்லது சர்க்கார் பத்திரங்களோதான் இருக்கும். உணவுப் பொருள் வியாபாரத்தில் சர்க்கார் இறங்குவதை விடப் பெரிய மடமை வேறு கிடையாது. சர்க்கார் வியாபாரத்தை மேற்கொண்டால் மக்கள் பிச்சைக்காரர்களாக வேண்டியதுதான் என்பது குஜராத்தி பழமொழி.

— ராஜாஜி

ஸ்ரீ

கல்கி

தமிழரின் சொந்தப் பத்திரிகையான கல்கி வாயிலாக இந்தியாவின் அந்நியக் கடன்களும் அவற்றின் விளைவும் என்ற விஷயம் பற்றிச் சென்ற ஆண்டு விரிவான ஒரு ஆராய்ச்சி அரங்கு நடத்தினோம். இன்றைய மக்கள் உள்ளங்களில் மேலோங்கி நிற்கும் உணவுப் பிரச்னையை யொட்டி மற்றொரு ஆராய்ச்சி அரங்கு கல்கியில் ஆரம்ப மாவதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நில உச்சவரம்பு, கூட்டு விவசாயம், சர்க்கார் வர்த்தகம்

திருவாளர்கள் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர், கே. எம். முன்ஷி, ஏ. டி. ஷ்ராப், என். ஜி. ரங்கா, எம். ஆர். மஸானி, சித்ர நாராயணஸ்வாமி, ஸர்தார் லால் சிங், ஏ. எஸ். நாராயணஸ்வாமி அய்யர், ஸர்தார் உஜ்ஜல் சிங், டாக்டர் எஸ். சந்திரசேகரன், பி. ஆர். ஷெனாய், ஆர். வி. ராமசுந்தரம் பிள்ளை, வி. கே. ராமஸ்வாமி முதலியார், எம். ஏ. ஸ்ரீனிவாசன், ஏ. ஆர். வெங்கடாச்சாரி, எஸ். ஒய். கிருஷ்ணஸ்வாமி, காளா சுப்பா ராவ் ஆகியோர் இந்த ஆராய்ச்சி அரங்கில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள்.

இந்த ஆராய்ச்சி அரங்கம் 1959 ஆகஸ்ட் 2-ம் தேதி கல்கி இதழில் ஆரம்ப மாகித் தொடர்ந்து பல வாரங்கள் நடைபெறும். உங்கள் கல்கி பிரதிக்கு உங்களூர் கல்கி ஏஜெண்டிடம் முன்கூட்டிப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

மானேஜர், கல்கி, கீழ்ப்பாக்கம், சென்னை-10

என்ன சேதி?

பாடபுத்தக மோசடி

சென்னை நகராட்சி மன்றத்தில் ஒரு புதிய குழப்பம் தோன்றியிருக்கிறது. சமீபத்திய தேர்தலுக்கு முந்தியிருந்த நகராட்சி மன்ற உறுப்பினர்கள் நகராட்சி மன்றப் பள்ளிக்கூட நான்காவது வகுப்புப் பிள்ளைகளுக்குச் சில குறிப்பிட்ட புத்தகங்களைப் பாடமாக வைக்கும்படி சிபாரிசு செய்துவிட்டுச் சென்றனர். இப்பொழுது புதிதாக நகர மன்றத்துக்குள் பிரவேசித்துள்ள தி. மு. க. அங்கத்தினர்கள் பழைய சிபாரிசை ரத்து செய்து விட்டனர். இதற்குக் காரணம் என்னவென்று விசாரித்ததில் திடுக்கிடும்படியான விவரம் தெரிய வந்திருக்கிறது.

முந்தைய கல்விக் குழு, புத்தகத்தைக் கண்ணால்கூடப் பாராமல், சர்க்கார் பாட புத்தகக் கமிட்டியின் அங்கீகாரம் கூடப் பெறாத புத்தகங்களை அவசர அவசரமாக, அவர்கள் பதவியை விட்டு விலகும் நாளன்று இரவு ஒன்பது மணிக்கு முடிவு செய்துவிட்டுச் சென்றிருக்கின்றனர். புத்தகம் அச்சாகி, அது சர்க்கார் பாட புத்தகக் கமிட்டி அங்கீகரித்து, அங்கீகரித்த புத்தகங்கள் கெஜட்டில் வெளியான பிறகு அவற்றிலிருந்து சென்னை நகரசபைக் கல்விக் குழுவினர் தேர்ந்தெடுப்பார்கள். இந்த ஒழுங்கு முறையை அப்படியே காற்றில் பறக்க விட்டுவிட்டு, பழைய கல்விக் குழு அதிக்கிரமமாக நடந்துகொண்டிருக்கிறது.

இந்த ஒழுங்கீனத்தைக் கண்டுபிடித்து, துணிச்சலுடன் பழைய முடிவை ரத்து செய்ததற்கு இப்போதைய கல்விக் குழுவையும் நகரசபையையும் பாராட்ட வேண்டும். ஆனால் இப்போது உடனடியாகக் கஷ்டப்படுபவர்கள் பள்ளிக்கூடப் பிள்ளைகள். பள்ளிக்கூடம் திறந்து ஒரு மாதத்துக்கு மேலாகியும் பிள்ளைகள் பாட புத்தகங்கள் இல்லாமல் தவிக்கின்றனர். உபாத்தியாயர்கள் என்ன பாடம் நடத்துவது என்று தெரியாமல் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கின்றனர். துரு துரு வென்று ஆர்வத்தோடு துடிக்கும் பிள்ளைகளைப் பள்ளிக்கூட அறைக்குள் அடைத்து ஒரு பாடமும் நடத்தாமல் அவர்களைச் சும்மா உட்கார வைத்திருப்பது, குழந்தைகளுக்கு இழைக்கப்படும் பெருங் கொடுமையாகும். விரைவில் புதுக் கல்விக் குழு புதுப் புத்தகத்தைச் சிபாரிசு செய்துவிடும் என்று நம்புகிறோம்.

ஆராய்ச்சி அரங்கம்

சென்ற ஆண்டில் நம் பாரத நாட்டின் அந்நியச் செலாவணி நெருக்கடி, அந்நியக் கடன் பற்றி விரிவான முறையில் கல்கியில் ஒரு ஆராய்ச்சி அரங்கம் நடத்தப்பட்டது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அதற்கு நாட்டில் பல பாகங்களிலிருந்தும் அமோகமான வரவேற்பு இருந்ததுடன், இம் மாதிரி ஆராய்ச்சி அரங்கங்கள் அடிக்கடி நடத்திப் பொது மக்கள் அறிவை வளர்க்கவும், மக்களின் அபிப்பிராயத்தை எடுத்துக் கூறவும் வேண்டும் என்று வாசகர்கள் ஒருமுகமாகக் கேட்டுக் கொண்டனர். இதற்ிணங்கி இப்போது மற்றொரு ஆராய்ச்சி அரங்கம் ஏற்பாடாகி இருக்கிறதென்ற நற்செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நம்மிடையே பலத்த விவாதத்தை உண்டாக்கியுள்ளது சர்க்காரின் நிலச் சீர்திருத்தக் கொள்கை. நாகபுரி காங்கிரஸ் தீர்மானத்துக்குப் பிறகுதான் இவ் விவாதம் தீவிரமாகியுள்ளது. கூட்டுப் பண்ணை விவசாயம் நல்லதா, கெட்டதா? அதனால் நாட்டின் உணவுப் பிரச்னை தீர்ந்துவிடுமா? நமது இன்னல்களுக்கெல்லாம் கூட்டுப் பண்ணைதான் தலை சிறந்த மருந்தா? கூட்டுப் பண்ணை முறையினால் சர்க்கார் பலாத்காரமும் ஆதிக்கமும் வலுப் பெற்றுவிடாதா? நிலங்களுக்கு உச்சவரம்பு கட்டுவது அவசியம்தானா? இம்மாதிரி பிரச்னைகளே தற்போது முக்கியமாக விளங்குகின்றன. அத்துடன் வருங்காலத்திலும் கூட இவைதாம் முதல் பிரச்னையாக இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கலாம். சர்க்காரின் நடவடிக்கைகளும் போக்கும் இந்தத் துறையில் தீவிரமாகச் செல்லுவதால் இவற்றின் பலா பலன்களை மக்கள் தெரிந்துகொள்ளுவது அவசியம். ஆகவே, ஆராய்ச்சி அரங்கிற்கு விஷயமாகக் கூட்டு விவசாயம், நில உடைமைக்கு உச்ச வரம்பு, சர்க்கார் வர்த்தகம் என்னும் பிரச்னைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த அரங்கத்தில் தங்கள் தங்கள் துறையில் நீண்ட அனுபவமுள்ளவர்களும், நிர்வாக அதிகாரிகளும், பொறுப்புள்ள பதவி வகித்தவர்களும், தேசியத் தலைவர்களும், விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களும், வர்த்தகர்களும் கலந்து கொள்ளுகின்றனர். திருவாளர்கள் கே. எம். முன்ஷி, டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர், ஏ. டி. ஷ்ராப், என். ஜி. ரங்கா, எம். ஆர். மஸானி, சித்ரா எஸ். நாராயணஸ்வாமி, ராஜபாளையம் பண்ணையார் ராமசுந்தரம் பிள்ளை, வி. கே. ராமஸ்வாமி முதலியார் முதலிய பல அறிஞர்கள் பங்கெடுத்துக் கொண்டு இப் பிரச்னையைப் பல கோணங்களிலிருந்து ஆராய்ச்சி செய்கின்றனர்.

ஆகஸ்டு 2-ந் தேதி இதழிலிருந்து இந்த அரங்கம் ஆரம்பமாகி, ஆறேழு வாரங்களுக்குத் தொடரும். அடுத்த இதழில் திரு கே. எம். முன்ஷி, டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர், ஏ. டி. ஷ்ராப் ஆகிய மூன்று அறிஞர்களின் அறிவுரைகள் வெளிவரும். கல்கியின் முந்திய ஆராய்ச்சி அரங்கத்தைப் போல் இந்த அரங்கமும் நேயர்களுக்கு நல்விருந்தாக அமையுமென்று எதிர்பார்க்கிறோம்.

இன்பச் சிரிப்பே அன்பின் அணைப்பு

உங்கள் குழந்தையின் கள்ளமில்லாச் சிரிப்புக்கு ஈடான செல்வம் ஏது? தித்திக்கும் மழலையிலே நீங்கள் அடையும் பேரின்பத்தை எத்தகைய வார்த்தைகளாலும் சித்தரிக்க இயலாது. எது மாறினாலும் அந்த இன்பம்மாறாதிருக்கவேண்டுமென்றே பிரார்த்திக்கிறது உங்கள் உள்ளம்.

குன்றாத ஆரோக்கியமுள்ள குழந்தைகளே குதூகலத்தின் உருவகம். ஆயினும், உடன்பிறந்த உடல்நலத்தையே, உரிய பராமரிப்பின்மையால் இழந்து நோயுறும் குழந்தைகள் எத்தனையோ. சரியான குழந்தைப் பராமரிப்புக்கு வழி காட்டுபவர் உங்கள் வைத்தியர்தான். முறைதவறாத வைத்தியப் பரிசோதனைகள் மூலமாக உங்கள் குழந்தைகளின் உடல் நலத்தையும் சுகத்தையும் உங்களால் காத்துக் கொள்ள முடியும். எக்காலத்திலும்

உங்கள் வைத்தியரைக் கலந்துகொள்ளுங்கள்.

அலெம்பிக்
கெமிகல் வர்க்ஸ்
கம்பெனி லிமிடெட்
பரோடா-3.




ACWJ598C TAM



Roxana

CLOCKS of Real Craftsmanship...

There is a "ROXANA" to suit every place. Buy it and be proud of the Indian Craftsmanship. Available in more than 20 enchanting models Roxanas are always ahead in designs and accuracy.



Catalogue giving full details supplied free on request.

MASTER CLOCK & WATCH WORKS, PRIVATE LTD.

35 A, TULSIPIPE ROAD, MATUNGA, (W.R.) BOMBAY. 16.

MPS

உங்கள் குழந்தையையும்
குதூகல மடையச் செய்யும்

ஸ்பென்ஸர்ஸ் கிரைப் ஸிரப்



குழந்தைகளுக்கு வரும் கோளாறு களைப் போக்கும் சிறந்த மருந்து.

வயிற்றை இறுக்கிப் பிடித்துத் துன்புறுத்தும் நோயின் சின்னங்கள், வாயு பிதம், உப்புசம், சிறிய வலிப்புகள், அதிகமான புளிப்புத்தட்டல், வாந்தி, ஆகியவைகளை விரைவில் சாந்தம் படுத்துகிறது. பல் முளைக்கும் பருவத்தில் சிறப்பாக உபயோகிக்கத்தக்க தென்று சிபார்சு செய்யப்படுகிறது.



சென்னை (புதுச்சேரி உள்பட), கேரளம் & மைசூர்
இராஜ்யங்களுக்குப் பூரண விநியோகஸ்தர்கள்:
டிரக் (ஹ) ஹவுஸ்
தேர் நிலையம், சேலம்–1
கிளைகள்: சென்னை & பெங்களூர்.

கல்வியிலும் அரசியல் தலையீடு

கொழும்பு, ஜுலை 15உ

கொழும்பு துறைமுகத்தில் சென்ற பல தினங்களாக நடைபெற்று வரும் வேலை நிறுத்தம் இக்கடிதத்தை எழுதும் வரை ஒரு முடிவுக்கு வரவில்லையென்பதுடன் விரைவில் முடிவடையலாம் என்ற அறிகுறியையும் காணவில்லை. இந்த வேலை நிறுத்தத்தை ஆதரிக்கும் அநுதாபம் தெரிவிக்கும் பல்வேறு பெரிய வர்த்தக ஸ்தாபனங்களையும் சேர்ந்த பதினையாயிரத்துக்கு மேற்பட்ட ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். இதனால் நாட்டின் தொழில் வர்த்தக அலுவல்களெல்லாம் முடங்கிக் கிடக்கின்றன. எந்த நிமிஷம் பொது வேலை நிறுத்தம் நடந்து மீண்டும் அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்படுமோ என்று எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் அடுத்த பொதுத் தேர்தல் திடீரென்று எந்த நிமிஷமும் நடைபெறலாம் என்று எதிர்பார்த்து எல்லா அரசியல் கட்சிகளும் தங்கள் தங்கள் பிரசார ஆயுதங்களுக்கு மெருகிட்டு வருகின்றன. முக்கியமாக முன்னாள் ஆளும் கட்சியான திரு டட்லி சேனநாயகாவின் ஐக்கிய தேசியக் கட்சி தினசரி எங்காவது ஒரு பிரசாரக் கூட்டம் நடத்தாத நாளில்லை. இப்போது நடக்கும் வேலை நிறுத்தங்களெல்லாம் உண்மையில் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சிகளே தவிர தொழிலாளர் ரீதியான பிரச்னைகளல்ல.

இந்தியப் பிரச்னை

இந்தியப் பிரச்னையை மனிதப் பண்புடனும் மனிதாபிமானத்துடனும் தீர்ப்பதற்கு விரும்புவதாகப் பிரதமர் பண்டார நாயகா இந்திய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத்திடம் தெரிவித்தார் என்று இந்திய உதவி வெளிநாட்டு மந்திரி ஸ்ரீமதி லட்சுமிமேனன் பம்பாயில் கூறினார். இதை இங்குள்ள இந்திய வட்டாரங்கள் கவனித்தும் எவ்வித கருத்தும் வெளியிடத் தயாராயில்லை. ஆயினும் இதில் புதிய விஷயம் ஏதும் இல்லையென்று மாத்திரம் தெரிவித்திருக்கின்றனர். மனிதப் பண்புடனும் மனிதாபிமானத்துடனும் இந்தியப் பிரச்னையைத் தீர்க்கப் போவதாகப் பிரதமர் பண்டார நாயகா பதவிக்கு வந்த சென்ற மூன்று வருட காலமாகவே சொல்லிக் கொண்டிருக்கிறார். பார்லிமெண்டில் ஒவ்வொரு முறை பேசுகையிலும் 'இதோ தீர்த்து விட்டேன்' 'அதோ தீர்த்து விட்டேன்' என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆனால் காரியத்தில் ஒன்றும் நடக்கவில்லை. கவர்னர் ஜெனரலின் சிம்மாசனப் பிரசங்கத்தில்கூட இந்தியப் பிரச்னையைத் தீர்க்க விரைவில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப் போவதாகவே கூறப்பட்டது. ஆனால் இந்த வார்த்தைக்கு மதிப்பில்லாமற் போய் விட்டது. இந்த நிலைமையில், அரசாங்கத்துக்குப் பெரிய தலைவலியைக் கொடுக்கும் உள்நாட்டுப் பிரச்னைகள் பல இருக்கையில் இந்தியப் பிரச்னையைப் பற்றிச் சிந்திப்பதற்குக்கூடப் பிரதம மந்திரிக்கு அவகாசம் இருக்குமென இங்கு யாரும் எதிர்பார்க்கவில்லை.

மான்யக் கமிட்டி

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வருடாந்திரக் கூட்டம் இவ்வாரம் கொழும்பில் நடைபெற்ற பொழுது பல்கலைக் கழக மான்யக் கமிட்டி யொன்றை நிறுவுமாறு அரசாங்கத்தை வற்புறுத்தும் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பிரிட்டனிலும் இந்தியாவிலும் பல்கலைக் கழக மான்யக் கமிட்டிகள் நியமிக்கப்பட்டு அவை அரசியல் தலையீடு இல்லாமல் பல்வேறு பல்கலைக்கழகங்களின் தேவைகளையும் அனுசரித்து மான்யத்துக்குச் சிபாரிசு செய்வதைப் போல், இலங்கையிலும் ஒரு கமிட்டி அவசியம் என்றும் அப்போதுதான் அரசியல் தலையீடு இல்லாமல் பல்கலைக் கழகங்கள் அபிவிருத்தியடைய முடியுமென்றும் பேராசிரியர் திரு மயில்வாகனம் இக்கூட்டத்தில் எடுத்துச் சொன்னார். கல்வி விஷயங்களில் அரசியல் தலையீடு இலங்கையில் எவ்வளவு படுமோசமாயிருக்கிறது என்பதற்கு இவ்வாரம் ஒரு உதாரணம் கிடைத்திருக்கிறது. கொழும்பில் உள்ள தொழில் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கும் விஷயத்தில் கல்வி மந்திரி இனப் பாகுபாடு உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருக்கிறார். சிங்களம் உத்தியோக மொழியாதலால் சிங்கள அறிவுள்ள மாணவர்களுக்கு மட்டுமே தொழிற் கல்லூரியில் இடமளிக்க வேண்டும் என்பது அவரது உத்தரவு. இதன்படி தமிழ் மாணவர்களுக்குத் தொழிற் கல்வி பயிலும் சந்தர்ப்பம் அறவே இல்லாமற் போய் விடும். இதைப் பற்றித் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கல்வி மந்திரியிடம் கடுமையாக ஆட்சேபித்த பொழுது யாழ்ப்பாணத்தில் கொழும்பிலுள்ளதைப் போன்ற ஒரு உயர்தரத் தொழிற் கல்லூரியை அமைத்துக் கொடுப்பதாக மந்திரி வாக்களித்தார். இப்பொழுது அந்த வாக்குறுதி மீறப்பட்டு விட்டதோடு யாழ்ப்பாணத்தில் உயர்தர தொழிற் கல்லூரி அவசியமில்லை என்று அரசாங்கம் கருதுவதாயும் மந்திரி அறிவித்திருக்கிறார். அரசாங்கத்தின் இந்த இனப் பாகுபாட்டை வன்மையாகக் கண்டித்துத் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு செல்வநாயகம் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இவ்விதம் கல்வி விஷயத்தில் அரசாங்கம் அரசியலைப் புகுத்திக் குழப்பும் சமயத்தில் கட்சிச் சார்பற்ற முறையில் ஒரு பல்கலைக் கழகக் கமிட்டி இயங்குவது அவசியமேயாகும். —ரகுவீ.

ஆகாசவெடி!

"அடிக்கடி கேள்விகள் கேட்டதை ஆட்சேபிக்கும் முறையில், ஆந்திர முதன் மந்திரி பிரமாவரம் காங்கிரஸ் கூட்டத்திலிருந்து வெளியேறினர்." —செய்தி

"நானாக இருந்தால் பிரசங்கத்தை ஆரம்பித்துக் கூட்டத்தை வெளியேற்றி விருப்பேன்!" என்கிறார் இங்கு ஒரு மந்திரி.

★

"காங்கிரஸ்காரர்களிடையே சில இடங்களில் நேர்மை குறைந்து வருகிறது."

—கோவையில் சென்னை நிதி மந்திரி

இந்த உண்மையை அவர் பல இடங்களிலும் ஏன் எடுத்துக் கூறக் கூடாது?

★

"நேரு எனக்கு அளித்த விருந்தில் ஸ்ரீமதி இந்திரா காந்தியும் கலந்து கொண்டார். ஆனால் எங்கள் சம்பாஷணையில் அவர் கலந்து கொள்ளவில்லை."

—கேரள முதலமைச்சர்

பேச்சைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் நம்பிக்கையுள்ள ஸ்ரீமதி இந்திரா விருந்தின்போது, அதைப் பின்பற்றியதில் ஆச்சரியமில்லை.

★

"வெளிநாட்டுக்கு வரும் இந்தியப் பெண்கள் மிகவும் நாணமுள்ளவர்களாக இருக்கிறார்கள்."

—நியூயார்க்கில், டாக்டர் ராதாகிருஷ்ணன்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் இவ்வாறு கூறி விட்டாரேயென்று, இந்தியாவுக்கு வர வெளிநாட்டுப் பெண்கள் நாணப்பட்டுவிட வேண்டாம்!

"ரங்கூனில், போலீஸ் உதவியுடன் ஒரு குருடியை, ஒரு குருடன் கல்யாணம் செய்து கொண்டான்." —செய்தி

போலீஸார் அப்பால் போனதும் நிலைமை பழைய குருடி...என்று ஆகிவிடவில்லையே?

★

"கேரளம் முழுவதும் பருவ மழை கண் திறக்காமல் கொட்டிவருகிறது."—செய்தி

கேரளத்தில் எந்தக் காரியம்தான் கண் மூடித்தனமாக நடைபெறாமல் வாழ்கிறது?

★

"காஷ்மீர் வெள்ளப் பகுதிகளை விமானத்திலிருந்தபடியே சுற்றிப் பார்த்து விட்டு இந்திய அணைத் திட்ட மந்திரி டில்லி திரும்பினார்."

"நம்மை வரவேற்க ஒருவராவது காணப்பட்டிருந்தால் வெள்ளத்தையும் பொருட்படுத்தாமல் மந்திரி இறங்கியிருக்க மாட்டாரா?" என்கிறார் ஒருவர்.

★

"வருங்காலத்தில் இறக்கை போன்ற சாதனங்களைத் தரித்து மனிதன் பறந்து செல்வது சாத்தியம்." —ஒரு விஞ்ஞானி

"கடன் வாங்கிக் கொண்டு பறந்து விடுபவர்கள் இப்போது என்ன சாதனம் உபயோகிக்கிறார்கள்?" என்றார் ஒருவர்.

★

"ஒரு பத்திரிகாலயத்தில் நுழைந்து போலீஸார் சில கையெழுத்துப் பிரதிகளை வாங்கிக் கொண்டு சென்றனர்."

கதைகளை ஆசிரியர்கள் மனம் போனபடி அடிப்பதிலிருந்து மீட்க, போலீஸார் ஒரு வேலை ஏவப்பட்டார்களோ?

SWARAJYA

The well - known English political weekly of India

Edited by KHASA SUBBA RAO

PUBLISHED EVERY SATURDAY

Single Copy 15 nP. - Annual Subscription Rs. 7.50 - Half-Yearly Rs. 4/-

For particulars of Agency of Swarajya please write to.

MANAGER

THE SWARAJYA, KALKI BUILDINGS, KILPAUK, MADRAS-10

The formation of the Swatantra party is the greatest political event in the country after Independence. In the present context of our economic and political condition under the Congress rule, read the Swarajya regularly and hear the voice of Rajaji & Khasa Subba Rau

Copies of Swarajya can be had everywhere from local distributors of the Kalki and all Railway Book Stalls in India



வள்ளுவர் வாசகம்

ராஜாஜி

92

தெண்ணீர் அடுபுற்கை
  ஆயினும் தான்தந்தது
உணணலின் ஊங்குஇனியது
  இல்

தன் முயற்சியால் அடைந்தது கஞ்சி யாயினும், அதிலும் மிக நீரான கஞ்சி யாயினும் நல்ல உணவு ஆகும்; அதை விட இனிய உணவு வேறு கிடையாது.

தான் தந்தது - பிச்சை எடுக்காமல் முயற்சி யால் சம்பாதித்தது.

புற்கை - கூழ்.

* * *

கரப்பவர்க்கு யாங்குஒளிக்கும்
  கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம்
  உயிர்

யாசிப்பவனுக்கு இல்லை என்று சொன்னதும் அந்தச் சொல்லைக் கேட்டதும், அவன் உயிர் போகும் அந்தச் சொல்லில் அவ்வளவு விஷம் இருக்கிறது. ஆனால் அந்த விஷம் சொன்னவன் வாயில் நின்றதே ஆயினும் அவனை அந்த விஷம் கொல்ல வில்லையே. இது என்ன வியப்பு? அவன் உயிர் விஷத்துக்குச் சிக்காமல் எங்கே ஒளிந்து தப்பிற்று? இந்த விஷம் தூரநின்றே கேட்டவனைக் கொல்கிறது. ஆனால் வாயில் கொண்ட வனைக் கொல்லவில்லையே, இது என்ன வியப்பு!

'இல்லை' என்ற சொல்லைக் கேட்டதும், யாசித்தவன் உயிர் போய் விடுகிறது என்றது இனி என்ன செய்வது என்று ஏக்கம் கொண்டு பிணம் போல் நிற்றல்

* * *

இரந்தும் உயிர்வாழ்தல்
  வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி
  யான்

இவ்வுலகத்தைப் படைத்தவன் இந்த உலகத்தில் மக்கள் இரந்தும் (யாசித்தும்) உயிரைக் காக்கவேண்டி விதித்தானாயின் அந்தக் கொடியவன் தானும் அந்த மக்களைப்போல் அலைந்து கெடுவானாக

யாசிப்பதில் உள்ள கொடுமையைப் பலமாக எடுத்துக் காட்டுவதற்காக, இது படைத்தவன் விதியாயின் அவன் கெடுக என்கிறார்

இது படைத்தவனுடைய விதியல்ல, உழைத்தால் யாசிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது கருத்து.


தரம்பூர்
பொருளினால்
அலங்கரித்தது
HINDUSTAN AMBASSADOR
ஹிந்துஸ்தான் அம்பாஸடர்
பார்ப்பதற்குக் கச்சிதமாக
இருப்பது போலவே
உட்புறமும் தரம்பூர்
லயன் பிராண்டு
தோல் துணியினால்
அழகாகவும் கச்சிதமாகவும்
சிங்காரிக்கப் பட்டிருக்கிறது.
LION BRAND
DHARAMPUR
DHARAMPUR LEATHER CLOTH CO., PRIVATE LTD.,
10, Chowpatty Sea Face, BOMBAY-7. (INDIA).
Telephone: 27316
DL 4 SEKAI

ராஜாஜி கதைகள்

கதைகளை வாசிப்பதில் யாருக்குத்தான் ஆர்வமில்லை. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை கதையென்றால் வாயில் ஈ புகுவது தெரியாமல் வாசிக்கிறார்கள். அதிலும் தமிழர்களுக்குக் கதைகள் படிப்பதிலுள்ள ஆர்வத்தைப்போல், உலகில் வேறு எங்கேயுமிருக்காது என்று சொல்லலாம் போலிருக்கிறது. மூன்று கோடி மக்களுள்ள தமிழ் நாட்டில் எத்தனை கதைப் பத்திரிகைகள்.

பொதுவாக வாசகர்களுக்குப் புதுப் புதுக் கதைகள் படிக்க வேண்டும் என்றே ஆர்வம் இருக்கும். கொஞ்சகாலம் கதைகள் படித்து வந்தால் பிறகு எல்லாக் கதைகளும் ஏறத்தாழ ஒரேமாதிரி திரும்பத் திரும்ப வருகின்றனவே என்று சொல்லத் தொடங்குவார்கள். இந்த மனநிலையில் மீண்டும் பழைய கதைகளையே படிப்போம் என்று தொடங்குவார்கள். சாதாரண கதையானாலும் 'சப்' என்றிருக்கும். மேலே படிக்கத் தோன்றாது. ஆனால் வேறு சில பழைய கதைகளைப் படித்து வரும்போதே பளிச் பளிச்சென்று பலப் பல உண்மைகள் புலப்படும். இந்த உண்மைகளையெல்லாம் முதல் தடவை படித்தபோது, நாம் காணவில்லையே, இந்த இன்பங்களை நுகரவில்லையே என்று வியப்பும் ஏக்கமும் அடைவார்கள். அந்தப் புத்தகத்தைப் படித்து முடித்த பிறகு மீண்டும் ஒருமுறை படிக்க வேண்டும் என்று தோன்றும். படிக்கப் படிக்கப் புதிதாகவே இருந்து கொண்டிருக்கும். இப்படித் தோன்றும் புத்தகத்துக்குத்தான் இலக்கியம் என்று பெயர்.

அதனால்தான் ஒரு பிரபல ஆசிரியர், ''புதுப் புத்தகம் படிக்க நேரும்போதெல்லாம், நான் ஒரு முறை என் பழைய புத்தகத்தைப் படித்துக் கொள்வது வழக்கம்'' என்றார்.

புதுப் புத்தகம் நிச்சயமாக நன்றாக இருக்கும் என்று சொல்ல முடியாது. மனத்துக்கு இன்பம் அளிக்கும் என்று சொல்ல முடியாது. அதனால் நிச்சயமாக நன்றாயிருக்கக் கூடிய பழைய புத்தகத்தை ஒரு முறை படித்து இலக்கிய இன்பத்தில் ஆழ்ந்துவிட்டு, புதுப் புத்தகத்தைப் படிக்கத் தொடங்குவார்.

இப்படிப்பட்ட ஓர் அரிய பழைய புத்தகத்தைப்பற்றி நேயர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஆம் பழைய புத்தகம்தான்; ஆனாலும் எவ்வளவு புதிதாக இருக்கிறது! மெய்சிலிர்க்க வைப்பதாக இருக்கிறது! இலக்கிய இன்பம் என்னவென்பதைக் கையில் எடுத்துக் கொடுப்பதாக இருக்கிறது !

'ராஜாஜி கதைகள்' என்ற தலைப்பில் வந்துள்ள இக்கதைப் புத்தகத்தில் இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ராஜாஜி எழுதிய கதைகள் அடங்கியிருக்கின்றன. இத் தொகுப்பு ஏற்கனவே இருமுறை வெளியானதுதான். இப்போது மலிவுப் பதிப்பாக வந்துள்ளது.

இதிலுள்ள கதைகள் பல, முப்பது வருஷங்களுக்கு முந்திய சமுதாயச் சூழ்நிலையில், மதுவிலக்குப் பிரசாரத்தை நோக்கமாகக் கொண்டு ராஜாஜி எழுதிய கதைகள்தான்!

பிரசார நோக்கத்தோடு எழுதப்பட்ட கதைகள் எதுவுமே நீடித்து நிற்காது; அழகு இராது என்று சொல்வார்கள். இந்த இலக்கணத்துக்கு நேர்மாறாக, இன்றும் இந்தக் கதைத் தொகுதி உள்ளத்தைத் தொடும் அற்புத இலக்கியமாகத் திகழ்கிறது.

'' ஜெயராமன் '' என்று ஒரு கதை. அந்தக் கதையைப் படித்து விட்டுக் கண்கலங்காமல் ஒருவர் இருந்தால், அவரை மியூஸியத்தில் வைக்க வேண்டியதுதான். அப்படி கல்நெஞ்சையும் கரைய வைக்கும் கதை. ஜெயராமன்— அந்த ஏழைச் சிறுவனைக் கண்டு இரங்குவதா? அல்லது அவன் தந்தையான அந்தக் குடிகாரனின் ஆணவம் பாதிக்கப்பட்டதைக் கண்டு, அவன் கோபமடைவதைக் கண்டு இரங்குவதா ? என்ன நுட்பமான மனோபாவங்கள் !

ஜகதீச சாஸ்திரிகளின் கனவு என்று ஒரு கதை. ஏமாற்றப்பட்ட ஜகதீச சாஸ்திரிகள், அந் நிலையிலும் மனைவியின் மேல் எவ்வளவு பாசம் கொண்டிருக்கிறார் ! பிள்ளையின் மேல் எவ்வளவு பாசம் கொண்டிருக்கிறார் ! சமுதாயக் கொடுமைகள் எல்லாம் அவர் கனவில் வந்து துன்புறுத்துகின்றன ! அந்தக் கனவுகள் —அப்பப்பா !— சமுதாயக் கொடுமைகளின் சுருங்கிய வரலாறு என்றே சொல்ல வேண்டும்.

ராயப்பன் என்ற அனாதை பிராமணச் சிறுவன், மாற்றாந் தாயினால் விரட்டப்பட்டுக் கிறிஸ்தவனாகிறான். இருந்தாலும் அவனுக்கு மன நிம்மதி பிள்ளையார் கோவிலில் படுத்தால்தான் கிடைக்கிறது !

யுகம் யுகமாக ஊறி வந்த பண்பாட்டை அவ்வளவு அலட்சியமாக அகற்றி விட முடியுமா ?

இப்படிப் பதினேழு கதைகள் உள்ளன. பதினேழு கதைகளும், நம் உள்ளத்தை உயர்த்துகின்றன; அன்பை வளர்க்கின்றன; ஏழைகளிடம் இரக்கம் கொள்ளச் செய்கின்றன ! மனித இதயத்தின் அற்புத அரிய மனோபாவங்களை மிக அருமையாக எடுத்துக் காட்டுகின்றன !

படிக்கப் படிக்கப் புதிது புதிதான கருத்துக்கள் தென்படுகின்றன ; உணர்ச்சி வசப்படுத்துகின்றன !

படாடோபமான நடையில்லை. அழகுக்காக அடுக்குச் சொற்களில்லை. ஆசிரியரின் உள்ளத்திலிருந்து வந்த வார்த்தைகள்; நேரே வாசகர்கள் உள்ளத்தில் பாய்கின்றன. எளிமை எத்தகைய மகத்தான காரியம் சாதிக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டு இத் தொகுதி. 'உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாம்' என்ற கவிஞரின் வாக்குக்கு ஒரு விளக்கம் இந்நூல் !

'கால வெள்ளத்தைக் கடந்து நிற்கக்கூடிய கதைகள் தமிழில் உண்டா?' என்று யாராவது கேட்டால் '' உண்டு '' என்று உறுதியாகச் சொல்லி இந்தத் தொகுதியை அவர் கையில் எடுத்துக் கொடுக்கலாம்.

பிரசுரம் : பாரதி பதிப்பகம், சென்னை-17; விலை : ரூ. 1-50. —எஸ். வி. எஸ்.

சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு

அட்டூழிய ஆட்சி

காங்கிரஸ் ஆட்சியில் நடந்து வரும் அட்டூழியங்களிலிருந்து எங்களைப் போன்ற எளியோர்களையும் மற்றோர்களையும் விடுவித்து நல்வாழ்வு அளிக்க வந்திருக்கும் சுதந்திரக் கட்சியை அளவிலா மகிழ்ச்சியோடு ஆதரிக்கிறோம்.

சாலூர்: (தெ. ஆ.) வி. குப்புசாமி
11—7—59 எஸ். லட்சுமிகாந்தன்

ஏழையின் வேண்டுகோள்

நான் கடந்த 15 ஆண்டுகளாகப் பாடுபட்டு, 2½ ஏக்கர் நன்செய் நிலம் வாங்கி அதன் மூலம் என் குடும்பத்தை ஓரளவு காப்பாற்ற முயன்று கொண்டிருக்கிறேன். இந்தச் சமயத்தில், திரும்பவும் நான் பழைய நிலைமைக்கே சென்றுவிடும் படி, காங்கிரஸ் அரசாங்கத்தின் விவசாயக் கொள்கைகள் எங்களைச் சிரமிக்கத் தலைப்பட்டிருக்கின்றன. சுயமாக சாகுபடி செய்துகொள்ள உரிமையில்லாமல் சட்டத்தின் மூலம் இப்போதே ஓரளவு தடுத்து வருகிறார்கள். அடியோடு, இந்த உரிமை தடுக்கப்படுமானால், எங்கள் கதி என்னவாகும்? எங்கள் நல்ல காலமே, ராஜாஜி அவர்கள் முன்வந்து தனி மனிதனின் தொழில் உரிமையைக் காக்கச் சுதந்திரக் கட்சியைத் தோற்றுவித்திருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை

கோயம்புத்தூர் வி. கணேசன்
13—7—59

சமுதாயத்துக்கே கேடு

எந்தப் பொருளினிடத்தும் பற்று கொண்டு ஒன்றி வாழ்ந்தால் அதன் குறைபாடுகள் கண்ணுக்குப் புலனாவதில்லை. அதேபோல் தற்பொழுது காங்கிரஸில் உள்ளவர்கள் அதிகாரச் செருக்கில் அதனுடன் ஒன்றிச் சமுதாயத்தையே அழிக்கும் பிழைகளைச் செய்து வருகின்றனர்

காங்கிரஸின் எதேச்சாதிகாரப் போக்கைத் தடைசெய்து நாட்டு மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க, தனி மனிதனின் சுதந்திரத்தை நிலைநிறுத்த எதிர்த்து நின்று உரிமைக்குப் போராடும் உயரிய நோக்கம் கொண்ட உன்னதக் கட்சி ஒன்று இல்லாமல் இருக்கிறதே என்று ஏங்கிக் கிடக்கும் ஏழைகளின் ஏக்கம் துடைக்கச் சுதந்திரக் கட்சி உதயமாகி விட்டது! நாட்டு நலனில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் அதற்கு நல்லாசி கூறி வரவேற்பதற்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறார்கள்

குல்பர்கா அ. கோபாலன்
13—7—59

ராஜாஜி அவர்களின் சுதந்திரக் கட்சியின் கிளை அமைப்புக் கூட்டம் வேலூரில் நடைபெற்றது. இந்தக் கிளை அமைப்புக்கு, திருவாளர்கள் வி. ஜி. குப்புசாமி, பி. ஆர். கிருஷ்ணசாமி (நகரசபை அங்கத்தினர்) தட்சிணாமூர்த்தி, ஏ. நடேசன் ஆகியோர் முறையே தலைவர், உபதலைவர், காரியதரிசி, உப காரியதரிசிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தாமரையின் உவகை

ராஜாஜியின் ஆசியுடன் பல மேதைகளைக் கொண்ட சுதந்திரக் கட்சி ஆரம்பமாகியிருப்பது எல்லோருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. ஆதவனைக் கண்ட தாமரையின் உணர்வை நாங்கள் அடைந்தோம். ஏழை, எளியவர், மற்ற ஏனையவருக்கும் இக்கட்சி அகில இந்தியக் கட்சியாக நல்ல முறையில் உழைக்கும் என்று திடமாக நம்புகிறோம்.

எர்ணாகுளம் கே. எஸ். ராஜகோபாலன்
10—7—59

கேள்விக்கு முன் பதில்!

நான் சில நாட்களுக்கு முன்பு தினப் பத்திரிகையிலே பிரதமர் நேருவின் பேச்சைப் படித்தேன், படித்தவுடன் மிகவும் ஆச்சரியப்பட்டேன். ஏனெனில் அவர் 'சுதந்திரக் கட்சி'யைப் பற்றி விளக்கம் கூறுகையில், திட்டமும் கொள்கையுமில்லாத அக்கட்சி என்ன செய்யும் என்று கூறியுள்ளார். அதைப் படிக்கையில் கலியாணப் பெண் ஒருத்தியைப் பார்த்து ஒருத்தி, 'உன் குழந்தைக்கு என்ன பெயர் வைப்பாய்?' என்று கேட்ட கதைதான் ஞாபகம் வருகிறது. இந்தக் கேள்விக்குத்தான் முன்பே ராஜாஜி இப்பொழுது எங்கள் கொள்கை காங்கிரசுக்கு ஒருபலமான எதிர்க்கட்சி அமைப்பதுதான் என்றும், பிறகு நாங்கள் ஆட்சிக்கு வந்தால் திட்டங்கள் தீட்டுவோம் என்றும் கூறியுள்ளாரே!

சென்னை-17 ம. சே. கோதண்டராமன்
11—7—59 கே. கோபாலகிருஷ்ணன்

கற்பக விருட்சம் கண்டோம்!

ஒரு நாட்டின் எல்லாவிதமான சுபிட்ச வாழ்வுக்கும் விவசாயமே ஜீவாதாரமான ஆணிவேர். இதைக் காங்கிரஸ் புரிந்து கொள்ளாமல், வரிக்கொடுமை என்ற வெந்நீரை விட்டதனால் முக்கால்பாகம் மரம் பட்டுப்போய் விட்டது. கால்பாகமே உயிர் இருக்கிறது. இத்தருணத்தில் "சுதந்திரக் கட்சி" குளிர்ந்த நீர்பாய்ச்சி விவசாயம் என்னும் கற்பக விருட்சம்

பட்டுப்போகாமல் காக்க முன் வந்ததற்கு ஆண்டவனை வழுத்துகிறேன்.

உடையாகுளம் பி. எஸ். வேணுகோபால்
14—7—59 நாயுடு

நேருவின் கூற்று!

சமீபத்தில் பண்டித நேரு புதிய கட்சியைப் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையில் உருவான கொள்கைகளை ஒன்றும் கட்சி தெரிவிக்கவில்லை என்றும், பத்தாம் பசலிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கும் கட்சி என்றும் தாக்கிப் பேசியிருக்கிறார். அன்று காங்கிரஸுக்குத் திட்டங்களையும், கொள்கைகளையும், வகுத்துக் கொடுத்ததில் முக்கிய பங்கு கொண்டவர் ராஜாஜி. இவ்வித தீவிரமும், மதி நுட்பமும் ஒருங்கே அமையப் பெற்ற ராஜாஜியினால் ஆரம்பிக்கப்பட்ட கட்சியைப் பற்றி நேரு, சிந்திக்காமல் இவ்வாறு பேசியிருப்பது விந்தையே. நேரு என்ன சொன்னாலும் சரி, சுதந்திரக் கட்சி மக்களின் கட்சியாகத் திகழ்வது திண்ணம்.

ஸ்ரீவில்லிபுத்தூர்
10—7—59 சே. ராகவன்

சுதந்திரச் செடி

நாட்டில் நல்லதொரு எதிர்க்கட்சி இல்லாத காரணத்தால் காங்கிரஸுக்கே இரண்டாவது முறை வாக்களித்தவர்கள் அநேகம். அந்தக் குறையைப் போக்க முளைத்த சுதந்திரச் செடி வளரட்டும்!

கரூர்
14—7—59 வைத்ரா

நல்ல அறிகுறி

பல ஆண்டுகளாகக் காங்கிரஸ் அரசாங்கம் தன் இஷ்டப்படி, தன்னை ஆதரிப்பவர்களுக்குக் கண்மூடித்தனமாகப் பொதுப் பணத்தை வாரி இறைக்கிறது. திருப்பிக் கொடுக்கும் நினைவில்லாமல், கணக்கில்லாமல் வாங்கிக் கொண்டு போவதும் அநாவசியச் செலவுகளில் உபயோகிப்பதும் இந்தியாவுக்குக் கேடுகாலம் என்றே நினைக்கிறேன். காங்கிரஸ் தலைவர்களும், மந்திரிகளும் சாதாரண ஜனங்களுக்கு வேண்டிய முக்கிய வசதிகளைச் செய்யாமல் ஓயாமல் சுற்றுப் பிரயாணங்களில் திரிந்து ஜனங்களின் பணத்தைச் சூறையாடுகிறார்கள்.

இந்த அநியாயங்களுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைப்பது போல் தோன்றியிருக்கிறது சுதந்திரக் கட்சி.

நாகபுரி
14—7—59 ஏ. வே. வீரப்ப முதலியார்

தவப் பயன்

இன்று காங்கிரஸ் கட்சியினர் நாட்டில் ஓர் நல்ல எதிர்க்கட்சி இல்லாததால் பதவி மோகம் பிடித்து அலைகின்றனர். தங்களுடைய பதவிக்கும் சுக போகங்களுக்கும் ஆபத்து வந்துவிடுமோ என்ற பயத்தினால்தான் ஜனநாயக அரசியல் சாசனங்களையே கேரளத்தில் எதிர்க்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்களின் பிடிப்பிலிருந்து, நாட்டைக் காக்கத் தமது தள்ளாத வயதையும் பொருட்படுத்தாமல், ராஜாஜி சுதந்திரக் கட்சியைத் துவக்கியிருப்பது பாரத மக்கள் செய்த தவப் பயனே ஆகும்.

சேந்தூர்
14—7—59 இ. நா. பாலகிருஷ்ணன்

வழிகாட்டி!

உலகத்துக்கே, வழிகாட்டியாக விளங்கும் ராஜாஜி அவர்கள் நாட்டுக்குப் பலமான எதிர்க் கட்சி தேவை என்று சொல்லியதோடு அல்லாமல் சுதந்திரக் கட்சியையும் அமைத்து, அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருவது நாம் செய்த பெரும் பாக்கியம்.

அழகர்நாயகன் பட்டி
6—7—59 டி. ஏ. தேவப்பன்


மகத்தான யாகம்

காங்கிரஸின் சர்வாதிகாரப் போக்கு தாளாமல் நாடு அவதியுறும்போது, சுதந்திரக் கட்சி என்ற வேள்வியைத் துவக்கி, மக்களைக் காக்க முன் வந்தது தெய்வச் செயலே. ராஜாஜி துவக்கியுள்ள இந்த மகத்தான யாகத்தைப் பாட்டாளிகளும், விவசாயிகளும், தனவந்தர்களும், மற்றெல்லோரும் ஆதரிப்பார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

சென்னை என். திருவேங்கடம் 13. வார்டு
10—7—59 9. ஜெனரல் ஆஸ்பத்திரி

கடந்த பத்து ஆண்டுகளில், சரியான எதிர்க்கட்சி இல்லாமல் நாம் பெற்ற ஜனநாயக அரசியல் சீரழிந்து வந்தது. நிலைமை மோசமாகுமுன், ராஜாஜி அவர்கள் முன்வந்து தகுந்த எதிர்க்கட்சி அமைத்து வருவதைப் பாராட்ட வேண்டும். நாட்டில் காங்கிரஸ் கட்சியானது மெள்ள மெள்ள ஜனநாயகத்தின்மீது பற்றுதலை விட்டு, தனது 'மெஜாரிடி' பலத்திலேயே நம்பிக்கை கொள்ளத் தொடங்கிவிட்டது. இது தேச நன்மைக்கே தீங்கானதாகும். இந்த நிலைமையைத் தடுத்து நிறுத்த, சுதந்திரக் கட்சி உதயமாகியிருக்கிறதென்றே கருதுகிறேன்.

பி. எஸ். ராவ் (ஐ. ஸி. எஸ்., ரிடயர்ட்)


MICO
எல்லா எஞ்ஜின்களுக்கும்
ஏற்றதாக
மைக்கோ
பிளக் கிடைக்கும்
LICENCE BOSCH
மோட்டார் இண்டஸ்ட்ரீஸ் கம்பெனி லிமிடெட்
பெங்களூர் - 1

பாகவதமாகிய

பக்தி வயல்

பௌராணிகர்

47. கம்ஸவதம்

அக்ரூரர் தம் வீடு திரும்பியதும், கண்ணனும் பலராமனும் மதுரா நகரைக் காண வெளியேறினார்கள் அல்லவா? வழியில் சுதாமா என்ற மலர் தொடுத்து விற்பனை செய்யும் வியாபாரியின் வீட்டைக் கண்ணனும் பலராமனும் அடைந்தனர். அவன் அவர்களுக்கு உபசாரம் செய்து வணங்கி நின்றான். மாலைகளைச் சூட்டினான். கண்ணன் அவனுக்குப் பல வரங்களை அளித்தான்.

வழி நடுவே ஒரு கூனியை இருவரும் கண்டார்கள். அவள் கையில் களபம் நிறைந்த பாத்திரமொன்றை ஏந்தியிருந்தாள். "கட்டழகியே! நீ யார்? இந்தச் சந்தனம் யாருக்கு எடுத்துச் செல்கிறாய்? அதை எங்களுக்குக் கொடு. உனக்கு நன்மை வரும்" என்றான் கண்ணன். "எனக்கு "திரிவிக்ரா" (அதாவது மூன்று கோணல் உள்ளவள் என்று பொருள்) என்று பெயர். அழகிய சிறுவனே! நான் கம்ஸனுக்கு இந்தக் களபத்தை எடுத்துச் செல்கிறேன். உங்களைவிட யாருக்குத்தான் இந்தச் சந்தனம் பொருந்தும்" என்று கூறினாள். அவ்விரு சிறுவருடைய அழகிலும் நகைப்பிலும் மயங்கிச் சந்தனத்தை அவர்களுக்கு அளித்தாள். கண்ணன் மகிழ்ந்தான். தன் கால் விரலால் அவள் காலை மிதித்துக்கொண்டு இரு கை விரல்களை அவளுடைய முகவாய்க்கட்டையின் கீழ் கொடுத்து அவளை மெதுவாக உயர்த்தினான். திடீரென்று கூனியாக இருந்தவள் நிமிர்ந்து அழகிய பெண்மணியாய்த் தோன்றினாள்.

திரிவிக்ரா என்ற சேடி அழகிய மங்கையாக மாறியதும் கண்ணனை நோக்கினாள். கண்ணன் மீது மையல் கொண்டாள். "கண்ணா! என்னுடன் வருவாய். பிரிய மனம் வரவில்லை" என்றாள். "நான் வந்த காரியத்தை முடித்து விட்டு உன் வீடு வருகிறேன்" என்று கண்ணன் அவளுக்குப் பதில் உரைத்தான்.

வழி நடந்து செல்லும்போது அங்கூர் வணிகர்கள் முன் வந்து இருவரையும் உபசரித்தனர். தனுர்யாகம் செய்வதற்கென்று வில்லை எவ்விடத்தில் வைத்திருக்கின்றனர் என்று வினவி, வழி தெரிந்து கொண்டு, அவ்விடத்துக்குச் சென்றனர். வில்லைக் கண்டு வியந்தனர். அது வான வில்லென விளங்கியது. அதை அனேகர் காவல் காத்திருந்தனர். பல ரத்தினங்கள் பதிக்கப்பட்டுச் செல்வத்தின் உருவென இருந்தது. காவலாளர் தடை செய்தும், மீறிக் கொண்டு கண்ணன் அந்த வில்லை இடது கையால் எடுத்தான். நாணேற்றி இமை கொட்டும் நேரத்தில் இரண்டாக முறித்தான். மதயானை கரும்பை முறித்ததோவென்று கண்டவர் ஆச்சரியம் அடைந்தனர். முறிந்த சத்தம் ஊரெல்லாம் முழங்கியது. அதைச் செவியுற்ற கம்ஸன் நடுங்கினான். காவலாளர் வில்லும் கையுமாகக் கண்ணனைச் சூழ்ந்து கொண்டனர். "குறுக்கிட்டவனைப் பிடியுங்கள், கட்டுங்கள்" என்று கதறினர். கண்ணனும் பலராமனும் முறிந்த வில்லைக் கையில் எடுத்துக் கொண்டு அவர்களைப் புடைத்தார்கள். பின்னர் அவ்விடத்தை விட்டு வெளியேறி மல்யுத்தம் செய்வதற்கென்று அமைக்கப்பட்டிருந்த அரங்கைப் பார்த்து ஆனந்தமுற்றனர். இவர்களைக் கண்ட நகரவாசிகளோ, இவர் தேவரோ என்று எண்ணினர். இவ்வாறு இரு குமாரர்களும் நகரத்தைச் சுற்றி வருகையில் கதிரவன் மறைந்தான்; இரவு ஆரம்பமாயிற்று. கண்ணனும் பலராமனும் நகருக்கு வெளியே கோபர்கள் தங்கள் வண்டிகளோடு முகாம் செய்திருந்த இடத்தை அடைந்தார்கள். பாலும் அன்னமும் அருந்தி ஆனந்தமாக நித்திரை செய்தார்கள்.

• • •

ஆனால் அன்றிரவு கம்ஸன் உறங்கவில்லை. இவ்வளவு பெரிய வில்லையும் முறித்துக் காவலாளர்களையும் வென்றுவிட்டார்களே இச்சிறுவர்கள் என்று எண்ணி எண்ணி ஏங்கினான். கெட்ட சொப்பனங்கள் கண்டான். கண்ணாடியில் தன் உடல் மட்டும் தெரிந்தது; தலை தெரியவில்லை. ஆகாயத்தில் எல்லாம் இரட்டையாகத் தெரிந்தன. தன்னுடைய நிழலில் துளைகளைக் கண்டான். காதை மூடிக் கொண்டால் ரீங்காரம் கேட்க வில்லை. தரையில் தன் சுவடு தெரிய வில்லை. மரங்கள் மஞ்சளாய்த் தென்பட்டன. இறந்தவர் வந்து தன்னைத் தழுவுவதாய் எண்ணினான். கழுதை மீது ஏறி ஊர்வலம் வருவதாய் நினைத்தான். துணியின்றித் திரிகிறேமே

என்று வியப்புற்றான்! தனது வாழ்நாள் தீர்ந்து விட்டது என்று பயந்து இமை கொட்டாமல் விழித்திருந்தான்.

பொழுது புலர்ந்தது. கிழக்கு திசையில் கதிரவன் தோன்றினான். கம்ஸன் ஒரு மல்லர்கள் போட்டியை ஏற்பாடு செய்தான். கம்ஸனுடைய ஆட்கள் அரங்கை நீர் தெளித்துக் கொடி கட்டி அலங்காரம் செய்தார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் எல்லா இடமும் ஜனங்களால் நிரம்பியது. தனக்கென்று வேறாக அமைக்கப் பட்டிருந்த சிங்காதனத்தில் கம்ஸனும் அமர்ந்தான். ஆனால் அவனுடைய மனம் நொந்து களிப்பற்று இருந்தது. பேரிகை நாதம் ஒலித்தது. மல்லர்கள் தத்தம் துடையைத் தட்டி ஆரவாரம் செய்தார்கள். சாணூரன் முஷ்டிகன், கூடன், சாலன், தோசலன் முதலிய புகழ் பெற்ற மல்லர்கள் அங்கு வந்து கூடினார்கள். கம்ஸனால் அழைக்கப் பட்ட கோபர்களும் தங்களுக்கென்று தனியாக அமைக்கப் பட்டிருந்த இடத்தில் அமர்ந்து கொண்டார்கள்.

கண்ணனும் பலராமனும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, மல்யுத்த அரங்கை அடைந்தனர். அரங்கின் வாயிலில் குவலயாபீடம்என்ற பட்டத்து யானை நின்றுகொண்டிருந்தது. கண்ணன் அரை வேஷ்டியை இறுகக் கட்டிக் கொண்டான். தலையை முடிந்து கொண்டான். யானைப் பாகனைப் பார்த்து, "தாமதமின்றி எமக்கு வழி விடுவாய். இல்லையேல் உன்னையும் யானையையும் சேர்த்து யம லோகத்துக்கு அனுப்புவேன்" என்று மேகமெனக் கர்ஜனை செய்தான். பாகனுக்குச் சினம் பொங்கியது. கண்ணன் மீது பாயும்படி யானையைத் தூண்டினான். யானை கண்ணனைத் தன் துதிக்கையால் பற்றிக் கொண்டது. ஆனால் கண்ணன் அப்பிடியிலின்று நழுவி யானையின் கால்களுக்கு இடையே ஓடலானான். யானை கண்ணனைக் காணாது திகைத்தது. பிறகு கண்ணன் இருக்குமிடத்தை நுகர்ந்து தெரிந்து கொண்டு, திரும்பவும் மாதவனைத் தனது துதிக்கையால் பற்றிக் கொண்டது. மறுபடியும் கண்ணன் நழுவி விட்டான். இச்சமயம் கண்ணன் யானையின் வாலைப் பிடித்து அதைக் கருடன் பாம்பை இழுப்பதைப் போல் வெகு தூரம் எளிதாக இழுத்தான். வலது புறமும் இடது புறமுமாய் ஆட்டினான். வாலை விட்டு விட்டு யானைக்கு முன் சென்று அதைக் கையால் அறைந்தான். திரும்பவும் ஓடிவரும் பொழுது தடுக்கினாற் போல் தரைமீது விழுந்த கண்ணனைக் கொன்று விட யானை கோபத்தோடு முன்வந்தது. கண்ணன் கொம்பைப் பிடித்து யானையைக் கீழே தள்ளினான். சிங்கமென யானை மீது கால் வைத்துக் கொண்டு அதன் கொம்பைப் பிடுங்கி அதனாலேயே கண்ணன் யானையையும் பாகர்களையும் வதம் செய்தான்.

நெற்றியில் வேர்வைத் துளி தெரிய, ரத்தம் பூசிய யானைக் கொம்பைத் தன் தோள் மீது சாத்திக் கொண்டு கண்ணன் மல் அரங்கில் பிரவேசித்தான். மல்லருக்கு இடி விழுந்தாற் போலும், மாந்தருக்கு மாணிக்க மெனவும், மங்கையருக்கு அன்பே உருவெடுத்தாற் போலவும், இடையருக்குச் சுற்றமெனவும், கொடுங்கோல் அரசருக்குத் தண்டமாகவும் தாய் தந்தையருக்குச் சிறு பாலகனாகவும், கம்ஸனுக்கு யமனாகவும், அறிவிலிகளுக்குத் திறமற்ற சிறுவனாகவும், யோகிகளுக்குப் பரம்பொருளாகவும், விருஷ்ணி குலத்தோருக்கு பரதேவதையாகவும், தன் முன்பிறந்தோனுடன் கண்ணன் மல் யுத்த அரங்கத்தினுள் புகுந்தான். தன் யானை இறந்ததையும், இவ்விரு சிறுவர்கள் வரும் தோரணையையும் கண்ட கம்ஸன் மனம் கலங்கினான். விசித்திரமான வேஷம் பூண்டு மாலையும் ஆபரணமும் அணிந்து வந்த கண்ணனும் பலராமனும் இரு நடிகரென இருந்தவர் மனத்தைக் கவர்ந்தனர். அவர்களுடைய அழகைக் கண்களால் பருகியும் அங்கு அமர்ந்த ஒருவருக்குமே திருப்தி உண்டாக வில்லை. கண்களால் பார்த்து மூக்கால் நுகர்ந்து நாக்கினால் ருசி கண்டு கைகளால் தழுவி அனுபவிக்கின்றனரோ என்று தோன்றினார்கள். ஒருவரோடு ஒருவர் "நாராயணனுடைய அம்சமாகவே இவ்விருவரும் வசுதேவன் குலத்தில் பிறந்திருக்கின்றனர். இளையவன் தேவகியின் மைந்தன். கோகுலத்தில் வளர்ந்தான். யாரும் அறியாது நந்தன் மகனெனக் கருதப் பட்டான். பல அரக்கர்களைக் கொன்றவன், யதுகுலத்தைக் காத்து அதன் பெருமையை ஏற்ற வந்தவன்" என்று பேசிக் கொண்டார்கள்.

அப்பொழுது பேரிகையும் தாரையும் ஒலி செய்தன. சாணூரன் என்ற மல்லன் கண்ணனையும் பலராமனையும் நோக்கி அவர்களைப் போருக்கு இழுத்தான். "கண்ணா! பலராமா! நீங்கள் இருவரும் வீரர்கள், மல்யுத்தத்தில் புகழ் பெற்றவரெனக் கேட்டு அரசன் உங்களை வரவழைத்திருக்கிறான். மாடு மேய்க்கும் பொழுது மல்யுத்தம் செய்து காலத்தைக் கழிப்பது இடையருக்கு வழக்கமன்றோ? ஆகவே அரசருக்கு ஆனந்தம் அளிப்

நன்றி அறிவிப்பு

★

எங்களது புதல்வி சௌ. துர்காலட்சுமிக்கும் சிரஞ்சீவி பி. எஸ். துரைராஜுக்கும் சென்னை 'அபெட்ஸ்பரி' பங்களாவில் ஜுலை 9-ம் தேதி நடந்த திருமணத்தின் போது எங்கள் அழைப்புக்கிணங்க விஜயம் செய்தும் வாழ்த்துக்கள் அனுப்பியும், பரிசுகள் வழங்கியும் கௌரவித்த நண்பர்கள், உறவினர்கள் எல்லோருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஸ்ரீமதி & ஸ்ரீ டி. எஸ். பாலையா


வெளிவந்து விட்டது!

புதிய 1959

G.E.C.

மிக அழகிய

ரேடியோ



B. C. 5151. W.

5 வால்வ் • 3 வேவ்பாண்ட்

கண்ணைக் கவரும் மரப்பெட்டியில்...

விலை ரூ. 310/- *(நிகரம்)*

12 மாத உத்திரவாதம் - மாதத் தவணைகளிலும் கிடைக்கும்

வயர்லஸ் ஸேல்ஸ் & ஸர்வீஸ் கம்பெனி

1/11-A, மவுண்ட் ரோட், சென்னை - 2

போன் : 86506 ❋ *தந்தி :* 'RADSALES'

கிளைகள்

28, கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி ரோட், வேலூர் ○ சேர் ரோட், (காலேஜ் எதிரில்) சேலம்
18/191, பெஸண்ட் ரோட், காந்தி நகர், விஜயவாடா

உ

SRI GANESHRAM'S 777 BRAND
FOOD PRODUCTS · MADRAS-1 · S·INDIA

இருமலா? ஜலதோஷமா?

திடீர் மிளகு ரசம்

பேஸ்ட் & பவுடர்

இவற்றை வெந்நீரில் கலந்தால் போதும்

திடீர் தக்காளி சூப்

வெந்நீர் அல்லது சூடான பருப்பு ஜலத்தில் கலக்கவும். எல்லோருக்கும் எந்தக் காலத்திற்கும் மிகவும் அவசியமானது. தயார் செய்வது மிகவும் சுலபம்

இன்னும் ஊறுகாய் திணுசுகள் மதராஸ் கறி - பவுடர் முதலியன

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ., மதராஸ்-1

இப்பொழுது அந்தமானிலும் கிடைக்கிறது

SOLDIN

SOLID PHENYLE
WITH D. D. T. AND CRESOL



MANURIN

FERTILIZER TABLETS
COMPLETE PLANT FOOD



INDIA ALKALIES LTD.
5, GARSTIN PLACE, CALCUTTA-1

விசாரணைகளுக்கு:
மெஸர்ஸ் ஏ. வி. தாமஸ் & கோ.,
ஆலப்புழை - கேரளா

ESTD: 21-3-52. தபால் மூலம் GOVT REGD: 3072.

இலவசக் கல்வி போதனை

E குரூப் வகுப்புகள் ஆரம்ப தேதி 27-7-59

தமிழ் அறிவு பெற்ற ஆண் - பெண் இருபாலரும், பள்ளியில் இடையே படிப்பை நிறுத்தியவர்களும், S. S. L. C. தேர்வில் தேறியவர்களும் - தவறியவர்களும் கீழ்க்கண்ட 59-60ம் வருட சர்க்கார் தேர்வுகளுக்கு மாதம் மும்முறை தபால் மூலம் இலவசமாகப் பாடங்களனுப்பிப் பயிற்சி பளிக்கப்படும். தேர்வின் வெற்றிக்கும் பாடங்களனுப்பிப் பயிற்சி யளிப்பதற்கும் உறுதிப் பத்திரம் வழங்குகிறோம்.

1. புதுக்கல் B. A.; 2. B. Com.; 3. I Com.; 4. Inter; 5. மெட்ராஸ் மெட்ரிகுலேஷன்; 6. பிரி-யுனிவர்சிடி; 7. தமிழ் வித்துவான் வகுப்புகள்; 8. சர்வீஸ் கமிஷன்; 9. S. S. L. C. (Oct. 59 & March 60); 10. E. S. L. C.; 11. கைத்தறி நெசவு; 12. விவசாயம், 13. அக்கௌண்டன்ஸி; 14. ஓவர்ஸியர்; 15. போஸ்டல் கிளார்க்; 16. போஸ்ட்மென்; 17. கிராம மணியம், கர்ணம்; 18. ஹிந்தி வகுப்புகள் (பிரவேசி); 19. ஹோமியோபதி (தமிழ் & ஆங்கிலம்); 20. கிராம வைத்தியம்; 21. பேஸிக் ஆங்கிலம்.


27-7-59 முதல் ஆரம்பமாகும் நமது 'E' குரூப் வகுப்புக்களின் முழு விவரங்களுக்கு 15 nP. ஸ்டாம்புடன் விண்ணப்பித்து உடன் வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெற்றுப் பயனடைய உங்களை அன்புடன் அழைக்கிறோம். 8-8-59 வரை இவ்வகுப்புகளில் மாணவர்களை சேர்த்துக் கொள்ளப்படும்.

நம் தாபகத்தின் தனிப்பெரும் தபால் இலவசக் கல்வி ஸ்தாபனம்
கிளைகள் மலேயா, சிலோன், சிங்கப்பூர் & தென் ஆப்பிரிக்கா

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிட்யூட்

ரிஷிவந்தியம் (H. O.)

சென்னைக் கிளை தபால் பெட்டி நெ. 392, சென்னை-2




திருவல்லிக்கேணியில் சிறிது நாட்களாகச் செங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீட்சிதர் மகாபாரதம் சொல்லி வருகிறார். இந்தக் கதையினிடையே ஒரு நாள் ராஜாஜி பேசிய போது, "தீட்சிதர் அவர்கள் அருமையான முறையில் தர்மப் பிரசாரம் செய்து வருகிறார்கள். இந்தத் தேசத்தைத் தர்மம்தான் காத்து வருகிறது. இந்தத் தர்மத்தின் அடிப்படையில்தான் சுதந்திரக் கட்சியும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது" என்று கூறினார்.

போம். மல்யுத்தம் செய்வோம்" என்றான். இந்த மொழியைக் கண்ணன் வரவேற்றான். தகுந்த பதிலும் அளித்தான். "காட்டில் வாழும் நாங்களும் அரசருக்குக் குடிகளே. ஆகவே அவருக்குப் பிரியமான மல்யுத்தம் (குஸ்தி) செய்வோம். எங்களுக்குச் சிறு வயது. ஆயினும் எங்களுக்குச் சமமான திறம் படைத்தவருடன் மல்யுத்தம் செய்யச் சித்தமாயிருக்கிறோம்" என்றான். அதற்குச் சாணூரன், "நீ சிறுவனும் அல்ல, பாலனுமல்ல. பலராமனும் பலசாலிகளுள் பெரியோன். இல்லா விட்டால் ஆயிரம் யானைகளின் பலம் படைத்த குவலயா பீடம் என்ற பட்டத்து யானையை உன்னால் கொன்றிருக்க முடியுமா? ஆகவே நீ என்னுடன் சண்டையிடுவாய்; பலராமன் முஷ்டிகனோடு போர் செய்யட்டும். இதில் தவறு ஒன்றுமே இல்லை" என்றான்.

இவ்வாறு சாணூரன் மொழிந்ததுமே கண்ணன் அவனுடன் கைகலந்து போராடினான்; பலராமன் முஷ்டிகனோடு யுத்தம் செய்தான். கையைக் கையால் பிடித்துக் காலைக் காலுடன் பூட்டி ஒருவரை யொருவர் தரையில் தள்ள முயன்றனர். சுற்றிச் சுற்றி வந்தனர். பின்னால் பாய்ந்தனர். இறுக்கப் பிடித்தனர்; பூமியில் வீழ்த்தினர்; மார்பு மீது கை வைத்துத் தள்ளினர்; தூக்கி எறிந்தனர். அங்கு கூடியிருந்த பெண்கள் பரிதவித்துப் பேசிக் கொண்டார்கள். "அரச சபையில் இந்த அநியாயம் நடக்கலாமா? இதை அரசர் பார்க்கும்படி விடலாமா? சிறு பையனுடனா முதிர்ந்த மல்லர்கள் போட்டி செய்வது? மலைபோன்ற மேனியருடன் வயது வராத சிறுவர்கள் எவ்வாறு போரிடுவார்கள்? இதைப் பார்ப்பவருக்குப் புண்ணியம் அழிந்து போகும். இங்கு இருப்பதே தவறு. அந்தோ! கண்ணனுடைய தாமரை வதனத்தைப் பாருங்கள்! வேர்வை மிகுந்து நீர்த்துளி வடியும் மலரைப்போல் தோன்றுகிறது. சினம் பெருகிச் சிவந்த முகத்துடன் நிற்கிறான் பலராமன். கண்ணனுடன் கூடி ஆடியும் பாடியும் ஆனந்தம் அடைந்த ஆயர்பாடிப் பெண்களே புண்ணியம் செய்தவர்கள். பசுவைக் கறக்கும்பொழுதும், தானியத்தைக் குத்தும்பொழுதும், தயிரைக் கடையும்பொழுதும், தரையை மெழுகும்பொழுதும், தொட்டிலை ஆட்டும்பொழுதும், கரையும் குழந்தையை ஆறுதல் செய்யும்பொழுதும், வீட்டில் நீர் தெளித்துச் சுத்தம் செய்யும்பொழுதும் கண்ணனை நினைத்து மனமுருகி அவன் புகழைப் பாடி வரும் பெண்கள் பாக்கியம் பெற்றவர்கள்" என்று பலவாறு பேசிக் கொண்டார்கள்.

மதுரா நகரத்து மங்கையர் இவ்விதம் பேசிக் கொண்டிருக்கையில், கண்ணன் சாணூரனை வதம் செய்யத் திண்ணம் கொண்டான். கண்ணனால் அடியுண்ட சாணூரன் இரும்பத் திரும்ப நினைவு இழந்தான். எழுந்து எழுந்து கழுகெனக் கண்ணன்மீது பாய்ந்து, தன் கையால் மாதவன் மார்பில் புடைத்தான். ஆனால் கண்ணன் நின்ற இடம் விட்டு அசையவில்லை. சாணூரன் கொடுத்த குத்தெல்லாம் யானைமீது எறிந்த பூமாலையெனக் கண்ணன்மீது மெதுவாக விழுந்தன. திடீரெனக் கண்ணன் சாணூரனைத் தூக்கித் தன் தலைமீது கறகறவென்று சுற்றினான். அப்பொழுதே அவன் உயிர் துறந்தான். கண்ணன் பிணத்தைப் புவி மீது எறிந்தான். அதே சமயம் பலராமன் ஒரே அடியால் முஷ்டிகனை வீழ்த்தினான். சாலன், கூடன், தோசலன் முதலிய மல்லர்களையும் கண்ணனும் பலராமனுமாய்க் கொன்றனர். மற்ற மல்லர்கள் தலை தப்பினால் போதுமென்று ஓடிப் போயினர். கண்ணனும் பலராமனும் தம் ஆயர்பாடித் தோழருடன் அரங்கில் ஆரவாரம் செய்து ஆடிக் களித்தனர்.

கண்டவர் அனைவரும் இவ்வீரச் செயலை மெச்சினார்கள். ஆனால் கம்சன் மனம் கொதித்தது. "பேரிகையும் கொட்டும் நிறுத்துங்கள். வசுதேவன் மைந்தரை



பிரபல திரைப்பட நடிகை வைஜயந்திமாலா சமீபத்தில் லண்டனுக்கு விஜயம் செய்தபொழுது, லண்டன் பி.பி.ஸி. நிலயத்தின் தமிழ்ஓசைப் பகுதிக்காக அதன் அமைப்பாளர் திரு எம். ஆர். எம். சுந்தரம் (சுந்தா) அவர்கள். நடிகையைப் பேட்டி கண்டார். பி. பி. ஸி. நிலயத்தின் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்ளும் ஸ்ரீ ம தி க ள் உமாசங்கர், லக்ஷ்மிநாராயணன் லீலா முதலியவர்களும் படத்தில் காணப்படுகிறார்கள்.

னரை விட்டு விரட்டுங்கள். கோபரின் செல்வத்தைப் பறியுங்கள். நந்தனைச் சிறையிடுங்கள். வசுதேவனை மாய்த்து விடுங்கள்'' என்று சீறினான். இதைக் கேட்ட கண்ணன் கோபம் மேலிட்டுக் கம்ஸன் வீற்றிருந்த உன்னத மேடையின் மீது பாய்ந்தான்.

கூற்றமென நெருங்கும் கண்ணனைக் கண்டதும் கம்ஸன் தன் வாளை உருவினான். வாள் தாங்கிய கையைக் கண்ணன் கருடன் பாம்பைப் பிடிப்பது போல் பிடித்தான். தலைமீது கரம் வைத்துக் கம்ஸனை அரங்கிலே தள்ளினான். விழுந்த கம்ஸன்மீது பாய்ந்து ஏறினான். கம்ஸனைக் கொன்றான். உயிர் போன உடலை அனைவரும் காண வேண்டித் தரையிலே இழுத்துச் சென்றான். அனைவரும் "ஆ" என்று ஆமோதித்தனர். ஆனால் மாயச் சிறுவனை திருமாலால் மெய் இழந்த அரக்கன் மாலோடு கூடி வாழும் பெரும் பேறு அடைந்தான்.

கம்ஸனுக்குப் பின் பிறந்த தம்பிகள் எட்டுப் பேர் அண்ணனைப் பழிவாங்க முன் வந்தனர். பலராமன் அவர்களை எளிதாகக் கொன்றான்.

ஆகாயத்தில் துந்துபி முழங்கியது. முக்கண்ணனும் நான்முகனும் விண்ணவரோடு கூடிக் கண்ணனைப் புகழ்ந்தனர். மலர்மாரி பொழிய, கந்தர்வர் பாட, அப்ஸரர் ஆடக் கண்ணன் அவதாரம் செய்த வேலை ஓரளவு நிறைவேறியது.

கம்ஸனுடைய மனைவியாரும் இறந்த மற்றவருடைய மனைவியரும் அரங்கை அடைந்து அழுது புரண்டார்கள். கண்ணன் அவர்களைச் சமாதானப்படுத்தினான். இறந்தவருக்கு ஈமச் சடங்குகள் சரிவரச் செய்ய ஏற்பாடு செய்தான். தாய் தந்தையரை விடுவித்தான்.

ஆனால் வணங்கிய சிறுவரைப் பெற்றோர் தூக்கித் தழுவிக் கொள்ளவில்லை. அவதார புருஷனுக்கு மரியாதைக் குறைவென்று ஒதுங்கி நின்றனர். இதை அறிந்த கண்ணன் அவர்களை மீண்டும் மாயையில் மயக்கினான். க ண் ண ன் "அம்மா! அப்பா!" என்று அன்போடு அழைக்கவே அவர்கள் உளம் மகிழ்ந்தனர். "நாங்கள் குழந்தையாய் இருக்கும்பொழுது எங்களோடு வாழ்ந்து களிக்கும் சந்தோஷத்தை நீங்கள் பெறவில்லை. நாங்களும் தாய்தந்தையருடன் வாழும் பாக்கியத்தைப் பெறவில்லை. பெற்றோரைப் போஷிக்காத மகன் பாபியாவான். அவன் இருந்தும் இறந்தவனே. இந்நாள் வரை நாங்கள் உங்களுக்குப் பணிவிடை செய்யவில்லை. அவை வீணாகப் போயின. எங்களை மன்னியுங்கள்" என்றான். மாதவனின் இந்த மாய வாக்கில் மயங்கிய வசுதேவனும் தேவகியும் மைந்தரை எடுத்துத் தழுவிப் பரமானந்தம் அடைந்தார்கள்.

பிறகு கண்ணன் உக்ரசேன மன்னனை நெருங்கி, "ம து ரா நகரத்துக்குரிய வேந்தே! நாங்கள் என்னசெய்ய வேண்டுமென்று கட்டளை யிடுங்கள். நானே உங்களுக்குச் சேவை செய்யுங்கால், விண்ணவரும் ஏனைய தேவதைகளும் உங்களுக்குத் தொண்டு புரிவார்கள் என்று உரைக்கவும் வேண்டுமா?" என்றான். கம்ஸனுக்குப் பயந்து வெளியூர்களுக்குச் சென்றிருந்த தனது சுற்றத்தார்களை மதுரைக்கு வரவழைத்தான். அவர்களும் தத்தம் வீடு திரும்பிக் கண்ணனைத் தினந்தோறும் கண்டு களித்து வாழலானார்கள்.


கண்ணன் நந்தனிடம் செ ன் று வணங்கி, "தந்தையே! நீங்களும் யசோதையும் என்னை அன்போடு வளர்த்தீர்கள். ஆயர்பாடிக்குத் திரும்பச் செல்வீர். எங்கள் உறவினரோடு இங்கு தங்கிவிட்டுப் பிறகு வருகிறோம்'' என்றான். அவர்களுக்குப் பல பரிசுகளை வழங்கி, வணங்கி வழி அனுப்பினான்.

அவள் எவ்வளவு அழகாயிருக்கிறாள்...

அவள் உபயோகிப்பது **பாண்ட்ஸ்**



நீங்களும் சருமத்தை மிருதுவாகவும், வழவழப்பாகவும், அழகாகவும் வைத்துக் கொள்ள **பாண்ட்ஸ்** வானிஷிங் க்ரீம் உபயோகியுங்கள்



இலேசானதும் பனிக்கட்டிபோல் மென்மையானதுமான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் சருமத்தின் மென்மையான அழகைப் பாதுகாத்து, அதை எழிலுடனும், பொலிவுடனும் இருக்கச் செய்யும். எண்ணெய்ப் பசையில்லாத இந்த க்ரீம் தேய்த்துக்கொண்ட மறு விநாடியிலேயே மறைந்துவிடுகிறது. பவுடர் போட்டுக் கொள்வதற்கு முன் இந்த க்ரீமை தடவிக்கொண்டால் பவுடர் மணிக்கணக்கில் படிந்திருக்கும்.

சருமத்தை சுத்திகரிக்கும் சிறந்த க்ரீம்

தினமும் இரவில் பாண்ட்ஸ் கோல்டு க்ரீமை முகத்தில் தடவுங்கள். அது உங்கள் மிருதுவான சருமத்தை சுத்தம்செய்து முக அழகைப் பாதுகாக்கும்

சீஸ்ப்ரோ பாண்ட்ஸ் இன்கார்ப்பரேட்டட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பெற்றது)

பிறந்து 8 மாதங்கள்கூட ஆகவில்லை—

அவன் நிற்க ஆரம்பித்துவிட்டான்!



அவன் தாயார் அவனுக்கு

டூமெக்ஸ்

பேபி புட்

புகட்டுகிறாள் என்பதைச்
சொல்லவும் வேண்டுமா!

டூமெக்ஸ் பிரைவேட் லிமிடெட்
பம்பாய்-1

வேங்கையின் மைந்தன்

ஏழாம் அத்தியாயம்

இளங்கோவின் நண்பன்?

மூவர் கோயிலின் அர்த்த ஜாமத்து மணியோசை கணீரென்று காற்றில் சுழன்று வந்து, கொடும்பாளூர் நகர மாந்தரின் மனத்தில் புனிதமானதொரு சலனத்தை எழுப்பத் தொடங்கியது.

மணியோசை கேட்ட மாமன்னர், தாம் சாய்ந்திருந்த கட்டிலிலிருந்து கீழே குதித்து, கோயிலின் பக்கம் திரும்பி நின்று, பயபக்தியுடன் கரம் குவித்தார். மதுராந்தக வேளாரும், வல்லவரையர் வந்தியத் தேவரும் தங்கள்-தங்கள் பேச்சை நிறுத்திக்கொண்டு, அவ்வாறே இறைவனுக்கு அஞ்சலி செலுத்தினர்.

“உணவு சித்தமாகி யிருக்குமே?” என்று கேட்டார் இராஜேந்திரர், அது வரையில் மணியோசைக்காகக் காத்துக் கொண்டிருந்தவர்போல்.


மேல்மாடக் கூடத்தை விட்டு மூன்று பெரியவர்களும் கீழே இறங்கி வந்தார்கள். அவர்களோடு சேர்ந்து உண்பதற்காக இளங்கோவேளும் பொறுத்துக்கொண்டிருந்தான். அவனைத் தமக்கு அருகில் உட்கார வைத்துக் கொண்டு கலகலப்பாகப் பேசியவண்ணமே விருந்தைச் சுவைக்கத் தொடங்கினார் சக்கரவர்த்தி. விருந்து அற்புதமான விருந்து. முக்கனியும் தேனும் பாலுமாக இலை நிறைந்த அறுசுவைப் பண்டங்கள்.

இளங்கோவிடம் அவனுடைய நண்பனின் உணவு முடிந்ததா என்பது பற்றிக் கேட்டார் மாமன்னர். முன்னரே விருந்தினர் மாளிகைக்கு உணவனுப்பி விட்டதாகக் கூறினான் இளங்கோ. “ஆம், உடன்வந்திருப்போரை முதலில் கவனிக்க வேண்டும்” என்றார் அவர்.

வீரமல்லனின் பேச்சைச் சக்கரவர்த்தி எடுத்தவுடன் இளங்கோவுக்கு உணவு இறங்கவில்லை. அதுவரை சுவை நிரம்பியிருந்த பண்டங்கள் அதன் பிறகு அவனுக்கு வேம்பாய்க் கசந்தன. ‘சே! நண்பன் ஒருவன் செய்யும் செய்கையா அது?’

பூங்காவிலிருந்து இளங்கோவும் அருள்மொழியும் திரும்பும்போது அவர்

அகிலன்





கலை 'ஓர் உருவம் மறைந்து நின்று கண்காணித்ததல்லவா? அவன் வீரமல்லன்தான். அதை அப்போதே தெரிந்து கொண்டு விட்டான் இளங்கோ. சிறிதளவு அவனுக்கேற்பட்டிருந்த சந்தேகமும், மேல்மாடத்து முற்றத்திலேறிப் பார்த்தவுடன் தீர்ந்துவிட்டது. அதை அவன் அருள்மொழியிடம் வெளியிடவிரும்பவில்லை.

திருடனைப் போல் ஒளிந்து நின்று பார்த்துவிட்டு, நிழலில் பதுங்கிச் செல்பவனை எப்படி அவன் தன் நண்பனென்று அருள்மொழிக்கு அறிமுகம் செய்து வைப்பான்?

உணவு முடிந்தது. தாம்பூலம் தரித்துக் கொண்டார்கள். இளங்கோ சற்று ஒதுங்கி நின்றான்.

" அதிகாலையில் நீ இங்கிருந்து புறப்பட வேண்டும், இளங்கோ !"

" ஆகட்டும், சக்கரவர்த்தி !"

" நகரத்து மலைப் பகுதியில் உள்ள **திருவெண்ணெயில்** நகரில் உனக்கு ஒரு வேலை இருக்கிறது. **நாலு திசையதிசை ஆயிரத்து ஐந்நூற்றுவரான** வணிகர் தலைவர் ஐயவிர நாச்சியப்பருக்கு ஓர் ஓலை தருகிறேன். அதைச் சேர்ப்பித்து, மாற்றோலை வாங்கிக்கொண்டு, கலசமங்கலத்தின்* வழியாகத் தஞ்சைமா நகருக்குப் போய்ச் சேர்."

"தஞ்சைக்குச் சென்ற பிறகு?..." என்று, அடுத்த கட்டளையை எதிர்பார்த்தான் இளங்கோவேள்.

" காஞ்சிநகரிலிருந்து ராஜாதிராஜன் அங்கு வந்திருக்கிறான். அவனிடம் நீ கண்டு வந்த விவரங்களைச் சொல். சித்திரா பௌர்ணமி வரையில் அரண்மனைக்கு வெளியூரிலிருந்து விருந்தினர்கள் வந்துகொண்டிருப்பார்கள். அவர்களை வரவேற்று உபசரிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். நாளைக்கு மறுநாள் உறையூர் வழியாக நான் தஞ்சை வந்து சேர்வேனென்று ராஜாதிராஜனிடம் சொல்."

வணிகர் தலைவரிடம் சேர்ப்பிக்கவேண்டிய ஓலை இளங்கோவுக்குக் கிடைத்த பிறகும், அவன் அங்கேயே தயங்கிக் கொண்டு நின்றான்.

" என்ன சொல்ல விரும்புகிறாய்?" என்று கேட்டார் இராஜேந்திரர்.

" என்னுடைய நண்பனுக்குத் தங்களைத் தரிசிக்க வேண்டுமென்று வெகு நாட்களாக ஆவல் !"

" அதனுலென்ன? சித்திரா பௌர்ணமிக்குப் பிறகு ஒருநாள் தஞ்சை அரண்மனைக்கே அவனை அழைத்துக் கொண்டுவா; பார்க்கிறேன்" என்றார். பிறகு எதையோ நினைத்துக் கொண்டவர்போல், " தஞ்சைக்குத் திரும்பியவுடன், முன்பு அவன் எந்தப் படையில் இருந்தானே, அதே படையில் சேர்த்து

---

* கலசமங்கலம் என்பது புதுக்கோட்டை நகரத்தின் முன்னுள் பெயர். அதைச் சேர்ந்த நார்த்தா மலைச்சரிவில் விளங்கியது தமிழ் வணிகர் தலைநகரமான திருவெண்ணெயில். செட்டியார் பட்டி என்ற பெயரில் சிற்றூராகவும் சிற்றூராக அது தன் பழம் பெருமையைச் சொல்லிக் கொண்டு நிற்கிறது இன்றைக்கு.



விடு: ஒரு வாரம் சென்று நீ அவனை மீண்டும் சந்திக்கலாம்" என்றார்.

இளங்கோவேள் தன் அன்னையாரிடம் சிறுபொழுது பேசிக்கொண்டிருந்து விட்டுப் படுக்கைக்குச் சென்றான். சக்கரவர்த்தியின் கூற்றிலிருந்து வரப்போகும் சில தினங்கள் மிகவும் முக்கியமான தினங்களாக இருக்குமென்று அவனுக்குத் தோன்றியது. தஞ்சை அரண்மனையில் பெரிய அதிகாரிகள் கூடி ஈழத்துக்குச் செல்வது பற்றி முடிவான திட்டங்களை உருவாக்குவார்கள் போலும்!

இளங்கோவுக்கு உறக்கம் வரவில்லை. வீரமல்லனை நினைக்க நினைக்க அவனுடைய படுக்கை முள்ளாகக் குத்தியது. 'உடனே போய் நேரில் அவனைக் கண்டித்துவிட்டு வரவேண்டும்; இல்லாவிட்டால் இந்த இரவில் நமக்குச் சிறிதளவும் அமைதி கிடைக்காது.'

துள்ளி எழுந்து விருந்தினர் மாளிகையை நோக்கி விரைந்தான் இளங்கோ. படபடவென்று கதவைத் தட்டினான்.

"வீரமல்லா! வீரமல்லா!"

கதவு உடனே திறக்கப்பட்டது. இளங்கோவைக் கண்டு திடுக்கிட்ட வீரமல்லன், "என்ன இது, நடுச்சாமத்தில் வந்து பயமுறுத்துகிறாய்?" என்று கேட்டான். அவனைப் பார்த்தால் உறங்கி எழுந்தவன் போல் தோன்றவில்லை.

"யாரைப் பயமுறுத்துவதற்காக நீ அங்கே பூங்காவுக்கு வந்தாய்?"

நண்பர்கள் இருவரும் ஒருவரையொருவர் கூர்ந்து நோக்கிக் கொண்டார்கள்.

வீரமல்லன் தன்னை மாற்றிக் கொண்டு, "பயப்படாதே! நான் கண்ட காட்சியை யாரிடமும் சொல்லவில்லை!" என்றான். குறும்புத்தனமான சிரிப்பு அவன் கண்களில் கூத்தாடியது.

"ஏன் சிரிக்கிறாய்?" - வீரமல்லனின் தோளைப் பற்றி உலுக்கியது இளங்கோவின் வலது கரம்.

"கையும் களவுமாய் என்னிடம் நீ அகப்பட்டுக் கொண்டதை நினைத்துச் சிரிக்கிறேன். எங்கே நான் அதை வெளியிட்டு விடுவேனோ என்று தானே நீ என் மேல் பாய்கிறாய்?"

"உன் செய்கை எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை."

"களவு நடக்கும் வேளை என்று எனக்குத் தெரியாது. நான் காவலாளியுமில்லை; ஒற்றனுமில்லை; காற்றாட உலவுவதற்காக அங்கே வந்தேன். கண் கொள்ளாக் காட்சியொன்றைக் கண்டேன்! என்மேல் என்ன தவறு?"

"என்னைக் கண்டவுடன் ஏன் மறைந்துவிட்டாய்?"

"மன்னித்துக் கொள். உங்கள் தனிமையைக் கலைக்க வேண்டாமென்று மறு விநாடியே திரும்பினேன். நான் அங்கே குறுக்கிட்டிருந்தால் உன் காதலியின் முகம் சினத்தால் சிவந்திருக்காதா?"

"காதலி என்று மறுமுறை சொல்லாதே!" என்று கத்தினான் இளங்கோ.

"ஆயிரம் முறை சொல்வேன்!" என்று நகைத்தான் நண்பன். "இப்படிச் சொன்னதற்காகச் சோலைமலையில் என் நாக்கை அறுத்துவிடுவதாகத் துடித்தாய் அல்லவா? இந்தா, இப்போது என் நாக்கை நீட்டுகிறேன்; துண்டித்துவிடு. உங்கள் களவொழுக்கத்தை நிலவின் சாட்சியாகக் கண்டு விட்டன என் கண்கள்; இந்தக் கண்களையும் பிடுங்கிவிடு!" என்று பரிகாசம் செய்தான்.

கள்வனைப் பிடிக்க வந்த இளங்கோவுக்கு, தன்னையே அவன் கள்வனாக மாற்றிவிட்ட உணர்ச்சி உண்டாயிற்று. வீரமல்லனிடமிருந்து எப்படியாவது நழுவிச் சென்றால் போதுமென நினைத்தான்.

வீரமல்லனுக்கோ ஒரே ஆனந்தம். உணவு கொண்டபின் பூங்காவுக்கு உலவும் நோக்கத்தோடு வந்ததாகச் சொன்னான். ஒரு விநாடி நேரம் கூட அங்கு நிற்கவில்லை என்று சாதித்தான். நண்பனுக்கு உதவும் பொருட்டே யாரும் காணாமல் ஒளிந்து திரும்பியதாகவும் உறுதி கூறினான். அவனுடைய நல்ல எண்ணத்தை நம்புவதைத் தவிர இளங்கோவேளுக்கு வேறு வழியில்லை.

வீரமல்லனின் பேச்சை மாற்றி, அவன் மனத்தைத் திருப்பவேண்டிய நெருக்கடி இளங்கோவுக்கு ஏற்பட்டது.

"சக்கரவர்த்தி நம்முடைய பிரயாண விவரங்களைக் கேட்டார். கூறினேன்" என்றான் இளங்கோ. மேலும், அரண்மனைக் கூடத்தில் நடந்த சில தகவல்களை அவனுக்குத் தெரிவித்தான். தெரிவித்து விட்டு, "முதலில் ஈழப் படை எடுப்பு நடக்கப் போகிறது; என்னையும் உடன் அழைத்திருக்கிறார் மாமன்னர்" என்று கூறினான்.

இதனால் வீரமல்லன் உற்சாகமடையவில்லை. "என்னைப் பற்றி அவர்களிடம் ஏதும் கூறினாயா?" என்று கேட்டான்.

"கூறினேன். சித்திரா பௌர்ணமிக்குப் பிறகு உன்னைச் சந்திப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். நானே அழைத்துச் செல்கிறேன்."

"நாளைக்குப் பார்க்க முடியாதா?"

"விடி வெள்ளி முளைத்தவுடன் நாம் இங்கிருந்து கிளம்ப வேண்டும்" என்றான் இளங்கோ.

"என்னுடைய நண்பனே கொடும்பாளூர் இளவரசன். என் தமையனாரோ சோழர்களுக்காகச் சாளுக்கியப் போரில் உயிர்த்தியாகம் செய்தவர். இருந்துங் கூட என்னால் இன்னும் பெரிய உடையாரின் அபிமானத்தைச் சம்பாதித்துக் கொள்ள முடியவில்லை." வீரமல்லனின் பேச்சில் சலிப்புத் தட்டியது.

பரிவோடு வீரமல்லனின் கரத்தைப் பற்றினான் இளங்கோ. "பொறுத்திரு. காலம் வரும். உன் தமையனாரின் தியாகத்துக்காகவே உங்களுக்கு வரியில்லாத வீடும் நிலமும் கொடுத்திருக்கிறார்கள். உன்னைப் படையில் சேர்த்து, நூற்றுவர் படைத் தலைவனாகவும் உயர்த்தியிருக்கிறார்கள். இன்னும் எவ்வளவோ வாய்ப்புக்கள் உனக்கு வரப் போகின்றன."


இதைக் காதில் போட்டுக் கொள்ளாத வீரமல்லன், "சரி! நீ போய்ப் படுத்துறங்கு!" என்று பேச்சைப் பாதியில் வெட்டினான். நண்பனின் மனப்போக்கால் வியப்பும் வேதனையும் அடைந்த இளங்கோ, அவனைத் தனியே விட்டுத் தன் தனிமைக்கு வந்தான். அரண்மனைப் படுக்கை அவனுக்கு ஆழ்ந்த அமைதியைக் கொடுத்தது.

வீரமல்லன் உறங்கவே இல்லை.

அவன் கனவில்......

இளங்கோவைக் கொடும்பாளூர் வீரர்கள் ஆரவாரம் செய்து வரவேற்கிறார்கள். மக்கள் திரண்டு வந்து அவனுக்கு வாழ்த்தொலி முழங்கு

கிறார்கள். திரும்பிய பக்கமெல்லாம் அவனுக்கு ஏவலாட்கள்! பெரிய உடையார் இராஜேந்திரரே அவனை அணைத்துக் கொண்டு நடந்து சென்று, அவனோடு அளவளாவி மகிழ்கிறார். இளவரசி அருள்மொழியோ இன்னும் ஒருபடி மேலே போய்விட்டாள். நிலவு பொழியும் பூங்காவில், அல்லிக்குளத்துத் தென்றலில், அவள் அவனோடு குலாவிச் சிரிக்கும் சிரிப்பு......



கனவுகளுக்குப் பின் நினைவுகள் தொடர்ந்து தோன்றின :—

'ஆம், இளங்கோ அவனுடைய மென் தளிர் விரலை நீட்டச் சொல்லி, அதில் என்னவோ புதுமை அழகைத் தேடினானே?... அவனுக்கு முன் வீரவாள் உருவிச் சூளுரைத்தானே?... என்னவோ அவளிடம் சபதம் செய்தானே?... யார் தடுத்தாலும் கேளாது, அவளையே மாலையிட்டு மணந்து கொள்வதாகத்தான் ஆணையிட்டிருப்பான்!...... இவ்வளவும் செய்து விட்டு என்னிடம் எதற்காகப் பொய் வேடம் போடுகிறான்?'

நாட்டுக்காக ஒற்றுப் பணி செய்யப் போன வீரமல்லன், தன் நண்பனுக்கே ஒற்றனாக மாறினானே தவிர, அதையும் சரிவரச் செய்யவில்லை. கண்களால் கண்டதுடன், அவர்களுடைய உரையாடலை ஒன்றிக் கேட்குமளவுக்கு, இன்னும் நெருங்கிப் போயிருக்கக் கூடாதா?

பாவம்! இளங்கோவின் கனவிலும் அருள்மொழி வரவில்லை; நினைவிலும் எட்டிப் பார்க்கவில்லை. அவனோ, சஞ்சீவி பர்வதத்தை அநுமன் தூக்கிக் கொண்டு காற்றில் பறந்ததுபோல், ஈழத்திலிருந்த மணிமுடியை ஏந்திக் கொண்டு தஞ்சையை நோக்கிப் பறந்து கொண்டிருந்தான். அவன் கனவில் கீழே கடல், மேலே ஆகாயம், கையில் மணிமுடி!

விடி வெள்ளி முளைத்தது. கொடும்பாளூர்க் கொள்ளைத் தின்ற புதிய தினவோடு இரண்டு புரவிகளும் கோட்டை வாயிலைவிட்டு வடகிழக்கில் பறந்தன. பொழுது புலர்ந்து புள்ளினம் பாடும் வேளையில் இளங்கோவும் வீரமல்லனும் தெலுங்க குல காலபுரத்துக்கு வந்தார்கள். நார்த்தாமலை என்று இப்போது அழைக்கப்படும் நகரத்தார் மலையின் மற்றொரு பெயர் அது.

மலைப்பாங்கான பகுதியில் வந்து கொண்டிருந்த இளைஞர்களுக்குத் திருவெண்ணெயில் நகரத்தின் சிறு கோட்டை மதில்கள் தென்பட்டன. கோட்டை கட்டிக் குடியிருப்புக்கள் அமைத்துக் கொள்ளும் உரிமையும், தாங்களே சொந்தமாகக் காவல் வீரர்களை வைத்துக் கொள்ளும் தகுதியும் திசை ஆயிரத்து ஐநூற்றுவருக்கு உண்டு. சோழப் பேரரசின் பேராதரவையும் நன்மதிப்பையும் பெற்றிருந்த வணிகர்கள் அவர்கள்.

வாயிற் காவலர்களில் ஒருவன், தூதுவர்களைத் தங்கள் தலைவரின் மாளிகைக்கு அழைத்துச் சென்றான். வழியில் தெரிந்த வீடுகள் ஒவ்வொன்றும் சின்னஞ்சிறு அரண்மனைகளை ஒத்திருந்தன. கடல் கடந்து வந்த செல்வத்தின் சின்னங்கள் அங்கு திரும்பிய பக்கமெல்லாம் தெரிந்தன. நகரின் மையத்தில் நின்றது, சமணர்களுக்காக அவர்கள் கட்டிக் கொடுத்த ஐநூற்றுவப் பெரும்பள்ளி; அதற்கடுத்தாற்போல் அவர்களுடைய சைவத் திருத்தலம்.

ஜயவீர நாச்சியப்பர் தமது அகமும் முகமும் மலர இளைஞர்களை வரவேற்று உபசரித்தார். அவருடைய உள்ளத்தைப் போலவே, உருவமும் பெரிதாக இருந்தது. இரட்டைநாடித் தேகம்; இனிப்பான பேச்சு.

ஓலையைப் பெற்றுக் கொண்டு அவர் கூறினார் :—

“கீழைக் கடற்ரை நாடுகளிலிருந்து இப்போதுதான் நம்முடைய மரக்கலங்கள் திரும்பியிருக்கின்றன. மாப்பாளம், கடாரம், ஸ்ரீவிஜயம் முதலிய நாட்டரசர்கள் நமது சக்கரவர்த்திகளுக்கு வெகுமதிகள் அனுப்பியிருக்கிறார்கள். நானே நேரில் தரிசித்து விட்டு, அவற்றைக் கொடுக்க விரும்பினேன். இந்தச் சமயத்தில் அவர்களுடைய அழைப்பு வந்திருப்பது என் பாக்கியந்தான்!”

வற்புறுத்தி அவர்களைக் காலை உணவு கொள்ளச் செய்தார் நாச்சியப்பர். தம்முடைய மாளிகைக் கூடத்தில் சேர்த்து வைத்திருந்த பிறநாட்டுக் கலைப்

பொருள்களைக் காண்பித்தார். ஓலை கொண்டு வந்திருப்பவன் கொடும்பாளூர்ப் பெரிய வேளாரின் குமாரன் என்று தெரிந்துகொண்டவுடன், அவனிடம் நாட்டு நடப்புக்களைப் பற்றியும் அளவளாவினார்.

இளங்கோவும் வீரமல்லனும் அவரிடம் விடைபெற்றுக் கொண்டார்கள்.

கலச மங்கலத்தின் வழியாகக் குதிரைகள் தஞ்சைக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் திரும்பின. இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் பகுதிகளை ஆண்டு வந்த முத்தரையர்களின் நினைவு வீரமல்லனுக்கு வந்து விட்டது. அவனுடைய முன்னோர்கள் அவர்கள். அவர்களுடைய பழம் பெருமையைப் பறைசாற்றத் தொடங்கிய வீரமல்லன், அவனை அறியாமல் சோழர்களுடைய ஆட்சியில் குறை கண்டுபிடிக்க முற்பட்டான்.

"பல்லவர்கள் காலத்தில் என் முன்னோர்கள் எவ்வளவு சிறப்போடு வாழ்ந்தார்கள், தெரியுமா? பல்லவர்களின் செல்லப் பிள்ளைகள் அவர்கள். பல்லவரையர்கள் என்றே தாங்களும் பெயர் வைத்துக் கொண்டார்கள். சோழர்கள் தஞ்சைமா நகரைக் கைப்பற்றியிருக்காவிட்டால், அவர்களுக்கு நீங்கள் உதவி செய்திருக்காவிட்டால்..." வீரமல்லன் பெருமூச்சு விட்டான்.

இளங்கோவின் பொறுமை இதைக் கேட்டவுடன் பொடிப்பொடியாகத் தகர்ந்துவிட்டது.

"வீரமல்லா! உங்களைச் செல்லப் பிள்ளையாக மதித்த பல்லவர்களைத்தான் நீங்கள் திருப்புறம்பியம் போரில் காட்டிக் கொடுத்து விட்டீர்கள். அவர்களுக்கு எதிராகப் பாண்டியர்களுக்கு நல்ல பிள்ளைகளாக மாறி, வளர்த்தவர்கள் மார்பிலேயே பாய்ந்தீர்கள்! வீழ்ச்சிக்கு முதற் காரணம் நீங்களேதான்! இதற்காகச் சோழப் பேரரசையோ எங்களையோ குறை சொல்லாதே!"

இளங்கோவின் சொல் சுருக்கென்று தைத்ததால் வீரமல்லனின் முகம் சுருங்கி விட்டது.

நண்பனின் முகச் சுருக்கம் காணப் பொறுக்காத இளங்கோ அவன் மனப் புண்ணை ஆற்றினான். "நண்பா! மறக்க வேண்டியதை மறந்து விடவேண்டும். ஆயிரக்கணக்கான முத்தரைய வீரர்கள் இப்போது சோழர்களின் ஆதரவால் வளர்கிறார்கள். ஈராயிரம் பல்லவரையரைப் போன்ற பெருந் தனத்து அதிகாரிகளும், சேனைத் தலைவர்கள் பலரும் இன்று முத்தரையர்களல்லவா? நமக்குள் பிரித்துப் பேசாதே, வீரமல்லா!"

நடுப்பகல் உணவும் ஓய்வும் சாலை வழியில் இருந்த ஒரு வழிப்போக்கர் விடுதியில் கிடைத்தன. மாலை நேரத்தின் மஞ்சள்வெய்யிலில் தஞ்சைமா நகரத்தின் பெரிய கோயில் கோபுரம் அவர்கள் கண்களுக்குத் தெரிந்தது. அதன் உயரத்தில், அதைக் கட்டி முடித்த இராஜராஜப் பெருந்தகையின் மன உயரத்தைக் கண்டு களித்தான் இளங்கோவேள்.

எட்டாம் அத்தியாயம்

மந்திராலோசனை

சோழ மண்டலத்தின் நானா திசைகளிலிருந்தும் கூற்றத் தலைவர்களும், வளநாட்டுத் தலைவர்களும், ஊர் சபைத் தலைவர்களும் தஞ்சை அரண்மனையில் வந்து குழுமிய வண்ணமாக இருந்தனர். அவர்களுக்கு முன்பே மாதண்ட நாயகர்களும், பெருந்தனத்து அதிகாரிகளும் சிறுதனத்து அதிகாரிகளும் அங்கு வந்து கூடித் தமக்குள் ஆலோசனைகள் நடத்த முற்பட்டனர். மாமன்னர் இராஜேந்திரர் சக்கரவர்த்திகளாக முடிசூடிக் கொண்ட பிறகு, இவ்வளவு பெரிய கூட்டத்தைக் கூட்டியிருந்தது இதுவே முதன் முறை.

எண்ணிக்கையில் பெருத்த பொது மக்களின் கூட்டமல்ல இது. மக்களை வழி நடத்திச் செல்லும் வல்லவர்களின் கூட்டம். பொறுக்கி எடுக்கப் பெற்ற மனித மணிகள் தஞ்சைத் தலைநகரில் ஒரு நோக்கத்துக்காக ஒன்று திரண்டிருந்தன. நிரம்பி வழிந்த விருந்தினர் மாளிகைகள் போதாமல், அரண்மனைக் கோட்டைக்குள்ளிருந்த உடன் கூட்டத்தினரின் மாளிகைகளிலும் வசதிகள் செய்து கொடுத்திருந்தார்கள்.

பெரிய உடையார் இராஜேந்திரரும், மதுராந்தக வேளார் முதலியவர்களும் கொடும்பாளூரிலிருந்து, இளங்கோ திரும்பிய மறுநாளே தஞ்சைக்குத் திரும்பி விட்டனர். விருந்தினர்களை உபசரிக்கும் பணியில் நூற்றுக்கணக்கான ஏவலாட்களை வைத்துக்கொண்டு பம்பரமாய்ச் சுழன்று வந்தான் இளங்கோ.

இராஜேந்திரர் சோழப் பேரரசின் சக்கரவர்த்திகளாகப் பொறுப்பேற்று மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த மூன்று ஆண்டுகளிலும் ஏற்பட்ட நாட்டின் வளப் பெருக்கையும், கலைப் பெருக்

GOOD JOBS WITH GOVT HELP

சென்னை, திருச்சி, மதுரை மற்றும் விஜயவாடாவில் சர்க்கார் உதவி பெற்ற தொழில்களில் வேலை பார்த்து மாதம் ரூ. 100 சம்பாதிக்கலாம். ஐந்தாண்டுகளுக்குள் மாதம் ரூ. 200க்கு மேல் சம்பாதிக்கலாம். 3 மாதங்கள் தொழிற் பயிற்சி. பப்ளிக் பரீட்சை ஏதுமில்லை. எஸ். எஸ். எல். ஸி. தேறியவர்களும் தவறியவர்களும் சேரலாம். பெண்களும் சேரத் தகுதியுடையவரே. உத்யோகத்திற்கு உத்திரவாதமுண்டு. இந்தப் பயிற்சியும் உத்தியோகமும் சேர்ந்த திட்டத்துக்கு சர்க்கார் உதவி கிடைக்கிறது. சென்னை, மதுரை மற்றும் விஜயவாடாவில் பயிற்சி பெறலாம். சர்க்கார் ஆபீஸ்குமாஸ்தாக்கள், உபாத்தியாயர்களை விட அதிகம் சம்பாதிக்கும்வாய்ப்பு இது.

THE WORK OF THIS COLLEGE IS HIGHLY APPRECIATED BY MINISTERS & CHIEF ENGINEERS

பிராஸ்பெக்டஸ் மற்றும் விண்ணப்ப நமூனாவின் விலை ரூபாய் ஒன்றை நேரிலோ மணியார்டர் மூலமோ செலுத்தலாம். M.O. கூப்பனில் உங்கள் பெயர், விலாசத்தை அச்செழுத்தில் எழுதுக. பிராஸ்பெக்டஸ் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு இவற்றில் எந்த பாஷையில் தேவை என்றும் குறிப்பிடவும். விண்ணப்பிக்குமிடம்:

பிரின்ஸ்பால், மதராஸ் காலேஜ் ஆப் இன்ஜினீயரிங்

தபால் பெட்டி நெ. 2707

97, சுவாமி நாயக்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 2

யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.

தலைமை ஆபீஸ்: கல்கத்தா

செலுத்தப்பட்ட மூலதனம்	ரிசர்வ் நிதி
ரூ. 2,00,00,000	ரூ. 1,48,00,000

எங்கள்

"ரெக்கரிங் டிபாசிட்" திட்டம்

பிரதிமாதம் தொடர்ந்து செய்யும் டிபாசிட் தொகையான	ரூ. 10	ரூ. 100	ரூ. 500
கீழ்க்கண்டபடி பெருகும்:			
46 மாதங்களில்	ரூ. 500	ரூ. 5000	ரூ. 25000
86 மாதங்களில்	ரூ. 1000	ரூ. 10000	ரூ. 50000

சேர்மன்
ஜி. டி. பிர்லா

ஜெனரல் மானேஜர்
எஸ். டி. சதாசிவன்

UCO 9-59



மரக்கறிக் கூட்டு

சமைத்துப் பாருங்கள்

6 பெரிய உருளைக் கிழங்குகள். 1 முள்ளங்கி, கையளவு பிரஞ்சு பீன்ஸ், 2 மேஜைக் கரண்டி அளவு ரெக்ஸ் ஸாலட் ஆயில், 5 அல்லது 6 கறிவேப்பிலை, அருமையாக அரிந்த ஒரு வெங்காயம், ஒரு கப் உரித்த பச்சைப் பட்டாணி. அளவுக்கு உப்பு. ஒரு மேஜைக் கரண்டியளவு கறி பௌடர், ஒரு தேக்கரண்டியளவு ப்ரௌன் அன்டு போல்ஸன் கார்ன்ப்ளவர்—½ கப் பாலில் கலந்தது.

காய்கறிகளை சுத்தம் செய்து, நறுக்கி, பட்டாணியுடன் சேர்த்து பாத்திரத்தில் போட்டு, ½ கப் தண்ணீர் சேர்க்கவும். கறி பௌடரையும், கறிவேப்பிலையும் இதோடு கலக்கவும். ருசிக்குத் தகுந்தவாறு உப்பு சேர்த்து நன்ருக வேகவைக்கவும். இன்னொரு பாத்திரத்தில் ரெக்ஸ் ஸாலட் ஆயிலை ஊற்றி, நறுக்கிய வெங்காயத்தை சிவக்கும் வரை வதக்கவும். முதலில் வெந்த கறிகாயை இதில் கொட்டி, பாலும் சேர்த்து வேகமாகக் கலக்கி, 10 நிமிட நேரம் நன்ருக மூடி வைக்கவும். பிற்பாடு இதைச் சப்பாத்திகளுடன் பரிமாறி சாப்பிடவும்.

ப்ரௌன் அன்டு போல்ஸன் கார்ன்ப்ளவர் பேட்டன்ட் ஆக அங்கீகரிக்கப்பட்டது.

இதன் பரிசுத்தத் தன்மைக்கு இப்பரிசோதனையைச் செய்து பாருங்கள் :-

இரண்டு மேஜைக் கரண்டியளவு ப்ரௌன் அன்டு போல்ஸன் பேட்டன்ட் கார்ன்ப்ளவரை கொதித்து ஆற வைத்து குளிர்ந்த ஜலத்தில் நன்ருகக் கலக்குங்கள். 24 மணி நேரம் இவ்விதம் வைத்த பிற்பாடுங்கூட கெட்ட வாசனை உண்டாகாமல், பரிசுத்தமாகவும், பெக்டீரியா முதலிய அசுத்த அணுக்களால் சேதப்படாமலும் இருப்பதைக் காண்பீர்கள். மற்ற ப்ரௌன் அன்டு போல்ஸனின் உயர்தர சாதனங்கள் என்னவென்ருல்: ரெய்ஸ்னி, கஸ்டர்ட் பௌடர், ப்ளேவர்ட் கார்ன்ப்ளவர்.



இங்கிலீஷ், ஹிந்தி, அல்லது தமிழ் பாஷைகளில் பிரசுரிக்கப்பட்ட அழகான சமையல் புஸ்தகம் இலவசமாக வேண்டுவோர் இங்குள்ள கூப்பனை பூர்த்தி செய்து அனுப்பவும். (வேண்டாத பாஷையை அடித்து விடவும்)

தபால் செலவிற்காக 15 நயா பைசா விலையுள்ள தபால் ஸ்டாம்பு நான் இதோடு அனுப்புகிறேன்.

ஸ்ரீ/ஸ்ரீமதி/செல்வி ....

....

விலாசம் ....

டிப்பார்ட்மென்ட் : KLK 16

கார்ன் ப்ராடெக்ட்ஸ் கோ.
(இந்தியா) ப்ரைவேட் லிமிடெட்
தபால் பெட்டி : 994, பம்பாய் 1

கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ (இந்தியா) ப்ரைவேட் லிட்

இந்தியாவில் ஏஜென்டுகள் : பாரி அன்டு கோ. லிட்.

கையும், பொதுவான செழிப்பையுமே பொது மக்கள் கண்டு இன்புற்றார்கள். ஆனால் இன்னும் பல பேரதிசயங்கள் அங்கே நடைபெற்று வந்தன. மக்களால் காணமுடிந்த அதிசயங்கள் சில; காண முடியாதவை பலப் பல.

ஆயிரக்கணக்கில் ஏன் அரபு நாட்டுக் குதிரைகள் சோழ நாட்டுத் துறைமுகங்களில் வந்து இறங்கிய வண்ணமாக இருந்தன? ஒவ்வொரு ஊரிலும் ஏன் ஒவ்வொரு படைப் பயிற்சித் திடல் ஏற்படுத்தப்பட்டது? கூற்றங்களெங்கும் படைப் பற்றுக் கடகங்களாகவும், வளநாடுகளெங்கும் வீரர்களை வளர்க்கும் நன்செய்க் கழனிகளாகவும் ஏன் மாறின? கொல்லர் பட்டறைகளின் உலை நெருப்பு ஏன் இரவு பகல் பாராது கொழுந்துவிட்டெரிந்துகொண்டேயிருந்தது? - உழவர்கள் ஒருபுறம் செந்நெற் கதிர்களைக் குவிக்க, அவர்களுடன் போட்டியிட்டுக்கொண்டு, மறுபுறம் கொல்லர்கள் வில், வேல், வாள் கூரம்புகளாய்க் குவித்து வந்தார்களே, ஏன்?

வீரத்தின் விளை நிலத்தைச் சற்றே கண்ணோட்டம் விட்டு வருவோமா?

நாகப்பட்டினத்தில் புத்த சமயத்தாருக்காக எழுப்பப் பெற்ற இராஜராஜப் பெரும் பள்ளிக்கு, பள்ளிச் சந்தமாக விடப்பட்ட ஆனைமங்கலம் என்ற ஊர்ப்புறத்தை முதலில் காணுங்கள்: அதன் மேற்கு எல்லையில் மந்தை மந்தையாக நூற்றுக் கணக்கான கருங்குன்றுகள் ஒன்றோடொன்று முட்டி மோதிப் பிளிறுகின்றனவே, குன்றுகளா அவை? தென் சோழ மண்டலமான சேரபாண்டிய நாடுகளின் காடுகளில் இரிந்த யானைக் கூட்டமல்லவா அது! - யானைகளைத் தங்களது குழந்தைகளாகவும், எதிரிகளின் கூற்றுவர்களாகவும் பழக்கி வைத்தவர்கள் சோழநாட்டின் **குஞ்சர மல்லர்கள்.**

ஈழத்துக்கு இவ்வளவு யானைகளையும் கொண்டு செல்ல முடியுமா? தேவையில்லை. ஏற்கனவே ஈழ நாட்டின் வடபகுதி சோழர்களின் ஆளுகையில் உள்ளது. அதன் தலைநகரமான ஜனநாத மங்கலத்தில், ஈழத்து யானைகளையே செம்மையாகப் பழக்கி வைத்திருக்கிறார்கள் இராஜேந்திரரின் **ஆனையாட்கள்.** இங்கே பயிற்சி பெறும் மல்லர்களுக்கு அங்கே களிறுகள் காத்திருக்கின்றன.

அடுத்தாற்போல், **வாள் பெற்ற கைக்கோளர்களான** குதிரைப் படையினரின் சாகசம் காண, அங்கங்கே பரவியுள்ள படைப் பற்றுக்களை நாடிச் செல்வோம்: ஆயிரக்கணக்கான அரபுநாட்டுக் குதிரைகளுக்கு, மின்னல் வேகத்தில் பாய்ந்து தாக்கும் பயிற்சியளிக்கிறார்களா, என்ன! வாட்களோடு வாட்கள் மோதும்போது மின்னல் மின்னி இடி இடிக்கின்றன. பயிற்சிக் களங்களாக இருப்பதால் இப்போது செம்மழை பொழியவில்லை. - இவையே பெய்து பெருக்கெடுத்தோடும் போர்க்களங்களானால்!

சோழவள நாட்டின் **குதிரைச் சேவகர்கள்,** தங்கள் குதிரைகளுக்கு, அவற்றின் தலைவர்களை இழந்த நிலையில் கூட, எதிரிப் படைகளை அதம் செய்யும் வித்தைகளைக் கற்றுக் கொடுத் திருந்தார்கள்.

இன்னும், **தரைப்** படையினரான காலாள் வீரர்களைக் காண்போமெனில், அவர்கள் எண்ணிலடங்காதவர்கள். குறி தவறாது கூரம்புகள் எய்யும் வில்லவர்கள் எத்தனைபேர்! வேங்கைகளெனப் பதுங்கிப் பாய்ந்து வேலெறியும் திண்தோளர்கள் எத்தனைபேர்! குளுரைத்து வாள் சுழற்றும் விற்பன்னர்கள் எத்தனை பேர்!-அடடா! காலாட்படை வெள்ளம் களம் புகுந்து பெருக்கெடுத்துச் சீறும் காட்சியை ஒரு குன்றின் மீது நின்றல்லவோ காண வேண்டும்? தலைகளாகவே தெரிகின்றன; எதிர்சாரியின் தலைகளாகவே உருளுகின்றன.

வேங்கையின் மைந்தனான மாமன்னர் வெற்றித் திருமகளுக்குத் தமது சோழ மண்டலத்தில் முடிசூட்டுவதற்காக, இந்த மூன்று ஆண்டுகளில் செய்திருந்த வித்தைச் செயல்கள் இன்னும் எத்தனை எத்தனையோ? - சரி, இனி நாம் அரண்மனையின் அந்தரங்க ஆலோசனை மண்டபத்துக்குள் காவலர் அறியாமல் செல்வோம்.

அரண்மனையின் அந்தரங்க மந்திராலோசனை மண்டபம் அகிற் புகையின்

கல்கி

சந்தா விகிதம்

	ஒரு வருஷம் ரூ. ந.பை	ஆறு மாதம் ரூ. ந.பை
இந்தியா, இலங்கை	15—00	7—50
பர்மா, மலேயா, வெளி நாடுகள்	18—00	9—00

தனிப் பிரதி விலை 30 நயா பைசா

சந்தா தொகை முன்னதாக அனுப்பப்பட வேண்டும். வி.பி.பி. கிடையாது. இலங்கை நேயர்கள் மட்டும் வி. பி. பி. மூலம் சந்தா தொகையைச் செலுத்தலாம்.

மானேஜர்: கல்கி காரியாலயம், சென்னை - 18

நறுமணத்தால் சூழப்பெற்றிருந்தது. பத்துப் பன்னிரண்டுபேர்கள் அங்கு நெருக்கமாக அமர்ந்து மெல்லிய குரலில் ஈழத்துக்குச் செல்ல வேண்டியது பற்றி ஆராயத் தொடங்கினர். மண்டபம் இருந்த கூடத்தின் கதவுகள் மூடப்பட்டிருந்தன. வெளியே காவல் வீரர்கள் கண்ணிமைக்காது கூடத்தின் வழிகளைக் காத்து நின்றனர்.

பேரரசர் இராஜேந்திரர் மையத்தில் வீற்றிருக்க, அவருக்கு வலதுபுறம் பெரிய இளவரசன் இராஜாதி ராஜனும், இடதுபுறம் சிறிய இளவரசன் சுந்தர சோழனும் அமர்ந்திருந்தனர். இராஜாதிராஜன் அப்போது சோழப் பேரரசின் வடபகுதியான தொண்டை மண்டலத்தின் தலைவன். அவனும், அவனுக்கு அடுத்தாற் போலிருந்த வடபகுதி மாதண்டநாயகரான அரையர் இராஜராஜனும் காஞ்சிமா நகரிலிருந்து கொண்டு, பேரரசின் வடவெல்லையைக் காத்து வந்தார்கள்.

தென்பகுதிச் சோழ மண்டலத்து மாதண்ட நாயகரான சேனாதிபதி கிருஷ்ணன் ராமனும் ஆலோசனை மண்டபத்தில் இருந்தார். பாண்டிய மன்னர்கள் மூவருக்கும் சேரன் மூவர் திருவடிக்கும் ஆளும் உரிமையைப் பேரரசு வழங்கியிருந்ததால், அவர் தஞ்சைத் தலைநகரிலிருந்தே பாண்டிய சேரப் பகுதிகளைக் கண்காணித்து வந்தார். அதோடு சிறிய இளவரசன் சுந்தர சோழனையும் அவ்வப்போது தெற்கில் அழைத்துச் சென்று நிலவரங்களை விளக்கினார்.

கடல் கடந்த மும்முடிச் சோழ மண்டலமான ஈழத்தின் வடபகுதியோ மாதண்டநாயகர் க்ஷத்திரிய சிகாமணி தாழிகுமரனின் மேற்பார்வையில் இருந்தது. அவர் இங்கு வரவில்லை.

மேற்கூறிய மூன்று மண்டலங்கள் தவிர, தஞ்சையின் சுற்றுப்புறங்களான மத்திய சோழ மண்டலத்தின் மாதண்ட நாயகர் ஈராயிரம் பல்லவரையரும் கடற்சேனை மாதண்ட நாயகரான மாவலி வாணராயரும் மந்திராலோசனையில் கலந்து கொள்ள வந்திருந்தனர்.

வல்லவரையர் வந்தியத்தேவரோ சோழப் பேரரசின் சாமந்த நாயகர். மாதண்டநாயகர்கள் அனைவரின் தலைவர். இராஜேந்திர உடையாரின் படை அமைச்சர் என்று வல்லவரையரைக் கூறினால், நாட்டமைச்சர் என்று கொடும்பாளூர் மதுராந்தக வேளாரைக் கூறலாம். இவர்களில் பெரும்பாலோர் தங்கள்-தங்கள் நாடுகளுக்கு அரசர்களாகவும்,—சோழப் பேரரசின் சிற்றரசர்களாகவும்,—விளங்கினர்கள்.

இத்தகைய அதிகாரிகளும், இவர்களைப் போன்ற இன்னும் சிலரும் கூடியிருக்க, இராஜேந்திர மாமன்னர் நீண்ட நேரம் அவர்களோடு ஆலோசனை நடத்தினர். அவர்கள் கூறிய கருத்துக்களைச் சிந்தித்துப் பார்த்தார்.

பிறகு அவரே தமது எண்ணத்தை வெளியிடலானர் :—

“ஈழ நாட்டிலிருந்து க்ஷத்திரிய சிகாமணி தாழி குமரன் நான்கு மாதங்களுக்கு முன்பு அனுப்பிய செய்தி மெய்தான் என்பது தெரிந்துவிட்டது. ரோகணத்தில் மறைந்து வாழ்ந்த ஐந்தாம் மகிந்தன் இப்போது நம் மீது போர் தொடுப்பதற்குச் சித்தமாகி வருகிறார். பாண்டிய சேரர்களின் மறைமுகமான உதவி அவருக்கு இதற்கான ஊக்கம் கொடுத்திருக்கிறது. ஏற்கனவே நாம் மணிமுடியைத் திருப்பிக்கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகிறோம்.—இனியும் காலம் தாழ்த்தக் கூடாது.”

பெரியவர்கள் அனைவரும் மாமன்னரின் அடுத்த சொல்லுக்காகக் காத்திருந்தார்கள். இளவரசன் இராஜாதி ராஜனுக்குப் பொறுக்கவில்லை. துடிதுடித்துக் கொண்டு எழுந்து நின்றான். “இந்தப் பாண்டியரும் சேரரும் உடன்பிறந்தே வளரும் நோய் போன்றவர்கள். முதலில் நம்முடைய சேனைகளை அவர்களுக்கு எதிரே திருப்ப வேண்டும்!” என்று கூறினான்.

“பொறுமை வேண்டும், ராஜாதிராஜா !” என்று புன்னகை பூத்தார் சக்கரவர்த்தி. “அவர்கள் நம்மை மீறி எதையும் தீவிரமாகச் செய்துவிட மாட்டார்கள். நம்முடைய முதல் நோக்கம் மணிமுடி ! அதற்காக நாம் தொடங்கும் முயற்சியில் மற்றொரு பலனும் கிடைக்கும். பாண்டியரும் சேரரும் தங்களுக்குத் துணையாக யாரை நம்பிக்கொண்டிருக்கிறார்களோ, அந்த மகிந்தன் பலமற்றவர் என்பதையும் நாம் மெய்ப்பித்து விடலாம்.”

“அது போதாது.”

“அதற்குப் பிறகும் அவர்கள் நாட்டின் அமைதியைக் குலைப்பார்களானல், அவர்களை அடக்கும் பொறுப்பை உன்னிடமே தருகிறேன். - சரிதானா ?”

இராஜாதிராஜன் அடங்கிவிட்டான்.

"மாவலிவாண ராயரே!" என்று, கடற்சேனை மாதண்ட நாயகர் பக்கம் திரும்பினார் மாமன்னர்.

"புத்தம் புதிய போர்க்கலங்களும், புதுப்பிக்கப்பெற்ற போர்க்கலங்களும் தங்கள் ஆணைக்குக் காத்திருக்கின்றன. போர்க்கல வீரர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் முற்றிய பயிற்சி பெற்றிருக்கிறார்கள். கடற்கரைப் பட்டினங்கள்தோறும் சிதறி நின்ற கலங்களை நாகைத் துறைமுகத்துக்குக் கொண்டு வரச் செய்திருக்கிறேன்."

"எல்லோருமே சித்தமாகிவிட்டீர்கள், மகிழ்ச்சி" என்று கூறினார் சக்கரவர்த்தி. "ஆனால் மீண்டும் ஒரு முறை நட்பு முறையில் ரோகணத்து மன்னர் மகிந்தனை அணுகிப் பார்க்கலாமென்று நினைக்கிறேன்."

கூடியிருந்தவர்களின் முகக்குறி இந்த ஆலோசனைக்கு வரவேற்பு அளிப்பதாக இல்லை.

"மணிமுடியை மகிந்தன் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். பாண்டிய சேரருடன் சேர்ந்து நமக்கெதிரே அவர் வான் முனையை உயர்த்தக் கூடாது. இந்த இரண்டு நிபந்தனைகளுடன் நாம் அவருக்கு இப்போதே தூது அனுப்பிப் பார்ப்போமே!—வீணான உயிர்க்கொலைகளைத் தடுக்க முடிந்தால் தடுத்துவிட வேண்டும். அவர் ஏற்றுக்கொண்டாரானால் அதனால் இரு சாராருக்கும் நன்மை....மேலும், பலமுறைகள் நாம் தூது அனுப்பிப் பலனில்லையென்பதற்காக இம் முறையும் அனுப்பாதிருக்கக் கூடாது. போர் முறை மரபை நாம் வழுவ விடலாமா?"

இதைக் கேள்வியுற்றபிறகு யாருமே வாய்திறந்து பதிலளிக்க முன்வரவில்லை. நீண்ட நேரம் அங்கு மௌனம் நிலவியது.

கடைசியில் இராஜாதிராஜன் மௌனத்தைக் கலைத்தான்: "பெரியவர்கள் வாய் திறந்து பேசாததிலிருந்து அவர்களும் என் கருத்தையே கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். மணிமுடிக்காக நம்முடைய முன்னோர்கள் இரண்டு முறை போர் தொடுத்துவிட்டார்கள். சக்கரவர்த்திகளும் இதே மகிந்தனுடன் இதற்காகவே முன்பொரு முறை போர் தொடுத்திருக்கிறார்கள்.—நாம் தொடுக்கப் போவது நான்காவது போர்! தூது அனுப்புவதால் கால விரயம் ஏற்பட்டு, கசப்பும் மிகுதியாகுமென்றே நினைக்கிறேன்."

பெரியவர்களுடைய முகங்கள் மலர்ந்தன. இதிலிருந்து தூது அனுப்புவதை அங்கு யாரும் விரும்பவில்லை என்பதைக் கண்டுகொண்டார் சக்கரவர்த்தி. என்றாலும் எதையும் முறையோடு செய்வதில் அவர் பிடிவாதமுள்ளவர்.

"மதுராந்தக வேளாரே! உங்கள் கருத்து?" பெரிய வேளாரைத் திரும்பிப் பார்த்தார் சக்கரவர்த்தி.

பெரிய வேளாருக்கு மாமன்னரின் கருத்துக்கு முரண்படவும் விருப்பமில்லை. அங்கு வீற்றிருந்த வீரப் பெருமக்களின் மனத்தை நோகச் செய்யவும் விருப்பமில்லை. இரு சாராரின் போக்கிலும் நியாயம் இருப்பதாகவே அவருக்குத் தோன்றியது. நடுநிலையில் தம்மை நிறுத்தி ஆலோசித்தார்.

பிறகு கூறலானார்:—

"முறையோடு போர் தொடங்க வேண்டுமென்ற சக்கரவர்த்திகளின் கூற்று மிகவும் உயர்ந்த நெறியுள்ளது. அதேபோல், இந்த நெறியை உணரும் பண்பு ரோகணத்தரசருக்கு இருக்காது என்பதும் மெய்தான். தூதரின் சொற்களுக்கு அவர் செவிசாய்க்க மாட்டார். —ஒன்று செய்யலாம்; நம்முடைய படைகள் அனைத்தையும் ஈழத்தில் இறக்கிக் கொண்டு, பிறகு அவருக்குத் தூது அனுப்பலாம். படை பலத்துக்கு அஞ்சி மகிந்தன் ஒருவேளை நம்முடைய நட்பை நாடினாலும் நாடுவார். இங்கிருந்தே அனுப்புவதால் பலன் ஏதும் இருக்காதென்றுதான் நானும்...."

"சரி; நீங்கள் இதற்கென்ன சொல்கிறீர்கள்?" என்று மற்றவர்களைச் சுற்றிப் பார்த்தார் சக்கரவர்த்தி.

எல்லோரும் மதுராந்தக வேளாரின் ஆலோசனையை வரவேற்றார்கள்.

"அப்படியே செய்வோம்" என்று முடிவு கூறிவிட்டு, அடுத்தாற்போல் நடக்க வேண்டிய விஷயங்களை நினைவு படுத்தினார் சக்கரவர்த்தி. "நானும் வல்லவரையரும் ஈழத்துக்குப் புறப்படுகிறோம். கொடும்பாளூர் இளங்கோவும் மாவலிவாணருடன் அங்கு வருகிறான். தொண்டை மண்டலத்தை மேலைச் சளுக்கர் தொல்லையிலிருந்து காக்கும் பொறுப்பை அரையர் ராஜராஜனும் ராஜாதிராஜனும் மேற்கொள்ள வேண்டும். பாண்டிய சேரர்களைச் சேனாபதி கிருஷ்ணன் ராமனும் சுந்தர சோழனும் கண்காணித்து வருவார்கள். தஞ்சைமா நகரையும் மத்திய சோழ மண்டலத்தையும் மதுராந்தக வேளாரும் ஈராயிரம் பல்லவரையரும் பார்த்துக்

கொள்வார்கள்.—வல்லவரையர் ஈழத்தி லிருந்து திரும்பும் வரையில் மதுராந்தக வேளாரே சாமந்த நாயகராகவும் இருந்து வருவார்."

சக்கரவர்த்தி வெற்றியுடன் திரும்ப வேண்டுமென்று அனைவரும் வாழ்த்தினார்கள். கண்களைக் காக்கும் இமைகளைப்போல் நாட்டைக் காத்து வருவதாகவும் வாக்களித்தார்கள்.

இராஜாதி ராஜனின் முகம் மட்டிலும் சற்றே சுருங்கி யிருந்தது.

"நீயும் ஈழத்துக்கு வரவேண்டும் என்று விரும்புகிறாயா?" என்று அவனிடம் கேட்டுவிட்டு, "வேண்டாம்; மேலைச் சளுக்கர்களுக்கு நாம் தெற்கே திரும்பியிருப்பது தெரிந்து விட்டால், வடக்கு வாயிலே இடிக்கத் தொடங்கி விடுவார்கள்" என்றார் மாமன்னர்.

அதன்பிறகு அவர் சேனபதி கிருஷ்ணன் ராமனுக்கு ஒரு புதுமையான கட்டளை இட்டார். தென் சோழ மண்டலத்து மாதண்ட நாயகரான அவருக்கு மதுரையில் ஓர் புதுமாளிகை எழுப்பும் பணியைக் கொடுத்தார்.

"மதுரை மாநகரில் பெரிய மாளிகையைக் கட்டுவதற்கான வேலையை உடனே தொடங்குங்கள். புதியதொரு அரண்மனையைப் போல் அது இருக்க வேண்டும். கோட்டை மதில்களோடு பாதுகாப்புள்ள மாளிகையாக அமையும்படி பார்த்துக் கொள்ளுங்கள்."

"ஆகட்டும், சக்கரவர்த்தி" என்றார் கிருஷ்ணன் ராமன்.

"ஆமாம்; அதை ஒரு முகாந்தரமாக வைத்துக் கொண்டு நாங்கள் திரும்பும் வரையில் நீங்கள் மதுரையில் தங்குவது நல்லது" என்றார் மாமன்னர்.

சக்கரவர்த்தியின் இந்தக் கட்டளை மற்றவர்களுக்கு வியப்பைத் தந்தது. கிருஷ்ணன் ராமனை மதுரையில் தங்கச் செய்வதற்காக மட்டிலும், இந்த மாளிகையை அவர் எழுப்பச் சொல்லவில்லை. வேறு எதற்காகப் புது மாளிகை? பாண்டியர் மூவரில் ஒருவரது அரண்மனை அப்போது மதுரையில்தான் இருந்தது. வேண்டுமானால் அதையே மாமன்னர் கட்டளையிட்டுப் பெறமுடியும். ஈழத்தாருடன் சேர்ந்து பாண்டியர்கள் செய்யும் துரோகச் செயலைக் கண்ட பின்னரும் இன்னும் எதற்காக அவர்களுக்கு அரசுரிமை?

'மாளிகை எதற்காக?' என்ற கேள்வி எல்லோருடைய மனத்திலும் எழுந்தான் செய்தது. யாரும் காரணம் கேட்கத் துணியவில்லை. இராஜாதிராஜன் மட்டிலும் மெதுவாகத் தன் தந்தையாரிடம், "மதுரையில் ஒரு புது மாளிகையா?" என்று கேட்டான்.

அதற்கு அவர் பதில் அளிப்பதற்கு முன்பே, கூடத்தின் வலதுபுறக் கதவு திறக்கப்பட்டது. ஏதோ செய்தியுடன் வந்து நிற்பவன்போல் இளங்கோ வேள் அவர் முன்பு வந்து வணங்கி நின்றான். "என்ன செய்தி?" என்று இளங்கோவிடம் வினவுகிறவர்போல், இராஜாதிராஜன் எழுப்பிய கேள்விக்கு விடை கொடுக்காமலே, அனைவரின் கவனத்தையும் வேறுபுறம் திருப்பி விட்டார் இராஜேந்திரர். (தொடரும்)

கொச்சைத் தமிழ்

ஒப்பிலியப்பன்

கொச்சைத் தமிழில் சிதைந்து வழங்கும் சொற்களால் சில வேளைகளில் விபரீதமும் விளைவதுண்டு. சென்னையில் ஹாமில்டன் வாராவதி, ஆமிட்டன் வாராவதியாகி, அம்பட்டன் வாராவதி எனச் சிதைந்து, ஆங்கிலத்தில் 'பார்பர்ஸ் பிரிட்ஜ்' என்று மொழிபெயர்க்கப் பட்டது நாமறிந்த செய்தியன்றோ? கும்பகோணத்திற்கு அருகே உப்பிலியப்பன் கோயில் என்னும் திருமால் திருப்பதி ஒன்று உள்ளது. இங்குள்ள பெருமான் உப்பிலியப்பன் என்று வழங்கப்படுதலால் உப்பில்லாத நிவேதனம் இப்பெருமானுக்கு அளிக்கப்படுகின்றது. இவ்வாறு செய்ய நேர்ந்ததற்குக் காரணம் கொச்சைத் தமிழ்தான். 'ஒப்பிலியப்பன்' என்ற பெருமான் திருப்பெயரை 'உப்பிலியப்பன்' என்று சிதைத்தது கொச்சைத் தமிழ்; தனக்கு உவமையில்லாத் தலைவனாகிய இறைவனை ஒப்பிலி என்னும் சொல் உணர்த்துவதாகும். 'தின்னொப்பார் பிறரின்றி நீயே ஆனாய்' என்று சைவத் தேவாரம் பாடியது போன்று திருவாய்மொழியிலே 'தன்னொப்பார் இல்லப்பன்' என்று பாடினார் நம்மாழ்வார். அவர் வாக்கின் அடியாக ஒப்பிலியப்பன் என்ற பெயர் பெருமானுக்கு வழங்கலாயிற்று. அப்பெயர் உப்பிலியப்பன் எனச் சிதையவே, உப்பில்லாப் பண்டத்தை ஏற்கும் நிலை இறைவனுக்கு ஏற்பட்டுவிட்டது.

—பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை

- பாலிதீன் - இன்ஸுலேஷன், பாலிவினைல் குளோரைட் பி. வி.஁ஸி. (P.V.C.) உறையுடன் கூடியது.
- அலுமினியம் கண்டக்டர் B. S. 2791 : 1956க்கும் பாலிதீன் பி. வி. ஸி. (P.V.C.) B. S. 1557 : 1954க்கும் தயாரிக்கப்பட்டது.
- டைரக்டரேட் ஜெனரல் ஆப் ஸப்ளைஸ் & டிஸ்போஸல்ஸ் கேரளா, ஆந்திரா, சென்னை, மைசூர், ஒரிஸா இராஜ்யங்கள், ப்ராஜெக்ட் அதிகாரிகள், மற்றும் மின்சார ஸ்தாபனங்கள் அங்கீகாரம் பெற்றது.
- விலை குறைவானது
- தரம் உயர்ந்தது

ஆலிண்ட் ALIND KER-AL-LITE கேர்-அல்-லைட்

கட்டிட ஒயர்

அலுமினியம் இண்டஸ்ட்ரீஸ் லிட்., குண்டரா (கேரள ராஜ்யம்)

தொழிற்சாலைகள் : குண்டரா (கேரளா - ஹீராகுட் (ஒரிஸ்ஸா)

மானேஜிங் ஏஜண்டுகள் : சேஷசாயி பிரதர்ஸ் (திருவிதாங்கூர்) பிரைவேட் லிமிடெட்

சென்னை ராஜ்யத்திற்கு அங்கீகாரம் பெற்ற டீலர்கள் : AL-610

சௌத் பெட்ரும் ஏஜன்சீஸ் பிரைவேட் லிமிடெட், பஸி ஹவுஸ், தென்னூர், திருச்சிராப்பள்ளி

யூனியன் பாங்க் ஆப் இந்தியா லிமிடெட்

(ஸ்தாபிதம் : 1919)

தலைமைக் காரியாலயம் :

யூனியன் பாங்க் பில்டிங், அப்பாலோ தெரு, பம்பாய் - 1

சென்னைக் காரியாலயம் : 9, செம்புதாஸ் தெரு

எங்களுடைய கூட்டு சேமிப்புத் திட்டம் ஒவ்வொரு மாதமும் எளிய தவணையில் சேமிக்கக்கூடிய வாய்ப்பையளித்து, 4% கூட்டு வட்டி யளிக்கவும் செய்கிறது.

ஏ. எஸ். பிஜோர்
சென்னை ஏஜண்ட்

எப். கே. எப். நரிமன்
ஜெனரல் மானேஜர்



ஜாம்–பெக்
புண்ணான கால்களுக்கு இதமளித்து குணமூட்டுகிறது

கால்புண், கட்டிச் சிரங்கு, கொப்பளங்கள், தீப்புண் மற்றும் விஷ வெட்டுக் காயங்கள் இவை யாவும் உலகப் புகழ் பெற்ற ஜாம்-பெக் உபயோகித்த சில தினங்களில் குணமடைகின்றன. அது சருமத் துவாரங்களினூடே புகுந்து, கால் தசைகளுக்கு இதமூட்டி, புண்ணுவதைத் தடுக்கிறது. சகல குணங்களும் பொருந்திய ஜாம்-பெக்—மிருகக் கொழுப்பு மற்றும் எண்ணெய்கள் சேர்க்கப்படாதது என்பதற்கு உத்திரவாதம்.

அழகூட்டும் தன்மைவாய்ந்த எண்ணெய்ப் பசையற்ற ஜாம்-பெக் மெடிஸினல் க்ரீம் உபயோகியுங்கள்.

Zam-Buk



ஜாம்–பெக் மூலிகைக் களிம்பு மற்றும் மெடிஸினல் க்ரீம்

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

FZY-62-TAM

ஸி.இ. புல்போர்ட் (இந்) பிரைவேட் லிமிடெட், பம்பாய்

சோல் ஏஜண்டுகள் :

தாதா & கம்பெனி

86, நைனியப்ப நாயக் தெரு, சென்னை - 3

இருமல், மற்றும் ஜலதோஷத்திற்கு



சோல் ஏஜண்டுகள் :

ஹாமில்டன் டேவிஸ் & சன்ஸ்


தபால் பெட்டி 2085, பம்பாய்

ஸ்டாக்கிஸ்டுகள் :

தாதா & கம்பெனி

86, நைனியப்ப நாயக் தெரு
சென்னை - 3





ராமா

கூந்தல் வளர்க்கும் டானிக்

[illegible]

தயாரிப்பாளர்கள்: [illegible]



பரிசு

சாவி

சுந்தரேசன் மும்முரமாக ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். அவன் எதிரே மேஜை மேல் இரண்டு மூன்று 'பைல்கள்' விரிக்கப்பட்டுக் கிடந்தன. அவற்றைப் புரட்டிப் பார்த்தபடியே ஒரு கடிதம் தயார் செய்து கொண்டிருந்தான்.

அச்சமயம் யாரோ – சூட்டும், கோட்டும், டையுமாக நாகரிகமாக உடையுடுத்து, ஆஜானுபாகுவான தோற்றத்துடன்—அவன் அருகே வந்து நின்றான்.

"எக்ஸ்க்யூஸ் மீ! நீங்கள் தான் மிஸ்டர் சுந்தரேசனா?" என்று வந்தவன் கேட்டான்.

"ஆமாம், நீங்கள் யார்? என்ன வேண்டும்?"

"நான் கான்பூரிலுள்ள சுந்தர்லால் சந்தன்லால் கம்பெனியைச் சேர்ந்த..." என்று வந்தவன் முடிப்பதற்குள், "ஓ! அந்தக் கம்பெனியா? நல்ல சமயத்தில் வந்தீர்கள்......ஆமாம், உங்கள் கம்பெனி என்ன, நாங்கள் போட்ட அத்தனை கடிதங்களுக்கும் பதில் எழுதாமல்...கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு மேலாகிறதே" என்றான் சுந்தரேசன்.

"அது விஷயமாகப் பேசத்தான் வந்திருக்கிறேன்" என்று கூறிவிட்டு, சுற்றுமுற்றும் பார்த்தபடியே, சற்றுத் தாழ்ந்த குரலில், "நீங்கள் சற்று என்னோடு வெளியே வர முடியுமா? உங்களிடம் ஒரு முக்கிய விஷயம் சொல்ல வேண்டும்" என்றான் கம்பெனி ஆள்.

"முக்கிய விஷயம்" என்றதும் முகத்தைச் சுளித்துக் கொண்டான் சுந்தரேசன். "ஸார்! ஆபீஸ் விஷயமாகப் பேசத்தானே வந்திருக்கிறீர்கள்? எதுவானாலும் இங்கேயே பேசலாம். நான் வெளியே வரவேண்டிய அவசியமில்லை. நான் வரவும் மாட்டேன்" என்றான் கடுமையாக.

"மன்னிக்க வேண்டும். நான் சொல்ல வந்ததைச் சொல்ல ஏற்ற இடமல்ல இது. ஒரு ஐந்து நிமிஷம் எனக்காக நீங்கள் வந்தால் போதும்" என்றான் வந்தவன்.

அச்சமயம் குமாஸ்தாக்கள் அனைவருமே டிபன் சாப்பிடப் போயிருந்தபடியால் அவர்கள் பேசியது மற்றவர்கள் காதில் விழ நியாயமில்லை. இருந்தாலும் சுந்தரேசனுக்குக் கோபம் வந்தது.

"நீங்கள், தயவுசெய்து இவ்விடத்தை விட்டுப் போய் விடுங்கள். சொல்ல வேண்டிய எதையும் எங்கள் அதிகாரியிடம் தெரிவித்துக் கொள்ளுங்கள். எனக்கு முக்கிய வேலை யிருக்கிறது" என்று கூறி விட்டு, தான் இடையில் நிறுத்திய கடிதத்தைத் தொடர்ந்து எழுதத் தொடங்கினான் சுந்தரேசன்.

வந்தவன் இரண்டு, மூன்று நிமிஷங்கள் போகாமல் தயங்கினான். சுந்தரேசன் அதைக் கவனித்து விட்டு, "நீங்கள் ஏன் இன்னும் இங்கே நிற்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"நீங்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. நான் பிரமாதமாக ஒன்றும் சொல்ல வரவில்லை. நாங்கள் தரவேண்டிய பாக்கிப் பணத்துக்காக நீங்கள் மேல் கொண்டு கடிதங்கள் எழுதாமல் இருந்தால் அதற்காக......" என்று கூறி, கோட்டுப் பையிலிருந்த ஒரு காகித உறையை எடுத்தான்.

அவ்வளவுதான். ஆசனத்தை விட்டு எழுந்து விட்டான் சுந்தரேசன். "ஸார்! என்னோடு வாருங்கள். எங்கள் அதிகாரியிடம் போகலாம்" என்று படபடப்போடு கூறினான்.

வந்தவனின் முகத்தில் ஈயாடவில்லை. அசட்டுக் களை வீசியது. "ஹும்! நீங்கள் நல்ல 'மூடி'ல் இல்லை. நான் அப்புறம் வருகிறேன்" என்று புறப்பட்டுப் போனான்.

சுந்தரேசன் ஒரு ரயில்வே ஊழியன். 'வேலைக்கு உதவாது' என்று ஒதுக்கித் தள்ளப்படும் ரயில்வே சாமான்களை விற்பனை செய்யும் இலாகாவில் தலைமைக் குமாஸ்தா, நல்ல நாணயஸ்தன். தான் நாணயமாக இருந்ததோடு, தன்னோடு வேலை செய்பவர்களும் தாங்கள் விற்கும் சாமான்களோடு தங்கள் மனச்சாட்சியை

பரிசு என்ற பெயரில் எவ்வளவு கிடைத்தாலும் வாங்கிக் கொள்ளலாம்! ஆனால் அதையே லஞ்சம் என்ற பெயரில் வாங்க முடியுமா?

யும் விற்பனை செய்யாதவர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்தை உடையவன். அதனால் மற்றவர்களிடம் சிறிது கண்டிப் புடனேயே நடந்து கொள்ளுவான்.

"நல்ல வரும்படிக்கு சௌகரியமான இடம் விற்பனை இலாகா' என்று நிலவி வந்த கெட்ட பெயரை, சுந்தரேசன் தான் அந்தப் பிரிவுக்கு வந்ததிலிருந்து மாற்றப் பாடு பட்டான்; பலனும் கண்டான்.

சுந்தர்லால் சந்தன்லால் கம்பெனிக்குச் சுமார் 500 டன்கள் பழைய ரயில்வே தண்டவாளங்களை ரயிலில் அனுப்பிய போது, தவறாக ஐம்பது டன்கள் அதிகமாகவே இருந்துவிட்டன. அந்த உபரி எடைப் பொருளுக்கான கிரயம் பதினையாயிரம் ரூபாய்க்கு மேல் ரயில்வே இலாகாவுக்கு வரவேண்டியிருந்தது.

விற்பனை இலாகா வழக்கம்போல் கம்பெனிக்குக் கடிதங்கள் எழுதிய வண்ணம் இருந்தது. மாதங்கள் சென்றன. பணம் செலுத்த வேண்டிய கடைசித் தேதியைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தும், பணம் வரும் வழியாயில்லை.

கடைசியில் கம்பெனியின் பிரதிநிதியே நேரில் வந்தான்—பணம் செலுத்த அல்ல!

* * *

அநேகமாக எல்லோரும் டிபன் சாப்பிட்டு விட்டுப் போயிருந்தபடியால், அத்தனை கூட்டமில்லை. சுந்தரேசன் டிபனைச் சக்கைப்போடு போட்டுக்கொண்டிருந்தான். பசி, அதோடு சுந்தர்லால் கம்பெனியின் பிரதிநிதி மேல் இருந்த ஆத்திரம் வேறு! அவன் மனம் அந்த ஆசாமியைச் சுற்றியும், அவன் கூறியதைப் பற்றியுமே எண்ணமிட்டுக் கொண்டிருந்தது.

"அடுத்து என்ன 'ஆர்டர்' கொடுக்கலாம்?" முகத்தைத் தூக்கியவன் திடுக்கிட்டான். 'நினைத்த பிசாசு நெருங்கி வந்தது' என்பதுபோல், சாக்ஷாத் சுந்தர லால் சந்தன்லாலின் பிரதிநிதியே அவனை நோக்கி வந்து, அவன் அருகே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

"என்ன, டிபன் சாப்பிட்டாயிற்றா? காப்பியா, டீயா அடுத்து?" கேட்டது அந்தப் பிரதிநிதிதான்.

சுந்தரேசன் பதிலளிக்கவில்லை. அச் சமயம் அங்கு வந்த சர்வரிடம் காப்பிக்குச் சொல்லிவிட்டு, கைகழுவக் குழாயடிக்குச்சென்றான். கம்பெனிக்காரன் வராமல் இருந்திருந்தால் இன்னும் ஏதாவது வயிற்றுக்குச் சாப்பிட்டிருப்பான். 'உடனே இவ்விடத்தை விட்டுப் போய் விட வேண்டும்' என்று அவனுக்குத் தோன்றிவிட்ட பிறகு எப்படிச் சாப்பிட மனம் வரும்?

காப்பி வந்தது. அவசரம் அவசரமாக அதை உள்ளே தள்ளினான். "ஸார்! எதற்கு இப்படி அவசரப்படுகிறீர்கள்? எனக்காகவா?" என்று கூறிச் சிரித்தான் புதியவன். சுந்தரேசன் நிதானித்துக் கொண்டான்.

"மிஸ்டர் சுந்தரேசன்! எதற்கும் இன்னொரு முறை சொல்கிறேன். நான் உங்களைச் செய்யச் சொன்னது ஆபத்தான காரியமே இல்லை. சம்பந்தப்பட்ட 'பைலை' எடுக்காமல் இருந்தால் ஒருவரும் கண்டு பிடித்துவிடப் போவதில்லை. அப்படியே யாராவது தேடிப் பிடித்தாலும் 'மறதி சகஜம்' என்று மன்னிப்பு வாங்குவது சுலபம்" என்றான்.

"'பைலை நான் மறைக்கலாம். மனச் சாட்சியை என்னால் மறைக்க முடியாது. நான் யார் என்று ஆபீஸில் விசாரித்துப் பாருங்கள்" என்று கடகடச் சொல்லி விட்டு, ஆபீஸுக்கு வேகமாகத் திரும்பினான் சுந்தரேசன்.

அவன் கால்களை விட அவன் மனம் படு வேகமாக வேலை செய்தது.

தன் ஆசனத்தில் உட்கார்ந்ததும், உட்காராததுமாக, பழைய வேலையைக் கூடத் தொடாமல், 'சுந்தர்லால்' பைலை எடுத்துக் காரசாரமாகக் கடிதம் ஒன்று எழுதினான்.

'இன்னும் பதினைந்து நாட்களுக்குள் பாக்கித் தொகையைக் கட்டாவிட்டால், சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப் படும்' என்ற 'கடைசி பாண'த்தைத் தொடுத்து விரித்து தள்ளினான். உடனே 'டைப்பிஸ்ட்'டிடம் கொடுத்து, கடிதத்தை 'டைப்' செய்து, அதிகாரியின் கையெழுத்துக்கு அனுப்பி விட்டுத்தான் மூச்சு விட்டான்.

வருக! திருவண்ணாமலையில் வருக!!
1959 ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி சனிக்கிழமை சுதந்திர நாளில்
ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் பெரு விழா
திருப்புகழ் தேவார, பிரபந்த கோஷ்டிகள் வருகையை வேண்டுகிறோம்
குழுவினர்: 54, பந்தர் தெரு, சென்னை-1



கவனிக்கவும்
சத்வைத்திய சாலை (மெடிக்கல்) லிமிட், கஞ்சன்கூடு
ஆயுர்வேத வித்வான் B.V.பண்டிட் அவர்களின்
காஸ்மஸ்
கர்ஜன்

பாலக்ஸ்
சிஹராக்
சோல் ஏஜண்டுகள்: யுனைடெட் கம்பெனி, 54, பந்தர் தெரு, சென்னை-1 (மதுரை, கோவை, பம்பாய்-18)



"ஸார்! ஜாக்ஸன் துரை உங்களைக் கூப்பிடுகிறார்" என்று மறுநாள் 'ப்யூன்' வந்து கூப்பிட்டபோது, சுந்தரேசனுக்குச் சற்று அதிசயமாகத்தான் இருந்தது. சாதாரணமாக ஜாக்ஸன் ஒருவரையுமே கூப்பிடும் வழக்கம் இல்லை. கூப்பிட்டால் ஏதாவது விசேஷம் இருக்கும்.

முகத்தைத் துடைத்துக் கொண்டு, ஆடைகளைச் சரி செய்து கொண்டு, 'ப்யூனை'ப் பின் தொடர்ந்து, அதிகாரியின் அறைக்குச் சென்றான்.

உள்ளே நுழைந்தவனைப் புன்னகையோடு வரவேற்றார் துரை "மிஸ்டர் சுந்தரேசன்! இது நீங்கள் தயாரித்த கடிதந்தானா?" என்று ஒரு 'பைலை' நீட்டிக் கேட்டார்.

அதை வாங்கிப் பார்த்த சுந்தரேசன், "ஆமாம், ஸார்!" என்று தலையை ஆட்டினான். சுந்தர்லால் சந்தன்லால் 'பைல்'தான் அது!

"இந்தக் கடிதம் அவசியந்தானா?" இது அவருடைய அடுத்த கேள்வி. அவன் சற்றே திகைத்துப் போனான். 'ஜாக்ஸனா இப்படிக் கேட்கிறார்?' சமாளித்துக் கொண்டு, பணிவோடு பதிலளித்தான் "ஆறு மாதங்கள் நாம் பொறுத்ததே அதிகம் என்று நினைக்கிறேன். தவிர......"

முதல் நாள் நடந்ததைச் சொல்ல எண்ணினான். ஆனால் ஜாக்ஸன் மேலே பேச விடவில்லை. "அதற்குச் சொல்லவில்லை, சுந்தரேசன்!" என்று சொல்லியபடியே, மேஜை டிராயரைத் திறந்து எதையோ எடுத்தார். ஒரு 'செக்!' 'ஆ' என்று கூவி விடாது சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான் சுந்தரேசன். 'ஜாக்ஸனுமா இவ்வளவுதானா?' என்ற கசப்பான எண்ணம் தோன்றியது.

'செக்'கோடு, ஒரு கடிதத்தையும் எடுத்தார் அதிகாரி. "படியுங்கள். கடிதத்தைப் படியுங்கள்" என்று கூறி, அவற்றை அவனிடம் கொடுத்தார். நடுங்கும் கைகளோடு வாங்கினான் கடிதத்தைப் படித்தான்.

"......இத்துடன் பாக்கித் தொகைக்கான 'செக்' அனுப்பியிருக்கிறோம். பெற்றுக் கொண்டு ரசீது அனுப்பக் கோருகிறோம். தாமதத்துக்கு மன்னிக்கவும்......"

கடிதமும், 'செக்'கும் அவனையும் மீறிக் கொண்டு கையை விட்டு நழுவின. 'அடடா! எத்தனை அவசரப்பட்டு விட்டோம், அதிகாரியைப் பற்றி' என்று எண்ணியவன், '......அப்படியானால் கம்பெனியின் பிரதிநிதி நேற்று நம்மிடம் சொன்னதெல்லாம் என்ன?' என்ற நினைவினால் குழம்பினான்.

அவன் மனத்தில் நடந்ததை அறிந்தவர் போல் ஜாக்ஸன் புன்னகை புரிந்தார்.

"என்ன சுந்தரேசன்! அவர்கள்தான் பணம் அனுப்பி விட்டார்களே. இனி ரசீது அனுப்பினால் போதுமல்லவா?" என்று கேட்டார்.

"உண்மைதான் ஸார்!" என்று கூறிவிட்டு, 'பைலை'யும், கடிதத்தையும் 'செக்'கையும் எடுத்துக் கொண்டு, அறையை விட்டுப் புறப்படப்போனான்.

"நில்லுங்கள், சுந்தரேசன்! மனத்திலிருக்கும் சந்தேகத்தைக் கேட்காமல் போகிறீர்களே" என்று ஜாக்ஸன் கூறிய போது, சுந்தரேசன் திடுக்கிட்டுத் திரும்பினான்

அவனிடம் ஒரு பத்து ரூபாய் நோட்டை நீட்டினார் ஜாக்ஸன். "பெற்றுக் கொள்ளுங்கள், சுந்தரேசன்! உங்கள் நாணயத்துக்கு நான் அளிக்கும் பரிசு. நேற்று உங்களிடம் வந்த சுந்தர்லாலின் பிரதிநிதியை உங்களுக்கு லஞ்சம் கொடுக்கும்படி தூண்டியது நான்தான். அவர்மூலம் உங்களைச் சோதிக்கத்தான் அப்படிச் செய்தேன். உங்களுக்கு வினாவிருக்கிறதா? சில நாட்களுக்கு முன் நீங்கள் ஆபீசில் ஒருவருடன் உங்கள் நாணயத்தைப் பற்றிப் பெருமையடித்துக் கொண்டீர்களே? அதைச் சோதித்துப் பார்க்கவே இந்த நாடகம் நடத்தினேன். சிலரைப் போல் பேச்சு ஒன்றும் செயல் ஒன்றுமாக நீங்களும் இருப்பீர்களோ என்று சந்தேகப்பட்டேன். ஆனால் உங்கள் நடத்தையினால் இந்த இலாக்காவுக்கே நல்ல பெயர் வாங்கிக் கொடுத்து விட்டீர்கள். உங்கள் நாணயத்தைப்பற்றி நீங்கள் பெருமை கொண்டதில் தவறே இல்லை சுந்தரேசன். உங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்" என்றார் மேலதிகாரி ஜாக்ஸன் துரை.

பத்து ரூபாயை இரண்டு கைகளாலும் வாங்கிக் கொண்ட சுந்தரேசன், "என் மனப்பூர்வமான நன்றி, ஸார்!" என்று கூறிவிட்டு வெளியே வந்தான்.

நாணயம் கெட்ட செய்கைக்காக வாங்கும் ஆயிரக்கணக்கான ரூபாய்களை விட, நாணயமான செய்கைக்காகக் கிடைத்த இந்தப் பத்து ரூபாய்ப் பரிசு பன்மடங்கு உயர்ந்தது என்று அவன் உள்ளம் பெருமிதத்தோடு எடை போட்டது.



மதுரை 'ரோடரி' சங்கத்தின் பொதுப்பணி

சமீப காலமாக மதுரை 'ரோடரி' சங்கத்து நிர்வாகிகள் நல்ல காரியங்களை எங்கே? எங்கே? என்று தேடிப் பிடித்து நிறைவேற்றுவ தென்று சங்கல்பம் செய்து கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. இல்லையானால் ஏழைப் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடச் சம்பள உதவி, உணவு உதவி, பரிசளித்தல், — என்று இப்படி ஒவ்வொரு நல்ல காரியமாக அடுத்தடுத்துச் செய்து கொண்டு போக முடியுமா?

நல்லகாரியங் களுக்கெல்லாம் சிகரமான ஒரு நல்ல காரியத்தை அண்மையில் மதுரைக்கு அருகிலுள்ள இரும்பாடி கிராமத்தில் அவர்கள் செய்தார்கள். சுற்றுப் புறத்துக் கிராமங்களும், சர்க்காரும் செய்கிற பண உதவியோடு ரோடரி சங்கத்திலிருந்து பத்தாயிரம் ரூபாய் அளித்து மேற்படி கிராமத்தில் ஒரு தாய்சேய் நல மருத்துவ விடுதி உருவாவதற்கு அஸ்திவார மிட்டார்கள்

ரோடரி கவர்னர் திரு டி. எஸ். ராஜம் அவர்கள் இந்த அஸ்திவாரக் கல்நாட்டு விழாவை நடத்தினார்கள். வைகை நதிக் கரையில் மேலக்கால் பகுதியிலுள்ள சிறு சிறு கிராமங்களுக்கு இந்தத் தாய்சேய் நல விடுதி பயன்படும். ரோடரி சங்கமென்றால் இதுவரை செல்வந்தர்களுக்கும் நகர்ப்புறத்து மக்களுக்குமே அதன் பெருமை ஓரளவு தெரிந்திருந்தது. இப்போது மதுரை ரோடரி சங்கத்தினர் தங்கள் தாராள மனப்பான்மையால் கிராமங்களிலும் புகழ் பெறத் தொடங்கி விட்டார்கள்

மதுரை ரோடரி சங்கத் தலைவர் திரு எல். நாராயணன் செட்டியார் பண்பில் எவ்வளவுக்கெவ்வளவு அடக்கமானவரோ, அவ்வளவுக்குச் செயலில் வீரர். சதாகாலமும் சிரித்த முகத்தோடு மனத்துக்குள் ஏதாவதொரு நல்ல காரியத்துக்குத் திட்டமிட்டுக் கொண்டே இருப்பார். தலைவரைப் போலவே பொதுக் காரியங்களில் ஆர்வத்தோடு பணி புரியும் திரு வி. எஸ். ரங்கராஜன் ரோடரி சங்கத்தின் செயலாளராக வாய்த்தது சங்கத்துக்குப் பாக்கியம்தான். இரும்பாடி கிராமத்தில் மேற்படி நல்ல காரியம் நடைபெறுவதற்குத் தூண்டுதலா யிருந்தவர் மதுரைப் பிரமுகரும் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதியுமான திரு எஸ். ரங்கசாமி நாயுடு அவர்கள் ஆவார்கள்.


மேற்படி விழாவில் மதுரை-இராமநாதபுரம் வர்த்தக சபை (சேம்பர் ஆப் காமர்ஸ்) துணைத்தலைவர் திரு கங்காராம் துரைராஜ் அவர்கள் ஒரு அருமையான பிரசங்கத்தை நிகழ்த்தி எல்லோரையும் ஆச்சரியத்தில் மூழ்கச் செய்தார்கள். அரசாங்கப் பிரதிநிதியாகிய வட்டார வளர்ச்சி அதிகாரி திரு முத்துசாமி அவர்களும் பேசினார்.

பொதுவாக நல்ல காரியத்தைப் பறந்து ஓடி வந்து செய்கிறவர்கள் இந்த நாளில் அருமை. அப்படியிருக்க இந்த நல்ல காரியத்தைச் செய்வதற்காகப் பெங்களூரிலிருந்து பறந்து வந்தார் ரோடரி கவர்னர் திரு டி. எஸ். ராஜம் அவர்கள். அதாவது விமானத்தில் அவசரமாக வந்ததைக் குறிப்பிடுகிறேன். ரோடரி என்றால் பெரிய மனிதர்கள் ஒன்றுகூடி விருந்து சாப்பிடுவது மட்டுமல்ல என்று நிரூபித்ததோடன்றி நல்ல வேலைகள் எங்கிருந்தாலும் தேடிப் பிடித்து நிறைவேற்றுவதோடு பொதுப் பணிகளிலும் கலந்து சேவை புரியும் மதுரை ரோடரி சங்கத்தினரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

உலகச் சாம்பியன்கள் தேர்ந்தெடுப்பது


பயர்ஸ்டோன்

....நீங்களும் அதையே தேர்ந்தெடுங்கள்



'இண்டியானு பொலிஸ்'ல் நடைபெற்ற உலகப்பிரசித்தி பெற்ற 500 மைல் ஓட்டப் பந்தயத்தில், மோட்டார் ஓட்டிகளுக்குக் கடுஞ்சோதனையாக வாய்ந்த பந்தயப் பாதையிலே, கடுமையான அதிர்ச்சிகளுக்கும், அபாயகரமான நெளிவு சுளுவுகளுக்கும், உராய்தலுக்கும் ஈடு கொடுத்து மணிக்கு 180 மைல் வேகத்துடன் ஓடி வெற்றிபெற தனக்கு உதவிய பயர்ஸ்டோன் டயர்களை ஜிம்மி ப்ரையன் பெரிதும் பாராட்டினார்.

உங்களுக்கும் அத்தகைய பாதுகாப்பையும் நம்பிக்கையையும் அளிப்பது பயர்ஸ்டோன் டயர்கள். ஏனெனில், உங்கள் மோட்டாருக்கான டயர்களின் தயாரிப்பிலும், ஓட்டப் பந்தய டயர்களிலுள்ள அதே பாதுகாப்பு தரும் அம்சங்கள் பொருந்தியிருக்கின்றன. பயர்ஸ்டோன் அளிக்கும் சிறந்த பாதுகாப்பு செயலில் நிரூபிக்கப்பட்டது.



Firestone

பயர்ஸ்டோன்

நியூ டீலக்ஸ் சாம்பியன்

ட்யூப் இல்லாதது அல்லது ட்யூப் உள்ளது

பூச்சிப் பத்திரிகை

கொசுத் தலைவி படுகொலை!




என்றும் அச்சமயம் மறைவிலிருந்த ப்ளிட் ஆயுதபாணி திடீரெனத் தாக்கி அவரைப் படு காயப்படுத்தினன் என்றும் தெரிய வருகிறது. அனோபிலிஸ் அம்மையார் ஸ்தலத்திலேயே மரண மடைந்தார்.



ப்ளிட் ஆயுதபாணியின் கோழைத்தனமான தாக்குதல்

காலையில் மலேரியா
சென்ற ஞாயிற்றுக்கிழமை திருமதி அனோபிலிஸ் அம்
கொசுக் கட்சியின் தலைவி
செய்யப்பட்டார்.
மையார் படுகொலை என்றையும்போல் மனித
சம்பவ தினத்தன்று அவர் படுக்கையறை
ரத்தபானத்தை முடித்துக்கொண்டு கொண்டிருந்தார்கள்
வீதியில் உலாவச்சென்று



ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பெற்றது)

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

112. மூலத்திற்குச் சித்தர் முறைகள்

சித்தர் நூல்களிலிருந்தும் உள்ளுக்குக் கொடுக்கவும் மேலுக்கு உபநாஹமாகக் கட்டவும் உபயோகிக்கக் கூடிய சில அரிய முறைகள் கிடைக்கின்றன.

இப்பிரயோகங்களைப் பார்க்கும்பொழுது ஒரு புதிய யோசனையும் தோன்றுகிறது.

அதிஸாரம்—(டயாரியா) என்று சில காலம் சிகிச்சிப்பர். பிறகு, இல்லே, இது சீதபேதி [டிஸெண்டரி] அதிலும் அமீபிக் டிஸண்டரி என்று மற்றுஞ் சிலகாலம் சிகிச்சிப்பர். இப்படியே கோலேடிஸ், க்ரானிக் கோலேடிஸ், அமீபியாஸிஸ்-க்ரானிக் அமீபியாஸிஸ் என்று பற்பல பெயர்கள் சூட்டி அதற்குமுள்ள சிகிச்சைகளைச் செய்துவருவர். இவ்வளவுக்கும் குணமாகாது. இப்படிப் பல வியாதிகளைப் போலக் கண்ணாமூச்சி காட்டக் கூடியது இந்த மூலவியாதி ஒன்றுதான். ஆகவே மேற்சொன்ன விதமான பரிப்ரமம் ஏற்படும்போது "பல்லைப் பிடுங்கிக் கொள்." என்பது போல் எதையோ சொல்லித் தன் பொறுப்பைக் கழித்துக் கொள்ள முயற்சிசெய்யும் முன்பு, மூலம் இருக்கிறதா என்று பார்க்கவோ அல்லது பரிக்ஷித்தறியும்படி சொல்லவோ மறவாமலிருக்க வேண்டும். அவ்வளவு தான். இதற்கு வசதி இல்லாத நிலேயிலோ...? அதிஸாரம், கிரஹிணி, சீதபேதி, வயிற்றுக்கடுப்பு முதலியவைகளுக்கும் ஒருகால் மூலவியாதியே ஆனாலும் அதற்கும் ஹிதகரமாயிருக்கக் கூடிய ஒன்றிரண்டு முறைகள் சித்தர் நூல்களின் வாயிலாகக் கிடைப்பது குறிப்பிடத் தக்கது.

அத்திப்பழமிருக்கிறதே! தேனில் பதம் பண்ணியது வற்றல் போலக் கடையில் விற்கிறார்கள். தினம் இரவு படுக்கப் போகுமுன் இதில் ஒரு பழத்தைச் சாப்பிட்டு ஒருவாய் பாலும் சாப்பிட்டுப் படுத்தால், உள்வறட்சி தீரும். குடல் அழற்சி குணமாகும். தாராளமாக மலம் இளகித் தினந்தோறும் சோதனையுண்டாகும். மூலவியாதி எப்படிவரும்?

அல்லது குடல் அழற்சி காரணமாக அடிக்கடியும் வெளிக்குப் போகலாமே! வயிற்றுக் கடுப்புப் போலவும் இருக்கும். இத்துடன் தோஷமை பூண்டோ அல்லது தூணைக்காரணமாகவோ மூலவியாதியும் இருக்குமானல் அத்திப்பழத்தைச் சாப்பிட்டு ஏற்கனவே உள்ள வயிற்றுக் கடுப்பையும் வயிற்றுப் போக்கையும் அதிகப் படுத்திக் கொள்வதா என்று கேட்கிறீர்களா?

வேண்டாம், ஐயா! வயிற்றுக் கடுப்பாக இருந்தால், அதுவும் குணமாக வேண்டும், உடன் உள்ள மூல வியாதியும் சமனமாகவேணும். அப்படிப்பட்டது "அத்திப் பிஞ்சு" — இதைக் கறி செய்து 2, 3 தினங்களுக்கொரு முறை ஆகாரத்தில் கூட்டிவந்தால் போதும். அல்லது வேறு சில மருந்துகளுடன் கஷாயமாக வைத்தும் குடிக்கலாம்.

"மூலக் கிராணியும், மூலரத்தந் தீரும்
சூலக் கடுப்பும் தீர்க்குமே!......
....
அத்திச் சிறுபிஞ்சு சருந்து"

என்று அகத்தியர் அருளுகிறார். பிற்கால [வைத்திய] பண்டிதர்களுக்கு, இலக்கியத்திலோ பலவித ரஸம் பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்தோடும். இவர்

"[1]ஆனைக் கன்றிலொரு பிடியு
[2]அசுரன் விரோதி இளம் பிஞ்சும்
[3]கானக்குதிரைப் புறத்தோலும்
[4]காளிக்கொடியை மாற்றினதும்
[5]நாலைத் தாய்கோல் சலத்துடனே
தகவா எட்டொன்றுக் கொன்றி
....
தமிழும் வடுகும் குணமாமே..."

என்கிறார்.

இதில் (1) அத்திப் பிஞ்சு (2) வேலம் பிஞ்சு (3) மாம்பட்டை (4) சிறு செருப்படை (5) வாழைப் பூவின் சாறு [இவற்றை மாறு பெயரிட்டழைத்துள்ள திறனை என்னென்பது!] இவற்றில் முதல் நாலும் சம எடை. வாழைப் பூவின் சாற்றில் எட்டிலொன்றாகக் காய்ச்சிய கஷாயத்தைக் குடித்தால் "தமிழும் வடுகும் குணமாகும்" அதாவது தமிழில் "வயிறு" இதைத் தெலுங்கில் "கடுப்பு" என்பர். தமிழும் வடுகும் என்பது "வயிறு கடுப்பு". இதை மேலே குறிப்பிட்ட "கண்ணாமூச்சி" நிலையில் கொடுத்தாலும் கட்டாயம் குணமுண்டாகும்.

இலந்தையின் இலையை அரைத்துப் புளித்த மோரில் கலக்கிக் குடிக்க எரு வாய்க் கடுப்பு - குணமாகும்.

எள்ளை அரைத்தெடுத்த விழுது ஒரு கண்டை யளவை வெண்ணெயுடன் கலந்து சாப்பிட "குருதி மூலம் குணமாகும்".

கொட்டைக் கரந்தையின் வேர்ப் பட்டையை அரைத்து வெண்ணெயிற் கலந்து கொடுக்க "குரு எரு மூலை போம்."

காட்டுக்கருணைக் [இதைச் சிலர் பிடிக் கருணை என்பர்] கிழங்கைச் சமைத்து அடிக்கடி ஏற்றுவந்தால் "தேகமதில் மூலமுளை சேராதே...." என்று அகத்தியர் குணபாடத்தில் தெரிவிக்கிறார்.

வந்துள்ள மூலத்தை வேரறுக்க விரும்பினால் சஸ்திர சிகிச்சை செய்வதுதான் சிறந்தது. வளர்ந்து வந்துள்ள முளைகளைக்கிள்ளி எறிவதுதான் விரும்பத் தக்கது என்பதில் அபிப்பிராய பேதமிருக்க நியாயமில்லை. ஆனால் சிலருக்குச் சஸ்திர சிகிச்சை செய்யமுடியாதென்றும் ஏற்படலாம். வயதானவர், வேறு வியாதியினால் பலஹீனப்பட்டவர், கர்ப்பிணிகள், பிரமேஹம் உள்ளவர் — இப்படிப்பட்டவருக்கு எப்படிச் சஸ்திர சிகிச்சை செய்ய முடியும்? அவர்களுக்கெல்லாந்தான் சமனமாக மேலே இது வரையில் தெரிவித்த மருந்துகளையும் ஆகாராதிகளையும் உபயோகிக்க வேண்டும். மேலும், மிகவும் அதிகமாக ரத்தப்போக்குள்ள மூலத்தில் குடாரிஷ்டத்தையும், பொதுவாக எல்லாவித மூலரோகிகளும் அபயாரிஷ்டத்தையும் சாப்பிட்டு வருவது நல்லது.

உடனடியாகச் சஸ்திர சிகிச்சை செய்ய முடியாத ஒரு நிலையும் மூல வியாதியில் ஏற்படுவதுண்டு. வெளிமூலம் உள்ளவருக்கு சில தாற்காலிக அபத்தியங்கள் காரணமாக, வெளிப்புறமுள்ள முளைகள் அழற்சியுற்று வீங்கிப்புடைத்து குத்தல் வலியுடன் ரத்தக்கசிவும் ஜுரமும்கூட ஏற்படுவதுண்டு. இந் நிலையில்தான் நோயாளி முன்னொரு கட்டுரையில் விளக்கியதுபோல் நாற்காலியில் நின்று தவம்புரியும் அவஸ்தையிலிருப்பான். வெளிப்புறமுள்ள முளைகளின் அழற்சி குணமானால்தான் சஸ்திர சிகிச்சை செய்ய முடியும். சும்மா இருக்கும் போதே ரத்தக்கசிவு உள்ள முளைகளைத் தொட்டால் என்னவாகும்? கத்தியால் அறுப்பதானால் இன்னும் என்னவாகுமென்று சொல்லவும் வேணுமா? இந் நிலை உடனடியாகச் சஸ்திர சிகிச்சை செய்ய முடியாது. வெளிப்புறமுள்ள முளைகளின் அழற்சி நீங்குவதற்கான சிகிச்சையைத்தான் முதலில் செய்யவேணும்.

முள்ளங்கிக் கிழங்கைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி உலர்த்திவைத்திருக்கவும். இதில் சிலவற்றைப் பாலில் வேகவைத்து அம்மியில் வெண்ணெய்போல் அரைத்துப் பாலிலேயே களிபோல் கிண்டிக் கொள்ளவும். பொறுக்குஞ் சூடுள்ள போது இதனால் அழற்சியுற்ற வெளிப்புற மூலமுளைகளுக்குச் சிறிது நேரம் ஒத்தடங் கொடுத்து, பிறகு அக்களியை அம் முளைகள்மேலேயே வைத்து ஆமணக்கின் இலையால் பொதிந்து பஞ்சு வைத்துக் கட்டவும். ஒன்றிரண்டு வேளையில் அழற்சி எல்லாம் குறைந்து வீக்கம் வடிந்து வலிநீங்கி முளைகளும் கனிசமாகச் சுருங்கிவிடும். பிறகு சஸ்திர சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யலாமே!

இவ்வகையிலும் சித்தர்களின் நூல்கள் மூலம் நமக்குச் சில அரிய முறைகள் கிடைக்கின்றன.

கண்டங்கத்திரி என்னும் முட்செடியின் பூவை வாதுமை நெய்யில் சேர்த்துக் காய்ச்சி மேலுக்குப் பூச எருவாய் முளைகளைப் போக்கும்.

கம்பரிசிச் சோற்றை எருமைத் தயிர் கூட்டிப்பிசைந்து முளை மூலத்திற்குக் கட்டிவர முளைகளின் அழற்சி வீக்கம் ஆகியவை நீங்கி, முளைகளும் சுருங்கிவிடும்.

கொட்டைக்கரந்தையின் வேர் மேல்ப் பட்டையை அரைத்து வெண்ணெயுடன் கலந்து மேலுக்குப் பூசினால் மேற்சொன்ன பலன் கிடைக்கும்.

பொற்றலைக் கையாந்தகரை (மஞ்சள் பூ பூக்கும் கரிசலாங்கண்ணி) யின் இலையை ஆய்ந்தெடுத்து ஒன்றிரண்டாக இடித்துக் கொண்டு ஜலத்திலிட்டுக் கொதிப்பிக்கவும். கொதிக்கத் தொடங்கியதும் அடுப்பிலிருந்து பாத்திரத்தை இறக்கி வைத்து அதிலிருந்து வரும் ஆவியை மூல முளைகளின் மேல் படும்படி கொள்ளவும். ஆவி படும்போது பொறுக்கும் அளவிற்கு உசிதமான சூடு இருந்தால் போதும். அதிகம் சூடு கொடுத்துப் பொள்ளிப்போக விடக்கூடாது. இவ்விதமான பாஷ்ப (ஆவி) ஸ்வேதத்தினால் அழற்சி வீக்கம் ஆகியவை உடனே குறையும். மூல முளைகளும் சுருங்கிப் போகும்.

இவ்வுபாயங்களில் ஒன்றைக் கையாண்டு வெளிப்புற முளைகளின் அழற்சியைப் போக்கிக்கொண்டு பிறகு ஆவன செய்யலாமல்லவா?

அழகியும் விலங்கும்

ஒரே ஒரு காலத்திலே.........மிருகமொன்று ஒரு அழகிய பெண்மீது காதல் கொண்டது. மிருகம் பார்வைக்கு மிகக் கோரமாக இருந்தபோதிலும் இனிமையான குணமுடையதாக விருந்தது. பெண்ணும் பதிலுக்கு மிருகத்தைக் காதலித்தாள் என்பது பார்ப்பவர்கள் எல்லோருக்குமே தெரிந்தது.

ஆனால் பெண்ணின் தாய்க்கு மட்டும் வெகு துக்கம். மனம் வெதும்பி "போயும், போயும் ஒரு மிருகமா எனக்கு மாப்பிள்ளையாக வாய்க்கவேண்டும்" என்று குமுறி அழுதாள் அவள்.

"அழாதே, அழாதே" என்று ஆறுதல் கூறினான் அவள் கணவன்.

"ஆமாம், ஆமாம், இதைத் தவிர உங்களுக்கு வேறு என்ன சொல்லத் தெரியும். ஒன்றுக்கும் உதவாத மனிதர் நீங்கள்" என்று சீறினாள் அவள்.

இது நடந்ததும், மிருகம் உடனே சென்று பாரிஸ் மிட்டாய்கள் நிறைந்த ஒரு அழகான டின்னை வாங்கி பெண்ணின் தாயிடம் கொடுத்தது. ஒவ்வொன்றாக சுவைத்து, கடைசி மிட்டாயை அன்று மாலை சாப்பிட்டு முடித்தவுடன், அவள் தன் கணவன் பக்கம் திரும்பி, தான் என்னவோ நினைத்தேன். இந்த மிருகத்திற்கு நல்ல ருசியும் ரசனையும் உண்டு என்று இப்போதுதான் தெரிகிறது" என்றாள்.

விஷயத்தை புரிந்து கொண்ட அவள் கணவன் புன்னகையுடன் தலையை அசைத்தான்.



நீதி: எவரையும் திருப்திசெய்யும் பரிசு -

பாரிஸ் மிட்டாய்

Parry's



பாரிஸ் மிட்டாய்கள் நிறைந்த ருசியும், தூய்மையும் கொண்டவை. இவற்றை உங்கள் இஷ்டப்படி சில்லறையாகவோ, அல்லது கண்கவர் மோஸ்தர்களில் அமைத்துள்ள அழகான டின்களிலோ வாங்கலாம். விலை ரூ. 1.75 லிருந்து ரூ. 5.00 வரை.

தயாரிப்போர்: பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், மதராஸ்

சிங்கபுரத்துச் சிங்கப் பிரான்

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

மகாவிஷ்ணு எடுத்த தச அவதாரத்தில் நரசிம்ம அவதாரம் ஒன்று. மற்ற அவதாரங்களைவிடப் பார்ப்பவர் உள்ளங்களில் அச்சத்தை விளைவிக்கும் பயங்கரமான அவதாரம் அது. பாதி மனித உடலும் பாதி சிங்க உடலுமாக இருக்கும் உருவம் ஆதலால் பார்ப்பதற்கே அஞ்சுவோம் நாம்; உபாசிப்பதற்கோ துணிவு வராது நமக்கு. பக்தன் பிரகலாதனுக்காக, இரணியனைச் சம்ஹரிக்கத் தூணைப் பிளந்துகொண்டு உதித்த மூர்த்தி. இரணியன் உடலைக் கிழித்து உதிரம் குடிக்கும் நிலையில் காண்போர் அஞ்சி நிலைகுலைவதில் அதிசயம் இல்லைதானே? "ஊன் கொண்டவன் உகிரால் இரணியனை உடல் கிழித்த" நரசிம்மன் அவதாரத்தை, கவிச்சக்கரவர்த்தி கம்பன் மிகவும் அழகாகச் சொல்கிறான். பேரண்டம் முழுவதும் வியாபித்து இருக்கும் பரம்பொருள் தொட்ட தொட்ட இடமெல்லாம் தோன்றுவான் என்கிறான் பிரகலாதன். அதைக் கேட்டு ஏளனமாகச் சிரித்துவிட்டு "இந்தத் தூணில் இருக்கிறானா?" என்று கேட்கிறான் இரணியன். "இந்தத் தூணில் மாத்திரம் என்ன, நீ சொல்கிறாயே, 'கடவுளாவது தெய்வமாவது என்று', அந்தச் சொல்லில் கூட அவன் இருக்கிறானே' என்று வாதாடுகிறான் பிரகலாதன். இந்த நிலையில் தூணை எற்றுகிறான் இரணியன். தூணில் பிறக்கிறான் நரசிம்மன். கம்பன் சொல்கிறான் அதை:

> நசை பிறந்து இலங்கப் பொங்கி
> நன்று நன்று என்ன நக்கு,
>
> விசை பிறந்து உருமு வீழ்ந்தது
> என்ன ஓர் தூணின், வென்றி
>
> இசை திறந்து அமர்ந்த கையால்
> எற்றினன் ; எற்றலோடும்
>
> திசை திறந்து அண்டம் கீறி
> சிரித்தது செங்கட் சீயம்

செங்கட்சீயம் சிரித்த காட்சியே இத்தனை பயங்கரம் என்றால் சீறி எழுகின்ற சிங்கப் பிரானது திருவுருவம் எவ்வளவு பயங்கரமாக இருக்கும் என்று தெரிந்துகொள்ளலாம் அல்லவா?

யோக நரசிம்மர்



இறைவனுடைய சக்தி பூமியோடு மட்டும் நிற்பதல்ல, வான் முகடு முழுவதும், எட்டுத் திசைகளையும் தொட்டு நிற்கும் என்ற உண்மையைத் தானே இந்த மூர்த்தம் விளக்குகிறது. இந்த மூர்த்தி பயங்கர உருவத்தில் தான் இருக்க வேண்டுமா? சாந்தமூர்த்தியாக இருத்தல் கூடாதா என்று எண்ணியிருக்கிறார்கள் கலைஞர்கள். ஆதலால் நரசிம்மனது மடியிலே லக்ஷ்மியை இருத்தி லக்ஷ்மி நரசிம்மனைக் கண்டிருக்கிறார்கள். யோக நிலையில் இருந்து மக்களுக்கு எப்போதும் அருள் புரிபவனைக் கற்பனை பண்ணி யோக நரசிம்மனை சிருஷ்டி பண்ணியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சாந்த நிலையிலே யோக நரசிம்மன், கோயில் கொண்டிருக்கும் இடந்தான் சோழசிங்கபுரம் என்னும் சோளங்கிபுரம். ஆங்கிலத்தில் சோளிங்கர் என்ற பெயரோடு, வட ஆற்காடு மாவட்டத்திலே திருத்தணிகைக்கு மேற்கே இருபது மைல் தூரத்திலே இருக்கும் ஒரு பெரிய ஊர் அது.

இச்சோழசிங்கபுரம் அன்று கடிகாசலம் என்ற பெயரோடு விளங்கியிருக்கிறது. கடிகை என்றால் வடமொழியில் ஒரு நாழிகை என்று பொருள். இந்த ஸ்தலத்தில் ஒரு நாழிகை நேரம் தங்கியிருந்து அங்குள்ள யோக நரசிம்மனைக் கண்டு வணங்கினால், முக்தி பெறலாம் என்பதன் காரணமாகவே, இத் திருப்பதி கடிகை என்று பெயர் பெற்றிருக்கிறது.




நரசிம்மர் கோயிலும்-படிகளும்

தொண்டை நாட்டிடையே, சோழநாடு போல வளம் மிகுந்து, நரசிங்கமூர்த்தி தங்குவதற்கு வசதியான இடமாக இருப்பதனால் சோழ சிங்கபுரம் எனப் பெயர் பெற்றிருக்க வேண்டும். அது எல்லாம் இல்லை. இந்த ஊரில் சோழ மன்னன் ஒருவன் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தான்; அதனாலேயே சோழலிங்க புரம் என்று பெயர் பெற்றது; சோழ லிங்கபுரமே காலடைவில் சோழசிங்க புரம் என்று மாறிற்று என்று கூறுவாரும் உளர். இதை வலியுறுத்தச் சோழேசுவரர் கோயில் என்று ஊரின் நடுவில் இருக்கும் கோயில் ஒன்றையும் காட்டுவர். இதன் உண்மை எப்படி இருந்தாலும் சோழ லிங்கேசுவரர் இன்று சோழ நரசிம்ம னுக்கு விட்டுக்கொடுத்துவிட்டுக் கொஞ்சம் ஒதுங்கியே வாழ்கிறார். ஆதலால் நாமும் சோழ நரசிம்மருக்கே பிரதானம் கொடுத்து, சோழ சிங்கபுரம் என்ற பெயராலேயே இந்த ஊரை அழைக்கலாம்.

இந்த யோக நரசிம்மரது கோயில் கிட்டத்தட்ட நானூறு அடி உயரமுள்ள ஒரு மலையின் மேல் இருக்கிறது. எந்தத் திக்கிலிருந்து கோயிலை நெருங்கினாலும் கோயிலும் மலையும் பத்து மைல் தூரம் வரை தெரியும். எங்கு சுற்றினாலும் திருத்தணி சித்தூர் ரோடுக்கு வந்து அதிலிருந்து பிரியும் பாதை வழியாக மலையடிவாரத்துக்கு வந்து சேரலாம். அடிவாரத்திலிருந்து மலையைப் பார்த்தால் அங்குள்ள கோயிலுக்கு ஏற முடியுமா என்று பிரமித்து நிற்போம். காரணம் கோயில் நிற்கும் மலை உயரமானதென்று அல்ல. அந்த மலைமேல் நிற்கும் கோயிலோடு போட்டி போட்டுக்கொண்டு கோயிலுக்கு முன்னாலே நீண்டு வளர்ந்து நிமிர்ந்திருக்கும் இன்னொரு குன்றுதான் அம்மலைப்பை ஏற்படுத்தும். இதைப் பற்றிக்கூட ஒரு கதை: பைரவேசுவரரது ஆணையின்படி இந்தக்குன்று வளர்ந்து கொண்டே போயிற்றாம். அதன் வளர்ச்சி தேவலோகத்தை முட்டி விடும் போல் இருக்கிறதே என்று எண்ணிய இந்திரன் பலராமனைக்கொண்டு தடுத்து நிறுத்தினான். அதனால்தான் இம்மட்டோடு நிற்கிறது என்பார்கள் அங்குள்ள மக்கள்.

ராயோஜி என்பவரால் மலைமேல் உள்ள கோயிலுக்கு ஏறப் படிக்கட்டுகள் கட்டப்பட்டன என்று தெரிகிறது. இந்தப் படிக்கட்டுகள் மிகவும் கரடுமுரடாக இருந்தது என்ற காரணத்தால் — நன்றாகப் புதுப்பித்து அகலமான புதிய படிகளை ஏறுபவர்களுக்கு வசதியாக இருக்கச் சுற்றி வளைத்தே கட்டுகிறார்கள். இன்று படிக்கட்டு வேலை முடியும் தறுவாயில் இருக்கிறது. இப்போது இப்படிக்கட்டுகளின் வழியாக ஏறுவது மிகவும் சுலபமாக இருக்கும். ஒரே ஒரு எச்சரிக்கை. மலை ஏறுபவர்கள் பகல் பதினொரு மணிக்குள்ளோ அல்லது மாலை நாலு மணிக்கு மேலேயோ ஏறுவது நல்லது. வழியில் மரஞ் செடிகள் எல்லாம் இல்லாததினால், இதற்கு இடைப்பட்ட காலத்தில் படிகள் கொதித்துக் கொண்டிருக்கும். காலைத் தகிக்கும். இந்தப் படிகள் ஏறும்போது, இக்கிடத்

யோக ஆஞ்சநேயர் கோயில்





பிரபல சினிமா டைரக்டர் திரு கே. சுப்பிரமணியம் அவர்கள், இந்திய சர்க்காரால் அனுப்பப்பட்ட கலாசாரத் தூதுகோஷ்டிக்குத் தலைவராகச் சமீபத்தில் வெளிநாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்தார். லண்டன் பி. பி. ஸி. தமிழோசைப் பகுதிக்கு அமைப்பாளராக இருக்கும் திரு எம். ஆர். எம். சுந்தரம் (சுந்தா) அவர்கள், அவரைப் பி. பி. ஸி.யின் தமிழோசைப் பகுதிக்காகப் பேட்டி கண்ட பொழுது எடுக்கப்பட்ட படம்.

தைத்தானை 'வண்டு வளம் கிளரும் நீள் சோலை வண்பூங்கடிகை' என்று பேயாழ்வார் பாடினர் என்று ஐயம் தோன்றும்.

ஆயிரத்துக்கு மேற்பட்டிருக்கும் படிகள் ஏறி மலைச் சிகரத்தை நெருங்கினால், கோயிலின் பிரதான வாயில் வடக்கு நோக்கி இருப்பதைப் பார்ப்போம். கோயிலை வலமாகச் சுற்றி வளைந்து உள்ளே சென்றால், கிழக்கு நோக்கிய வண்ணம் யோக நரசிம்மர் வீற்றிருக்கும் திருக்கோலத்தைக் காணலாம். எப்போதுமே மாலையலங்காரத்துக்குள்ளேயே இருப்பவர் அவர். அவர் கோலம் எப்படி இருக்கும் என்பதற்கு ஒரு சிறு குறிப்புத் தான் பக்கம் 50-ல் உள்ள படம். மூல மூர்த்தி நல்ல கம்பீரமான திருவுருவம். கண்களிலே ஒரு அழகான சாந்தம். யோக நிலையில் இருந்து மனத்தை ஒரு நிலைப்படுத்தி, பக்தர்களின் குறைகளைக் களைவதிலே அவருக்கு ஒரே ஆர்வம். வசதி உள்ளவர்கள் வெள்ளிக்கிழமை காலை பத்து மணியளவுக்கு மேல் நடக்கும் திருமஞ்சன சேவையில் கலந்துகொண்டால் மூர்த்தியின் வண்ணத்தை முழுவதும் கண்டுகளிக்கலாம். பக்கத்தில் இருக்கும் அமிர்தவல்லித் தாயாரையும் தொழுது அருள் பெறலாம்.

இந்த மலைமீது உள்ள யோகநரசிம்மரை அன்று திருமங்கை ஆழ்வார் கண்டு வணங்கியிருக்கிறார். இவர் தக்க பெருமை உடைய தயாளு என்று உணர்ந்திருக்கிறார். மேலும் வெல்லம்போல் இனிப்பும் கனியைப்போல் சுவையும் உள்ளத்துக்கு அருளும் பெருமான் என்றும் புகழ்ந்திருக்கிறார். ஆதலால் 'மிக்கான்' என்றே இந்த மூர்த்தியை அவர் நமக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

மிக்கானை, மறையாய் விரிந்த
  விளக்கை, என்னுள்
புக்கானைப் புகழ் சேர்
  பொலிகின்ற பொன்மலையை,
தக்கானை, கடிகைத் தடங்
  குன்றின் மிசையிருந்த
அக்காரக் கனியை
  அடைந்து உய்ந்து போனேனே.

என்று பரவசத்தோடே பாடியிருக்கிறார். பிரபந்தப் பாடல்கள் நாலாயிரத்தில், கடிகாசல நரசிம்மனைப் பற்றிய முழுப் பாடல் இது ஒன்றுதான். ஒரு பாட்டு என்றாலும் ஒப்பற்ற பாட்டு. எத்தனை தரம் வேண்டுமானாலும் பாடிப் பாடி அனுபவிக்க வேண்டிய பாட்டு.

இத்தலத்திலே இத்துணை பெருமையுடைய தக்கானுக்கும் மிக்கானுக இன்னொரு மூர்த்தி இருக்கிறார், மற்றொரு சிறிய குன்றிலே. அவர்தான் யோக ஆஞ்சநேயர். இவரைக் காண, பெரிய மலையை விட்டுக் கீழே இறங்க வேணும், அடிவாரத்தில் கொஞ்ச தூரம் நடக்க வேணும், படிகளின் வழியாய்ச் சுமார் இருநூறு அடி உயரமுள்ள மலைமீது திரும்பவும் ஏற வேணும். இங்கு படிகள் எல்லாம் புதுப்பிக்கப் படவில்லை. இங்கேயும் கோயிலின் பிரதான வாயில் வடக்கு நோக்கியிருந்தாலும், சந்நிதி மேற்கு நோக்கியே இருக்கிறது. தம்முடைய தலைவனை நரசிம்மரை எதிர்நோக்கியவராய், தம்முடைய வீர உணர்ச்சியையெல்லாம் அடக்கிக்கொண்டு நரசிம்மரைப் போலவே யோக நிலையிலேதான் இருக்கிறார் இவர். யோக நரசிம்மரையாவது, மற்றும் சில தலங்களிலே கண்டு தொழலாம், யோக ஆஞ்சநேயரை இத்தலத்திலன்றி வேறு தலங்களில் காண முடியாது என்றே சொல்கிறார்கள்.

இவர் யோகமூர்த்தி மட்டும் அல்ல, அற்புதமான அஹிம்சா தர்மத்தை நிலைநிறுத்திய மூர்த்தியுங்கூட. அன்று வட மதுரையை ஆண்டு வந்த இந்திரத்யும்மன் என்ற ஓர் அரசன் வேட்டை ஆடியிருக்கிறான். வேட்டையில் ஒரு பெண்மானைத் துரத்திக்கொண்டு இந்த மலையை அடுத்த காட்டுக்கே வந்திருக்கிறான். மானின் மீது அம்பு தொடுக்க முனைந்தபோது, மான் இருந்த இடத்தில் ஒரு ஜோதி தோன்ற, அதைத் தொழுது வணங்கி, அன்று முதல் வேட்டையாடுவதையே நிறுத்தியிருக்கிறான். பின்னர் கும்போதரன் என்ற அரக்கனுடைய கொடுமையையும் ஒழித்து, இந்தப் பிரதேச மக்களையே காப்பாற்றியிருக்கிறான். நரசிம்மரது ஆணையின்படியே, அநுமன்

தான் ஜோதியாகத் தோன்றி, வடமதுரை மன்னனைச் சிறந்த அம்சாவதாரியாக ஆக்கி யிருக்கிறார். இந்தச் சேவையை மெச்சியே, இவருக்குச் சங்கு சக்கரமும் சதுர்ப்புஜமும் அருளி இந்தத் தலத்தில் கோயில் கொண்டிருக்கச் செய்திருக்கிறார் நரசிம்மர்.

இதனாலெல்லாம் இந்த யோக ஆஞ்சநேயர் பிரசித்தியடையவில்லை. மக்கள் பிணிதீர்க்கும் மருந்துவனாக அமைந்து தான் தக்க புகழை இன்று தமக்குத் தேடிக் கொண்டிருக்கிறார். மக்களின், அதிலும் பெண்களின் தீராத உடல் நோயை மாத்திரம் அன்றி மன நோயையுமே தீர்த்து வைக்கிறார் இவர். பேய் பிசாசு பிடித்துள்ள பெண்களை இங்கு கூட்டிவந்து மலைமேலுள்ள அனுமந்த தீர்த்தத்தில் மூழ்கி எழச்செய்து, அனுமார் சந்நிதியில் கொண்டுவந்து இருத்தி விட்டால்போதும், ஏதோ கொஞ்ச நேரம் ஆட்டம் போட்டாலும் அதன் பின் அமைதியாய்ப் படுத்துத் தூங்கிவிடுகிறார்கள் பெண்கள். தூங்கி எழுந்தால் பிணி நீங்கியிருக்கிறது. பேயும் பிசாசும் மலையைவிட்டு இறங்கியே ஓடியிருக்கிறது. இப்படி மக்கள் பிணிதீர்க்கும் அருளாளனாக இருப்பதனால்தான், இன்றும் நூற்றுக்கணக்கான தேசாந்திரிகள் இங்கு வந்து, இங்குள்ள நரசிம்ம தீர்த்தம் முதலிய திருக்குளங்களில் நீராடி நியமங்களை யெல்லாம் அனுஷ்டிக்கிறார்கள்— கார்த்திகை மாதம் இந்த ஊரும், இக்குன்றுகளும், இக்கோயில்களும் 'ஜாம் ஜாம்' என்றிருக்கும்.

இந்த யோக நரசிம்மரும், யோக ஆஞ்சநேயரும் நல்ல சிலா விக்கிரகங்கள், உற்சவ மூர்த்திகளாக—செம்புச் சிலை வடிவில் இவர்கள் உருவாகவில்லை. ஆதலால் உற்சவமெல்லாம் இம்மலைகளைவிட்டு ஒரு மைல் தொலைவில் ஊருக்கு மத்தியில் இருக்கும் பக்தவத்ஸலருக்குத்தான். இவர் யோக நிலையில் இல்லை. ஸ்ரீதேவி, பூதேவி சகிதமாக நல்ல போக நிலையில்தான் இருக்கிறார். யோகமும் போகமும் ஒன்றிய நிலையில் மூர்த்திகளைக் கண்டு வணங்க வசதியாக இத்திருப்பதி அமைந்திருப்பது விசேஷம்தானே. இந்த பக்தவத்ஸலர் கோயில், நாயக்க மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும். விஸ்தாரமான வெளிப் பிராகாரங்கள், மண்டபங்கள் எல்லாம் நிறைந்திருக்கின்றன இங்கே.

இந்தச் சோழசிங்கபுரம் பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசியில் ஒரு போர்க்களமாகவும் இருந்திருக்கிறது. 1781ம் ஆண்டில் கூட் (coote) என்ற படைத் தலைவன் தலைமையில் ஆங்கிலப் படையும் மைசூர் ஹைதர் அலியின் படையும் கைகலந்திருக்கின்றன. இங்கு நடந்த போரில் மாண்ட மகமதிய சேனை வீரர்கள் இருவரது சமாதி இன்றும் இருக்கிறது இங்கே. இவர்களைப் பற்றிய நினைவுச் சின்னமெல்லாம், இங்குள்ள சப்ரிஜிஸ்திரார் ஆபீசிலே நின்று கொண்டிருக்கிறது. சரியான இடம்தான்— போரில் காட்டிய வீரத்தை யெல்லாம் பதிந்துவைக்க, ஆவணக் களரியைவிட வேறு இடம் வேண்டுமா, என்ன?

SHANKAR'S CHILDREN'S ART NUMBER - 1959

கல்வி என்பது, குழந்தைகளின் உள்ளத்துள் நமது கருத்துக்களைப் புகுத்துவதல்ல. குழந்தைகள் தங்கள் உள்ளத்தில் உள்ளதை வெளியிடச் செய்வதே என்று யாரோ ஒரு பிரபல ஆசிரியர் கூறினார். இது நூற்றுக்கு நூறு உண்மைதான். ஆனால் இதற்கு வசதி எங்கிருக்கிறது? இருக்கிற பள்ளிக் கூடங்கள் குழந்தைகளின் மண்டைக்குள் வேண்டாத கருத்துக்களைத் திணிப்பதாக அல்லவோ இருக்கின்றன! இந்த அவல நிலையைப் பார்த்துத் தான் 'சங்கர்ஸ் வீக்லி' காரியாலயத்தார் அகில உலகக் குழந்தைகள் மலர் வெளியிடுகிறார்கள்.

ஆண்டுதோறும் குழந்தைகளின் சித்திரப் போட்டி, கட்டுரைப் போட்டி நடத்தி அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவைகளைத் தொகுத்து மலராக வெளியிடுகிறார்கள். 1959ம் வருஷத்திய குழந்தைகள் மலரில் அறுபத்தைந்து நாடுகளிலிருந்து வந்த சித்திரங்கள், கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. குழந்தைகள், தங்கள் உள்ளத்தில் எழும் பாவங்களைச் சித்திரங்களாகவும், கட்டுரைகளாகவும் வெளியிட்டிருப்பதைப் பார்க்க அதிசயமாகவும் ஆனந்தமாகவும் இருக்கிறது. சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் பார்ப்பதற்கும் படிப்பதற்கும் மிக உகந்த மலர். இந்த அரிய முயற்சியில் இடைவிடாது ஈடுபட்டுவரும் சங்கர்ஸ் வீக்லி காரியாலயத்தார் பெரும் பாராட்டுக்கு உரியவராவர்.

கிடைக்குமிடம்: Shankar's Weekly, Post Box No: 218, Odeon Building New Delhi. விலை: ரூ. 5.

இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமைக் காரியாலயம்: முதல் லைன் பீச், சென்னை-1

23 சென்னைக் காரியாலயங்கள் - 113 வெளியூர் கிளைக் காரியாலயங்கள்

கடனும் முன்பண வசதியும்

டெபாசிட்டுகள்
- கரண்ட் அக்கௌண்ட்ஸ்
- சேவிங்ஸ் பாங்க் அக்கௌண்ட்ஸ்
- நிரந்தர டிபாசிட்டுகள்
- 3 வருட காஷ் சர்டிபிகேட்டுகள்

செக்யூரிட்டிகளை வாங்கியும் விற்றும் தரப்படும்
அந்நியச் செலாவணி வியாபாரமும் நடத்தப்படும்

New York Agents: FIRST NATIONAL CITY BANK OF NEW YORK
London Agents: WESTMINSTER BANK LIMITED

டி. பி. பார்த்தசாரதி, காரியதரிசி

நீங்கள் உறங்கும்போதே

ஆஸ்துமா சளிகரைகிறது

மூச்சுத் திணறல், இருமல், சிரமப்பட்டு மூச்சு விடுதல் சுவாசம் தடைபடுதல் ஆஸ்த்மா, ப்ராங்கைட்டிஸ், ஜலதோஷம், குளிர்ஜுரம் முதலிய உபாதைகளால் அவதிப்படும் பல்லாயிரக்கணக்கான பேர்கள் இப்பொழுது மெண்டாகோ (Mendaco) சாப்பிட்டு நிவாரணம் அடைகிறார்கள். இந்த நவீன விஞ்ஞான அமெரிக்க மருந்து இரத்தத்தின் மூலமாக சுவாசப்பைகள், சுவாசக் குழாய்கள், மற்றும் மூக்குக்குச் சென்று அங்கு கெட்டியாக அடைத்துள்ள சளியை இளக்கிக் கரைக்கிறது. பின்னர் நீங்கள் இருமல் மற்றும் சிரமப்பட்டு மூச்சுவிடுதல், இல்லாமல் சுகமாக சுவாசித்து குழந்தைபோல் தூங்கலாம். பூரண திருப்தி உங்களுக்கு அது நிச்சயமாக அளிக்கும்.

கால் அரிப்பு சரும அரிப்பு

அரிப்பு எரிச்சல் முதலிய உபாதைகளோ உங்கள் கால் தாங்கமுடியாமல் பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறதா? உங்கள் சருமத்தில் கொப்புளங்கள் தோன்றி தோல் உரிந்து ரத்தம் கசிகிறதா? பாதங்களிலும் கால் விரல்களுக்கிடையிலும் புண்கள் தோன்றி உபத்திரவம் செய்கின்றனவா? இவைகள் வெடித்துக் கசிந்து மேலும் புண்களை உண்டாக்குகின்றனவா? இவைகளுக்கெல்லாம் மூலகாரணம், சிங்கப்பூர் சொறி வண்ணாரப்படை, என்று பலபெயர்களில் வழங்கப்படும் ஓர்வகைக் கிருமி. மூலகாரணமான இந்தக்கிருமிகளை ஒழிக்கும்வரை இவ்வுபாதைகளிலிருந்து நிவாரணமடைய முடியாது. விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட நிக்ஸோடர்ம் (NIXODERM) முதல்தடவை போட்டவுடனேயே அரிப்பை நிறுத்தி, கிருமிகளைக்கொன்று சருமத்தின் புண்களை ஆற்றி மிருதுவாக்கி சுத்தப்படுத்த ஆரம்பிக்கிறது. நிக்ஸோடர்ம் (NIXODERM) அரிப்பை நிறுத்துவதில் வெற்றி கண்டுள்ளது. மேலும் பாதத்தின் மேலிருக்கும் புண்கள், மேலாகப் பரவும் படை, முகப்பருக்கள், கட்டிகள், முகத்திலோ அல்லது தேகத்திலோ பரவிய படர் தாமரை முதலிய உபாதைகளைக் குணமாக்குகிறது. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடர்ம் (NIXODERM) வாங்குங்கள். பூரண திருப்தி அது நிச்சயமாக அளிக்கும்.

கண்கள் உறங்காவோ?

மாயாவி

அத்தியாயம் 16

விளை நிலத்திலே களை

கேசவபுரத்தில் இரண்டாவது நாள் இரவும் வீணாவின் கண்கள் உறக்கம் கொள்ள மறுத்தன. நேற்றுப் போலவே இன்றும் அவள் நெஞ்சினுள்ளே பல்வேறு எண்ணங்கள் கூட்டைப் பூச்சிகளாகப் புகுந்துகொண்டு குடைந்தன. ஆனால் நேற்றைய எண்ணங்கள் தன்னைக் குடைந்த குடைச்சலுக்கும், இன்று எண்ணங்கள் குடையும் குடைச்சலுக்கும் அடிப்படையில் ஒரு மாறுபாடு இருந்ததை அவளே உணர்ந்தாள். அதாவது, நேற்று அத்தனை குடைச்சலுக்கும் தன் மனமானது எஃகைப்போல் உறுதி வாய்ந்ததாக இருந்தது போலவும், ஆனால் இன்று அந்த எஃகை உருக வைக்கக் கூடிய நெருப்பு ஒன்று தன்னுள்ளே பற்றிக் கொண்டிருப்பது போலவும் அவளுக்குத் தோன்றியது.

நேற்று அவள் மனம் எஃகைப்போல் உறுதி வாய்ந்து இருந்ததென்றாலும், அந்த உறுதி நேற்றுத்தான் திடீரென்று அவளிடம் ஏற்பட்டதன்று. கடந்த பத்து ஆண்டுகளாகப் பலர் மூலம் பல விவரங்களைத் தெரிந்துகொண்ட பின்னர், பல சம்பவங்களைக் கண்கூடாகக் கண்ட பின்னர் ஏற்பட்ட உறுதி அது. தான் வாழ்விழந்தவள் என்பதை அவள் என்றைக்கு உணர்ந்தாளோ அன்றைக்கே, இழந்த வாழ்வு திரும்பி வராது என்பதும் அவளுக்குத் தெளிவாகத்தான் இருந்தது. ஆகையால் காசிப்பூரில் வாழ்ந்த அந்தக் கடைசிப் பத்து ஆண்டுகளில் அவள் ஒரு தடவைகூட அந்தக் கிட்டாத வாழ்வு தனக்கு வேறு எவ்வகையிலாவது கிட்ட வழி உண்டா என்று சிந்தித்துப் பார்த்தது கிடையாது.

ஆனால் தன்னையொத்த பிற பெண்கள் இவ்விஷயமாக என்ன கருத்துடன் இருக்கிறார்கள் என்பதை அவள் கூர்ந்து கவனித்து வந்தாள். அப்படிக் கவனித்ததில் வீணா ஒன்றை மிகத்தெளிவாக உணர்ந்து கொண்டாள். நம் பெரியோர்கள் வாழ்விழந்த பெண்களுக்குக் கண்டிப்பான கட்டுப்பாடுகளை வகுத்தபோது அவற்றைக் கண்ணை மூடிக்கொண்டு வகுத்துவிடவில்லை. ஆழ்ந்து ஆராய்ந்து, ஆண், பெண் உள்ளங்களை அக்குவேறு ஆணிவேறாக அலசிப் பார்த்துத்தான் அவற்றை வகுத்திருக்கிறார்கள். ஆதலால் அவற்றை மீற முயல்வதன் மூலம் ஆணோ பெண்ணோ தங்களுக்குத்தான் தீங்கு இழைத்துக் கொள்ளுகிறார்கள்.

இதுதான் நேற்றுவரை வீணாவின் முடிவான கருத்தாக இருந்தது. ஆனால் இன்று? இன்று அந்தக் கருத்திலே ஒரு சிறு விரிசல் விழுந்திருக்கிறது.

வெண்மையான பொருளை நாம் எந்தக் கண்ணாடியை அணிந்துகொண்டு காண்கிறோமோ, அந்த நிறமாகவே அது தோன்றுகிறது. வீணா,விதவைகளின் மறு வாழ்வு பற்றிய நினைவை நேற்றுவரை சிவப்புக் கண்ணாடியால் கண்டு வந்தாள். எனவே அது அபாயத்தை உணர்த்தும் ரத்தச் சிவப்பாக அவள் கண்களுக்குக் காட்சி தந்தது; எந்த விதவையும் மறு வாழ்வில் புகுந்து நிலைத்துவிட முடியாது என்ற உறுதியை அவளிடம் வளர்த்து விட்டிருந்தது. ஆனால் இன்று அந்த விந்தை மனிதர் குலசேகரத்தைச் சந்தித்தபோது, அவர் அவள் கண்களில் ஒரு பச்சைக் கண்ணாடியை மாட்டி, "இப்பொழுது பார்!" என்றார். வீணா எதில் தீச் சிவப்பைக் கண்டு அச்சமும் எச்சரிக்கையும் கொண்டிருந்தாளோ, அதுவே இன்று பசுமையாகவும் குளிர்ச்சியாகவும் தென்பட்டது. விதவைகளின் மறு வாழ்வு நிலைக்காது; நிலைக்க முடியாது என்றிருந்த அவள் இன்று ஒரு விதவை அந்த மறு வாழ்வில் பல்லாண்டுகளாக நிலைத்து, முதல் வாழ்வுபெற்ற பெண்களைவிடச் சிறப்புடனும் களிப்புடனும் இருப்பதை அறிந்தாள். அந்தச் சிறப்பும் களிப்பும், பலத்த போராட்டத்துக்குப் பின்னர் பிறந்தவைதாம்; ஆயினும் அவை பிறந்திருக்கின்றனவே! பட்டமரம் என்றைக்கும் பட்ட மரமே என்று அவள் நினைத்திருக்க, இதோ ஒரு பட்ட மரம் தளிர்த்துத் தழைத்து நிற்கிறதே!

சிறு குழந்தைகள் தாங்கள் கண்டிராத பொருளை முதல் தடவையாகக் கண்ட பின்னர், அப்பொருளைப்பற்றியே நினைத்து நினைத்துத் தாங்கொண்ணா வியப்படைவது போல், வீணாவும் வியந்தாள். இரவு அதன் பாட்டுக்கு நிமிஷம் நிமிஷமாக, மணி மணியாகக் கழிந்து கொண்டே போயிற்று.

* * *

அன்று கேசவபுரத்தில் இன்னொரு ஜீவனும் கண் உறங்கவில்லை. அது சுந்தரம். வீணாவைப் போலவே அவனையும், மனத்தில் குமுறிய எண்ணங்கள் தாம் கண் உறங்க விடாமல் அடித்தன. ஆனால் அவனைக் குடைந்த எண்ணங்கள் வேறு தரப்பட்டவை.

சுந்தரத்தைப் பொறுத்த வரையில் அவனும்தான் நேற்று ஒரு தீர்மானம் செய்துகொண்டான். வீணாவைப் போல்

அவன் தீர்மானம் பல காலத்துக்கு முன்பே எழுந்து உரம் பெற்றதன்று. அது நேற்றுத்தான் சட்டென்று அவனிடம் தோன்றிற்று. ஆயினும், தோன்றி ஒரு நாள் முடிவதற்குள், வினையின் தீர்மானம் அடைந்திருந்த அளவு அதுவும் உறுதி பெற்றுவிட்டது. கடந்த இருபத்து நான்கு மணி நேரத்தில் அடுக்கு அடுக்காக நிகழ்ந்த சம்பவங்கள்தாம் அவனுடைய திடீர்த் தீர்மானத்தை இத்தனை சடுதியில் உறுதி பெறச் செய்து விட்டன. அதிலும், அவனுடைய தீர்மானத்துக்கு ஓர் உத்திபோல் அமைந்தது, இன்று அவன் அறிந்துகொண்ட இன்ஜினீயர் குலசேகரத்தின் வரலாறு.

வாழ்விழந்த பெண்களுக்கு இழைக்கப்பட்டு வந்த அநீதிகளைப் பொறுத்து, அவற்றைப் புரட்சி மூலம் தகர்க்க வேண்டுமென்று சுந்தரம் தீர்மானித்துக் கொண்டான் அல்லவா? அப்படித் தீர்மானித்துக் கொண்டபோது தனது புரட்சி வெற்றி பெற்றாலும், அதைத் தொடர்ந்து அமையும் வாழ்க்கை துன்ப மயமாகத்தான் இருக்கும் என்றும் அவன் உறுதி செய்து கொண்டிருந்தான். ஆனால் குலசேகரத்தின் வாழ்க்கைக் கதை, அந்தத் துன்பத்துக்குப் பின் இன்பமுண்டு என்பதை அவனுக்குக் கோடி காட்டிவிட்டது. சமூகத்தின் கொதிப்பும் புறக்கணிப்பும் காலடைவில் குறைந்துவிடும். புண் ஆறியதும், அதன் வேதனை மறைந்ததோடு நில்லாமல், அப்புண் தோன்றிய நினைவுகூடக் காலம் செல்லச் செல்ல நம் மனத்திலிருந்து கரைந்து விடுவது



போல், ஒருவன் ஒரு புரட்சித் திருமணத்தில் புகுந்த பிறகு சிறிது காலம் சமூகத்தின் ஏச்சு-பேச்சுக்களுக்கும் தொல்லைகளுக்கும் ஆளானாலும், பிறகு அவையெல்லாம் குறைந்துவிடும் என்பதைக் குலசேகரத்தின் வாழ்க்கை நிரூபித்ததும், அவன் தீர்மானம் உடைக்கமுடியாத கடும் பாறையாக நெஞ்சகத்திலே உறைந்துபோயிற்று. எனவே அவனைத் தூங்க விடாமல் செய்தது அந்த எண்ணமில்லை. இது வேறு விதமான எண்ணம். ஆனால் இதற்கும் அதற்கும் தொடர்பு இருந்தது. தொடர்பா? அவனுடைய உறுதியின் அஸ்திவாரத்தையே பிடுங்கி எறிந்துவிடக் கூடியதல்லவா இது!

மாலையில் அவன் வீடு திரும்பியபோது களிப்பு நிறைந்தவனாகத் திரும்பினான். ஆனால், முதல் முதலாக வேலையேற்றவனுக்கு, முதல் நாள் வீடு திரும்பும்போது ஏற்படும் மகிழ்ச்சி மட்டுமன்று அது. தான் நிகழ்த்தப்போகும் சமூகப் போராட்டத்துக்கு, தனது வேலைகூடத் துணை செய்யப்போகிறது என்பதை அறிந்ததால் ஏற்பட்ட உற்சாகமும் அவனுடைய களிப்புக்குக் காரணமாகும். ஆம், அங்கே சுந்தரத்துக்கு அவனைப் போலவே கருத்துடைய ஒருவன் தோழனாகக் கிட்டினான்; அவன் கொண்டிருந்த கருத்தை நிலை காட்டி வெற்றி பெற்ற ஒருவர் தலைவராகக் கிட்டினார். இவற்றுக்கு மேலாக அவன் எவளைத் தனது போராட்டத்தின் லட்சியப் பொருளாகக் கொள்ளத் தீர்மானித்திருந்தானோ, அவளுடைய டிஸ்பென்சரி நேரமும், அவனுடைய வேலை நேரமும் ஒத்தபடி அமைந்து அவர்கள் தினசரி சந்தித்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றன. எனவே தனது தீர்மானம் வெற்றிப் பாதையில் நடைபோட ஆரம்பித்து விட்டது என்ற அளவுக்கு அவனுக்கு அப்பொழுது உள்ள நிறைவு ஏற்பட்டிருந்தது. அந்த உள்ள நிறைவு ஏற்படுத்திய மகிழ்ச்சியுடன் தான் அவன் இரவு படுக்கப் போனான்.

படுத்துச் சிறிது நேரம் ஆகியிருக்கும். சுந்தரம் இன்னும் தூங்க ஆரம்பிக்கவில்லை. கீழே நடையில் அவன் தந்தை தமது ஒற்றைக் கட்டிலில் படுத்திருந்தார். அப்பொழுது மணி பத்து இருக்கும். ஆம், சரியாகப் பத்து மணிதான். ஏனென்றால், வீட்டு வெளித்திண்ணையில் அரட்டை அடித்துக் கொண்டிருந்த சுந்தரத்தின் தாய் மரகதத்தம்மாளும் அண்டை வீட்டுப் பெண்களும் தங்கள் அரட்டைக் கச்சேரி கலைந்து, கொட்டாவி விட்டவாறு படுக்கக் கிளம்பிவிட்டனர். அவர்கள் அரட்டைக் கச்சேரிக்குப் பத்து மணிதான் எல்லை. அண்டை வீட்டுக் கதவுகளும், சுந்தரத்தின் வீட்டுக் கதவும் கிரீச்சிட்டவாறு மூடப்பட்டன. தாழ்ப்பாள்களும், 'காதாங்கி'களும், பூட்டுக்களும் ஓசை எழுப்பின.

மரகதத்தம்மாள் கதவைப் பூட்டிக் கொண்டு உள்ளே வந்ததும், மச்சிலே

நோக்கி, "சுந்தரம்! சுந்தரம்!" என்று குரல் கொடுத்தாள். அது அவள் வழக்கம். ஏனென்றால் சுந்தரம் ஊரில் இருக்கும் போது இரவில் நெடுநேரம் வரையில், ஹரிக்கேன் விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு புத்தகம் படித்துக்கொண்டிருப்பான். மரகதத்தம்மாளும் புஷ்பவனம் பிள்ளையும் மாறி மாறிப் பல தடவைகள் சத்தமிட்ட பிறகுதான் விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக் கொள்ளுவான். அந்த வழக்கத்தை ஒட்டியே இன்றும் அவள் குரல் கொடுக்கிறாள் என்று நினைத்துக்கொண்டான் சுந்தரம். ஆனால் அவன் அவளுக்குப் பதில் குரல் கொடுக்கு முன்பே, மச்சிலில் விளக்கு எரியவில்லை என்பதைக் கண்டுகொண்ட மரகதத்தம்மாள், "உறங்கி விட்டானா? விளக்கைக் காணுமே!" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

"இல்லை; இருட்டிலே உட்கார்ந்து படிச்சிக்கிண்டிருக்கான்! பைத்தியம்!" என்றார் புஷ்பவனம். அவர் கட்டிலில் கண்களை மூடியவாறு படுத்திருந்தாரே யன்றி உறங்கவில்லை.

"உங்க மகன் அப்படிச் செய்தாலும் செய்வான். அவன் என்ன இலேசுப்பட்ட ஆளா?" என்று சொல்லியவாறு மரகதத்தம்மாள் கடையில் எரிந்துகொண்டிருந்த ஹரிக்கேன் விளக்கின் 'சிம்னி'யை உயர்த்தி வாயினால் ஊதி அணைத்தாள்.

பிறகு அவள் படுக்கையில் படுத்து, மற்றொரு நீண்ட கொட்டாவியை வெளியேற்றிவிட்டு, "சக்திவேல் முருகா! நீயே துணை!" என்று கூறியது சுந்தரத்துக்குக் கேட்டது.

தொடர்ந்து இரண்டொரு நிமிஷங்கள் நிறை அமைதி நிலவியது. பிறகு மீண்டும் மரகதத்தம்மாளின் குரல் ஒலித்தது. "உறங்கிட்டேளா?" என்று அவள் கணவரைக் கேட்டாள்.

"இல்லை, ஏன்?"

"நேற்றே ஒரு சங்கதி உங்களிடம் சொல்லணுமின்னு நினைச்சேன்; மறந்துட்டேன். உங்க மகன் செய்த வேலையைக் கேட்டீங்களா?"

புஷ்பவனத்துக்குத் தூக்கம் வந்துவிட்டதோ, என்னவோ, அவர் 'ஞுன்' கொட்டியவாறு, "என்ன செய்தான்?" என்று அலுத்தவர்போல் கேட்டார்.

அவள் முதல் நாள் தான் ஆற்றங்கரையில் கண்ட காட்சியையும், அதன் பிறகு நடந்த நிகழ்ச்சிகளையும் விவரித்துவிட்டு, "அதுகள் ரெண்டும் அண்ணனும் தங்கச்சியுமாப் பழகிக்கிட்டு இருக்குதுன்னுதான் நான் நினைச்சுக்கிட்டிருந்தேன். அடி ஆத்தே! நேற்றுக் கண்ணுலே பார்த்ததும்......"

"பார்த்ததும் மூச்சே நின்னு போயிடுத்தாக்கும்! போடி போடி, பைத்தியம்! நீங்க, பெண்பிள்ளைங்க வாய் கிழியப் பேசுவீங்களே தவிர, உங்களுக்குக் காரியத்திலே ஏது கண்? புதுசா என்னத்தையோ கண்டுட்ட கணக்கிலே சொல்ல வந்துட்டா......!"



"அப்படி யாரு உங்களுக்கு......?"

"அதுகள் ஒண்ணை ஒண்ணை தெரிஞ்சிக்கிட்டுப் பழகத் தொடங்கிச்சோ, அன்னைக்கே நான் ஆசைப் பட்டேன். ஆசைப்பட்டது இப்பொழுது நடந்திருக்குது."

"மெய்யாத்தான் சொல்றீங்களா? அடி ஆத்தே! எனக்கு அது தோணவே இல்லியே! நம்ம வீட்டுக்கும் ஒரு நல்ல மருமகள் வரணும்; லட்சுமியாட்டமா அதிர்ஷ்டத்தோட வரணும். வீடு நிறையக் குழந்தை-குட்டிகளைப் பெத்துக் கிட்டு, நம்ம குடும்பத்துக்கு வாடா விளக்கா விளங்கணும்னெல்லாம் நினைச்சிருக்கேனுங்க. ஆனா, அந்த அதிர்ஷ்டத்தை நம்ம மாலாவே கொண்டு வருமின்னு எனக்குத் தோணவே இல்லியே!" என்றாள் மரகதத்தம்மாள்.


"உனக்கு ஏன் தோணுது? நீதான் உன் மகனைத் தொட்டிலிலே உறங்குகிற பிள்ளைன்னு நினைச்சுக்கிட்டிருக்கிறியே!"

"ஏங்க, அப்போ, அதுகள் மனசும் ஒத்துப் போச்சு. காலத்தைக் கடத்திக் கிட்டு இராமல் காரியத்தைச் சீக்கிரம் முடிச்சுடலாமே."

"முடிச்சுட்டாப் போகுது. இப்போ என்ன அவசரம் அதுக்கு? கிணற்றுத் தண்ணியை வெள்ளமா அடிச்சுக்கிட்டுப் போயிடப் போகுது? மாலா நம்ம கைக்குள்ளே இருக்கிற வெண்ணெய். அத்தானும் தைலம்மாவும் நம்மளை மிஞ்சிப் போயிடப் போறவங்க இல்லை."

"அதுதான் தெரிஞ்ச விசயமாச்சே. அதுக்காக நல்ல காரியத்தை நான் கடத்திக்கிட்டுப் போவானேன்? அவனுக்கும் வயசு ஆகலியா? வேலைன்னு பறந்துக்கிட்டிருந்தான். அதுவுந்தான் ஒண்ணு கிடைச்சுடுச்சு."

"இந்தா பாரு. பெண்புள்ளைங்க குணமே இதுதான். உறங்கிக்கிட்



எட்டாம் நம்பர் வீட்டில் தேவானை குடியிருந்து விட்டுப் போன நிகழ்ச்சி எங்கள் தெருவின் சரிதையிலேயே ஒரு ஒரு முனைத் திருப்பம். அந்தப் பெண் காலடி வைத்த மகிமையால்தான் . . .

. . . வேப்பந்தெரு விழித்தெழுந்தது!

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பும் எங்கள் வேப்பந் தெரு தினமும் காலையில் விழித்தெழுவதுண்டு—ஆனால் தினந்தினம் இரண்டு மணி நேரம் தாமதமாக. தெருத் திண்ணைகளில் சால்வைப் புழுக்களாக பற்பல உருவங்கள் முடங்கியிருக்கும். வீட்டு வாசலில் கோலம் போடவில்லையே என்று என் மனைவியை நான் கோபிப்பதில்லை: அது யார் வீட்டு வாசலிலும் காணப்பட்டதில்லை; வெடி மருந்து யுகம் வந்தபிறகு இந்தத் தெருவில் அவ்வப்போது டி.டி.டி மருந்து கிடைத்தாலும் கிடைக்குமேயொழிய பசிக்கு அரிசி மாவு கிடைக்காது என்று எறும்புகளுக்குத் தெரியும்.

“நல்ல காலம் வருகுது!” என்று அன்றாடம் முதல் குரல் கொடுக்கும் குடுகுடுப்பாண்டி, எங்கள் வீட்டுக்கு எதிரே காலியாகக் கிடந்த எட்டாம் நம்பர் வீட்டை எட்டிகூடப் பார்க்காமல் நகருவான். “எந்தப் பாவியோ புரளி கிளப்பினான். ஒரு வருஷ காலமா வீட்டை அண்டுவாரில்லை” என்று ஏங்குவார், வீட்டின்



DL/P.3A-19TM

சொந்தக்காரர். அதற்குப் பதிலளிப்பார் தெருக்கோடியிலிருந்த டாக்டரய்யா:

“அறியாமைப் பேயைத்தான் விரட்டணும் முதலிலே. அப்படிப்பட்ட காலம்—பாருங்களேன், நம்ப டிஸ்பென்ஸரியிலே ஒரு நாளுக்கு எத்தனை கேஸ்கள் வருது! அதிலே பாதிக்கு மேலே அநாவசியந்தான், சத்துக் குறைவு நோய்கள். சாப்பாட்டு விஷயத்திலேயே அறியாமைப் பேய் தாண்டவமாடறபோது மத்த விஷயங்களிலே கேக்கணுமா?”

பிறகு, திடீரென ஒரு நாள் விழித்துக்கொண்டது எட்டாம் நம்பர் வீடு. வாட்டசாட்டமான ஒரு அழகியும் அவள் கணவரும், ஒரு தள்ளாத கிழவியுமாகத் தங்கள் சாமான்களை வீட்டுக்குள் இறக்குமதி செய்த காட்சியை நாற்பது ஜோடிக் கண்கள் கழுகுகளைப் போல் கவனித்தன. பற்பல நாக்குகள் சூள்கொட்டின.

“மட்டையிருக்கிறதே கையில்; டென்னிஸ் ஆட்டக்காரியோ?” என்றது ஒரு பெண் குரல்.

“நிச்சயம் பரதநாட்டியம் தெரிந்தவளாக இருக்கவேண்டும். அளந்து வைத்தாற்போல் இருக்கிறதே அந்தத் தேகக்கட்டு!” என்று திண்ணையிலே துள்ளினார் ஒரு கலா விசிறி.

மறுநாள் காலை எட்டாம் நம்பர் வீட்டு வாசலில் ஓர் அழகான கோலம் தென்பட்டது. “நன்றாகத் தூங்கினீர்களா?” என்று தேவானையை விசாரித்தாள் என் மனைவி. அயர்ந்து தூங்கியெழுந்த ஆரோக்கியத்தின் மெருகுமிளிர தேவானையின் வதனம் ‘ஆம்’ என்பதற்கு அடையாளமாகப் புன்னகைப் பூத்தது.

“கோலம் போட்டிருக்கிறீர்களே. வீட்டில் ஏதாவது விசேஷமோ?”

“இல்லையே, தினந்தோறுமே நான் கோலம் போடுவது வழக்கம்!” என்றாள் தேவானை.

இந்தத் தெருப் பெண்மணிகளா இதை நம்பப்போகிறார்கள்? டென்னிஸ் ஆடும் கைதான் கோலம் போடுமோ, சமைக்குமோ. எல்லாமே அந்த வீட்டுக் கிழவியின் வேலையாயிருக்குமென்று வம்பளந்தனர். ஆனால் வம்புக்கும் தும்புக்கும் விடிவு வராமலாபோகும்?

ஒரு நாள் காலை விடியுமுன்னே விழித்துக்கொண்ட நான், ஜன்னல் வழியாகத் தென்பட்ட காட்சியை வியப்புடன் கண்டு, மனைவியை எழுப்பிக் காண்பித்தேன்.


விடிவெள்ளிக்கு முன் எழுந்து வீட்டு முகப்பிலே விளக்கமிட்டு, மாவெடுத்து இழை திரித்துச் சித்திரமெழுதியது அப் பத்தினியாளின் பைந்தளிர் விரல்கள். அவ் விரல்களுக்குக் கீழ்ப்படிந்த அரிசிமாவு விழிநிரம்பிய விசித்திரக் கோலமாக விரிவடைந்தது. “. . . கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை” என்ற வான் புகழ் வள்ளுவரின் வாக்கை வாழ்வாக்குவோர் முன்னிலையில் எந்தப் பேய்தான் துணிந்து நிற்கும்!

அவ் வருடம் வள்ளலைப் போல் பொழிந்தது வானம். அவதூறும் அகந்தையும் மழை நீரோடு கரைந்தோட, உள்ளங்களும் தெருவைப் போலப் பளிச்சிடத் தொடங்கின. “தேவானை சொல்கிறாள்” “தேவானை செய்கிறாள்” என்று அவளைப் பலரும் பின்பற்றலாயினர்.

ஒருநாள் நான் ஆபீசுக்குக் கிளம்புங்கால் என் மனைவி சொன்னாள்: “தேவானை ஒரு துளசிச் செடி வைத்திருக்கிறாள், பார்த்தீர்களா ‘டால்டா’ டப்பாவிலே. நம்ப அலமாரியிலே ரொம்ப நாளா தவங்கிடக்கே ஒரு ‘டால்டா’ டின், அதிலே இன்னும் கொஞ்சம் ‘டால்டா’ பாக்கியிருக்கு. ஏதாவது பட்சணம் பொரிச்சு அதைத் தீர்த்துப்புட்டேன்னா நானும் ஒரு செடி வைக்கலாம். அதனாலே இன்னிக்கு நீங்க ஆபீஸிலிருந்து வந்ததும் சோமாசி!”

அன்று நான் ஆபீஸிலிருந்து வந்ததும் வாசலில் சர மண்ணடைத்து வைத்திருந்த ‘டால்டா’ டின் கண்ணில் பட்டது. ஆனால் இரவுவரை எவ்வித சோமாசியும் கிடைக்காததைப் பற்றிக் கேட்டதும் அவள் கூறினாள்: “பொரிப்பதற்கும் தித்திப்புப் பண்ணுவதற்கும்தான் ‘டால்டா’ என்று நினைத்திருந்தேன். இன்றுதான், தேவானை சொன்னாள், எல்லா சமையலுக்கும் உபயோகிக்கலாமாம். நேரிலே ருசிபார்த்த பிறகு நம்பினேன். இன்னியிலேருந்து எல்லா சமையலுக்கும் ‘டால்டா’தான். வைட்டமின்கள் இருக்காமே அதிலே?”

“நெஜம்தான், கண்ணுக்கும் பல்லுக்கும், எலும்புக்கும் ஆரோக்கியம் தருகிற வைட்டமின்கள் ‘ஏ’ ‘டி’ இரண்டுமிருக்கு ‘டால்டா’விலே. இனிமேலே அந்த வைட்டமின்கள் நம்ப அலமாரியிலே டின்னுக்குள்ளே தூங்கவேண்டியதில்லையே!” என்றேன். அன்றுமுதல் ருசிருசியாக நானாவித ஆகாரங்கள் மூலமாக உடம்புக்கு நிறைய அளவிலே வைட்டமின்கள் கிடைக்கலாயின.



மேலும் ஒரு வருடம்! அதன் பன்னிரு மாவிரல்கள் எங்கள் தெருவிலே எத்தனையோ மாறுதல்களைச் செய்து சென்றன. அப்புறம் ஒரு நாள் . . .

. . . எட்டாம் நம்பர் வீடு காலியாகியது. வேறிடம் சென்றுவிட்டாள் தேவானை, பேரீச்சை மரப் படமிட்ட மஞ்சள் நிற டப்பாவில் மங்களகரமான துளசிச் செடியொன்று பின் தங்கியிருந்தது. ஆம். அவள் விதைத்த நல்வித்து ஆரோக்கியமாக உருவெடுப்பதன் சின்னம். அந்தச் சின்னத்திலே மிளிருகிறது . . .

. . . எங்கள் வேப்பந்தெரு விழித்தெழுந்த கதை...


. . . “விசேட நாட்களுக்குமட்டுமல்ல, அன்றாடமும் காட்சி தருவேன்” என்ற பாவனையில் வீட்டுவாசல் தோறும் அன்றாடம் காலை விழிநிரம்பிய கோலங்களாக விழித்தெழுந்த வீதியின் விந்தைக் கதை!

DL/P. 38-19 TM

இந்துஸ்தான் லீவர் லிமிடெட், பம்பாய்



திருச்சி மௌன மடம் திரு கோபாலன் அவர்களது குமாரன் திரு பாலகிருஷ்ணனுக்கும் கங்காவுக்கும் வெகுசிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.



ஸ்ரீரங்கம் ஹைஸ்கூல் ஆசிரியர் திரு வெங்கட்ராமய்யரது புதல்வி சௌ. அகிலாண்டேசுவரிக்கும் கல்கத்தா கல்வி பிரதிநிதி திரு ஜி. ஆர். ராமசுவாமிக்கும் திருமணம் நடந்தது.



வாமன் ஸ்டுடியோ போட்டோகிராபர் திரு பாஸ்கரனுக்கும் சௌ. ஸதிதேவிக்கும் விவாகம் நடைபெற்றது.

டிருந்தா உறங்கிக்கிட்டிருப்பீங்க. விழிச்சு எழுந்திரிச்சா ஒரேயடியா காலிலே கஞ்சியைக் கவுத்துக்கிட்டுப் பறப்பீங்க. நீ படுற அவசரத்தைப் பார்த்தா, இப்போ ராத்திரியே போயி, பொண்ணு கேட்டுட்டு வாங்க என்பே போலிருக்கே!"

"பார்த்தியளா, பார்த்தியளா. நீங்க பாட்டுக்கு நீங்க சொல்லுவதையேதானே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கிட்டு இருக்கிறீங்க. அட, ஒருத்தி அடிச்சுச் சொல்லுறாளே, அதிலே ஏதாச்சும் சங்கதி இருக்கும் என்கிறது மட்டும் இந்த ஆண்பிள்ளைகளுக்கே ஒருநாளும் படாதோ?"

"அடடா! நீ என்ன மரகதம், சும்மா நீட்டிக்கிட்டே போறே, எனக்கு என்னவோ ஒண்ணும் தெரியாத கணக்கிலே. சங்கதியாம், சங்கதி! என்னம்மா சங்கதி, இப்போ, இத்தனை நாளும் இல்லாத அவசரமா, உடனே மகனுக்குக் கல்யாணத்தை முடிச்சுடு!"

"அப்படிக் கேளுங்க, சொல்லுறேன். இன்னைக்கு என்ன நடந்துச்சாம், தெரியுமா?"

"என்ன நடந்துடிச்சாம்?"

"வீணா ஆகாமப் போன பொண்ணு; சுந்தரம் முதல் முதலிலே வேலைக்குப் போறபோது அதைக் கூட்டிக்கிட்டுப் போக வேண்டாமின்னு அத்தனை சொல்லி அனுப்பினோமே. உங்க மகன் அவங்க வீட்டுக்குப் போய், 'அவள் வராட்டி நான் வேலைக்கே போகமாட்டேன்'னு 'ஆகாத்தியம்' பண்ணினானும். கடைசியிலே அவரு—மாலாவின் மாமா—'நீ முன்னாடி போ தம்பி; வீணாவைப் பின்னாலே வண்டியிலே அனுப்பறேன்'னு அனுப்பினாராம். சாயங்காலம் மாலா வந்து சொல்லிச்சு. எதுக்காக உங்க மகன் இப்படி அயலார் வீட்டுக்குப் போய் ஆகாத்தியம் பண்ணணும்?" என்று கேட்டாள்.

"அதுக்காக அவனுக்கு உடனே கல்யாணத்தை முடிச்சுடணும் என்கிறாயா? நல்ல பைத்தியம் உனக்கு!"

"ஆமாங்க; எனக்குப் பைத்தியந்தான். ஆனா, இப்போ இந்தப் பைத்தியத்தின் பேச்சைக் காதிலே போட்டுக்கிடாமல் தப்புத் தண்டாவா ஏதாச்சும் நடக்க இடம் கொடுத்தீங்க, பிறகு உங்களுக்குத்தான் பைத்தியம் புடிச்சுடும். ஆமாம் சொல்லிட்டேன்."

"இது என்ன மரகதம், சுத்தக் காட்டான் கணக்கிலே பேசுறே? நேத்து அவன் அவளைக் கூட்டிக்கிட்டுப் போறேன்னு சொன்னான். இன்னைக்கு நாம் கூடாதுன்னோம். அதுக்காகச் சின்னப் பிள்ளை வீம்பிலே போய் இப்படிப் பண்ணியிருக்கான். அதுக்கு நீ என்னவோ தப்பு என்கிறே! தண்டா என்கிறே! சே! சே! உன் மகனைப்பற்றி நீயே இப்படி நினைக்க வெக்கமாயில்லே!"

"ஆமாம்! வெக்கமும் மானமும் பார்த்துக்கிட்டிருந்தா, நாளைக்கு ஊர்ச் சிரிப்புக்குத் தான் ஆளாகணும். அவனும் சின்ன வயசு, அதுவும் சின்ன வயசு; போதாமல் படிச்ச பொண்ணு. நம்ம

பின்னே ஒழுங்கா இருந்தான்னாலும், அந்தப் பெண்ணின் மனசை நாம் என்ன கண்டோம்? ரெண்டும் ஒரே இடத்திலே உத்தியோகம் செய்யப் போகுது.''

''இருந்தாலும், நீங்க பெண்பிள்ளைங்க இருக்கிறீங்களே, உங்களைச் சந்தேகம் என்கிற கண்மண்ணிலேதான் பண்ணி யிருக்கிறான் அந்தப் பிரும்மதேவன். ஏன் மரகதம், அப்படி அவங்க முறை தவறிப் போகிறதாக இருந்தால், கல்யாணம் முடிஞ்ச பிறகு மட்டும் போகமாட்டாங் களோ? என்னவோ கதை பேசுறியே!''

''ஆமாம், உடனே இப்படி ஒரு பேச்சுப் பேசிடுவீங்க. ஏங்க, என்ன இருந்தாலும் நெய்யைத் தாராளமா விட்டுச் சாப்பிடுற பின்னே எங்கேயாச்சும் எண்ணெயைத் தேடிக்கிட்டுப் போகுமா? நீங்க, வெண் ணெய் நம்ம கையிலேதான் இருக்கு துன்னு, அதைக் காய்ச்சிப் பிள்ளைக்கு ஊத்திக் கொடுக்காமப் பொத்தி வைச்சுக் கிட்டிருந்தீங்கன்னு, அவன் மனசு எண்ணெயோ, தண்ணியோ, எது கிடைச் சாலும் போதுமின்னு நினைக்கத்தானே நினைக்கும்? அது என்னவோ நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிட் டேன். நமக்கு இருக்கிறது ஒன்னே ஒன்னு. அதுக்கு ஊரு மெச்சும்படியாக் கலியாணத்தை முடிச்சு, ஊரு மெச்சும் படியா வாழப் பண்ணணும். நெருப் புன்னு தெரிஞ்சிக்கிட்டு அதுங்கிட்ட பிள்ளையை விளையாட விட்டுட்டு, பிறகு, 'சுட்டுடிச்சே!'ன்னு அடிச்சிக்கிட்டிருக் கக் கூடாதில்லே!''

''அட போதும், மரகதம், போதும். நீ ஒண்ணைப் பிடிச்சிக்கிட்டா, அதை நடத் திப் பார்க்காட்டி விட மாட்டே. இப்போ உனக்கு என்ன வேணும்? மகனுக்கு மாலாவைப் பெண் கேட்கணும்; அவ் வளவுதானே? பொழுது விடியட்டும்; குருக்களைய்யாவைக் கூட்டிக்கிட்டு வந்து ஒரு நாளு பார்த்துக்கிட்டு, நீயும் நானும் ஒண்ணாகவே போய்க் கேட்டுட்டு வந்துட லாம். அதுக்காக வேண்டாத கவலை யெல்லாம் கிளப்பி மனுசனை ராத் தூக்க மில்லாமெ அடிக்காதே; பேசாம உறங்கு. உன் மனம்போலே எல்லாம் செய்துடு வோம்'' என்றார் புஷ்பவனம் பிள்ளை.

மேலே மாடியிலிருந்து இத்தனை பேச்சையும் கேட்டுக் கொண்டிருந்தான் சுந்தரம். அவன் எது நடக்கக் கூடாது என்று வேண்டிப் பிரார்த்தித்துக் கொண் டானோ, அதுவே நடக்கப் போகிறது. இதை விதி என்பதா? சோதனை என்பதா? வேதனை என்பதா?


எதாக இருந்தாலும் சரி, அவன் தீர்மானம் நிறைவேற வேண்டுமென்றால், போராட்டம் நடைபெற வேண்டுமென் றால், இந்த முதல் முட்டுக்கட்டையைத் தாற்காலிகமாகவாவது அகற்றித்தான் ஆக வேண்டும். கலியாணப் பேச்சை எடுத்து விட்டால் போதும், மாலா மட்டும் என்ன, தையல்நாயகியும் சரி, சச்சிதானந்தமும் சரி, உடனடியாகச் சம்மதம் அளித்து, ஏற்பாடுகளையும் தொடங்கித்தான் விடு



சத்தூ ஸெயிண்ட் ஓர்க்ஸ் மெக்கானிக்கல் எஞ்சினீயர் திரு கே. டி. நடராஜன் பி. ஈ.க்கும் சௌ. சகுந்தலாவுக்கும் சிறப் பாகத் திருமணம் நடந்தது.



திரு மணவாளன் அவர்களது புதல்வர் திரு சீனிவாசனுக்கும் சௌ லக்ஷ்மி காந்தத்துக்கும் திருமணம் வெகு சிறப் பாக நடந்தேறியது.



ராமசேஷய்யர் குமாரி சௌ சாந்திக்கும் திரு கே. ராமமூர்த்திக்கும் விமரிசையாக விவாகம் நடைபெற்றது.

வார்கள். ஆதலால், இவர்களுடைய தீர்மானங்கூட அவர்கள் வரையில் எட்டிவிடக்கூடாது. எட்டிவிட்டால் அவனுடைய உறுதியின் அஸ்திவாரமே பெயர்ந்துவிடும். எந்த விஜயாவை அவன் லட்சியப் பொருளாக்கிக் கொண்டிருக்கிறானோ, அவளே அவன் போக்கில் சந்தேகம் அடைவாள். எச்சரிக்கை அடைவாள். பிறகு அவனை அருகில் நெருங்கக்கூட விடமாட்டாள். எனவே, தான் பயிரிட நினைத்த வாழ்க்கை வயலிலே, விதை விதைக்கு முன்பே களையாக முளைத்துள்ள இந்தத் திருமணத் திட்டத்தை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும்.

ஆம், கிள்ளி விடத்தான் வேண்டும். ஆனால் எப்படிக் கிள்ளி எறிவது? அதற்குரிய வழியைச் சிந்தித்துச் சிந்தித்துத்தான் அவன் அன்றிரவு முழுவதும் உறக்கமின்றிக் குழம்பினான். எப்பொழுது உறங்கினான் என்பது அவனுக்கே தெரியாது. ஆனால் உறக்கம் கொள்ளுமுன் அவன் தாற்காலிகமாக இந்தக் கல்யாணத்தை நிறுத்த ஒரு வழி கண்டுவிட்டான். அது நேர்வழி அன்று; குறுக்கு வழி. புரட்டு வழி. ஆயினும் அந்தக் குறுக்கு வழியும், புரட்டு வழியுந்தாம் அவனுக்கு அப்பொழுது புகலாக இருந்தன. ஆகையால் அவற்றைத்தான் அவன் பின்பற்றியாக வேண்டும்.

பின்பற்றினான். மறுநாள் காலையில் தன் தந்தை அம்பலவாணக் குருக்களை அழைத்துவரப் புறப்பட்ட சமயத்தில் சரியாக அவர் முன்னே வந்து, "எங்கே அப்பா போறீங்க?" என்று கேட்டான்.

"காசமாப் போச்சு போ! முதல் முதலிலே புறப்பட்டுக்கிட்டு இருக்கிறபோதே எங்கே போறேன்னு கேட்டுட்டியில்லே!" என்று அலுத்துக்கொண்ட அவர் திரும்பித் தமது கட்டிலுக்கு வந்து உட்கார்ந்து கொண்டு, "ஏ மரகதம்! அங்கே என்ன செய்துகிட்டிருக்கிறே? குடிக்கக் கொஞ்சம் தண்ணி எடுத்துக்கிட்டு வா, சட்டுனு" என்றார்.

"என்னப்பா விஷயம்?" என்று கேட்டான் சுந்தரம்.

புஷ்பவனம் மரகதத்தம்மாள் கொண்டு கொடுத்த தண்ணீரைக் குடித்து விட்டு விஷயத்தைச் சுந்தரத்திடம் சொன்னார். அவன் அதை அப்பொழுதுதான் அறிந்தவன்போல், தலையாட்டிக் கொண்டு, "அப்போ, நான் 'எங்கே போறீங்க?' என்று கேட்டதிலே சகுனத் தடை ஒன்றும் இல்லே, அப்பா. எனக்கு இன்னும் ஒரு வருஷத்துக்குக் கல்யாணம் - கார்த்திகை ஒன்றும் வேண்டாம்" என்று மறுத்தான்.

"ஏண்டா வேண்டாம்?" என்று வியப்புடன் வினவினாள் மரகதத்தம்மாள்.

"வேலை காயமான பிறகுதான் அதைப் பற்றி நான் ஆலோசிக்க முடியும்."

"வேலை காயமாகிறதுக்கும் இதுக்கும் என்னடா சம்பந்தம்?"

"அது காயமாகிறதுக்கு முன்னால் கல்யாணம் செய்துகொண்டு, காயமாகாமல் போய்விட்டால், எல்லாரும் வந்த பெண் அதிர்ஷ்டக்கட்டை என்று தூற்றுவீங்க. ஏதுக்கு வம்பு?"

"ஏன் சுந்தரம், அப்படின்னு வேலை காயமாகிறதிலே ஏதாச்சும் தகராறு இருக்குதா?" என்று கவலையுடன் கேட்டார் புஷ்பவனம்.

"ஆமாம் அப்பா; நேற்றுப் பிரதம இன்ஜினியரைப் போய்ப் பார்த்தபோது, அவர், 'போயும் போயும் இந்த வேலைக்கு வந்து சேர்ந்திருக்கிறியே அப்பா; இதிலே வந்து சேர்ந்தவங்களையெல்லாம் ஆறு மாதத்துக்கு மேலே நிலைக்க விடாமல் சீட்டுக் கொடுத்துக்கிட்டே இருக்கிறாங்களே, நம்ம இலாகாக்காரங்க' என்றார். அதனால்தான் கல்யாணத்துக்குக் கொஞ்சகாலம் போகட்டும் என்கிறேன்."

"அப்படீன்னு ஏண்டா இந்த வேலைக்கு வந்தே? வேறே வேலை தேடிக்கிட்டிருக்கப்படாதா?" என்று சுவாரசியம் குன்றிக் கூறினாள் மரகதத்தம்மாள்.


"ஆமாம், வேறே வேலை நாம் போய்க் கேட்டதும் தயாராக வைச்சுக்கொண்டு இருக்கிறாங்க. ஆறு மாசமோ, ஒரு வருஷமோ ஒரு இடத்திலே இருந்து வேலையைப் பழகிக் கொண்டாலும் தைரியமாக வேறே வேலை தேடலாம். அதுவும் தவிர புங்கனூற்றிலே வேலை கிடைச்சதுனாலே வீட்டோட வாசலோட இருக்க முடியுது. வேறே வேலை என்றால் வேறே எங்கேயாவதுதானே போகணும்? ஓடுகிற மட்டும் ஓட்டும். வீட்டோடு இருந்து வேலையைக் கற்றுக் கொள்ளலாம் என்றுதான், பரவாயில்லை என்று ஒப்புக்கொண்டேன். என்னவோ அம்மா, நம்ம அதிர்ஷ்டம் நான் இங்கேயே ஒட்டிக்கொண்டு விட்டாலும் போயிற்று. ஆனால் ஒட்டிக்கொண்டு விடுவோம் என்று நம்பி ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு விட்டு, பிறகு வேலை போய் அவளைப் பேச்சுக் கேட்கவிட எனக்குப் பிரியமில்லை. அம்மா! மாலா எங்கேயாவது ஓடியா போய்விடப் போகிறாள்? ஒரு வருஷம் போகட்டும்; பிறகு போய் அவர்களிடம் இவ்விஷயமாகப் பேசுங்கள். இப்பொழுது கூடாது. இந்த நினைவு நமக்கு இருக்கிறது என்பதுகூட அவர்களுக்குத் தெரியக்கூடாது."

அவன் கூறியது புஷ்பவனம் பிள்ளைக்கு நியாயமாகவே பட்டது. தவிர, முதன் முதலில் கல்யாண விஷயமாகப் புறப்பட்டபோது சகுனத்தடை ஏற்பட்டது வேறு அவருக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் இன்னும் விடாப்பிடியாக மகனுக்கு உடனே திருமணத்தை நடத்திவிடத்தான் வேண்டும் என்று அடம் பிடித்த மரகதத்தம்மாளை அவரே அதட்டி அடக்கினார்.


சுந்தரம் தன் முதல் முயற்சி வெற்றி தந்துவிட்டது என்று களிப்படைந்தான். வினை நிலத்திலே முளைத்த களையைப் பிடுங்கி எறிந்துவிட்டோம் என்று பெருமிதம் கொண்டான். ஆனால் அவன் களையைப் பிடுங்கி எறிந்தானா? அல்லது களை முளைக்க வித்திட்டானா? (தொடரும்)


ஐயோ இருமல் கொல்கிறதே
EPHRILIME
எப்ரிலைம்
அவரது ஆஸ்த்மா உபாதைகளை குணப்படுத்த எப்ரிலைம் மிகச் சிறந்தது. ஒரு பாட்டில் மருந்தை உபயோகித்தால் அதன் பூரண பலன்களைக் காண்பார்.
நீண்டநாள்பட்டதும், மிக்க உபாதை தரக்கூடியதுமான மார்ச்சளி, ஆஸ்த்மா முதலிய நோய்களுக்கு ஓர் சிறந்த ஹானியற்ற மருந்து
யூனியன் டிரக் கம்பெனி, லிட்.
மதராஸ் டிப்போ: 2, ஜோன்ஸ்லேன், மதராஸ்-1


LICHENSA
படை சிரங்கு
(ECZEMA)
முதலிய சரும வியாதிகளுக்கு
லிச்சென்ஸா
உபயோகியுங்கள்
எங்கும் கிடைக்கும்
விசேஷ டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
மகாராஜா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் லிமிடெட்
54, பேங்க்ஷல் தெரு, கொழும்பு


ஆரியன்
உங்கள் பற்களுக்குப் பொருத்தமானவை
உங்கள் பற்களின் பாதுகாப்பை சரியான அமைப்புள்ள ஆரியன் பிரஷுக்கு விட்டுவிட்டீர்களேயானால், அது உங்கள் பற்கள் முழுவதையும் முற்றிலும் நன்றாகச் சுத்தி செய்யுமென்பதை நீங்கள் உறுதி செய்துகொள்ளலாம்.
ஸ்டாண்டர்டு சைஸிலும் சிறிய சைஸிலும் கிடைக்கும். மிகவும் நேர்த்தியான உயர்ந்த ரகம்-பிளாஸ்டிக் பெட்டியில் கிடைக்கிறது.
நன்றாகச் சுத்திசெய்கிறது, நீடித்து உழைக்கக் கூடியது.
Aryan
aryan
பலனளிக்கும் சோப் நுரைக்கு ஆரியன் ஷேவிங் பிரஷையே எப்பொழுதும் உபயோகியுங்கள்.

எத்தனை விரைவாக வளருகிறான்!



...ஆனால் அவனுடைய ஆடைகள் அதைவிட விரைவாகச் சுருங்குகின்றன. பருத்தித் துணியினாலான ஒரு ஆடை உடம்புக்குப் பொருந்தாத படி சுருங்க ஒரே ஒரு நாள், ஒரேயொரு சலவை போதும்! ...பருத்தித் துணியோ, தயாரான ஆடைகளோ வாங்கும் போது, 'ஸான்பொரைஸ்ட்' முத்திரை இருக்கிறதா என்று கவனித்து வாங்காவிட்டால் தான் இந்தக் கதை. உங்கள் உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி ஒருபோதும் சுருங்காது என்பதற்கு உத்தரவாதம் அம்முத்திரை. ஆம் பலப்பல சலவைகளுக்குப் பிறகும்தான்!

லேபில் மேல்

·SANFORIZED·

என்ற முத்திரையுள்ளதா என்று பாருங்கள், உங்கள் உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்காது.

'ஸான்பொரைஸ்ட்' என்ற ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்கின் சொந்தக்காரர்களான க்ளுயட் பீபாடி அண்டு கோ, இன்கார்பொரேடட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. வில் இணைக்கப் பெற்றது) அவர்களால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கம்பெனியின், 'சுருங்காது' என்பதற்கான கடும் நிபந்தனைகளுக்குட்பட்டுத் தயாரிக்கப் படும் துணிகளில் மட்டுமே 'ஸான்பொரைஸ்ட்' டிரேட் மார்க் உபயோகிக்க அனுமதிக்கப்படுகிறது.

விவரங்களுக்கு 'ஸான்பொரைஸ்ட்' ஸர்வீஸ், 95, மெரீன் டிரைவ், பம்பாய்-2.

SAN-58-1A-TAM





பெண் குலத்தின் பொன் விளக்கு

பழைய கதைகளே மீண்டும் மீண்டும் படமாக்கப்படுகின்றன என்று பொதுவாக எல்லோரும் குறை சொல்லுகிறார்கள். ஆனால் ஒரு முறை படமாக வெளிவந்த கதைகளே மறுபடியும் படமாக்கப்படுகின்றனவே, அதற்கு என்ன சொல்லுவார்களோ!


கற்பனை வறண்டு விட்டதா? அல்லது சமூகத்தின் போக்கைக் கண்ணுற்று அதைக் கதையாகச் சித்திரிக்கும் திறன் தான் குறைந்து விட்டதா? ஏன்தான் இப்படித் 'தோசை திருப்பல்' முறையில் ஒரே கதையை மாற்றி மாற்றி இப் படாதிபதிகள் படமாக்குகிறார்களோ, புரியவில்லை! பொது மக்களும், விமர்சகர்களும் எத்தனை தடவை அலுத்துக் கொண்டாலும் இந்தப் படாதிபதிகள் 'சித்தம் போக்கு சிவன் போக்கு' என்று போவதைப் பார்த்தால், தமிழ்ப்பட உலகத்தின் முன்னேற்றம் சமீபத்தில் இல்லை யென்றே எண்ணத் தோன்றுகிறது.

அடங்காப் பிடாரியை ஒருவன் மணந்து கொண்டு அடக்கித் தன் வழிக்குக் கொண்டு வருவது என்பது மிகப் பழைய கதை. நம் நாட்டுப் பண்டைக் காலத்துப் பாட்டியிலிருந்து மேல் நாட்டு நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர் வரையில், அந்தக் கதையைப் பலவிதமாக எழுதியிருக்கின்றனர்.

மாதுரிதேவி நடித்து, சமீபத்தில் வெளிவந்து போய் விட்ட "மாலா ஒரு மங்கல விளக்கு" என்ற படம் நீலியை மணந்து பணிய வைத்த கதைதான்.

அதே கதையில் சில மாறுதல்களைப் புகுத்தி, அசோகா பிக்சர்ஸார் 'பெண் குலத்தின் பொன் விளக்கு' என்ற தலைப்பில் துணிந்து வெளியிட்டிருக்கின்றனர். துணிந்து மறுபடியும் புனையும்படி அந்தக் கதையில் அப்படி என்ன விசேஷம் இருக்கிறது என்பதுதான் நமக்குவிளங்கவில்லை.

ஆனால் இது முதல் படம் மாதிரி படு தோல்வி அடைந்துவிடவில்லை யென்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். அதற்கு முக்கியமாகக் குறிப்பிடக்கூடிய காரணம் பிரபல



தமிழ்ப்பட நடிகர்கள் இந்தப் படத்தில் நடித்திருப்பதுதான்.

வில்லனாகவே நடித்துப் பழகிவிட்ட எம். என். நம்பியார் வேறு மாதிரி பாகங்களை ஏற்றால் எப்படி நடிப்பார் என்று நான் அடிக்கடி நினைத்துப்பார்ப்பதுண்டு.

மிடுக்கும் துடுக்குமாக நடிக்கும் நம்பியார் தமது பழக்கமான வேஷத்தையும் முகபாவத்தையும் அடியோடு மாற்றிக் கொண்டிருக்கிறார் இந்தப் படத்தில். சபாரத்தின முதலியாரின் கணக்குப் பிள்ளையாக வருகிறார். நல்லவராகவே நடிக்கிறார் கடைசி வரையில்.

எம். என். நம்பியாரின் நடிப்புத்தான் படத்துக்கே ஜீவநாடியாக விளங்குகிறது. கண்ணாடியைத் தள்ளி விட்டுக் கொண்டு அவர் பார்க்கும் பார்வையும், பேச்சும் கணக்குப் பிள்ளை உத்தியோகத்துக்கு ஏற்ற வேஷமும் எல்லாம் பொருத்தமாயிருக்கின்றன. அந்தப் பாகத்தை மிகவும் இயல்பாக நடித்திருக்கிறார்.

ஸ்ரீரஞ்சனி ஒரு நல்ல நடிகை. உருக்கமும் உணர்ச்சியும் கொண்ட நல்ல பாத்திரமாகத்தான் அவரால் நடிக்க முடியும். ஆனால் மயக்கும் வில்லியாக வருவதற்கு அவர் சிறிதும் தகுதியுடையவரல்ல.

தேவியிடம் உருக்கமாகப் பாடி வழிபடும் போதும், வேலையை இழந்த கணவனின் மனவேதனையை மாற்றி ஆதரவாகப் பேசும் போதும், காமுகன் வரதராஜனை வழிப்படுத்தி மனிதனாக்கிய போதும் ஸ்ரீரஞ்சனியின் நடிப்பு சிறந்து விளங்குகிறது. அவரைப்பற்றி இத்தனை சொன்ன பிறகு அவர்தான் பெண் குலத்தின் பொன் விளக்கு என்பதைத் தனியாக ஒரு முறை கூற வேண்டுமா?

ஜெமினி கணேசன் இந்தப் படத்தில் முற்றிலும் புதிய பாகத்தை ஏற்றிருக்கிறார். சபாரத்தின முதலியாரின் பெண்ணான கலாவல்லியின் கரம் பற்றும் கணவன் கோதண்டமாக வருகிறார். கலாவுக்குப் பாட்டுசொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயராக வந்து நல்ல அடி வாங்கிக் கொள்கிறார். நன்றாகவும் நடிக்கிறார்.

படம் பல இடங்களில் அசம்பாவிதமாகப் போகிறது. அளவுக்கு மீறிய 'கலாட்டா' சிரமமாயிருக்கிறது.

கலாவல்லியாக வந்து பெண்ணுரிமையைப் பற்றிப் பேசி அமர்க்களம் செய்யும் எம். என். ராஜம் பாராட்டும் வண்ணம் நடித்திருக்கிறார்.

மாதர் முன்னேற்ற சங்கத்தின் தலைவி லலிதாவாக வந்து கணவனைக் கைவிட்டுக் கண்டவனோடு கொஞ்சும் காரிகையாக நடிக்கும் கே. வி. சாந்தி நன்றாகத்தான் நடித்திருக்கிறார். ஆனால் மணமான மங்கை தனது கணவனை மதிக்காமல் துணிந்து நெறி தவறிப் போவதைப் பகிரங்கமாகக் காட்டத்தான்வேண்டுமா? அந்தக் காட்சிகள் மனத்துக்கு அருவருப்பை அளிக்கின்றன.

அதே மாதிரி இன்னொரு கட்டம். வரதராஜன் பார்வதியைக் கெடுக்க முயலும் காட்சியையே குறிப்பிடுகிறேன். பெண்மை சீறி எழுந்து ஆணின் வெறிக்குப் புத்தி புகட்டுவதாகக் காண்பிக்கப்பட்டாலும் அதுவும் மனத்துக்கு அருவருப்பாகத்தானே இருக்கிறது! மேலும் இது மிக மிகப் பழைய காட்சி!

ஸ்ரீரஞ்சனியின் கணவனாக வந்து பல விதத்திலும் துன்பப்படும் பி. வி. நரசிம்மபாரதியின் நடிப்பு நன்றாயிருக்கிறது.

மாதர் முன்னேற்ற சங்கத்தின் ஆண்டு விழாவின் போது நடக்கும் நடனம் நன்றாயிருக்கிறது. குமாரியும் மாதங்கியும் நடனவிருந்தளிக்கின்றனர்.

படத்தின் வசனத்தை முகவை ராஜமாணிக்கம் நன்றாய் அமைத்திருக்கிறார்.

டைரக்ஷனைப் பற்றியோ, வேறு கலைநுணுக்கங்களைப் பற்றியோ விசேஷமாகக் குறிப்பிடுவதற்கு ஒன்றும் இல்லை.

"பெண் குலத்தின் பொன் விளக்கு" உண்மையில் ஒரு பித்தளை விளக்குத்தான்! பல இடங்களில் புளியிட்டுத் தேய்த்தால் பளிச்சென்று தெரியலாம். ஆனால் அதைப் பொன் விளக்காக மாற்றுவதற்கு இன்னும் என்னென்னவெல்லாமோ தேவைப்படுமே!

B. T. S. L. C. தேர்வில் பெரு வெற்றி பெற **BASIC T. S. L. C.**

லிப்கோ துணை நூல்கள்


— ஆதாரப் பயிற்சி பெறும் ஸீனியருக்கும் ஜூனியருக்கும் பெரிதும் பயன்படுபவை —

1. கல்வி உளநூலும் குழந்தை இயல்பும் ... ரூ. 1.50
2. கற்பிக்கும் முறைகள் (சிறப்பு, பொது) ... ரூ. 1.50
3. ஆதாரக் கல்வியின் தத்துவங்கள் ... ரூ. 0.90
4 ஆதாரப் பள்ளி ஆட்சி ... ரூ. 0.80
5. METHODS OF TEACHING ENGLISH (ஸீனியருக்கு மட்டும்) ரூ. 1.75

லிப்கோ சென்னை-17; M. தாமோதரம் கம்பனி, அப்பா பில்டிங், சென்னை-1; [illegible] & [illegible] விற்பனை நிலையங்கள்: கிருஷ்ணஸ்வாமி கம்பனி, தெப்பக்குளம், திருச்சி-2; C. R. நடராஜன், கோயமுத்தூர்; கவிதா பதிப்பகம், ராஜ வீதி, கோயமுத்தூர்; சந்திரப்ப செட்டியார், கோட்டை, சேலம்-1; நடனசுந்தரம், புதுமண்டபம், மதுரை; S. M. ஜெகநாதம், நாகர்கோவில்.

மறுபடியும் **ஆச்சரியப்படும்படியான**

ஆரோக்கியத்துடன் இருங்கள்



வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

ஆரோக்கியத்தை அளிக்கும் சிறந்த டானிக் என்று நிரூபணம் செய்யப்பட்டது. அதை ஆரோக்கியத்துடன் இருக்க விரும்புவோர்களும் அவர்களது குழந்தைகளும் உலகமெங்கும் தினசரி உபயோகப் படுத்துகிறார்கள்.

வாட்டர்பரீஸ் காம்பவுண்டில்

போஷாக்கை ஊட்டும் கலவைகள் இருக்கின்றன. அவைகள், நீங்களும், உங்கள் குடும்பத்தினரும் வீர்யத்துடனும், ஆரோக்கியத்துடனும் சந்தோஷத்துடனும் இருப்பதற்குத் தேவையான அதிகப்படி சக்தியை அளிக்கின்றன.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

இடைவிடாதிருந்து வரும் இருமலையும், ஜலதோஷத்தையும், தொண்டைப் புண்ணையும் போக்குகிறது. நோயுற்று குணமடைந்தபின் உடம்பு சீக்கிரமாகத் தேற்றுவதற்கு டாக்டர்களால் சிபார்சு செய்யப்படுகிறது.

மோசடி செய்ய முடியாத மூடியுடைய பாட்டில்களில், புதியசிகப்பு லேபில்களுடன் இப்பொழுது விற்பனைக்குக் கிடைக்கும்.



இப்பொழுது சிகப்பு தாளில் பாக்கிங் செய்யப்படுவதில்லை.

நீங்களும் ஆரோக்கியத்துடன் இருக்க நாவிற்கினிய

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

சாப்பிடுங்கள்



கோமதி! அந்த வெற்றிலைச் செல்லத்தை எடுத்துக் கொண்டாம்மா!'' பத்தமடைப் பாயை விரித்துப்போட்டுக்கொண்டு, ''முருகா!'' என்ற மூச்சுடன் சாவகாசமாக உட்கார்ந்தார் கந்தையா பிள்ளை.

கோமதி வெற்றிலைச் செல்லத்தைக் கொண்டு வந்து அவர் எதிரில் வைத்தாள். பாக்கை எடுத்து வாயில் போட்டுக் 'கடுக்'கென்று கடித்துக் கொண்டே, ''உன் அண்ணன் கடைக்குப் போயிட்டானா?'' என்று கேட்டார்.

''இல்லே, அப்பா! காமிராவை எடுத்துக்கிட்டு எங்கோ போவுது.''

''இவனுக்கு ஒரு காமிரா வந்து சேர்ந்தது. கொஞ்சமாவது பொறுப்பில்லாமல் திரிகிறானே! இவன் கடையைக் கொஞ்சம் கவனிச்சா எவ்வளவு நல்லா இருக்கும்? அதில்லாம ஆத்தையும், குளத்தையும் படம் எடுத்துக்கிட்டு ... சரி போகட்டும். உன் அம்மா சத்தத்தையே காணலியே! எங்கே போயிருக்கா?''

''ஆத்துக்குக் குளிக்கப் போயிருக்கா, அப்பா!''

''பம்புலே குளிச்சா உன் அம்மாவுக்கு ஆகாதோ? ஆத்துக் குளிப்பு வேற வேண்டிக் கிடக்கோ அவளுக்கு?''

''இன்றைக்குக் கடைசி வெள்ளிக்கிழமை! அதனால்தான் அம்மா ஆத்துக்குக் குளிக்கப் போயிருக்கா.''

''கடைசி வெள்ளிக்கிழமையா? அடடா! மறந்தே போயிட்டேனே! திருச்செந்தூருக்குப் போய்விட்டு வரணும்னு இருந்தேனே!''

''குறுக்குத் துறைக்குப் போங்களேன், அப்பா! திருச்செந்தூர் மூலவிக்கிரகமே குறுக்குத்துறைக் கல்லிலே செய்ததாகத் தானே எல்லோரும் சொல்றாங்க.''

''என்ன இருந்தாலும் அந்தக் கடற்கரையில் 'அவன்' கொலுவிருக்கும் அழகான காட்சியை வேறெங்கேயும் காண முடியுமா?''

''அதோ அம்மா வந்துட்டாப்பா!''

அவர் வாசலை எட்டிப் பார்த்தார். குடத்தை இடுப்பில் சுமந்துகொண்டு நடக்க முடியாமல் வந்து கொண்டிருந்தாள் அவர் மனைவி பார்வதி.

''இந்தாங்க திருநீறு. இன்றைக்கு ஆத்தில் எவ்வளவு கூட்டம்! குறுக்குத் துறை கோவில் என்ன கனியாக இருக்கிறது தெரியுமா?'' என்று கூறிக் கொண்டே பார்வதி விபூதிப் பிரசாதத்தை அவரிடம் கொடுத்தாள்.

''முருகா!'' என்று ஜெபித்துக் கொண்டே நெற்றியில் விபூதியைப் பூசிக் கொண்டார் கந்தையா பிள்ளை. பார்வதி அம்மாள் கோமதியின் நெற்றியில் விபூதியைப் பூசிவிட்டுக் கந்தையா பிள்ளையின் எதிரில் வந்தாள்.

''இந்தாங்க, நம்ம கோமதிக்கு வயசாகிக்கிட்டே வருதே. இன்னும் கவனிக்காம இருக்கிங்களே! எதிர்வீட்டுப் பையன் செந்திலாறுமுகத்தைப் பேசினால் உடனே முடிஞ்சு போயிடும். கொஞ்சம் கவனியுங்களேன்'' என்றாள் பார்வதி.



வினை செய்த வேடிக்கை

எம். கே. சங்கரன்

"அட மூதி! உனக்கு கொஞ்சமாவது அறிவு இருக்கிறதா? நம்ம தகுதிக்கு அந்தச் செந்திலாறுமுகம் கொஞ்சமாவது லாயக்கானவனு? நம்ம கோமதிக்குப் பெரிய இடமா வந்துக்கிட்டிருக்கு. சீக்கிரம்முடி வாயிடும்."

"நீங்க பெரிய இடம் பெரிய இடம்னு நாளைத் தள்ளிப் போட்டுக்கிட்டே இருங்க. நல்ல இடமெல்லாம் வலிய வராது. நழுவ விட்டுராதீங்க!"

"எல்லாம் எனக்குத் தெரியும். நீ உன் வேலையைப் பார்."

"பிள்ளைவாள்!" வாசலில் யாரோ கூப்பிட்ட குரல் கணீரென்று கேட்டது.

கந்தையா பிள்ளை வாசலுக்குப் போய்ப் பார்த்தார். "ஓ! நம்ம காயல்பட்டினம் மரைக்காயர்வாளா? வாங்க!வாங்க!" என்று பிரமாதமாக அவரை வரவேற்று உபசரித்தார்.

"சலாம், பிள்ளைவாள்! செளக்கியமா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தார் காயல்பட்டினம் மரைக்காயர்.


பாய் விரித்து அவரை உட்காரச் செய்தார் கந்தையா பிள்ளை. "வெத்திலே போடுங்க, மரைக்காயர்வாள் !" என்று சொல்லியவாறு வெற்றிலைப் பெட்டியை மரைக்காயர் பக்கம் நகர்த்தினர்.

மரைக்காயர் தம் பையிலிருந்து ஒரு டப்பாவை எடுத்துக் கந்தையாபிள்ளையின் முன்னால் வைத்தார். "பிள்ளைவாள்! வெள் கருப்புக் கட்டிப் பாகு இது. மாங்காய், அண்டிப் பருப்பு, பழம் இன்னும் நிறையச் சாமான்கள் சேர்த்து உங்களுக்காக ஸ்பெசலாத் தயார் செய்தேன்."

"போன தடவைகூட ஒரு டின் தந்தீங்களே! பழநி பஞ்சாமிர்தம்போல இருந்தது."— நன்றிப் பெருக்குடன் அதை வாங்கிக் கொண்ட பிள்ளை, "அன்றைக்குக் காயல் பட்டினத்தில் பதநீர் சாப்பிட்டேன், பாருங்க. அது எவ்வளவோ ருசியாய் இருந்தது !" என்றார்.

"நம்ம காட்டுப் பதனி ரொம்ப நல்லா இருக்கும். நம்ம ஊருக்கு ஒரு தடவை நீங்க வாங்களேன்."

"வரணும். ஆறுமுகநேரி உப்பளத்தையும் பார்க்கணும். நானும் திருச்செந்தூருக்கு அடிக்கடி வந்து போயிட்டிருக்கேன். இடையில் இறங்கவே முடியவில்லை. அது சரி......



மணக்கால் திரு கணேச ஐயர் அவர்களின் அறுபதாண்டு திருமண விழா சமீபத்தில் வெகு விமரிசையாக நடந்தது.

''நான் தூத்துக்குடி விஷயம் சொன்னேனே, கவனிச்சீங்களா ?''

'' அதுக்குத்தானே வந்திருக்கிறேன். தூத்துக்குடி கணபதியா பிள்ளை சாதாரண மனுசரல்ல. பெரிய வியாபாரி. லட்சக்கணக்காப் பணம் படைத்தவர். அவர் பையனும் நல்லா படிச்சிருக்கான். ஒரே பிள்ளைதான் !''

'' எல்லா விவரமும் எனக்குத் தெரியும், மரைக்காயர்வாள் ! எப்படியும் அவர் பையனுக்கு என்னுடைய பெண்ணைப் பேசி முடிவு செய்யணும்.''

''அது தானே சொல்கிறேன். ஒரு வாரத்துக்கு முன் அவரை நாசரத்தில் சந்திச்சேன். உங்களைப் பத்திச் சொல்லி விஷயத்தைச் சொன்னேன். பெண்ணைப் பார்த்து முடிவு செய்வோம் என்று சொல்லி யிருக்கிறார்.''

'' எப்படியும் அவரைச் சரிக் கட்டிடுங்க. உங்களையே நம்பிக்கிட்டிருக்கேன்.''

''ஆண்டவனை நம்புங்க. காரியம்கைகூடும்.''

சிறிது நேரத்தில் மரைக்காயர் புறப்பட்டார். வாசல் வரை சென்று அவரை அனுப்பி வைத்தார் கந்தையா பிள்ளை. மரைக்காயர் சென்றதும் அவர் கண்கள் தற்செயலாய் எதிர் வீட்டு மாடியை நோக்கின. எதையோ கண்டுவிட்டவர் வீட்டுக்குள் வந்து, '' பார்வதி ! பார்வதி !'' என்று இரைந்தார்.

'' ஏன் இந்த மாதிரி சத்தம் போடறீங்க ?'' பதிலுக்குக் குரல் கொடுத்துக் கொண்டே வந்தாள் பார்வதி.

'' ஆத்தூர் பிள்ளை வீட்டு மச்சியைப் பாரேன்.'' வீட்டுக்குள் இருந்தவாறு எதிர் வீட்டு மாடியை ஜன்னல் மூலமாகச் சுட்டிக் காட்டினார். ஆத்தூர் பிள்ளை மகள் காந்திமதியும், வேறொரு வாலிபனும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

'' என்னத்தைக் கண்டுவிட்டு இதைக் காட்டறீங்க ?'' என்று பார்வதி மிகுந்த எரிச்சலுடன் கேட்டாள்.

'' அட புரியாத மூதி ! ஒரு வயசுப் பெண்ணுக்கு அந்தப் பயலோடு என்ன பேச்சு ?''

'' அது படிச்ச பொண்ணு. தாராளமாக எல்லார் கிட்டேயும் பேசுது !''

'' அந்தப் பய ! யாரு ? எப்பவும் ஆத்தூர் பிள்ளை வீட்டிலேயே கிடக்கிறான் ?''

'' ஆத்தூர் பிள்ளை மகன் செந்திலாறுமுகத்தோடு கூட ஆபீஸில் வேலை பார்க்கிறானும்.''

'' ஓஹோ ! செந்திலாறுமுகம் தங்கச்சியை அவன் என்னைக்காவது கூட்டிக்கிட்டு ஓடிப் போயிடாமே.... !''

'' சீச்சீ ! அப்படி எல்லாம் நீங்க பேசாதீங்க! அந்தப் பெண் காந்திமதி தங்கமான பெண்ணாச்சே !'' என்றாள் பார்வதி.

'' இன்னும் உலகம் தெரியாதவளா பேசறியே ! அந்தப் பயல் வருகிற வேளை எல்லாம் அவன் கூடவே அவன் பல்லைக் காட்டிக்கிட்டு நிக்குது தெரியுமா ?''

'' சும்மா ஏதாவது சொல்லி வைக்காதீங்க. ஒரு வேளை, நம்ம கோமதியை அந்தச் செந்திலாறுமுகத்துக்குக் கொடுக்க வேண்டி வந்தாலும் வரலாம்.''

''நம்ம கோமதி கல்யாண விஷயத்தில் அவன் பேச்சையே எடுக்காதே. அவளுக்குத் தான் தூத்துக்குடி மாப்பிள்ளை உறுதியா விடுமே'' என்றார் அவர்.

'' எந்தக் குடி மாப்பிள்ளைக்கும் கொடுங்க, ஒரு பெண்ணைப் பத்தி அநியாயமா .....'' மேற்கொண்டு அங்கு நிற்க விரும்பாமல் பார்வதி விர்ரென்று போய்விட்டாள்.

✡

கொஞ்ச நாட்களாக எதிர்வீட்டைப் பற்றிக் கந்தையா பிள்ளைக்கு ஏனோ இந்த மாதிரியான அக்கறை ஏற்பட்டுக் கொண்டிருந்தது. எதிர் வீட்டைப் பற்றி ஏதாவது குறை சொல்லவேண்டும், அதை எல்லோரும் நம்ப வேண்டும் என்று துடியாய்த் துடித்துக் கொண் டிருந்தார். இந்தப் பொறாமை உணர்ச்சி அவருக்கு ரொம்ப நாட்களாகவே இருந்து கொண்டிருந்தது.

ஆத்தூர் சண்முகம் பிள்ளையைப் பற்றி அந்த ஊரில் தெரியாதவரே இருக்கமுடியாது. கல்யாணமாகிய புதிதிலேயே தம் சொந்த ஊரை விட்டுத் திருநெல்வேலிக்கு வந்து விட்டார். கையிலிருந்த ரொக்க ரூபாயைக் கொண்டு சாப்பாட்டுக்கு வயலும், குடியிருக்க வீடும் வாங்கினார். ஒரு ஜவுளிக் கடையில் நாற்பது ரூபாய் சம்பளத்துக்குக் கணக்கு வேலை செய்து வந்தார். அப்பொழுது கந்தையா பிள்ளை சிறு பலசரக்குக் கடை வைத்திருந்தார். அடுத்தடுத்த வீடாதலால் இருவருக்கும் நெருங்கிய சிநேகம் ஏற்பட்டது. ஒருவரை யொருவர் 'அண்ணாச்சி' என்று அழைத்துக் கொண்டனர்.

கால ஓட்டத்தில் கந்தையா பிள்ளையின் சிறு பலசரக்குக் கடை பெரிய மளிகை ஆகி விட்டது. வாடகைக்குக் குடியிருந்த வீட்டுக் கெதிரேயே பெரிய மாளிகை கட்டினார். சாதாரணமாக 'அண்ணாச்சி' என்று அழைத்தவர்களே 'முதலாளி' என்று கூப்பிட ஆரம்பித்தனர். நகரப் பிரமுகர்களில் ஒருவராகி விட்டார் கந்தையா பிள்ளை.

ஆனால் ஆத்தூர் பிள்ளை மட்டும் அன்றிருந்த நிலையிலேயே இருந்தார். நல்ல நம்பிக்கையும், நாணயமும் உள்ள மனிதராகையால், முதலாளியாகப் பார்த்து நாற்பது ரூபாயை



REGD. TRADE MARK

அன்புள்ள வனஜா,

புஹாரி பூங்காவில் நீ கொடுத்த விருந்தை நான் மறக்கவே இல்லை. அன்று சாப்பிட்ட உணவு வகைகள்போல் இதுவரை எங்குமே கிடைப்பது அரிதாக இருக்கிறது. இப்பொழுதும் **புஹாரியில்** அதே **பீச்-மெல்பா** இன்னும் வைட்டமின் சத்துள்ள பல **வெஜிடபிள்** உணவு வகைகள் ஏராளமாகத் தயாரிப்பதாகக் கேள்விப்படுகிறேன். இந்தத் தடவை நாம் நிறைய சினிமாப் படங்கள் பார்க்கவேண்டும் என்று எழுதி இருக்கிறாய். சினிமா என்றவுடன் **புஹாரியின் பீச் - மெல்பா**, ஐஸ் - க்ரீம் வகைகள்தான் ஞாபகம் வருகின்றன. முன்னால் **பீச் மெல்பா**வையும், பின்னால் சினிமாவையும் ஒரு கை பார்த்து விடலாம் அல்லவா?

அன்புள்ள,

கமலா

புஹாரி ஹோட்டல்ஸ்

மவுண்ட் ரோடு - சைனா பஜார்

சென்ட்ரல் - எழும்பூர்

மற்றும் மெரீனா

50 நயா பைசா செலவு செய்து 50 ரூபாய் சேமியுங்கள்

தேனா பாங்கின் நூதன பணம் சேமிப்புப் பெட்டி நீங்கள் 100 எட்டு அணா நாணயங்களை சேமிக்க உங்களுக்கு உதவும். பெட்டி நிரம்பியதும் நீங்கள் சேமிப்புக் கணக்கு வைத்துள்ள தேனா பாங்கின் கிளைக்கு அதை எடுத்துச் செல்லுங்கள். பெட்டி காலி செய்யப்பட்டு அதில் உள்ள தொகை உங்கள் கணக்கில் போடப்படும். இந்த சுலபமான சுலப முறையில் இன்றே சேமிக்க ஆரம்பியுங்கள்!



தேனா பாங்க்

தனது சேமிப்புத் திட்டங்கள் மூலம் சிக்கனத்துக்கு ஆக்கமளிக்கிறது.

விசேஷ சேமிப்பு கணக்கு —வட்டி 2½%
6 வருஷ ரொக்க சர்டிபிகேட்டுகள் —வட்டி 4½%

22 வது வருட சேவை 1938 - மே - 1959

பொது பாங்கிங் மற்றும் அன்னிய பரிவர்த்தனை அலுவல்கள் கவனிக்கப்படுகின்றன.

பிரவின்சந்திர V. காந்தி
மானேஜிங் டைரக்டர்

தேவகரன் நான்ஜி பாங்கிங் கம்பெனி லிமிடெட்


தலைமை ஆபீஸ்: பம்பாய்-1
80 கிளைகள் & 19 பாதுகாப்பு கிடங்குகள்

குடும்ப நண்பன்

டஸ்ஸரூல்

இருமலுக்கும் புண்பட்ட தொண்டைக்கும்

B·I



S. S. ரஜுலா

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

மேற்படி கப்பல் கீழ்க்கண்ட தேதிவாக்கில் புறப்படும்

சென்னையிலிருந்து	நாகப்பட்டினத்திலிருந்து
1959 ஆகஸ்ட் 6	1959 ஆகஸ்ட் 7

பிரயாணத்திற்குரிய தஸ்தாவேஜுகளைக் காண்பித்து வேண்டிய அளவு பங்க் வசதியுள்ள டிக்கட்டுகளையும், பார்த் வசதியற்ற டிக்கட்டுகளையும் (சாப்பாட்டுடனோ அல்லது சாப்பாடின்றியோ) எங்கள் கம்பெனியின் ஏஜண்டிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

பினாங், போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி பாங்காக்கிற்கு அனுப்பவும் சரக்குகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட்	மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1	முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜண்டுகள்: பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்

அறுபது ரூபாயாக்கி இருந்தார். சாதாரணக் கணக்குப் பிள்ளைக்கு இதைவிட உயர்வேது? சொந்த வீடும், வயலும் இருந்ததால் வறுமை யின் பிடிக்குத் தப்பி இருந்தார்.

கந்தையா பிள்ளைக்கு ரொம்ப நாட்களாக ஓர் ஆசை. ஆத்தூர் பிள்ளையை மட்டும் தம் கடைக்கு இழுத்துவிட்டால் கடையைப் பற்றிய பொறுப்பே தமக்கு வேண்டியதில்லை, கடையும் சிறப்பாக இருக்கும் என்று எண்ணி னார். அதோடு சமயம் பார்த்து ஒருநாள் தம் எண்ணத்தை வெளியிட்டார். ஆனால் ஆத்தூர் பிள்ளை அவருக்கு அளித்த பதில், ஏமாற்றத்தோடு கோபத்தையும் ஏற்படுத்தி விட்டது கந்தையா பிள்ளைக்கு.

"அண்ணாச்சி! இந்தமாதிரி யாரிடமும் கேட்காதிங்க. நான் ஒரு கடையில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறேனே, என்னிடம் கேட்கலாமா? நீங்க நூறு ரூபாய் சம்பளம் போட்டுத் தந்தாலும் இவ்வளவு காலமும் என்னைக் கௌரவமாக வைத்திருந்த கடையை விட்டு வருவேனா?" — சண்முகம் பிள்ளை சாதாரணமாகத்தான் சொன்னார். இப் பொழுது கந்தையா பிள்ளை இருக்கிற பிரமுகர் நிலைக்கு இந்தப் பதில் அவரை அவமதித்து விட்டதாகவே தோன்றியது. எனினும், அவரிடம் எதுவும் பேசவில்லை. 'காலம் வரும், பார்த்துக் கொள்கிறேன்' என்று மனத்துக் குள் உறுமிக் கொண்டார்.

ஆனால் அந்தக் காலம் வருவதற்குள் இயற்கை முந்திக் கொண்டது. நடு வயதில் ஆத்தூர் பிள்ளை அருமை மனைவியையும் இரு மக்களையும் விட்டுக் காலமாகி விட்டார். கணவனை இழந்து தவித்து நின்ற சிவகாமிக்கு மகன் செந்திலாறுமுகமும், மகள் காந்திமதி யும்தான் ஆறுதல் அளித்தனர்.

கந்தையா பிள்ளைக்குக் கடுப்பு ஒருபுறம் இருந்த போதிலும் 'பணக்காரனான பின் பழைய சிநேகத்தை மறந்து விட்டான்' என்று நாலுபேர் ஏதாவது சொல்லக் கூடாதல்லவா? அதற்குப் பயந்து ஆத்தூர் பிள்ளையின் குடும் பத்தோடு ஒட்டி உறவாடி வந்தார்.


காந்திமதியும், கந்தையா பிள்ளை மகள் கோமதியும் ஒன்றாய்ப் படித்துக் கொண்டிருந் தனர். கோமதி முதல் படிவத்தில் காலடி எடுத்து வைத்த உடனே பருவமடைந்து விட்டாள். அதோடு அவளுடைய படிப்பை நிறுத்த வேண்டியதாகி விட்டது. அவர் பெண் கோமதி வீட்டுக்குள் அடைக்கப்பட்டாள். ஆனால் காந்திமதி தினமும் பள்ளிக்குச் செல் லும் அழகிய காட்சி கந்தையாபிள்ளையின் கண்களை உறுத்தியது.

சில மாதங்களில் காந்திமதியும் பருவ மடைந்தாள். "அவள் படிப்பை இனிமேல் நிறுத்த வேண்டியதுதானே?" என்று சிவ காமி அம்மாளிடம் கேட்டார்.

"இல்லே, அண்ணாச்சி! படிக்கவைக்கலாம்னு தான் நினைக்கிறேன்" என்றாள் சிவகாமி.

"சே! சே! நம்ம சாதிக்கு அது சரிப் படுமா? பேசாம படிப்பை நிறுத்திடுங்க. என் மகளைப் படிக்க வைக்கத் தெரியாமலா? எல்லாம் சாதிக் கட்டுப்பாட்டுக்காகத்தான்."

"சரி, அண்ணாச்சி! நீங்க சொல்றபடியே செய்வோம்" என்றாள்.



ஆனால் மறுநாள் காந்திமதி புத்தகமும் கையுமாகப் பள்ளிக்கூடத்துக்குச் செல்வதைக் கண்டதும் கந்தையா பிள்ளைக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஓட்டமாய் சிவகாமியின் வீட்டுக்குச் சென்றார்.

"என்னம்மா! காந்திமதியைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பிவிட்டீர்களே?" என்றார்.

"நான் என்ன அண்ணாச்சி செய்யறது? செந்திலாறுமுகம் ஒரேயடியா அவளைப் படிக்க வைக்கணும்னு பிடிவாதமா நிக்கிறான். காந்தி மதியும் படிக்கத்தான் வேணும்னு சாதிக் கிறாள். அவங்க ஆசையை நாம் கெடுப்பா னேன்?" என்றாள் சிவகாமி.

"என்னமோ உலக நடப்பைச் சொன் னேன். கேட்கா விட்டால் அதில் கஷ்டம் உங்களுக்கு" என்று சொல்லிவிட்டுக் கந்தையா பிள்ளை வீட்டுக்கு வந்து விட்டார். தம் சொல்லை நிராகரித்து விட்டாளே என்று அவருக்கு ரொம்பக் கோபம்.

தம் மகள் வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்க, அலங்காரமாகத் தினமும் காந்திமதி பள்ளிக்குச் செல்வது கந்தையா பிள்ளையின்

உள்ளத்தில் பொறாமைத் தீயை வளர்த்தது. ஆனால் அப்பழுக்கில்லாத காந்திமதிமீது ஏதாவது பழியைச் சுமத்த அவருக்கு எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை.

இந்தச் சமயத்தில்தான் நெல்லையப்பன் தொடர்பு செந்திலாறுமுகத்துக்குக் கிடைத்தது. செந்திலாறுமுகமும் நெல்லையப்பனும் ஜில்லா போர்டு ஆபீஸில் வேலை பார்த்துக் கொண்டிருந்தனர். எப்படியோ இருவருக்கும் நெருங்கிய சிநேகம் ஏற்பட்டு விட்டது. நெல்லையப்பன் தினமும் செந்தில் வீட்டுக்கு வருவான். அண்ணனின் சிநேகிதன் என்ற முறையில் காந்திமதி நெல்லையப்பனிடம் தாராளமாகப் பழகினாள். நெல்லையப்பன் வந்து விட்டால் வீடே கலகலப்பாக இருக்கும். காந்திமதி எதைப் பற்றியாவது அவனிடம் வாதாடிக் கொண்டிருப்பாள்.

வெறும் வாயை மெல்பவருக்கு ஒரு பிடி அவல் கிடைத்தால் விடுவாரா? 'இந்த நெல்லையப்பனை வைத்துக் கொண்டே அவர்களை ஒரு கைபார்த்து விடுகிறேன்' என்று எக்களித்தார் கந்தையா பிள்ளை.

அன்று மாலை தான் அவருக்கு ஒரு சரியான ஆதாரம் கிடைத்தது. அவருடைய அருமை மகன் குற்றாலத்திலிருந்து திரும்பி வந்தான். குற்றாலத்தில் தான் எடுத்த புகைப் படங்களைத் தன் தந்தையிடம் காட்டிக் கொண்டிருந்தான். அவைகளில் ஒரு போட்டோவைக் கண்டவுடன் துள்ளி விழுந்து விட்டார் கந்தையா பிள்ளை. காந்திமதியும், நெல்லையப்பனும் குற்றால அருவிக்கு எதிரில் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கும் காட்சி படம் எடுக்கப் பட்டிருந்தது.

''இந்தப் படத்தைக் காந்திமதியா எடுக்கச் சொன்னாள்?''

''இது எடுத்ததே அவளுக்குத் தெரியாதப்பா! அருவிக்குப் பக்கத்தில் இரண்டு பேரும் நல்ல 'போஸ்'லில் நின்னுக்கிட்டிருந்தாங்க. பளிச்சென்று எடுத்து விட்டேன்.''

''அவள் அண்ணன் அங்கில்லையா?''

''அருவியில் குளித்துக் கொண்டிருந்தான்.''

''காலிப் பயலே! கண்டமானிக்குப் படமெடுக்கத்தான் உனக்குக் காமிரா வாங்கித் தந்தேனா? காந்திமதிக்குத் தெரிஞ்சிதுன்னா பெரிய கேவலமா போயிடுமே?''

''அதுக்குத்தான் படமெடுத்ததையே அவளிடம் சொல்லவில்லே.''

''அந்த நெகடிவையும் படத்தையும் கொண்டாடா இங்கே.'' அவைகளைப் பிடுங்கி வைத்துக் கொண்டார் கந்தையா பிள்ளை.

★

''அண்ணாச்சி! நம்ம காந்திமதியைப் பார்க்க மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்றாங்க'' என்று கந்தையா பிள்ளை வீட்டுக்கு வந்து சொன்னாள் சிவகாமி.

''ஸ்ரீ வைகுண்டத்தில் யார்?''

''திருக்களூர் சொக்கலிங்கம் பிள்ளை.''

அவர் இதயத்தில் பெரிய அடி விழுந்தது போலிருந்தது. திருக்களூர் சொக்கலிங்கம் பிள்ளை சாதாரணமானவரல்ல. பெரிய பணக்காரர். இந்தப் பெரிய இடத்தைச் சிவகாமி எப்படிப் பிடித்து விட்டாள்?

''அண்ணாச்சி! கல்யாணக் காரியங்களை நீங்கதான் பேசி முடிவு கட்டணும்.''

அவர் வாய் சரி சொல்லியது. நெஞ்சில் நிறைந்த குரோத உணர்ச்சிகள் உடலெங்கும் பரவின. பொறாமையால் கொந்தளித்த அவர் உள்ளம் அன்று முழுவதும் தூங்கவில்லை.

ஸ்ரீவைகுண்டத்திலிருந்து மாப்பிள்ளை வீட்டார்கள் வந்து காந்திமதியைப் பார்த்தனர். கந்தையா பிள்ளை அந்த வீட்டுக்கே முதன்மையானவர் போல் எல்லோரையும் வரவேற்றார்.

பெண் பார்க்கும் நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு சொக்கலிங்கம் பிள்ளையைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்றார் கந்தையா பிள்ளை. ''பெண் பிடித்திருக்கிறதா?'' என்று மெதுவாகக் கேட்டார்.

''ஆமாம். பிடித்திருக்கிறது'' என்றார் சொக்கலிங்கம் பிள்ளை.

''ரொம்ப சந்தோஷம். ஒரே ஒரு விஷயம் மட்டும் உங்களிடம் சொல்லி விட்டால் பிறகு எல்லா ஏற்பாடுகளையும் உடனே செய்ய ஆரம்பித்து விடலாம்'' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் சென்றார். 'அந்தப் புகைப் படத்தை எடுத்துக் கொண்டு வந்து ''இதைப் பாருங்க'' என்று சொக்கலிங்கம் பிள்ளையிடம் கொடுத்தார். அதைப் பார்த்த சொக்கலிங்கம் பிள்ளை அலறியே விட்டார்.

''நல்ல வேளை! எங்கள் குடும்ப கௌரவத்தையே காப்பாத்திட்டீங்க.'' சொக்கலிங்கம் பிள்ளை அதற்குமேல் அங்கிருக்கவில்லை.

✽

கந்தையாபிள்ளை மனத்துக்குள் சிரித்தார். 'வெற்றி, வெற்றி' என்று அவர் மனம் கொக்கரித்தது. ''சிவகாமி, என் சொல்லைக் கேளாமல் உன் பெண்ணைப் படிக்க வைத்தாயே, அதனுடைய பலனை நன்றாக அனுபவித்துக் கொள். இனி உனக்கு எந்தப் பெரிய இடம் வருகிறது, பார்த்து விடுகிறேன்'' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டார்.

கந்தையா பிள்ளைக்கு அன்று ஒரு கடிதம் வந்தது. தூத்துக்குடிக்காரர்கள் மறுநாள் பெண் பார்க்க வருவதாக. காயல்பட்டினம் மரைக்காயர்தான் எழுதியிருந்தார்.

கந்தையாபிள்ளையின் கால்கள் தரையில் நிற்கவில்லை. ''பார்வதி!'' என்று அலறிக் கொண்டே வீட்டுக்குள் ஓடினார். ''தூத்துக்குடிக்காரங்க நம்ம கோமதியைப் பார்க்க வருகிறாங்க'' என்று பூரிப்புடன் சொன்னார்.

மறுநாள் தூத்துக்குடி கணபதியா பிள்ளையின் குடும்பத்தாரைக் கந்தையா பிள்ளை வீட்டுக்குப் பெண் பார்க்க அழைத்து வந்தார் காயல்பட்டினம் மரைக்காயர். எழிற்சித்திரம் போன்றிருந்த கோமதியைப் பார்த்ததுமே அவர்களுக்கு நன்றாகப் பிடித்து விட்டது.

''முகூர்த்தம் எப்போது வைக்கலாம்?'' என்று எடுத்த எடுப்பிலேயே கேட்டார் கணபதியா பிள்ளை.

கந்தையாபிள்ளை பூரித்துப் போய்விட்டார்.

''பிள்ளைவாள்! பையன் இங்குதான் வேலை பார்க்கிறான். உங்களுக்குத் தெரியுமா?'' திடீரென்று கேட்டார் மரைக்காயர்.

''இங்கேயா? எந்த ஆபீஸில்?''

"ஜில்லா போர்டு ஆபீசில், மலைபோல் பணத்தை வச்சிட்டு தான் ஏதாவதுவேலைதான் பார்ப் பேன் என்று பிடிவாதமாக வந்து விட்டானும்!"

"ஜில்லா போர்டு ஆபீசிலுள்ள எல்லோரையும் எனக்குத் தெரி யுமே, பேர் என்ன?"

"நெல்லையப்பன்."


"நெல்லையப்பனு?"—ஒரு க்ஷணம் அயர்ந்து போய் விட்டார் கந் தையா பிள்ளை. 'எதிர் வீட்டுக்கு அடிக்கடி வருவானே, அந்த நெல்லையப்பனு?'

அவனேதான் என்பதை அவர்கள் பேச்சு தெளிவு படுத்தி விட்டது. ஆவணி மாதத்தில் முகூர்த்தம் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி விட்டுக் கணபதியா பிள்ளையும் மரைக்காயரும் போய் விட்டனர். ஏதோ இனம் தெரி யாத பயம் அவர் இதயத்தை அழுத்தியது.

★

இரண்டு வாரங்கள் ஓடின. சிவகாமி கந்தையா பிள்ளை வீட் டுக்கு வந்து, "அண்ணாச்சி! ஸ்ரீவைகுண்டத்திலிருந்து ஏதாவது தகவல் வந்ததா?" என்றாள்.

"ஒண்ணும் வரல்லியே. இந்தப் பணக்காரங்களை நம்பக் கூடாது!"



இந்தியா சிமிண்ட்ஸ் டைரக்டர் திரு டி. எஸ். நாராயண சுவாமி அவர்களின் மருமகளும் திரு டி. பி ராமசாமி அய்யர் அவர்களுடைய புதல்வியுமான சௌ. மங்களாம் பாளுக்கும், வி. டி. சுவாமி அண்டு கம்பெனி மானேஜிங் டைரக்டர் திரு வி. டி. சுவாமி அவர்களின் மருமகனும் திரு வி. முத்துகிருஷ்ணன் அவர்களுடைய புதல்வருமான சிரஞ்சீவி எம். பாலாஜி பி. ஏ. ஆனர்ஸுக்கும் இம்மாதம் 12ந் தேதி சென்னையில் கோலாகலமாகத் திருமணம் நடைபெற்றது. இவ்வைபவத்துக்கு ஏராளமான அன்பர் களும் உறவினர்களும், பிரமுகர்களும் வந்திருந்து சிறப்பித்தனர். வாழ்க, மணமக்கள்!

"ரொம்ப நல்லதாப் போச்சு, அண்ணாச்சி! காந்திமதிக்கு நல்ல இடம் அமைஞ்சிட்டுது!"

"நல்ல இடமா? பையன் யார்?"

"எங்க வீட்டுக்கு அடிக்கடி வருமே நெல்லையப்பன் அதுதான்!"

"நெல்லையப்பனு?"

பதற்றத்துடன்கேட்டார் கந்தையாபிள்ளை.

"ஆமாம். தூத்துக்குடியிலிருந்து அந்தப் பையனுடைய அப்பா பெண் கேட்டுக் காகிதம் எழுதி இருக்கார்" என்றாள்.

அவளிடம் எதுவும் பேச ஓடவில்லை அவ ருக்கு. 'என்னிடம் பாக்குக் கொடுத்து விட்டு வேறு இடத்தில் எப்படிப் பெண் கேட்கலாம்?' என்று கோபித்துக் கொண்டிருந்தார்.

சிவகாமி போய் விட்டாள். மறு வண்டிக்கே காயல் பட்டினம் புறப்பட்டார் கந்தையா பிள்ளை.

மரைக்காயர் வீட்டுக்குச்சென்று, "மரைக் காயர்வாள்! பார்த்தீங்களா இந்த அநியா யத்தை ...!" என்று அவர் பொரிவதற்குள், "எல்லா விஷயமும் எனக்குத் தெரியும், நேற்றுத்தான் கணபதியாபிள்ளை வந்து எல்லாவற்றையும் சொன்னார். இதுக்குக் கார ணமே நீங்கதான்!" என்றார் மரைக்காயர்.

"நானு?"

"ஆமாம், ஸ்ரீவைகுண்டத்திலிருக்கிறாரே, திருக்களூர் சொக்கலிங்கம்பிள்ளை, அவரிடம் நீங்க என்ன சொன்னீங்க?"

"நான் ஒன்றும் சொல்லவில்லையே!"

"ஒரு போட்டோவைக் காட்டவில்லை?" கந்தையா பிள்ளை திணறினார்.

"அந்தப் போட்டோ பண்ணின வேலை தான் உங்களை வீட்டுத் தூத்துக்குடிக்காரர் மாறியது. இவரைச் சரிக்கட்ட நான் என்ன பாடுபட்டேன்? யானை தன் தலையிலே மண்ணை வாரிப் போட்டதுபோல நடந்துட்டீங்களே!"


"அந்தப் போட்டோ விஷயம் கணபதியா பிள்ளைக்கு எப்படித் தெரிந்தது?"

"சொக்கலிங்கம் பிள்ளை யார், தெரியுமா? கணபதியாபிள்ளையின்மச்சினராக்கும். நெல்லை யப்பன் அவரிடம் போய்ப் பெண் பார்த்த சங்கதியைச் சொல்லி இருக்கிறான். 'உனக் குப் பெண் தரக் கணபதியாபிள்ளை எப்படிச் சம்மதித்தார்?' என்று கேட்டுப் போட்டோ விஷயத்தைச் சொல்லி விட்டார். அவ்வளவு தான்! ஒரு பெண்ணிடம் விகல்பமில்லாமல் பழகியதை ஊர் எப்படித் திரித்துக் கதை கட்டி விட்டது என்று அந்தப் பையன் ரொம்ப வும் வருத்தப்பட்டிருக்கிறான். அந்தப் பெண் ணின் எதிர்காலம் பாழாகாமல் இருக்க வேண்டுமென்றால், தானே அவளைக்கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று தகப்பனு ரிடம் போயிருக்கிறான். அவர்தான் மகன் விருப்பத்துக்கு மறுப்புச் சொல்ல மாட்டாரே! சம்மதித்து விட்டார்."

அழுகை மட்டுந்தான் வரவில்லை கந்தையா பிள்ளைக்கு. 'ஏ, மனிதா! நீ செய்த வினை தானே?' என்று ஓலமிட்டெழுந்த மனச் சாட்சியின் குரல் அவர் நெஞ்சைத் துளைத்தது.

தேன் கூடு

ஆர்வி



அத்தியாயம் 31

பூவின் மலர்ச்சி

வண்டியை விட்டு இறங்கிய போது தான் கண்ணபிரான் லீலாவின் முகத்தைச் சரியாகக் கவனித்தான். நாணத்தினாலும் ரோசத்தினாலும் இளமங்கையரின் எழில் முகம் எப்படிச் சிவந்து போகும் என்பதற்கு அது உதாரணமாகத் திகழ்ந்தது. கண்ணாடித் தொட்டியிலே வளைய வரும் கெண்டை மீன்களைப் போல அவளுடைய கரிய விழிக் கண்கள் அப்படியும் இப்படியும் அலைந்தன. ஆனாலும் ஒரு முறைகூட அவை அவனுடைய பார்வையைச் சந்திக்க எண்ணியதாகத் தெரியவில்லை. வேண்டுமென்றே அவள் வேறு எங்கேயெல்லாமோ பார்த்தாள். புதிர் புனையும் அழகியரின் போக்கைப் புரிந்து கொள்வதைவிடப் புரிந்து கொள்ளாமல் இருப்பது எத்தனை இன்பம் தரும் காரியம்! லீலாவின் இந்த மனஸ்தாபம் அவனுக்கு மயக்கத்தைக் கொடுத்தது.

பாரிஸ்டர் பங்களாவிலிருந்து வரும் போதே, ஜனசந்தடி குறைந்து விட்டது. வழியில் அவன் தன் வண்டியை நிறுத்தச் சொல்லி, சோபனப் பெண்ணைப் போல் தயங்கி நின்ற லீலாவின் வண்டியில் போய் ஏறிக் கொண்டான். "டிரைவர்! வண்டியை எடுத்துக் கொண்டு போ! நான் அந்த வண்டியிலேயே அப்புறம் வந்து கொள்கிறேன்!" என்று தன் வண்டிக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டு, அவன் அவளுக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டான்.

லீலா இதை எதிர்பார்க்கவில்லை. "இது என்ன இது ... திடீரென்று?" என்றாள்.

"திடீரென்று ஒன்றுமில்லையே. எல்லாம் யோசனை செய்து விட்டுத்தான் ஏறிக் கொண்டேன்!"

"பங்களாவுக்குப் போகவில்லையா?"

"போகாமல் முடியுமா? அப்புறம் போகலாமே என்றுதான் இறங்கினேன். வேண்டாம் என்று சொன்னால் இறங்கி விடுகிறேன்!"

"உம்ஹூம்; சொன்னதை உடனே செய்து விடுவீர்களாக்கும்!"

"சொன்னதை மட்டும் என்ன, சொன்னதை, சொல்லப் போவதை எல்லாவற்றையும்தான்!"

லீலா வண்டியை ஒதுக்கி வேகமாக மிதித்தாள். பொறுமையினாலோ பொறுமையின்மையினாலோ அவள் முகம் தீவிரத்தைக் காட்டியது. கண்ணபிரான் இன்னும் சிறிது நெருங்கி உட்கார்ந்து, மோதிரம் மின்னிய மென்விரல்களை ஸ்டியரிங்கோடு சேர்த்துப் பிடித்துக்கொண்டான்.

"இதில் என்ன தப்பு, லீலா?"

"உங்களுக்கு எதுவுமே தப்பு இல்லை தான்; ஆனால் இது என்ன வெட்கக்கேடு! எனக்குத்தானே அவமானம், உங்களுக்கு என்ன?"

"நீதான் சொல்வாயே, மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயம் என்று!"

லீலா உதட்டோரத்தைப் பல்லில் கடித்துக்கொண்டு, தலையைச் சட்டெனத் திருப்பி, "சரி; கையை விட்டு விட்டு, கொஞ்சம் நகர்ந்தே உட்கார்ந்து கொள்ளுங்கள்!" என்றாள்.

அவள் கூந்தலில் குடியிருந்த முல்லையரும்புச் சரம் மலர்ந்து கும்மென மணத்தது. மங்கை மணத்தாளா, மலர்தான் மணத்ததா என்று அவனுக்கு மயக்கம் உண்டாயிற்று. அழகும் மணமும் சேர்ந்து அப்படி அவனைத் திணறச்



"புதிதாக என்ன எண்ணிவிடப் போகிறீர்? இப்பொழுது அரை குறையாக இருக்கும் சந்தேகம் அறவே தீர்ந்து விடும். அப்புறம் தம் பெண்ணைக் கொடுப்பதற்கு யோசிப்பார்."

கண்ணபிரான் இருளில் அவள் கண்களில் குமிழியிடும் பரிகாசத்தைப் பார்க்க செய்தன. அவளுடைய கோபமும் தாபமும் அவனுக்கு உற்சாக மூட்டின.

"சேர்ந்து போகலாம் என்று பாதி காட்டியத்தில் எழுந்து வந்தேன். சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டு போகலாம் என்று உன் வண்டியில் வந்து ஏறிக் கொண்டேன். அதைக் கெடுத்து விடாதே!" என்றான் கண்ணபிரான்.

"வேண்டுமானால் வண்டியை அங்கேயே திருப்பி விடட்டுமா? அவள் 'தா—தை' என்று ஆடுவாள். நீங்கள் உடம்பை நெளித்துக்கொண்டு ரசிக்கலாம். என்னால் உங்கள் ஆசை வீணாகப் போவானேன்?" என்றாள் லீலா.

"சரிதான்; வேறு வினையே வேண்டியது இல்லை. நான் புறப்பட்டதுமே பாரிஸ்டர் ஒரு மாதிரியாக எண்ணியிருப்பார்..."

முயன்றான். அவளோ வழி மேலேயே விழிப்பாக இருந்தாள்.

"அவருக்கு இவ்வளவு பெரிய பெண் இருக்கிறாள் என்பது இங்கே வந்த பிறகு தான் தெரியும்!"

"அது தெரிவதற்காகத்தானே இந்த விருந்து, உபசாரம் எல்லாம். போன தடவை வந்தபோது அவளுக்கு வயதாக வில்லை. அதனால் அங்கே போகப் பிடிக்க வில்லை. இந்தத் தடவை நிலைமை மாறி விட்டது. அவளுடைய காட்டியத்தை விட்டு எழுந்து வரவே பிடிக்கவில்லை. அதைத்தான் அங்கேயே பார்த்து விட்டேனே! இந்த உபசாரமெல்லாம் எதற்காக என்று உங்களுக்கா தெரியாது?"

"லீலா—"

"அதெல்லாம் எனக்கு ஒன்றும் சொல்ல வரவேண்டாம். உங்களையும் எனக்கு

நன்றாகத் தெரியும்; அவர்களைப் பற்றியும் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன்! போகும் போதே அம்மா சொன்னாள்: 'உன்னை யாரென்று தெரிந்து கொண்டால் அவர்கள் தவறாக எண்ணிக் கொள்வார்கள்' என்றாள். இப்பொழுதுதான் அவள் சொன்னதற்கான காரணம் எனக்குப் புரிகிறது!"

"உங்களையெல்லாம் அவர்களுக்குத் தெரியுமா?"

"தெரியாமல் என்ன? ஆனால் தெரிந்ததாகக் காட்டிக் கொள்வார்களோ, மாட்டார்களோ! நான் குழந்தையாக இருந்த போது அவர்கள் எங்களுக்குப் பக்கத்து வீட்டில்தான் குடியிருந்தார்களாம். பணமும் புகழும் வந்தபிறகு பழைய நிலைமைகளெல்லாம் எங்கே நினைவுக்கு வரப் போகின்றன?"

"அப்படியானால் உன்னைத் தெரிந்து கொண்டுதான் பாரிஸ்டர் தெரியாதவர் போல இருந்திருக்கிறாரா?"

ஷீலா உடனே இதை மறுத்து, "என்னைத் தெரிந்திருக்க நியாயமேயில்லை. நான்தான் சின்ன வயசிலேயே பாட்டியுடன் என் மாமாவின் வீட்டுக்குப் போய் விட்டேனே! என் மாமாவைத் தெரிந்திருக்கும். ஆனால் யார் என்று தெரிந்திருக்க வழியில்லை. அதுவரையில் நல்லதுதான். இவர் எதற்காக என்னைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்?" என்றாள்.

கண்ணபிரான் இதைக் கேட்டு மௌனமாக இருந்தான். அவன் உள்ளத்தில் உருண்டோடிய எண்ணங்களில் ஒரு தெளிவு இல்லை. எதையும் தீர்க்கமாகச் சிந்தித்துப் பார்ப்பதற்கான மன அமைதி அவனுக்கு அப்போது இல்லை. பாரிஸ்டருக்கு இப்படி ஒரு கல்யாண யோசனை இருக்கக் கூடும் என்பது ஷீலா சொல்லித்தான் அவனுக்கு முதல் முதலாகப்பட்டது. இதை அவன் இதுவரையில் கற்பனை கூடச் செய்து பார்த்ததில்லை. நாட்டியக் கோலத்தில் நின்ற உஷா சட்டென்று அவன் மனக் கண்முன் வந்து நின்றாள். அவளையும் பாரிஸ்டரின் எண்ணத்தையும் சேர்த்துப் பொருத்திப் பார்த்துச் சிந்திக்க முடியாமல் அவன் மனம் கலங்கியது. பாரிஸ்டருக்கு அப்படி ஓர் எண்ணம் இருக்குமானால், விஷயம் அவனுடைய பெரிய தந்தை முத்தையா வரைக்கும் போய் விபரீதமாகிவிடப் போகிறதே என்ற அச்சம் மெதுவாகத் தலை நீட்டியது. இன்று என்னவோ ஷீலாவைப் பற்றி அவர் தெரிந்துகொள்ள முடியாமல் அவன் செய்து விட்டான். ஆனால் இது எவ்வளவு நாளைக்கு நடக்கும்? உண்மை வெளிப்பட்டு விட்டால் இது எவ்வளவு தூரத்துக்குக் கொண்டு போய் விடும்? புத்திக்கு அகப்படாத ஒரு சிடுக்கு எங்கேயோ விழுந்து விட்டதாக அவனுக்குத் தோன்றியது. சிடுக்கைப் பிரிப்பது என்ன பெரிய காரியமா? ஆனால் அதற்குப் பொறுமை வேண்டும். அதற்கு இது ஏற்ற சமயமல்ல...

ஓசைப்படாமல் வண்டி ஷீலாவின் வீட்டு வாசலில் நுழையப் போகும் சமயத்தில் அவன் சட்டென அவளைத் தடுத்து, "ஷீலா, இங்கேயே நிறுத்து!" என்றான்.

"இவ்வளவு தூரம் வந்து விட்டு, உள்ளே வராமல் திரும்புவதா? கூடாது!" என்ற ஷீலாவின் முகத்திலே கோபம் கலந்த மனஸ்தாபம் நிழலிட்டுக் கொண்டிருந்தது. மறு வார்த்தை பேசாமல் அவன் அவளோடு கீழே இறங்கி வந்தான். கதவைத் திறந்து விட்ட கிழவி ஒருத்தியைத் தவிர வேறு யாரையும் காணோமே என்று எண்ணியவாறு ஷீலாவின் முகத்தைப் பார்த்தான்.

விளக்கின் ஒளியில் அவள் கன்னங்களில் ஒளிர்ந்த செம்மையை அப்போதுதான் கண்டான். கோபத்தில்தான் அவள் எவ்வளவு வசீகரமாக இருக்கிறாள்! முதல் முதல் பார்த்த போது அவள் எப்படியிருந்தாளோ, அதை விடக்கூட அழகாக இன்று அவன் கண்களுக்குத் தோன்றினாள். கொடி போன்ற உடல்; தளிர் நடை; பூவின் மலர்ச்சி; மென்மை!

சிங்கப்பூரில் இல்லாத சிங்காரிகளா? சிட்டுக் குருவிகள்; பச்சைக் கிளிகள்; புள்ளி மான்கள்; தோகை மயில்கள்;- என்று எத்தனையோ நாட்டு ஏந்திழையார் உலவித் திரியும் உல்லாசப் பூங்காவல்லவா அது? ஆனால் அங்கேயே பிறந்து வளர்ந்த கண்ணபிரானுக்குப் பெண்கள், வர்ணனைக்கு உரியவர்களாகவே பட்டதில்லை. வாலிபப் பருவத்தின் ஆசார வாயிலில் அடியெடுத்து வைத்திருக்கும் அவனுக்குத் தாய்நாட்டுக்கு வந்த அன்றுதான் அந்த அநுபவம் உண்டாயிற்று.

அத்தியாயம் 32

முதல் சந்திப்பு

விமானக் கூடத்தில்தான் அவன் ஷீலாவை முதன் முதலாகச் சந்தித்தான். அப்பொழுது அவளை யாரென்றே அவனுக்குத் தெரியாது. ஆனால் இந்திய நாட்டு மண்ணின் தனியழகு அவள் முகத்திலே பொலிவதைக் கண்டு அவன் கால்கள் அசையாமல் தயங்கின. அவள் யாரைத் தேடி வந்திருக்கிறாள்? சிங்கப்பூர் விமானத்தில் அப்படி யார் வந்திருக்கிறார்கள்? 'அதோ இண்டர் நேஷனல் பாங்கின் பிரதிநிதி வருகிறாரே, அவரா? அவரைத் தான் நமக்குத் தெரியுமே, அவருக்கு இந்தப் பெண் என்ன உறவு? அதையும் தான் பார்த்து விடுவோமே!'

"ஹலோ கண்ணபிரான்! இதுதான் உங்களுக்கு விவரம் தெரிந்து சென்னைக்கு

முதல் தடவை போலிருக்கிறது! சுசீலா! யார் தெரியுமா இவர்? பெரிய கோடீசுவரர்களிலே ஒருவர்! இதைப் போல் சொந்தத்தில் நூறு கான்ஸ்டலேஷன் விமானம் வாங்கி விடலாம்; தெரிஞ்சுக்க அம்மா! என்ன மிஸ்டர் கண்ணபிரான், இது வந்து என்னுடைய 'நீஸ்'...என் தங்கை மகள் சுசீலா!" என்று இருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தார் அவர். இருவரும் ஒருவரைப் பார்த்து ஒருவர் கையெடுத்துக் கும்பிட்டு, வணக்கம் கூறிக்கொண்டார்கள்.

விமானக் கூடத்திலிருந்து அவர்கள் வெளியில் வருவதற்குள் இருவருமே வெகு தூரம் பழகிவிட்டதாக உணர்ந்தார்கள்.

"என்ன மிஸ்டர் கண்ணபிரான்! சுசீலாவின் பேச்சைக் கேட்டீங்களா? சாப்பிட உங்களை எதிர்பார்த்துக் கொண்டு இருக்குமாம்! ஏமாத்திப்பிடாதீங்கன்னு சொல்லச் சொல்லுது!"

"சாப்பாட்டுக்கா? அது..." என்று என்னவோ கூற வந்தான் கண்ணபிரான்.

"அதெல்லாம் தெரியாது; கட்டாயம் எதிர்பார்த்துக் கொண்டிருப்போம்!" என்று விழிகளைச் சுழற்றினாள் அவள்.

"பார்க்கிறேன்!"

"அதெல்லாம் இழுக்கக் கூடாது. சொல்லிவிட்டு வரவில்லை என்றால், அப்புறம்...அப்புறம்...தெரியுமா?" என்று தடுமாறி முடித்தாள் அவள்.

கண்ணபிரான் அந்த ஆணைக்குக் கட்டுப்பட்டவன்போல் அடக்கவொடுக்கமாக, "ஆகட்டும்; வந்துவிடுகிறேன்!" என்று கூறினான்.

"கட்டாயம்?"

"கட்டாயம்!"

"உம்?"

"ம்!"

இரண்டு பேரும் சிரித்துக்கொண்டே வெளியில் வந்தார்கள். ஆனால் அவளையும் அவள் மாமா நாகலிங்கத்தையும் விமான நிலையத்து வண்டிக்காகக் காக்க வைத்துவிட்டு அவன் மட்டுமா போவது? 'பீ-ஹைவ்' கம்பெனியின் புத்தம் புது வண்டி வேறு எதற்குத்தான் இதைவிடப் பிரமாதமாகப் பயன்படப் போகிறது! அதில் அவனை அழைத்துச் செல்வதற்காக வந்தவர்கள் எப்படியோ போகிறார்கள். இவர்களைவிட அவர்கள் அப்படி முக்கியமானவர்களா, என்ன?

"அஞ்சு வருஷம் காண்டிராக்டிலே போனேன், மிஸ்டர் கண்ணபிரான்! நீங்கள்தான் அங்கே என்னைப் பார்த்திருக்கிறீங்களே. சௌகரியமா ராஜா போல இருந்தாலும் சொந்த ஊரு ஆகுமா அது? மறுபடியும் அஞ்சு வருஷம் இருக்கும்படி அதிகாரிங்க வற்புறுத்துறாங்க. என்ன செய்யறதுன்னு ஒண்ணும் புரியல்லே. பேசாம ஒரு மாசம் அவுங்க செலவிலேயே லீவு போட்டுட்டு வந்திட்டேன். கிராமத்திலே போய், பச்சை மண் திண்ணையிலே படுத்து, புல் தரையிலே நடந்தாத்தான் உடம்பு உடம்பாயிருக்கும். இல்லியோ வெறும் மெஷின்தான் நான்!" என்றார் நாகலிங்கம்.

"அப்படித்தான் சார், எனக்கும் ஆசையாக இருக்கிறது. போகும்போது சொல்லுங்கள்! முடிந்தால் நானும் வருகிறேன்!" என்று திருப்திக்காகச் சொல்லி வைத்தான் கண்ணபிரான்.

இதைச் சொல்லும்போதே, பின் சீட்டில் உட்கார்ந்திருந்த சுசீலாவின் கண்களில் ஒரு பளபளப்பு தோன்றியதை அவன் கவனிக்கத் தவறவில்லை.

"உங்களாலே ஒரு நிமிஷங்கூட அங்கே இருக்க முடியாது, மிஸ்டர், இருக்க முடியாது!" என்றார் நாகலிங்கம்.

"ஏன் முடியாது? எல்லாம் தாராளமாக இருக்கலாம்" என்று படபடப்போடு கூறினாள் சுசீலா.

கண்ணபிரான் ஏதோ சொல்லி விட்டானே தவிர, உண்மையில் அன்றிரவே புறப்படும்படி ஆகிவிடும் என்று எதிர்பார்க்கவில்லை. சுசீலாவுக்குத் துணையாக அவன் அன்றே கிளம்பிச் செல்லத் துணிந்து விட்டான். நாகலிங்கம் மறுநாள்தான் புறப்பட்டு வந்தார். பெரிய கோடீசுவரனாக இருந்தாலும், சிறிதும் செருக்கின்றி, வீட்டுப் பிள்ளைபோல் சுசீலாவிடம் தாராளமாகப் பழகிய கண்ணபிரானை அவர் ஒவ்வொரு நாளும் பாராட்டத் தவறவில்லை. சுசீலாவும் பக்கத்தில் இருந்தால் ஒரு வருஷம்கூட இருக்கலாம் என்றுதான் இருந்தது அவனுக்கு. அவனுக்கு எப்போதுமே நாட்கள் இப்படியே இருந்துவிடக் கூடாதா என்று கூடத் தோன்றியிருக்கலாம். ஆற்றங்கரையிலும் குளத்தங்கரையிலும் கூடிக் கூடிச் சென்று கொட்டமடித்தார்கள். கோயிலிலும் கொட்டகையிலும் நின்று நின்று இன்பக் கதைகள் எல்லாம் பேசினார்கள். தோப்பிலும் துரவிலும் சுற்றி வந்து பொழுதை இனிதாகக் கழித்தார்கள். நாட்கள் ஓட்டமாக ஓடின. ஆனால் அதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதாகி விட்டது. சுசீலாவின் கல்லூரி திறந்து விட்டார்கள். நாகலிங்கமும் அவசர அழைப்பின்பேரில் சிங்கப்பூர் திரும்பும்படியாகி விட்டது. சுசீலாவுக்கு அது இறுதி ஆண்டு ஆனதால் அவர்களோடு அவளும் புறப்பட முடியவில்லை. இல்லையோ, கல்லூரிப் படிப்பே அவசியமில்லை என்று நிறுத்தியிருப்பாள்.

ஆயினும் அவர்கள் கடிதத்தின் மூலம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள். நேரில் பேசிக்கொள்ள முடியாதவற்றையெல்லாம் கடிதங்களிலே தாராளமாக மனம் விட்டு எழுதிக் கொண்டார்கள். இருவருடைய காதலும் கனிந்து, சரியான பக்குவத்தை அடைந்துவிட்டதாக அவர்கள் உணர்ந்தார்கள். ஒருவர் இல்லாத வாழ்க்கை மற்றவருக்கு இல்லை என்ற அளவுக்கு அவர்கள் நேசம் முற்றி முதிர்ந்து விட்டது.

"நான் விரைவில் சென்னை வருவதாக இருக்கிறேன். மற்றவற்றை அங்கே கலந்து பேசிக் கொள்ளலாம்" என்று கண்ணபிரான் கடிதம் எழுதியிருந்தான்.

சுசீலாவும் கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு, காதலனுடைய வரவுக்காகக் காத்திருந்தாள்.

கண்ணபிரானிடமிருந்து கடிதங்கள் மட்டும் தவறாமல் வந்து கொண்டிருந்தனவே தவிர, அவன் வருவதையே காணவில்லை. கிட்டத்தட்ட மூன்று வருஷங்கள் ஆகிவிட்டன, அவன் படிப்பு முடிந்து. அப்புறம்தான் எதிர்பாராத போது அந்த மகிழ்ச்சிகரமான செய்தி வந்தது. அடுத்த வாரம் சென்னை வருவதாகக் கண்ணபிரான் 'கேபிள்' கொடுத்திருந்தான்.

பெற்றோருக்குப் பெரிய வேதனையாகவும் தனக்கே ஒரு பெரிய பாரமாகவும் இருந்த அந்த விஷயத்தைக் கண்ணபிரான் வந்ததுமே தீர்த்துவிடலாம் என்கிற ஆனந்தத்தில் அவளுக்குப் பசி, தூக்கம் எல்லாம்கூடப் பறந்து விட்டன.

ஆனால் விமானக் கூடத்துக்கு வந்ததுமே சுசீலாவுக்குப் பெருத்த ஏமாற்றமாகப் போய் விட்டது. பாரிஸ்டரையும் அவர் குடும்பத்தையும் பார்த்த பிறகு அவளுக்கு இருந்த உற்சாகமெல்லாம் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டுவிட்டன. கண்ணபிரானை வரவேற்க இவர்கள் இப்பொழுது மட்டும் எங்கிருந்து வந்து குதித்தார்கள்? முதல் தடவை அவன் அங்கு வந்தபோது இவர்கள் யாரையும் காணவில்லையே!

பாரிஸ்டர் வீட்டில் நடக்கும் விருந்துக்கும் காட்டியத்துக்கும் உள்ள அழைப்பைக் கண்ணபிரான் ஓர் ஆள் மூலம் கொடுத்து அனுப்பியிருந்தான். அதைக் கண்டதுமே அவளுக்குப் பின்னும் உற்சாகம் குன்றியது. ஆயினும் கண்ணபிரானைச் சந்திப்பதற்காகவே போவது என்று முடிவு செய்து கொண்டாள்.

உஷாவின் காட்டியத்தையும் கண்ணபிரானின் தலையாட்டத்தையும் பார்த்துச் சகித்துக்கொண்டிருக்க அவளால் எப்படி முடியும்? பெண்களுக்குப் பொறாமையையும் கோபத்தையும் படைக்காமல் அழகையும் அன்பையும் மட்டும் வைத்திருந்தால் ஆண்களுக்கு அவர்களிடம் என்ன கவர்ச்சி இருக்கப் போகிறது?

"ஷீலா! இந்த வீட்டில் நீ மட்டும்தான் இருக்கிறாயா?" என்றான் கண்ணபிரான்.

"வேண்டாம்! என்னை முன்போலவே சுசீலா என்றே கூப்பிடுங்கள். நீங்களும் முன்போலவே நடந்து கொள்ளுங்கள். அதுபோதும் எனக்கு!" என்று அழமாட்டாத குறையாகப் பேசினாள் சுசீலா.

அவளுக்குத் தேறுதலும் நம்பிக்கையும் உண்டாக்குவதிலேயே அவன் தன் முழு நேரத்தையும் கவனத்தையும் செலவிட வேண்டியதாயிற்று.

"மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகி விட்டதே! இனிமேல் என்னைக் கொண்டு போய் விட்டுவிட்டு, நீ தனியாக எப்படித் திரும்புவாய்? நான் வேண்டுமானால் போகாமல் இருந்து விடட்டுமா? காலையில் போனால் என்ன மோசம்?" என்றான்.

"ஐயையோ, வேண்டாம்! உங்களைக் கொண்டுபோய் விட்டுவிட்டு நான் தனியாக வந்துவிடுவேன். எனக்கு ஒன்றும் பயமில்லை. ராத்திரி வேளையில் இங்கே நீங்கள் தங்குவது சரியல்ல! ஊஹூம்... வேண்டாம்!" என்றாள் சுசீலா.

"இவ்வளவு நேரத்துக்குமேல் போனால் மட்டும் மற்றவர்களுக்குச் சந்தேகம் உண்டாகாதா?" என்று கேட்டான் கண்ணபிரான்.

"அதனால் ஒன்றும் மோசமில்லை. ஆனால் நமக்கே நம்மைப்பற்றிச் சந்தேகம் இல்லாமல் இருந்தால் அது போதும்!" என்றாள் சுசீலா.

வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டதும், "ஷீலா!" என்று சாவியைத் திருப்பப்போன அவளுடைய கையை எடுத்து மெல்லத் தன் கையினுள் வைத்துக் கொண்டான் அவன்.

அவள் அசையவில்லை; தடுக்கவில்லை: பெருமூச்செறிந்தவாறே அவள் தன் முகத்தை வேறு புறமாகத் திருப்பிக் கொண்டாள். அந்த ஏக்கப் பெருமூச்சுக்கு எத்தனையோ பொருள்கள் சொல்லலாம்!

"என்னிடம் உனக்கு நம்பிக்கை இல்லையா, சுசீலா?"

அவள் தன் கைவிரல்களை மெதுவாக விடுவித்துக்கொண்டு முந்தானையால் கண்களை ஒற்றிக்கொண்டாள்.

"பெண்கள் நம்பிக்கையினால்தான் வாழ்கிறார்கள். நான் மட்டும் என்ன அதற்கு விதிவிலக்கு?"—அவள் வார்த்தையை முடிக்குமுன் வண்டி துள்ளிப் பாய்ந்துகொண்டு புறப்பட்டுவிட்டது.

கண்ணபிரான் வண்டியைவிட்டு இறங்கியதுமே பங்களாவின் விளக்குகள் பளிச்சுப் பளிச்சென்று எரியத் தொடங்கின. சுசீலாவின் கார் திரும்பிவிட்டது. இவ்வளவு நேரமும் 'போர்டிகோ'வின் மூலையில் சுருட்டிப் படுத்துக் கொண்டிருந்த ஒருவன் இப்போது வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான்.

"யாரப்பா நீ. தோட்டக்காரனா?" என்றான் கண்ணபிரான்.

"இல்லீங்க எசமான், எம் பேரு பக்கிரி! சிங்கப்பூரு... உங்களைப் பார்க்கத்தான்..."


கண்ணபிரான் ஒரு கணம் திகைத்து, "சரி, யாராக இருந்தாலும் காலையில் வந்து பார், போ!" என்று கூறிவிட்டு, விடுவிடென்று படியேறிச் சென்றான்.

விரட்டிவிட்ட நாய் மறுபடியும் வந்து அடக்கமாக முடங்குவதுபோல, பக்கிரி பழைய இடத்திலேயே போய்ப் படுத்தான்.

(தொடரும்)



சென்னை ஏஜண்டுகள் ஜே பாலபாய் & கம்பெனி 260, எஸ்பிளனேட், மதராஸ்-1
இலங்கை ஏஜண்டுகள் செருக் கதிர் & கோ, 41 & 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11



குறைந்த விலை
நீடித்த உழைப்பு

36" A. C.
மாடல் மட்டும், கண்டென்ஸர் டைப் பால்பேரிங்குகளும் கொண்டது.

உஷா விசிறிகள் வெகு அழகாகவும் வசீகரமாகவும் செய்துள்ளன. அவைகள் யாதொரு தொந்திரவுமில்லாமல் நல்ல அமைதியான உழைப்பைத்தருகின்றன.

ரூ. 120 தான்
சென்ட்ரல் எக்ஸைஸ் வரி உட்பட, உள்ளூர் வரிகள் தனி.

உஷாவை வாங்கி திருப்தி அடையுங்கள்

ஜே இன்ஜினீயரிங் ஒர்க்ஸ் லிமிடெட், கல்கத்தா

அனஸின்



உங்களுடைய

தலைவலி, ஜலதோஷம், ஜுரம் மற்றும் தசைவலிகளுக்கு

நிவாரணமளிப்பதில் **சிறந்தது**

ஏனெனில் அதில் **நான்கு மருந்துகள்** சேர்ந்துள்ளன.

'அனஸின்' ஒரே ஒரு மருந்துமட்டுமல்ல, அது தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசைவலிகளிலிருந்து முற்றிலும் துரித நிவாரணம் அளிக்கும், ஒரு டாக்டரின் குறிப்பிற்கு ஒப்பான, விஞ்ஞான முறையில தயாரித்துள்ள நான்கு மருந்துகளின் கலவையாகும். ஒரே மருந்து சேர்ந்துள்ள எந்த வலி நிவாரண மருந்தும் 'அனஸினை'ப் போல், துரிதமாயும் . . . அபாயமின்றியும் நிச்சயமாயும் நிவாரணம் அளிக்க இயலாது. எப்பொழுதும் வீட்டில் 'அனஸின்' வைத்திருங்கள்.



GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD. REGISTERED USER

K. 66(R) TAM.

பிணைப்பு

"ஆஹா! மிகவும் அருமையான பண்! இளவரசி! என்னால் கூட இந்தப் பண்ணை இவ்வளவு நயத்துடன் மீட்ட முடியாது!" — புகழுரையைப் பொழிந்து கொட்டினான் அவன்.

தன் தோள் மீது சாத்தியிருந்த அந்த மகர யாழைக் கீழே கிடத்திய மாதேவி, தன் நெற்றியில் கோத்திருந்த வேர்வைத் துளிகளைத் தன் மேல் அங்கியால் துடைத்துக் கொண்டாள்.

"இவ்வளவு புகழ்ச்சிக்கு நான் அருகதையுடையவள் அல்ல...." — சற்று நிதானமாக வந்தன, அவள் தொண்டையிலிருந்து இவ்வார்த்தைகள்.

"தங்கள் வாசிப்பைக் கண்டு எங்கள் அவைக் கலைஞர்கள் எல்லோருமே பிரமிப் படைகின்றனர். தாங்கள் யாழை மீட்ட ஆரம்பித்து விட்டால் அதன் நரம்புகள் உயிர் பெற்று எழுந்து விடுகின்றன. உங்களைப் போன்ற ஒரு சிறந்த யாழ்வினைஞரை இதுவரை பார்த்ததில்லை என்று என் தந்தை அடிக்கடி சொல்லுகிறார். தங்களிடத்தில் சிட்சை பெறும் பாக்கியத்தை நான் பெற்றது என் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்லுவேன். ஆனால் ......" மாதேவி நிறுத்தினாள்.

அவன் முகத்தில் கேள்விக்குறி எழுந்தது. "எங்களுக்கு உங்களைப் பொறுத்த வரையில் இரண்டு குறைகள். இந்தக் குடிசையை விட்டு விட்டு எங்கள் அரண்மனையில் வந்து தங்கும்படி என் தந்தை எவ்வளவு வேண்டி அழைத்தும், தாங்கள் வர மறுப்பதும், எவ்வளவு வருந்திச் சொல்லியும் எங்கள் சபையில் ஒரு நிரந்தரக் கலைஞராகத் தாங்கள் இருக்க ஒப்புக் கொள்ளாமையுமே அவை."

"இயற்கையோடு இணைந்த சூழ்நிலைதான் ஒரு கலையை அப்பியசிக்க ஏற்ற இடம். எந்தக் கலைஞனும் அப்படிப்பட்ட ஒரு இடத்தைத்தான் தேடி அடைவான். ஆகவே கலைஞனுடைய மனப்பான்மைக்கு அரண்மனை வாசம் மாறானது. நான் இடம் விட்டு இடம் போய்க் கொண்டேயிருக்கும் கலைஞன். தேச சஞ்சாரத்தில் இன்பம் காண்பவன். ஒரு நிரந்தர உத்தியோகத்தில் என் மனம் செல்லவில்லை. இத்தனை நாட்கள் இங்கு தங்கியதே...."

"பெரிதென்று சொல்கிறீர்கள். இல்லையா?" மாதேவி இடைமறித்தாள்.

"இங்கு சில தினங்கள் தங்கி ஆலவாய்ப் பிரானையும் அங்கயற்கண்ணியையும் தரிசித்து விட்டுத் தெற்கே செல்

எஸ். டி. சீனிவாசன்





னும் உத்தேசத்துடன் தான் நான் இங்கு வந்தேன். ஆனால் மன்னர் உனக்கு யாழ் கற்பிக்கும் பணியை எனக்கு இடவே இத்தனை காலம் நான் இங்கு தங்கியிருந்தேன்....''

தூரத்தில் ஆலய மணியோசை கேட்டது. மாதேவி எழுந்தாள். அவனும் எழுந்தான்.

* * *

''அம்மா! நீங்கள்தான் தந்தையிடம் சொல்ல வேண்டும். நம் அரண்மனைக்கும் ஞானசேகரனுக்கும் இருக்கும் தொடர்பு இன்றுடன் அறுபட வேண்டும். இளவரசி மாதேவி தினம் அங்கு சென்று அந்தப் பரதேசிப் பயலிடம் யாழ் வாசிக்கக் கற்றுக் கொள்வது எனக்குத் துளிக்கூடப் பிடிக்கவில்லை. எவ்வளவு வேண்டியமைத்தும் நம் அரண்மனைக்கு அவன் வரமாட்டானாம். நம் நலமென்ன, கௌரவமென்ன? என் தங்கை அங்கு செல்வானேன்? அவளுக்கு யாழ் வாசிக்கக் கற்றுக் கொடுக்க நம் நாட்டில் வேறு வல்லுனர்களா இல்லை? ஆயிற்று. இன்னும் சில மாதங்களில் ஸ்ரீதேவன் அவளை மணக்கப் போகிறான். அவனுக்கும் இந்த ஏற்பாடு சுத்தமாகப் பிடிக்கவில்லை....''

''நாளைக் காலையில் உன் தந்தை இங்கு வரும்போது உன் கருத்தையும், ஸ்ரீதேவனின் மனவருத்தத்தையும் அவருக்கு எடுத்துச் சொல்லுகிறேன். சரிதானே?''

''தந்தை தங்களைக் காண வர இன்னும் மூன்று தினங்களாகும்.''

''ஏன்?'' பாண்டிய அரசி விவரம் புரியாமல் கேட்டாள்.

''அடுத்த பௌர்ணமியன்று பல்லவருடன் யுத்தம் ஆரம்பிக்கப் போகிறார் தந்தை. அதற்கு வேண்டிய திட்டங்களையெல்லாம் வகுக்கப் படைத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்த நெல்வேலிக் கோட்டைக்குச் சென்றிருக்கிறார்.''

''மறுபடியும் பல்லவருடன் போரா?''

''என் பாட்டனார் காலத்தில் தென்னாற்றுப் போரில் நமக்கு ஏற்பட்ட மாசைத் துடைப்பது நம் கடமையல்லவா? பல்லவ மன்னன் நிருபதுங்கன் முதுமையடைந்து விட்டான். பல்லவ இளவரசன் அபராஜிதன் இளைஞன். போர் அநுபவம் அற்றவன். பல்லவப் பேரரசைத் தாக்குவதற்கு இதுதான் சரியான தருணம்.''

''போரென்றால் ஒரே கவலை வந்து மனத்தைச் சூழ்ந்து விடுகிறது.....''

''போருக்குப் பயந்தால் பாண்டியர் குலத்தின் பழம் பெருமை என்ன ஆவது?'' என்று சொல்லி விட்டு அவன் வெளியே வந்தான்.

பராந்தகன் வெளியே வருவதற்கும், மாதேவி அந்த அறையினுள் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

* * *

இரவின் இரண்டாம் ஜாமத்தை அறிவிக்கும் கோட்டை மணி ஒலித்தது. பாண்டிய இளவரசி தூக்கமின்றித் தன் ஹம்சதூளிகா மஞ்சத்தில் புரண்டு புரண்டு படுத்திருந்தாள். தன் அண்ணன் சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவள் மனத்தில் எதிரொலித்துக் கொண்டேயிருந்தன.

ஸ்ரீதேவனுக்கும் அவளுக்கும் மணம் முடித்து வைக்க வேண்டும் என்பது நீண்ட நாளையத் திட்டம். ஆனால் சென்ற ஆண்டு அவளுடைய பதினேழாம் பிறந்த தினத்தைக் கொண்டாடியபோது, அவள் ஞானசேகரனைச் சந்தித்ததிலிருந்து, அவள் மனம் அவள் வசத்தில் இல்லை. ஞானசேகரனின் பாட்டு மட்டும் அவளைக் கவரவில்லை; அவனுடைய உருவமும் அவளைக் கவர்ந்துவிட்டது. அவளோ அரசகுமாரி; அவனோ ஒருநாடோடி யாழ்விளைஞன். அவளால் அவனை மணக்க முடியுமா? அந்தச் சந்தேகம் அவள் மனத்தில் எழத்தான் செய்தது. ஆனால் அவளுக்குத் தன் தந்தையிடம் சலுகை அதிகம். ஆகவே, நாளடைவில் செல்லச் செல்லத் தன் எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது. ஆனால் இப்பொழுது அவள் அண்ணன் சொன்ன வார்த்தைகளிலிருந்து அவன் பிடிவாதமாக அவளை ஸ்ரீதேவனுக்கு மணம் செய்து வைக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்து விட்டது. அதில் ஒரு அரசியல் நோக்கமும் இருந்தது. ஸ்ரீதேவன் கொடும்பாளூர் வேளிர் குலத்தைச் சார்ந்தவனாயினும் பராந்தகனின் நண்பன். கொடும்பாளூர் வேளிர்களுக்கும் சோழர்களுக்கும் கொள்வினை கொடுப்பினை உண்டு. மாதேவியை ஸ்ரீதேவனுக்கு மணம் செய்து கொடுத்து விட்டால், சோழர் உதவியும் பாண்டியருக்குக் கிடைக்கும். சுலபமாகப் பல்லவர்களைத் தோற்கடித்து விடலாம். இதுவே பாண்டிய இளவரசன் பராந்தகனின் எண்ணம். பாண்டிய மன்னர் வரகுண மகாராஜாவும் இளவரசன் பராந்தகனின் திட்டத்தை ஆதரித்தார். ஸ்ரீதேவனும் மதுரையில் வந்து தங்கிப் பாண்டியர் படையிலேயே ஒரு பதவி வகித்து வரலானான்.

மாதேவியின் அழகு ஸ்ரீதேவனைப் பெரிதும் கவர்ந்தது. அவளை அவன் மனமார நேசித்தான். பாண்டியர்—பல்லவர் போர் ஆரம்பிப்பதற்குள் மாதேவியின் திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்பது பராந்தகனின் எண்ணம்.

படுக்கையில் புரண்டு கொண்டிருந்த மாதேவியின் மனத்தில் மற்றொரு விஷயம் கலக்கத்தை உண்டாக்கியது. ஞானசேகரன் அரண்மனையில் வந்து தங்க வேண்டும் என்கிறான் அண்ணன். ஆனால் ஞானசேகரனோ மிகவும் பிடிவாதக்காரன். அவனுக்கும் தன் அண்ணன் பிடிவாதத்துக்கும் பலப்போட்டி ஏற்பட்டால், நடுவில் நஷ்டம் அடையப் போகிறவள் அவள்தானே? எனவே, மனம் குழம்பியது மாதேவிக்கு.

* * *

மறுநாள் சூரியன் அஸ்தமிக்கும் நேரம். பாண்டியகுமாரி ஞானசேகரனின் ஆசிரமத்தை அடைந்தாள். உள்ளே நுழைந்த அவள் அப்படியே திகைத்து நின்று விட்டாள். ஞானசேகரன் மூட்டை முடிச்சுகளுடன் எங்கோ கிளம்பிக் கொண்டிருந்தான்.

''எங்கே திடீரெனப் பிரயாணம்?'' அவளுடைய திகைப்பு அவளுடைய வார்த்தைகளில் வெளிப்பட்டது.

''இளவரசி! விஷயம் உனக்குத் தெரியாதா? உன் தந்தைக்கும் பல்லவர்களுக்கும் போர் மூளப் போகிறதாமே? நகரெங்கும் அதே பேச்சாகத்தானே இருக்கிறது! போர் ஆரம்பித்து விட்டால் பின் ஒருவரும் தங்கள் இஷ்டம்போல் பிரயாணம் செய்ய முடியாது. போர் முடிய எத்தனை காலம் செல்லுமோ? என்னைப் போன்ற கலைஞர்கள் ஓரே இடத்தில் தங்கி யிருப்பது என்பதும் முடியாத காரியம். ஆகவே, பிரயாண விதிகளெல்லாம் கடினமாக்கப் படுவதற்குள் நான் ஆலவாயை விட்டுக் கிளம்பிப் போய் விடலாம் என்று பார்க்கிறேன்.''

''எங்கு போவதாக யோசனை?''

''போவதற்குக் குறிப்பிட்ட இடம் எதுவும் இல்லை...மனம் எப்படிப் போகிறதோ, அப்படிப் பிரயாணம்...''

''அப்படியானால் நானும் தங்களுடன் வந்து விடுகிறேன்...''

''என்ன? நீ என்னுடன் வருகிறாயா? மாதேவி! நீ இந்த வார்த்தைகளைச் சித்தகலாதீனத்துடன்தான் பேசுகிறாயா அல்லது...''

''இப்போது நல்ல தெளிவோடுதான் பேசுகிறேன். ஆனால் நான் தங்களுடன் வரா விட்டால்தான் சித்த கலாதீனம் இல்லாமல் போய்விடும்...''

''நீயோ அரசகுமாரி. நானோ ஒரு நாடோடிக் கலைஞன். நம் அந்தஸ்தில்...''

''நம் அந்தஸ்தில் உள்ள ஏற்றத் தாழ்வு எனக்கு நன்றாகத் தெரியும்...நான் என் மனத்துக்குப் பிடித்த ஒருவரோடுதான் என் வாழ்க்கையைப் பிணைத்துக்கொள்ள விரும்புகிறேன். தங்களோடு சேர்ந்து வாழும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமாயின் நாடோடி வாழ்க்கையை நான் மனமுவந்து ஏற்றுக் கொள்ளுவேன். நான் இளவரசியாக வாழ விரும்பவில்லை. நீங்கள்தான் எனக்கு வேண்டும்...உங்களைப் பிரிந்து என்னால் வாழ முடியாது...'' இந்த வார்த்தைகளைச் சொல்லும் போது அவள் நாத் தழுதழுத்தது. கண்களில் நீர்கோத்து நின்றது. ஆனால் அவளுடைய சொற்களில் உறுதி தொனித்தது.

''மாதேவி! உன் அன்பு என்னைப் பெரிதும் மகிழ்விக்கிறது. உன் உறுதி எனக்குக் களிப் பூட்டுகிறது. ஆனால்...''

''ஆனால் என்ற பேச்சே இல்லை..நம் இருவர் பிரயாணத்துக்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு, நன்றாக இருட்டின பிறகு நான் இங்கு வருகிறேன் . . . தயாராக இருங்கள்...''

அவள் உடனே சென்று விட்டாள்.

மகிழ்ச்சி, திகைப்பு, பயம் முதலிய எல்லா உணர்ச்சிகளும் ஒருங்கே தாக்க ஞானசேகரன் அப்படியே சிலையென அமர்ந்து விட்டான்.

* * *

''இன்னும் இரண்டு காத தூரம்தான். அதன்பின் பாண்டிய நாட்டின் எல்லையைக் கடந்து சோழ நாட்டை அடைந்து விடுவோம்...'' குறுகிய கணவாயை நெருங்கிக் கொண்டிருந்த ஞானசேகரன் சொன்னான்.

''ஆகாயத்தில் வெள்ளி முளைக்க இன்னும் ஒரு நாழிகை நேரம்தான் இருந்தது. இரவெல்லாம் வேகமாகப் பிரயாணம் செய்த



''தம்பி! அரையைக் காலால் பெருக்கினால் என்ன வரும்?''

''நான் மாட்டேன் ஸார். கால் தேய்ந்து ரத்தம் வரும்.''

களைப்பினால் அவன் அமர்ந்திருந்த அந்த உயர்ஜாதிக் குதிரையின் வாயின் இருபுறங்களிலும் நுரை கட்டி நின்றது.

''நம்மைக் காட்டிலும் நம் குதிரைகளுக்குத்தான் சிரமம் மிகவும் அதிகம்....'' அவன் பக்கத்தில் வேறு ஒரு குதிரையின் மேல் பாண்டியப் போர்வீரனின் உடையில் அமர்ந்து பிரயாணம் செய்து வந்த பாண்டிய புத்திரி கூறினாள்.

இரண்டு கண நேர அமைதி.

எதிரே இரு குன்றுகளுக்கிடையே ஒரு கணவாய். 'அதைத் தாண்டினால் சிறிது தூரம் வரை அடர்ந்த காட்டுப் பிரதேசம்.

'உறையூர் வந்துவிட்டால் உங்கள் படை வீரர்கள் உங்களை எதிர்கொண்டு அழைப்பார்கள் அல்லவா?''—அவளைப் பார்த்து அவன் கேட்டான்.

அந்த இருட்டு வேளையிலும், நட்சத்திர வெளிச்சத்தில் அவள் இதழ்களில் ஒரு இலேசான குறும்புப் புன்னகை நெளிந்து மறைந்ததை அவன் கவனித்தான்.

''என்ன சொல்லுகிறாய், மாதேவி நீ?..... எனக்கு ஒன்றுமே புரியவில்லையே?''

''நான் என்ன சொல்லுகிறேன்? உண்மையைச் சொல்கிறேன். ஏன், தாங்கள்தான் பல்லவ இளவரசர் அபராஜிதப் பல்லவர் என்பதை நான் எப்படி அறிந்து கொண்டேன்என்பதைநினைக்கத் தங்களுக்குத் திகைப்பாய் இருக்கிறதோ?''

'மாதேவி!...'' ஆச்சரியத்தால் வேறு வார்த்தைகள் இளவரசன் அபராஜிதனின் வாயிலிருந்து வெளிவர மறுத்தன.

''உண்மை தெரிந்துவிட்டபின் மறைப்பதில் பயன் இல்லை.''



அந்த "கஷ்டமான நாட்களில்"
இருக்கும் வலிக்கு

ஸாரிடான் நிவாரணம் அளிக்கிறது

அந்த 'கஷ்டமான நாட்களில்' நீங்கள் வலியால் அவதிப்பட வேண்டியதில்லை. ஸாரிடான் சாப்பிடுங்கள். அது சாப்பிட்ட சிறிதே நேரத்தில் வலியை சமனப்படுத்தி உங்களை மறுபடியும் தெம்புடனும், புத்துணர்ச்சியுடனும் இருக்கச் செய்யும். ஸாரிடான் எல்லாவித வலிகளுக்கும் விரைவில் முழு நிவாரணம் அளிக்கிறது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

ஒரு ஸாரிடான் வில்லையின் விலை 12 நயே பைஸே. பெரியவர்களுக்கு ஒரு வில்லை ஒரு பூர்த்தியான டோஸ். சிறுவர்களுக்கு ¼ வில்லையிலிருந்து ½ வில்லை வரை போதுமானது.

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் : வோல்டாஸ் லிமிடெட்

"நீ சொல்வது உண்மைதான். ஆனால் எவ்வளவோ முன்னெச்சரிக்கையோடு நான் நடந்துகொண்டும் உனக்கு எப்படி விஷயம் தெரிந்து விட்டது என்பதுதான் எனக்கு விளங்கவில்லை."

"நேற்றைக்கு முன் தினம் நான் தங்கள் ஆசிரமத்துக்கு வந்தபோது, தாங்கள் அவசரமாக வெளியே சென்றீர்கள். ஆசிரமத்தின் ஒரு மூலையில் இருந்த யாழை நான் எடுக்கப் போனபோது, ஓர் ஓலைச்சுருள் என் காலில் தட்டுப்பட்டது. அதை எடுத்து [நான் பத்திரமாக வைத்துக் கொண்டேன். அரண்மனைக்குச் சென்று ஒருவரும் அறியாவண்ணம் அதைப் படித்தேன். காஞ்சிக்கு உடனே திரும்பும்படி தங்கள் தகப்பனார் ஸ்ரீ நிருபதுங்க பல்லவ மகாராஜா தங்களுக்கு இட்ட கட்டளை ஓலை தான் அது."

"ஆ! மாதேவி! மாறுவேஷத்தில் நான் செய்து வந்த என் சுற்றுப் பிரயாணத்தின் போது நான் மதுரையை அடைந்த தருணத்தில் உன்னைப் பார்க்கும் அதிர்ஷ்டம் எனக்குக்கிடைத்தது. உன் அழகு என்னைப் பெரிதும் கவர்ந்தது. அதன் காரணமாக நீண்டநாட்கள் நான் ஆலவாயில் தங்கிவிட்டேன். ஆனால் ஒரு விஷயம்தான் எனக்கு மிகுந்த ஆச்சரியமாய் இருக்கிறது. நான் உங்கள் விரோதி என்று தெரிந்த பிறகுமா நீ என்னுடன் வரச் சம்மதித்தாய்?"

"தங்களுடன் வருவதில் எனக்கென்ன பயம்? தங்கள் பெரிய பாட்டியார் மாறம் பாவையார் என் அத்தை தானே? அவர்கள் காஞ்சியில் இருக்கும்போது எனக்கு என்ன கவலை? சந்தோஷத்தோடு அவர்கள் நம் இருவருடைய திருமணத்தையும் முடித்து வைக்க மாட்டார்களா?"

அவர்கள் அந்தக் கணவாயில் நுழைந்து விட்டனர்.

"வேறு ஒருவருக்கும் இந்த விஷயம் தெரியாதிருக்க...."

"என்னைத் தவிர நிச்சயம் வேறு யாருக்கும் இவ் விஷயம் தெரியாது."

மாதேவி முடிக்கவில்லை. அதற்குள், "ஏன் தெரியாது? எனக்குக் கூட ஞானசேகரன் தான் பல்லவ இளவரசன் அபராஜிதன் என்று நன்றாகத் தெரிந்து விட்டது" என்ற குரல் கேட்டது.

அடுத்த கணம் ஸ்ரீதேவன் அவர்களுக்குக் குறுக்கே, தன் குதிரையின் மேல் வந்து நின்றான். அவனைத் தொடர்ந்து சுமார் நூறு பாண்டிய வீரர்கள் அபராஜிதன்—மாதேவி இருவரையும் சூழ்ந்து கொண்டனர்.

"இரவு வெகு நேரத்துக்குப் பின் தான் நம் ஒற்றர் தலைவன் நீங்கள் இருவரும் தப்பிச் செல்வதையும், யாழ் வினைஞனாக வேஷம் போட்டவன் தான் பல்லவ இளவரசன் என்ற செய்தியையும் கொண்டு வந்தான். எப்படியும்



தரும சங்கடம்!

பிச்சைக்காரன்: எனக்கு அன்றைக்குக் கொடுத்த சொக்காயின் பாக்கெட்டில் ஒரு எட்டணா இருந்ததுங்க!

வீட்டுக்காரி: அதைத் திருப்பிக் கொடுக்க வந்தாயா?

பிச்சைக்காரன்: இல்லீங்க! அது மாதிரி இன்னொரு சொக்காய் இருந்தால் கொடுங்கள்!

விசேஷ நடுக்கம்!

"பாட்டி விளக்கெண்ணெய் கொடுத்தால்தான் சாப்பிடுவேன்!"

"பாட்டி கையிலே அப்படி என்னடா விசேஷம்?"

"பாட்டி கை நடுக்கும். கொடுக்கும் போது எல்லாம் கீழே கொட்டி விடும். சொட்டு எண்ணெய்கூட என் வாயில் போய்ச் சேராது!"

நானிருக்க பயமேன்?

கட்சிக்காரர்: இந்தக் கேஸ் ஜெயிக்காதோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது, வக்கீல் சார்!

வக்கீல்: பயப்படாதே! போன வருஷம் இதே மாதிரி கேஸ் ஒன்று என்னிடம் வந்தது. ஜெயித்து விட்டது!

கட்சிக்காரர்: அப்படியா, உங்களுக்கு யாரையுங்க வக்கீலா வைத்துக் கொண்டீங்க?

பசை போன்றவர்!

பல்பசை டியூப் கம்பெனியைச் சேர்ந்தவர்: என்னை அந்தக் கூட்டத்திலிருந்து வெளியே தள்ளிவிட்டாங்க, சார்! மறுபடியும் என்னால் உள்ளே போக முடியவில்லை!

மற்றவர்: உங்கள் பல்பசை மாதிரி தானே நீங்களும் இருப்பீங்க? டியூப்பிலிருந்து வெளிவந்த பசை மறுபடியும் உள்ளே போக முடியுமா?

எப்பொழுது?

"என் அக்காளுக்கு தலை மயிர் வெகு நீளம். தரையில் வந்து இடிக்கும்!"

"கீழே படுத்திருக்கும்போதா? சிரசாசனம் பண்ணும் போதா?"


வழக்கத்துக்கு விரோதம்!

"கூட்டிப் பார்த்தால் கடையின் கணக்கு 'கரெக்டா'கவே இருக்கு..... இது என்னடா வம்பாப்போச்சு? ஏதோ கூட்டுவதில் பிசகு செய்திருப்பேன்போல் தோன்றுகிறது! மறுபடியும் கூட்டுகிறேன்!" —ஒரு லெட்ஜர் கிளார்க்

குழந்தைச் செல்வம்!

அம்மா: குழந்தை! நீ இருப்பது எனக்கு லட்ச ரூபாய் இருப்பதற்குச் சமானம்!"

குழந்தை: அப்படின்னா, அதுலே எனக்கு இரண்டு ரூபாய்க்குப் பொம்மை வாங்கித் தாயேம்மா!"



"எங்களுடைய வண்ணான் ரொம்ப நல்லவன்சார்! துணிகளிலே பணம், பித்தான்மற்றது இருந்தாலும் அவன் எடுக்கிறதில்லே!"

"இதென்ன பிரமாதம்! எங்களுடைய வண்ணான் அழுக்கைக்கூட எடுக்கிறதில்லே!......"

இந்தக் கணவாய் வழியாகத்தான் நீங்கள் செல்ல வேண்டும் என்று எனக்குத் தெரியும். நீங்கள் ராஜபாட்டையில் சுற்றிக் கொண்டு வரும் நேரத்துக்குள், நான் காட்டு வழியாக வந்து என் வீரருடன் இங்கு ஒளிந்திருந்தேன். என் திட்டம் நிறைவேறி விட்டது.

"அபராஜிதா! இன்றுடன் பல்லவப் பரம்பரை ஒழிந்தது. பல்லவர் — பாண்டியர் போரும் முடிந்தது. மாதேவி! இந்தக் கயவனுடன் ஆண் வேஷத்தில் காஞ்சீபுரத்துக்கு ஓடி விடவா பார்த்தாய்? இந்த ஸ்ரீதேவன் எப்படிப்பட்டவன் என்று நீ இன்னும் முப்பது நாழிகைக்குள் அறிவாய். உன் கள்ளக் காதலன் தலை துண்டிக்கப்பட்டு, உன் காலடியில் விழும். அதே சமயத்தில் உலகறிய நீ என் மனைவியாகப் போகிறாய்! வீரர்களே! ஏன் நிற்கிறீர்கள்? இருவர் கைகளிலும் விலங்கிட்டு, அருகில் உள்ள வல்லபக் கோட்டைக்கு அழைத்துச் செல்லுங்கள். பொழுது விடிந்ததும் நீங்கள் மதுரைக்குத் திரும்பலாம்..."

வீரர்கள் அவர்கள் இருவர் கைகளிலும் விலங்கிட்டனர்.

* * *

பொழுது விடியும் தருணம். இரவெல்லாம் புலம்பிப் புலம்பிப் பாண்டிய இளவரசியின் கண்கள் சிவந்திருந்தன. தன்னால் அநியாயமாகப் பல்லவ இளவரசன் அபராஜிதனுக்கல்லவா ஆபத்து ஏற்பட்டு விட்டது! ஸ்ரீதேவன் பிடிவாதக்காரன். எடுத்த காரியத்தை முடித்தே தீருவான். அபராஜிதன் தலை தரையில் விழும் தருணத்தில் தான் அவனுக்கு மாலையிடுவதா? பயம், கோபம், அவமானம், வெறுப்பு — எல்லா உணர்ச்சிகளும் அவள் உள்ளத்தில் அலைமோதின.

திடுமென்று அவளைப் பூட்டி வைத்திருந்த அறைக் கதவு திறக்கப்பட்டது. ஸ்ரீதேவன் உள்ளே நுழைந்தான். மறு விநாடி அவள் கைவிலங்குகள் அவிழ்க்கப்பட்டன.

"மாதேவி! ஹூம்! நட! அதோ வெளியே உள்ள பல்லக்கில் ஏறிக் கொள்..."—அவன் வாயிலிருந்து உத்தரவு பிறந்தது.

அவள் மௌனமாக வெளியே வந்தாள்.

மூடிய பல்லக்கொன்று வெளியே காத்திருந்தது. திரையை விலக்கி விட்டு அவள் அதனுள் ஏறி உட்கார்ந்து கொண்டாள். அவளுடைய கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. அதனுள் பல்லவ இளவரசன் அபராஜிதனும் உட்கார்ந்திருந்தான்.

மறுபடியும் திரை மூடப்பட்டது. திடகாத்திரமுள்ள நான்கு சேவகர்கள் பல்லக்கைத் தூக்கிக் கொண்டு வேகமாக நடந்தனர்.

விடிந்து இரண்டு நாழிகைகளுக்கெல்லாம் பல்லக்கு ஓர் இடத்தில் இறக்கப்பட்டது. அபராஜிதன் திரையை விலக்கிக் கொண்டு வெளியே வந்தான். பொன்னியாற்றின் தென் கரை. தூரத்தில் பல்லவப் படையின் கூடாரங்கள் தென்பட்டன.

மாதேவியும் இறங்கினாள். அவள் உட்கார்ந்திருந்த இடத்தில் ஒரு துண்டு ஓலை கிடந்தது. பரபரப்புடன் அதை எடுத்தாள் அவள். பல்லக்கு அங்கிருந்து போய்விட்டது.

ஆவலை அடக்க முடியாத அவள் ஓலையைப் படித்தாள்:

"உங்கள் இருவரையும் வல்லபக் கோட்டைக்குக் கொண்டு போன பின், என் மனம் பெரும் சிந்தனையில் ஆழ்ந்தது. நான் உன்னை மனமாரக் காதலித்தேன். அபராஜிதனோடு நீ தப்பிச் சென்ற போது, அவனைக் கொன்று அவன் பிணத்துக்கு முன் உன்னை மணக்க வேண்டும் என்ற எண்ணம் தான் என் மனத்தில் முதலில் எழுந்தது. ஆனால் சில கண நேர யோசனைக்குப் பின் என் விவேகம் எனக்கு வழி வகுத்துக் கொடுத்தது. நீ என் அன்புக்கு மிகவும் பாத்திரமானவள். ஆனால் நீயோ அபராஜிதனை முழுமனத்துடன் காதலிக்கிறாய். இந்த நிலையில் யோசித்து யோசித்து நான் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தேன். உன்னையும் உன் காதலனையும் பத்திரமாகப் பாண்டிய நாட்டின் எல்லையைத் தாண்டி அனுப்பி விடத் தீர்மானித்தேன். இதன் விளைவு எவ்வளவு அபாயகரமானது என்று எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் உன் மகிழ்ச்சிதான் என் வாழ்வின் லட்சியம். உனக்கும் உன் காதலனுக்கும் என் ஆசிகள்.

— ஸ்ரீதேவன்."

இந்த லிகிதத்தைப் படித்த அபராஜிதனும் மாதேவியும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.

* * *

பல்லவப் படைத்தலைவனின் ஏற்பாட்டின் பேரில் அவர்கள் இருவரும் தங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார்கள்.

நந்திக் கொடி தாங்கிய அந்தப் படகு பொன்னியாற்றைக் கடந்து கொண்டிருந்தது.

"நேற்றிரவு வல்லபக் கோட்டையில் வந்து தங்கிய பாண்டியப் படையின் தலைவனும், பாண்டிய அரசனின் வலது கரம் போன்றவனுமான ஸ்ரீதேவனைக் கைது செய்யும்படி பாண்டிய இளவரசன் பராந்தகன் தன் வீரர்களுக்கு உத்தரவு இட்டு விட்டானாம். ஸ்ரீதேவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறதாம். ஜனங்கள் பேசிக் கொள்ளுகிறார்கள்..."-படைத்தலைவன் சொன்னான். இதைக் கேட்ட அபராஜிதன் ஆழ்ந்த துயரப் பெருமூச்சு விட்டான்.

மாதேவி தன் கண்கள் பெருக்கிய கண்ணீரை மெதுவாகத் துடைத்துக் கொண்டாள்.

மிக அழகிய ...

அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!

பிரதிதினமும் கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத ஜ்வலிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.



மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!

கால்கேட்
பெர்பியூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்

ஏக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்!

ECHO/ U/ 5

ஈறுகளை உறுதியுடனும்
பற்களை ஆரோக்கியத்துடனும்
சுவாசத்தை நறுமணத்துடனும்

இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்

பளிச்சென்று ஒளிவீசும் வெண்மையும்
ஆரோக்கியமுமான பல் வரிசைகளை
அடைய வேண்டுமானால்

போர்ஹான்ஸ்

பற்பசையை உபயோகியுங்கள்



ஈறுகளின் உறுதிக்காக என்றே டாக்டர் ஆர். ஜே. போர்ஹான்ஸ் கண்டுபிடித்து அளிக்கும் விசேஷத் துவர்ப்புப் பொருள் கலந்துள்ள பற்பசை இது ஒன்றுதான்.

Geoffrey Manners & Co. Private Ltd.

TAM.   E-27

அடித்து

தோய்க்கும்

தொல்லை

தொலைந்தது-

காரணம்

காவேரி பார் !





காவேரி பார்
இல்லாள் கைகண்ட
சலவை சோப்.

காவேரி பார்
ஆடைகளின்
அழுக்கை அகற்றி
அவைகளை மேலும்
வெண்மையாகவும்,
பிரகாசமாகவும்
செய்ய வல்லது !

உழைப்பை
நீடிக்கவும் செய்யும்
உன்னத சலவை சோப்
காவேரி பார் !

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை R. S. சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜண்ட்ஸ் : **சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்**

MC 433



சீதனம்



ர.சு.நல்லபெருமாள்

தூத்துக்குடி தெரியுமா? மன்னிக்க வேண்டும். தெரியுமா என்று கேட்டு விட்டேனு? திருநெல்வேலி மாவட்டத்துக்கே ஏன், இந்தியாவுக்கே பெருமையளிக்கும் ஊராயிற்றே தூத்துக்குடி? முத்தளித்துப் பெருமையூட்டும் நகராயிற்றே.

தூத்துக்குடிக்குப் போயிருக்கிறீர்களா, முத்தெடுக்கும் அற்புதத்தைக் காண? நான் போனேன். அப்போது காசியாபிள்ளை நவதானியக் கடையில் பட்டறையில் உட்கார்ந்திருந்தார்.

''வே! காசியாபிள்ளை! உம்மைத் திருநெல்வேலிப் பக்கமே காணலியே?'' என்று கேட்டுக் கொண்டே பக்கத்தில் போய் உட்கார்ந்தேன்.

''முத்துச் சிப்பி வியாபாரம் எப்படி வே இருக்கு?'' என்று அவரைக் கேட்டேன்.

''அண்ணாச்சி அதுக்குத்தான் இந்தப் பக்கம் வந்தாப்பலே இருக்கு. நானும் ஆயிரம் ரூபாய்க்குச் செஞ்சு பார்த்தேன். ஒண்ணும் கிடைக்கலே. யோகம் வேணும், அண்ணாச்சி. நேத்து ஒரு பய, இரண்டு ரூபாய்க்குத்தான் வாங்கினான். ஐயாயிரம் பெறுமான மூன்ன ஒரு முத்து கிடைச்சிக்கிட்டுது. அதுல்ல யோகம்!''

''இப்போது என்னோட வாறீரா, போய்ப் பார்க்கலாம்.''

''வந்தாப் போச்சு'' என்றேன்.

இருவரும் முத்துச் சிப்பி விற்கும் இடத்துக்குப் புறப்பட்டோம்.

அந்த வட்டாரத்தை நெருங்க நெருங்கச் சிப்பிகளின் துர்நாற்றம் மூக்கைத் துளைத்தது.

''இந்த எளவு சனியன் இப்படித்தான் நாறித் தொலைக்கும். நாற்றத்துக்குள்ளே தான் நல்லது விளையுது'' என்று கூறினார் காசியா பிள்ளை.

ஒரே கும்பல்! சிப்பி வாங்க வந்தவர்களைவிட வேடிக்கை பார்க்க வந்தவர்களின் கூட்டம்தான் அதிகம்.

''அண்ணாச்சி! அதோ ஒரு கிழவரும் ஒரு பெண்ணும் உட்கார்ந்திருக்காங்க. தெரியுதா?'' என்றார் காசியாபிள்ளை. நான் தலையை அசைத்தேன்.

''அந்தப் பெண்ணு அவருடைய பேத்தி. அவள் கழுத்திலே, ஒரு முத்துக் கிடக்கு. கவனிச்சுப் பாருங்க.''

''ஆமாம், பெரிய முத்தாயிருக்கே!'' என்றேன் ஆச்சரியத்துடன்

''என்ன விலை இருக்கும்? சொல்லுங்க, பார்க்கலாம்.''

''என்ன ஒரு ஆயிரம் ரூபாய் இருக்குமா?''

''ஆயிரமா? ஒரு சேட் அதை முப்பதினாயிரத்துக்குக் கேட்டுட்டான்.''

''அடேயப்பா! போதுமே, ஆயுசு காலம் முழுதும் சௌக்கியமா இருக்கலாம்.''

''ஆனால் அந்த முத்தை வித்தால்தானே?''

''ஏன்?''

''அது ஒரு பெரிய கதை. வாருங்க.''—அவங்ககிட்டே பத்து ரூபாய்க்குச் சிப்பிகளை வாங்கிக் கொண்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தோம்.

* * * *

இருபது, அல்லது இருபத்தைந்து வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம்! இந்தக் கிழவரின் பெயர் மாணிக்கம். அஞ்சலையும் சின்னக்கண்ணுவும் அவர் மகன் வயிற்றுப் பிள்ளைகள். குழந்தைகளின் பெற்றோர்கள் இறந்துவிடவே மாணிக்கம்தான் குழந்தைகளை வளர்த்தார். சின்னக் கண்ணுவுக்குத் தங்கை அஞ்சலை மீது அளவு கடந்த பிரியம்.

அந்த வட்டாரத்திலேயே முத்துக்குளிப்பதில் திறமை வாய்ந்தவன் சின்னக் கண்ணுதான். தண்ணீருக்குள் மூழ்கி, உள்ளேயே பல நிமிடங்கள் இருந்து கை நிறைய முத்துச் சிப்பிகளை அள்ளி வருவான். உழைப்புக்கேற்ற ஊதியம் அளிக்கும் தொழில் அது. கடுமையான உழைப்பிலும் சின்னக்கண்ணுவுக்குக் கிடைத்த வருமானத்தைக் கண்டு அவனைப் போல் தானும் உழைக்க வேண்டும் என்று

எண்ணிய நல்லவர்களும் உண்டு. அவனது உழைப்பைக் கண்டு பொறாமைப்பட்ட சோம்பேறிகளும் உண்டு.

மாயாண்டியை அஞ்சலைக்குத் தகுந்த துணைவனாகத் தேர்ந்தெடுத்தான் சின்னக் கண்ணு. அஞ்சலையின் திருமணத்தைச் சிறப்பாக நடத்தவும், நல்ல சீதனம் கொடுக்கவும் பொருள் சேர்த்தான் சின்னக்கண்ணு. தான் உழைத்துத் தங்கைக்குச் சீதனம் கொடுக்க வேண்டும் என்ற ஆசை அவனுக்கு.

வீராசாமி முத்துக் குளிக்கும் இனத்தவரின் அன்பையும் மதிப்பையும் பெற்றவர். வயது ஐம்பதுக்கு மேல் இருக்கும். தம் இனத்தவர்களில் சிலர் வாழ்வதையும், சிலர் வாடுவதையும் கண்டு வருந்தினார். திடீரென்று ஒரு நல்ல தத்துவம் அவர் சிந்தனையில் தோன்றியது. அந்தத் தொழிலைக் கூட்டுறவாக்கி வரும்படியைப் பகிர்ந்தால் சீர்ப்பட்டு விடும் என்று எண்ணினார். நல்லவர்களில் சிலர் அந்த



வர். புதிய கொள்கைக்கு ஆதரவும் இருந்தது. எதிர்ப்பும் இருந்தது.

வீராசாமியைச் சந்தித்தார் மாணிக்கம். "தனிப்பட்டவனின் உழைப்புக்கு ஊக்கமளிக்காவிட்டால், அவனுடைய சக்தி விரயமாகி விடும்" என்றார் மாணிக்கம்.

"ஆனால் மொத்தத்தில் நம் இனத்தவர்களின் தரம் உயர்ந்து விடுமே!" என்று கூறினார் வீராசாமி.

"நீ சொல்லும் முறைப்படி எல்லாரும் கடுமையாக உழைத்தால் நம் இனம் உயர்ந்து விடும். ஆனால் இது நிறைவேறாது. நம்மில் எல்லாரும் தீவிரமாய் உழைப்பதில்லை. பலர் உழைப்பில் சிந்தையற்றுத் திரிவதைக் காண்கிறோம். ஒருவனுடைய உழைப்பின் பயன் முழுவதும் அவனைப் போய்ச் சேரவில்லையென்றால், அவன் உழைப்பு குறைந்து விடும். அவனவனுக்குச் சுயநலம் உண்டு. இயற்கை வேகம் இது."

"சுயநலத்தைப் பொதுநலமாகக் கருதினால் நன்மைதானே?"

"ஆனால் உன் முறைப்படி சோம்பேறிக்கு உழைப்பவனின் பங்கு கிடைத்துவிடும். மனிதனின் முன்னேற்றத்துக்குச் சுயநலமும் தேவை" என்றார் அநுபவசாலியான மாணிக்கம்.

"நம்மவர்கள் நல்லவர்கள். என் யோசனையை நியாயமான முறையில் நிலைநாட்டுவார்கள்" என்று உறுதியாகக் கூறினார். மாணிக்கம் எவ்வளவோ வாதாடிப் பார்த்தார். வரப்போகும் கேடுகளைத் தெளிவாக எடுத்துக் காட்டினார். ஆனால் பயனில்லை. தம் இனத்தவர்கள் செழிந்து

முறையை ஆமோதித்தனர். உழைக்கச் சோம்பித் திரிந்தவர்கள் கூட்டுறவு முறை உடன் வந்துவிடவேண்டுமென்று ஆர்ப்பரித்தனர்.

மாணிக்கத்துக்கு இந்த முறையில் திருப்தி இல்லை. சின்னக் கண்ணுவும் மாயாண்டியும் புதிய முறையைக் கேட்டுத் திகைத்தனர். தாம் உழைத்த பயனை நேராக அடைவதை விட்டு, பொதுவாக்கிப் பின் பங்கு போட்டுப் பிரித்துக் கொள்வதை அவர்கள் வெறுத்த

விடக் கூடாது. நல்லவர்களுக்கு அநீதி ஏற்பட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தில் வீராசாமியின் புதிய முறையை எதிர்ப்பதைத் தம் கடமையாகக் கொண்டார் மாணிக்கம்.

இந்தச் சமயத்தில் வந்து சேர்ந்தான் தாணுலிங்கம். பத்து வருடங்களுக்கு முன் தன் இனத் தொழிலில் இறங்க விரும்பாமல் பணத்தைத்

தேடி ரங்கூனுக்குச் சென்றான். அங்கு பலரை ஏமாற்றிப் பணத்தை ஏப்பம் விடவே, ரங்கூன் அவனை அடித்துத் துரத்தியது. திரும்பத் தூத்துக்குடிக்கு வந்து சேர்ந்தான். பிறர் பணத்திலேயே தன் உடம்பை வளர்த்த தாணுலிங்கத்துக்கு முத்துக் குளிக்கும் தொழிலில் இறங்க மனம் இல்லை. தன் அறிவின் சக்தியால் பிறரை ஏமாற்றி வாழ்க்கை நடத்தினான். எத்தனை நாட்கள்தான் இப்படி வாழ முடியும்? ஏமாறுகிறவர்கள் குறையவே, தாணுலிங்கத்தின் வயிறு காய்ந்தது. வேறு வழியின்றி முத்துக் குளிக்கும் தொழிலில் இறங்கினான்.

உழைக்காமல் பருத்து விட்ட அவன் உடல் மிருந்த சிரமத்தைக் கொடுத்தது. பருத்த உடல், நறுக்கு மீசை, நச்சுப் பார்வை இவை அவனுடைய சாமுத்திரிகா லட்சணங்கள்.

பாவம், அவன் உடலும் வளையவில்லை; உள்ளமும் வளைய வில்லை. ஊதியம் எப்படி வரும்? சின்னக் கண்ணுவைப் பார்க்கும் போதெல்லாம் பொருமையில் கருகினான் அவன். சின்னக் கண்ணுவின் குடும்பத்தின் மீது தாணுலிங்கத்துக்கு வெறுப்பு ஏற்பட்டதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு.

தாணுலிங்கம் ரங்கூனிலிருந்து வந்த போது கொஞ்சம் பணத்தோடு வந்திருந்தான். தன்னைக் கண்டு அஞ்சலை மயங்குவாள் என்று எண்ணியிருந்தான். அஞ்சலைக்காக மாயாண்டி காத்திருக்கும் போது இவனையா மதிக்கப் போகிறார்கள்?

தாணுலிங்கம் தன் பக்கம் சேர்ந்ததில் வீராசாமிக்கு வெறுப்புத்தான். இருந்தாலும் கட்சிக்கு ஆள் பலம் வேண்டுமல்லவா? தாணுலிங்கத்தைப் போல் வாய்ப்பேச்சு வீரர்களும் தேவைதானே?

திடீரென்று வீராசாமி மாரடைப்பில் இறந்து விட்டார்! வாய் வீச்சுத் தாணு



ஸாண்டோஸ்
காப் ஸிரப்


இருமலுக்கு இதமளிக்கிறது

இருமல்—ஜலதோஷ நிவாரணமாக, இயற்கையன்னை அளித்தருளிய வைத்திய மூலிகைகளுள் மிகவும் கைகண்ட மூன்று மூலிகைகளில் இருக்கும் அதே சத்துக்கள், விஞ்ஞான முறையில் ஒன்றுசேர்ந்த நவீன மருந்தே ஸாண்டோஸ் காப் ஸிரப்.

தொண்டையிலுள்ள இரணவிக்கத்தை சட்டென்று கண்டித்து இதமளிப்பதற்கான மூலிகை பாபாவேர ஸோம்னிபேரோம்; கட்டிப்போன கபத்தைக் கரைத்து, வெளியேற்றிவிட உதவுவதற்கான மூலிகை ஸெபைலிஸ் இபெகாகுவான்ஹா; மூச்சடைப்பு வேதனையை அதிவிரைவில் தணித்துவிடுவது எபெத்ரா என்ற 'இனிப்பாற்றும்' சக்தியுள்ள மூலிகை;—ஆகிய மூன்று சத்துக்களும் இதில் இணைந்துள்ளன.

அதனால்தான் ஸாண்டோஸ் காப் ஸிரப், டாக்டர்கள் குறித்துக் கொடுக்கும் மருந்தாக விளங்குகிறது. மேலும், செர்ரிப் பழம் போன்ற அதன் இனிப்பை குழந்தைகள் பெரிதும் விரும்புகின்றனர்.

ஸ்விஸர்லந்து நாட்டு ஸாண்டோஸ் ஆராய்ச்சி சாலையின் மருந்துச் சரக்கு.



SANDOZ

லைஸென்ஸ் பெற்று, ஸாண்டோஸ்(ப்ரொடக்ட்ஸ்)
லிமிடெட் கம்பெனியினரால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது

BCS.P. 2-50 TM.

லிங்கம் தலைவனாகி விட்டான். பேச்சுத்தானே இளைஞர்களின் இதயத்தில் நஞ்சைப் பாய்ச்சி மயக்கி விடுகிறது! தாணுலிங்கத்துக்கு எதிராக மாணிக்கம், சின்னக்கண்ணு, மாயாண்டி மூவரும் தீவிரமாகப் பிரசாரம் செய்தார்கள். அந்தப் பிராந்தியமே இரு கட்சிகளாக மாறி விட்டது. கடைசியில் வெற்றி தாணுலிங்கத்துக்குத்தான்!

தனக்கென்று உழைத்தது போக, எல்லாருக்காகவும் உழைக்கும் நல்ல கூட்டுறவு முறை வந்தது. சின்னக் கண்ணுவும், மாயாண்டியும் கட்சிகளை மறந்து விட்டு வழக்கம்போல் உழைத்தார்கள்.

புதிய முறையில் முத்துக் குளிக்கும் தொழில் ஆறுமாதங்கள் நடந்தன. சோம்பேறிகள் என்றும் சோம்பேறிகளாகவே இருந்தார்கள். யார் எப்படி இருந்தால் என்ன? கடலுக்குள் இருந்து எடுக்கப்படும் சிப்பிகளனைத்தும் ஒரு பொது இடத்தில் சேர்க்கப்பட்டுப் பிறகு, எல்லாருக்கும் பகிர்ந்து கொடுக்கப்படும். ஆரம்பத்தில் இந்த முறையில் ஒரு புதுமையைக் கண்டார்கள். ஆனால், உண்மையை உணர்ந்த சின்னக்கண்ணு கலங்கினான். புதிய முறை வருவதற்கு முன் கிடைத்த வருமானம், அவனுக்கு இப்போது இல்லை! அதே உழைப்பு, ஆனால், குறைந்த வருமானம்! அஞ்சலைக்குச் சீதனமாகக் கொடுக்க அவன் எதிர்பார்த்த பணம், இன்னும் கைக்குக் கிட்டவில்லை. மனம் உடைந்தான். இவன் மட்டும் ஓடாக உழைப்பானேன்? தாணுலிங்கத்தைப் போல் குறைவாக வேலை செய்து சந்தோஷமாகத் திரியலாமே! கிடைக்கும் வருமானம் எல்லாருக்கும் ஒன்றுதானே?

முன்பெல்லாம் தம் சுய உழைப்பினால் மிகுந்த வருமானத்தைக் கண்டவர்கள், இப்போது, குறையப் பெறும் வருமானத்தைக் கண்டு நெஞ்சு துடித்தார்கள். துடித்து என்ன செய்ய? இனக் கட்டுப்பாடு ஒன்று இருக்கிறதே! தாணுலிங்கத்துக்கு நல்ல பக்கபலம் இருந்தது. புகுத்தப்பட்ட புதிய முறையை அவனாக மனமிரங்கி மாற்றினால்தான் உண்டு.

கொள்கை நன்றாக இருக்கிறது. கேட்க இனிக்கிறது. ஆனால், நடைமுறைக்கு ஏற்றதாக இருக்க வேண்டுமே! தனிப்பட்டவனின் உழைப்புக்கும், விருப்பங்களுக்கும் மதிப்பில்லையே. பற்றற்ற துறவிகளா எல்லாரும் பற்றற்றுத் தொழில் புரிய? ஆசைதானே முன்னேற்றத்துக்கு அடித்தளம்! அந்த ஆசைக்கே கேடு வரும்போது, முன்னேற்றம் எப்படி ஏற்படும்?

அநீதி கண்டு பொங்கினார், மாணிக்கம். சின்னக்கண்ணுவும் மாயாண்டியும் புதிய முறையிலிருந்து விலகிக் கொள்ள முயன்றனர். மனந் தளராமல் போராடினார்கள். எதிர்த்தவர்களை இனத்திலிருந்தே விலக்கினான் தாணுலிங்கம். புதிய முறையில் பலர் அதிருப்தி கொண்டாலும், தாணுலிங்கத்துக்குப் பயந்து அமைதியா யிருந்தார்கள். கடவுள் வழிவிடுவார் என்ற நம்பிக்கையில் சிலர் காலத்தைக் கழித்தார்கள். அதிருப்தி வளருகிறது என்பதைத் தாணுலிங்கம் உணர்ந்து கொண்டான். சின்னக் கண்ணுவையும் மாயாண்டியையும் ஒழித்துவிட்டால், தனக்கு இருக்கும் எதிர்ப்பு மறைந்துவிடும்



" நம்ம குப்பு இப்போ லெண்ட் வியாபாரம் பண்ணி ஆயிரக் கணக்கில் சம்பாதிச்சுட்டான்!"
"யாரு? எழுத்து வாசனையே இல்லாதவன்னு நாம் பரிகாசம் பண்ணுவோமே, அவனு?"

என்று நினைத்தான். இந்தச் சமயத்தில் இந்த அற்புத முறையைக் கண்டுபிடித்த வீராசாமி உயிரோடிருந்தால், தம் கொள்கையை மாற்றிப் பழைய முறையையே ஆதரித்திருப்பார். துரதிருஷ்டம் இங்கிருக்கும்போது என்ன செய்வது?

சின்னக்கண்ணுவுக்கு எந்த நேரத்திலும் தாணுலிங்கத்தால் ஆபத்து ஏற்படும் என்பதை மாணிக்கம் உணர்ந்து கொண்டார்.

" அஞ்சலைக்குக் கல்யாணத்தை சீக்கிரம் முடித்துவிடு. மாயாண்டி உன் பணத்தை எதிர்பார்க்கமாட்டான் " என்றார் மாணிக்கம்.

" என்ன இருந்தாலும் என் தங்கைக்கு நான் சீதனம் கொடுக்கத்தான் செய்வேன். புதிதாக வந்த தொழில் முறை இல்லையென்றால் இதற்குள் அஞ்சலையின் கலியாணத்தை முடித்திருப்பேன் " என்று கூறிப் பெருமூச்சு விட்டான் சின்னக்கண்ணு.

கையசைக்காமல் கூலிபெறும் தாணுலிங்கத்துக்கோ ஒரே சிந்தனை. அந்தக் கூட்டுறவு முறையின் மூலம் உழைக்காமலே அவனுக்கு ஊதியம் கிடைத்து வந்தது. சின்னக்கண்ணு, மாயாண்டி இருவரது முயற்சியும் வெற்றி பெற இடம் அளித்துவிட்டால், சும்மா கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்தபடியே சுயநலத்தை வளர்க்கும் அவன் ஜபம் சாயாமல் போய்விடுமே! அதனால் எப்படியாவது அவர்கள் முயற்சியைத் தகர்க்க விரும்பினான். முயற்சியை மட்டுமா தகர்க்க முனைந்தான்? அவர்களையே அல்லவா தீர்த்துக் கட்டிவிட நினைத்தான்! பலவாறாகச் சிந்தித்துப் பிறர் மனத்தில் சந்தேகம் எழாவண்ணம், தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ள ஒரு திட்டம் வகுத்துக் கொண்டான். தான் வகுத்துக் கொண்ட திட்டப்படி ஒருநாள் சின்னக்கண்ணுவை இரகசியமாகச் சந்தித்தான்.

" நீ என்னைவிட அதிகமாகச் சிப்பிகளை ஒரே மூச்சில் எடுத்துவிட்டால் என் கொள்கையை மாற்றிக் கொண்டு விடுகிறேன் " என்றான் தாணுலிங்கம். இந்தப் போட்டி



" வெய்யில் கொளுத்துதே, வீட்டிலே என்ன ஏற்பாடு பண்ணினீங்க !"
" நிறையக் காஷ்மீர் வின்டர் படங்கள் வாங்கி மாட்டிட்டேன் !"

யைப் பௌர்ணமியன்று இரவு இரகசியமாக நடத்துவது என்று முடிவு செய்தார்கள்.

" இந்தப் போட்டி மற்றவர்களுக்குத் தெரிய விளம்பரம் ஆவானேன்? நம் போட்டி நமக்குள்ளேயே இருக்கட்டுமே" என்றான் தாணுலிங்கம். அவனுடைய சதித் திட்டத்தைச் சின்னக்கண்ணு உணரவில்லை.

அந்தக்காலத்தில் தற்போது இருக்கும் விஞ்ஞான சாதனங்கள் இல்லை. முத்துக் குளிப்பவன் நீளமான கயிற்றின் ஒரு பக்கத்தைத் தன் இடுப்பில் சுற்றி முடிபோட்டுக் கொள்வான். மற்றொரு பக்கத்தைத் துணையாளிடம் கொடுப்பான். பிறகு, காலில் ஒரு கனத்த கல்லைக் கட்டிக் கொண்டு கடலில் குதிப்பான். நீரில் மூழ்கியவன் மூச்சுத் திணறும்போது காலில் கட்டியிருக்கும் கல்லைக் கழற்றிவிட்டு இடுப்புக் கயிற்றைப் பலமாக ஆட்டுவான். உடனே படகில் இருப்பவன் கயிற்றை மேலே இழுத்து நீருக்குள் இருப்பவனை வெளியே எடுப்பான்.

பௌர்ணமி அன்று இரவு படகில் தாணுலிங்கமும், சின்னக்கண்ணுவும் முத்துக் குளிக்கும் இடத்துக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் சேர்ந்து செல்வதை யாரோ கவனித்து அஞ்சலையிடம் கூறினார்கள். அஞ்சலைக்குச் சந்தேகம் வந்து விட்டது. மாயாண்டியின் வீட்டுக்கு ஓடினாள். கொஞ்ச நேரத்தில் வட்டாரம் முழுவதும் செய்தி பரவி விட்டது. மாணிக்கமும், மாயாண்டியும் பலரை அழைத்துக் கொண்டு கடலை நோக்கி ஓடினார்கள். கொஞ்ச நேரத்தில் நாலைந்து படகுகள் முத்துக் குளிக்கும் இடத்தை நோக்கி விரைந்தன.

" நீ முதலில் குதிக்கிறாயா ? பயமாயிருந்தால் நான் குதிக்கிறேன் !" என்றான் தாணுலிங்கம்.

" எனக்கென்ன பயம் ?" என்று கூறிக் கொண்டு இடுப்பில் கயிற்றைச் சுற்றி முடி போட்டான் சின்னக்கண்ணு. பிறகு, காலில் கல்லைக் கட்டிக் கொண்டான். இடுப்புக் கயிற்றைத் தாணுலிங்கத்தின் கையில் கொடுத்தான். அதை வாங்கும்போது தாணுலிங்கத்தின் கைகள் நடுங்கின. சின்னக்கண்ணு நீரில் குதித்து விட்டான்.

ஒன்று.....இரண்டு.....ஐந்து.....ஆறு நிமிடங்கள் கழிந்தன. தாணுலிங்கம் பிடித்திருந்த கயிறு பலமாக அசைந்தது. ஆனால், அவன் கயிற்றை மேலே இழுக்காமல் தண்ணீரைப் பார்த்துக் கொண்டு சும்மா நின்றான். கயிறு அசைந்து கொண்டே இருந்தது...பத்து பதினைந்து...இருபது நிமிடங்கள் கழிந்து விட்டன. கயிறு அசைவதும் நின்றுவிட்டது. பின்னால் பல படகுகள் வேகமாக நெருங்கி வந்து விட்டதை அப்போதுதான் உணர்ந்தான் தாணுலிங்கம். அவன் செய்வதறியாது திகைத்தான்.

" படுபாவி ! என்ன செய்தாய் ? சின்னக் கண்ணு எங்கே?" என்று இரைந்து கொண்டே பாய்ந்து அந்தப் படகில் குதித்தான் மாயாண்டி.

" ஆ....சின்னக் கண்ணு....வந்து...தெரியாதே...." தாணுலிங்கம் உளறினான். எல்லோரும் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். மாயாண்டியும், அஞ்சலையும் தாணுலிங்கத்தின் கையிலிருந்த கயிற்றைப் பிடுங்கி வேகமாக மேலே இழுத்தார்கள். எல்லாருடைய கண்களும் நீர்மீது நிலைத்து நின்றன. சிறிது நேரத்தில் சின்னக்கண்ணுவின் உடல் நீரிலிருந்து வெளிப்பட்டது !

" ஐயோ! அண்ணன் போய்விட்டானே!" என்று கதறினாள் அஞ்சலை. எல்லோரும் திகைத்துச் சிலையாக நின்றனர்.

" அட பாவி. தண்ணீரில் மூழ்கடித்துக் கொன்றுவிட்டாயே!" என்றார் மாணிக்கம்.

" தாணுவை அடித்துத் தண்ணீரில் தள்ளுடா" என்றான் கூட்டத்திலிருந்த ஒருவன் ஆத்திரத்தோடு.

" அவனை ஒன்றும் செய்ய வேண்டாம். போலீஸில் ஒப்படையுங்கள். அவனைத் தொட்டால், நமக்குத்தான் பாவம்" என்றார் மாணிக்கம்.

சின்னக்கண்ணுவைத் தூக்கிப் படகில் படுக்க வைத்தார்கள். அவன் உயிர் பிரிந்து சில நிமிடங்கள் ஆகிவிட்டன. அவன் வலது கை மூடியிருந்தது. மாயாண்டி, மிகுந்த சிரமத்துடன் அந்தக் கையைப் பிரித்தான். கையினுள் ஒரு பெரிய முத்துச்சிப்பி !

" தங்கைக்குக் கடைசியாக அவன் கொடுக்கும் சீதனம்" என்று முனகினார் மாணிக்கம்.

அந்தச் சம்பவத்துக்குப் பிறகு, முத்துக் குளிக்கும் முறை, எப்பொழுதும் போல் பழைய பாணியிலேயே நடந்தது.

உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைத்தது ! முத்துச் சிப்பிகளும் ஏராளமாகக் குவிந்தன.

சின்னக்கண்ணுவின் கையிலிருந்த சிப்பிக்குள் விலையுயர்ந்த முத்து அகப்பட்டது ! அண்ணன் கொடுத்த சீதனத்தை யாருக்கும் விற்காமல் பாதுகாத்து வருகிறாள், அஞ்சலை.

• • •

" கதை நல்லாத்தான் இருக்கு" என்றேன்.


" அண்ணாச்சிக்கு இன்னிக்கி யோகம் எப்படியோ ? அந்தச் சீதனமுத்து மாதிரி கிடைச்சாலும் கிடைக்கும். அறுத்துப் பார்போமா?" என்றார் காசியாபிள்ளை.


" வேண்டாம், நான் ஊரில் போய்ப் பார்த்துக்கிறேன்" என்று கூறிவிட்டுத் திருநெல்வேலிக்குக் காரில் ஏறினேன். என்னுடைய அதிர்ஷ்டம் தெரிந்த விஷயமாயிற்றே. அதை அவர் முன்பு சிப்பியை உடைத்து வெட்ட வெளிச்சமாக்குவானேன்?

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk Madras-10
Managing Editor, T. Sadasivam.

புதிய மெருகு! புதிய சுடரொளி!

இதுவே விம் தரும் பரிசுத்தம்!





விம் பவுடர் போட்டு விறுவிறுவென்று தேய்த்துப் பாருங்கள்; ஒளிப் பிழம்பாக எல்லாமே பளிச்சிடும். கண்ணாடிச் சாமான்கள், பீங்கான் சாமான்கள், சமையல் பாத்திரங்கள், பேஸின்கள், தளங்கள் எல்லாமே பளிச்சிடும். பாடுபடாமல், பிரயாசையில்லாமல் கீறலே விழாத பரிசுத்தம் செய்ய உங்களுக்கு உதவுவது விம். மிகமிக சுலபமான வேலை! ஒரு ஈரத் துணிமீது விம் பவுடரைத் தூவிக்கொண்டு இலேசாகத் தேய்த்துவிட்டுப் பாருங்கள்—அழுக்கும், களிம்பும் இருந்த இடம் எங்கே? பளபளப்புத்தான் அங்கே! மங்காத பெருமை தரும் உங்கள் வீடு மங்களவாசமாக விளங்க விம் உபயோகியுங்கள்.

விம் பட்ட இடமெல்லாம் ஒளிப்பிழம்பே!

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

V. 98-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



எம். என். ராஜம்

கூறுகிறார்: 'நான் உபயோகிப்பது தூய, வெண்மையான

லக்ஸ் டாய்லெட் சோப்'

LTS. 15-23 TM

இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு